# Table of Contents


| | |
|---|---|
| Introduction | 1.1 |
| பாகம் 1 | 1.2 |
| பாகம் 2 | 1.3 |
| பாகம் 3 | 1.4 |
| பாகம் 4 | 1.5 |
| பாகம் 5 | 1.6 |
| பாகம் 6 | 1.7 |
| பாகம் 7 | 1.8 |
| பாகம் 8 | 1.9 |
| பாகம் 9 | 1.10 |
| பாகம் 10 | 1.11 |
| பாகம் 11 | 1.12 |
| பாகம் 12 | 1.13 |
| பாகம் 13 | 1.14 |
| பாகம் 14 | 1.15 |
| பாகம் 15 | 1.16 |
| பாகம் 16 | 1.17 |
| பாகம் 17 | 1.18 |
| பாகம் 18 | 1.19 |
| பாகம் 19 | 1.20 |
| பாகம் 20 | 1.21 |
| பாகம் 21 | 1.22 |
| பாகம் 22 | 1.23 |
| பாகம் 23 | 1.24 |
| பாகம் 24 | 1.25 |
| பாகம் 25 | 1.26 |
| பாகம் 26 | 1.27 |
| பாகம் 27 | 1.28 |
| பாகம் 28 | 1.29 |
| பாகம் 29 | 1.30 |

| | |
|---|---|
| பாகம் 30 | 1.31 |
| பாகம் 31 | 1.32 |
| பாகம் 32 | 1.33 |
| பாகம் 33 | 1.34 |
| பாகம் 34 | 1.35 |
| பாகம் 35 | 1.36 |
| பாகம் 36 | 1.37 |
| பாகம் 37 | 1.38 |
| பாகம் 38 | 1.39 |
| பாகம் 39 | 1.40 |
| பாகம் 40 | 1.41 |
| பாகம் 41 | 1.42 |
| பாகம் 42 | 1.43 |
| பாகம் 43 | 1.44 |
| பாகம் 44 | 1.45 |
| பாகம் 45 | 1.46 |
| பாகம் 46 | 1.47 |
| பாகம் 47 | 1.48 |
| பாகம் 48 | 1.49 |
| பாகம் 49 | 1.50 |
| பாகம் 50 | 1.51 |
| பாகம் 51 | 1.52 |
| பாகம் 52 | 1.53 |
| பாகம் 53 | 1.54 |
| பாகம் 54 | 1.55 |
| பாகம் 55 | 1.56 |
| பாகம் 56 | 1.57 |
| பாகம் 57 | 1.58 |
| பாகம் 58 | 1.59 |
| பாகம் 59 | 1.60 |
| பாகம் 60 | 1.61 |
| பாகம் 61 | 1.62 |
| பாகம் 62 | 1.63 |
| பாகம் 63 | 1.64 |

| | |
|---|---|
| பாகம் 64 | 1.65 |
| பாகம் 65 | 1.66 |
| பாகம் 66 | 1.67 |
| பாகம் 67 | 1.68 |
| பாகம் 68 | 1.69 |
| பாகம் 69 | 1.70 |
| பாகம் 70 | 1.71 |

பரிபாலனம்

சுப. இரத்தினகிரி

mail: srathinagiri@gmail.com

http://www.rathinagiri.in

பாகம் - 1

அது ஒரு பல மாடிகள் கொண்ட சூப்பர் மார்க்கெட். குண்டூசியில் இருந்து துப்பாக்கி வரை அனைத்தும் கிடைக்கும் இடம். ஒவ்வொரு பொருளிலும் பல நிறுவனங்கள் தயாரித்தது என்று அடுக்கி வைத்திருந்தார்கள். ஒருவர் முன்னும் பின்னும் நடந்து நடந்து சோப்பு வைத்திருந்த பகுதியை வலம் வருவதைப் பார்த்த சீருடை அணிந்த சிப்பந்தி "என்ன தேடுறீங்க?" என்றார். "மதி சோப்பு எங்கேன்னு தேட்றேன்" என்றார் வந்தவர். சிப்பந்தி உடனே, "காலை தான் காலியாய் போனது. நாளைக்குத் தான் வரும். நிறைய சோப்புக்கள் அது போலவே இருக்கின்றன இந்த வரிசையில்" என்றார். அதற்கு வந்தவர் "ஆமா, மதி சோப்பு கூட இல்லாட்டி நீங்க இவ்ளோ பெரிய சூப்பர் மார்க்கெட் நடத்துறது வேஸ்ட்!" என்றார்.

அது ஒரு தெருக்கோடியிலிருந்த பெட்டிக்கடை. லாந்தர் விளக்கு ஒளியில் ஏதோ வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. அந்த இரவில் வேலை முடிந்து சைக்கிளில் வந்த ஒருவர் தன் சைக்கிளை நிறுத்தி விட்டு கடைக்காரரிடம் "அந்த மதி பேஸ்டை எடுத்துத் தாங்க" என்கின்றார். கடைக்காரர், எடுப்பதற்கு எளிதான இடத்தில் இருந்த மதி பேஸ்டை எடுத்துத் தர அதை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு பணம் தருகின்றார் வந்தவர்.

இப்படி நிறைய பேர் வாழ்க்கையில் ஒரு பாகமாய் மாறியிருந்தது மதி நிறுவன தயாரிப்புக்கள். அது என்ன மதி நிறுவனம்? ஏதோ சோப்பு, பேஸ்டு தயாரிக்கும் சாதாரண நிறுவனம் என்று நினைத்திருந்தாலோ, அல்லது ஏதோ பன்னாட்டு நிறுவனக் கூட்டுத் தயாரிப்போ என்று நினைத்திருந்தாலோ அதை விட்டு விடலாம் நீங்கள்! மதி நிறுவனத்தின் தற்போதைய ஒரு ஆண்டு வியாபாரம் 600 கோடியையும் தாண்டி இந்தியக் கிராமங்களிலும் வேரூன்றியிருக்கின்றது என்றால் அதற்கு மதி நிறுவனத்தின் நிறுவனர் விஸ்வேஸ்வரன் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல.

இத்தனைக்கும் விஸ்வேஸ்வரன் பரம்பரைப் பணக்காரர் இல்லை. இருபதே ஆண்டுகளில் இந்த உயர்ந்த நிலையை சாதாராண மனிதரால் எட்ட முடியுமா என்று அனைவரும் வியந்து பார்க்கும் ஒரு உழைப்பாளி. பல நிறுவனங்கள் ஏற்கனவே இந்தத் தொழிலில் இருந்தாலும், அவர்கள் எல்லோரும் எந்த ஒரு சிறு நிறுவனத்தையும் நினைத்த மாத்திரத்தில் அழித்திடும் வன்மை கொண்டவர்களாக இருந்தாலும், அவர்களுக்கு எவ்வளவோ பண பலம் இருந்திருந்தாலும் அதை எல்லாம் தாண்டியும் விஸ்வேஸ்வரனால் இந்த நிறுவனத்தை இந்த அளவில் இவரால் கொண்டு செல்ல எவ்வாறு முடிகின்றது என்றால், அது விஸ்வேஸ்வரனுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். எல்லோருக்கும் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் என்றால் அவருக்கு மட்டும் 48 மணி நேரமோ என்று சொல்லும் அளவுக்கு வியாபாரம், தொழில் என்று அதிலேயே மூழ்கி இருந்தவர் அவர். இத்தனைக்கும் அவருக்குக் கோபம் வந்து யாருமே பார்த்திருக்க முடியாது. எப்போதும் சிரித்த முகம் தான். அநேகமாக, அது கூட அவரது வெற்றிக்குக் காரணமாய் இருந்திருக்கக் கூடும்.

இதோ, முப்பது ஆண்டுகளுக்கு முன்னர், விஸ்வேஸ்வரன். படித்ததோ பள்ளிப்படிப்பு மட்டுமே. +2 முடித்த கையோடு, கல்லூரியில் படிக்க வைக்கும் அளவுக்கு குடும்பத்தில் பண வசதியும் இல்லை. அவருக்கும் படிக்கும் ஆசையோ, எண்ணமோ இருந்ததும் இல்லை. ஒரு சிறு மளிகைக் கடையில் பொட்டலம் மடித்துக் கொடுக்கும் வேலை. ஓரிரண்டு மாதங்களிலேயே மொத்த நிர்வாகத்தையும் அவரிடமே ஒப்படைக்கும் அளவுக்கு நேர்மையையும், பொறுமையையும், சாதுர்யத்தையும் கொண்டிருந்த விஸ்வேஸ்வரன் அந்தக் கடையை மூன்றாண்டுகளில் அந்தத் தெருவிலேயே பெரிய கடையாய் மாற்றிக் காட்டினார்.

சரியாய் வயது 23 ஆகும் போதே திருமணமும் நடத்தி வைத்தார்கள் வீட்டில். மனைவி பெயர் மாலதி. மாலதி விஸ்வேஸ்வரனுக்கு ஏற்றவளாய் வந்ததாலேயே அவரால் இவ்வளவு உயரத்திற்கு வர முடிந்தது எனலாம். ஒரு காலத்தில் கடையை விட்டு வெளியேறி சின்னதாய் தொழில் துவங்கலாம் என்று நின்ற போதும், இரண்டு ஆண்டுகள் அவளது நகை நட்டு அனைத்தையும் கழற்றிக் கொடுத்த போதும், செல்வம் என்பது வீட்டிற்கு வருவதற்கு இல்லை, வீட்டிலிருந்து செல்வதற்கு மட்டுமே என்றிருந்த போதும் பொறுமை காத்தவள். நம்பிக்கையைக் கணவன் மீதும் கடவுள் மீதும் வைத்தவள். திருமணம் முடிந்து ஐந்தாண்டுகளுக்குக் குழந்தை பிறக்கவில்லை இருவருக்கும். மிகவும் வருத்தத்தில் இருந்தனர். திருமணம் முடிந்து ஐந்தாண்டுகளாய்க் குழந்தை பாக்கியம் இல்லை என்ற குறையில் குமைந்து போயிருந்தனர். அக்கம் பக்கம் மாலதியை ஏளனமாய்ப் பார்ப்பதும், விஸ்வேஸ்வரனைப் பார்ப்பவர்கள் எல்லோரும் இன்னுமா குழந்தை இல்லை என்று கேட்பதுமாய்க் கழிந்த நிலையில் தான் இருவர் வயிற்றிலும் பால் வார்ப்பது போல் வந்து பிறந்தது ஒரு பெண் குழந்தை.

பிள்ளையில்லாக் குறையைத் தீர்க்க வந்த குழந்தை பிறந்த சமயத்தில் தான் விஸ்வேஸ்வரன் தம் சிறு சிறு தயாரிப்புக்களை பெரிய நிறுவனங்களின் உரிமம் பெற்று அவர்களின் லேபிளை வாங்கி ஒட்டி கொடுத்துக் கொண்டிருந்தார். அது கிட்டத்தட்ட கூலி வேலை போல் தான். தம்மால் சிறந்த பொருட்களைத் தரமாகத் தயாரிக்க முடிந்த போதும் தனக்கு அதற்குண்டான விலை கிடைக்காமல் ஏதோ ஒரு நிறுவனம் அதைத் தட்டிப் பறிப்பதைப் பொறுக்கவில்லை. விலை அதிகம் வேண்டும் என்று கேட்டுப் பார்த்தார். நிராகரித்துக் கொண்டே வந்தது அந்த நிறுவனங்கள். ஒரு நாள் பொறுத்தது போதும் என்று துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வந்து விட்டார். வெளியேறும் போதே மனதுக்குள் சபதம் போட்டுத் தான் வெளியேறினார். நிச்சயம் எனது நிறுவனத்தையும் இதைப் போல் மாற்றிக் காட்டுவேன் என்று.

குழந்தைக்கு பெயர் வைப்பதற்காக நல்ல பெயரைத் தேடிக் கொண்டிருந்தார் விஸ்வேஸ்வரன். அவர் தயாரித்து முதன் முதலில் சந்தைப் படுத்தப் போகும் பொருளுக்கும் தான். அப்போது குழந்தையைப் பார்க்க வந்த பக்கத்து வீட்டுக்காரர் சிரித்துக் கொண்டே, நிலாவுக்கும் உங்க மகளுக்கும் இரண்டே இரண்டு வித்தியாசம் தான் இருக்கு. நிலாவில் கறை உண்டு. ஆனா உங்க மகள் முகத்தில் களங்கமே இல்லை. நிலா தேயும் வளரும். ஆனா உங்க மகள் தேயாமல் வளர்வாள் என்றார். அப்போதே முடிவு செய்து விட்டார் குழந்தையின் பெயரை விஸ்வேஸ்வரன். தன் நிறுவனத்தின் பெயரையும்.

அவரது மகள் மதிஸ்ரீ யைப் போலவே மதி நிறுவனமும் வளர்ந்தது. இரண்டின் மீதும் உயிரையே வைத்திருக்கின்றார் விஸ்வேஸ்வரன்.

(பரவும்)

பாகம் - 2

தமிழகம் முழுதும் ராமநாதன் ஐ.ஏ.எஸ். என்றால் தெரியாதவர்களே இருக்க மாட்டார்கள். பெரிய படிப்பாளி. ஆழ்ந்த சிந்தனையாளர். சிறந்த நிர்வாகி. இள வயதிலேயே ஐ.ஏ.எஸ். முடித்தவர் என்று பல அரிய சாதனைகளைத் தாங்கி பல மாவட்டங்களைத் தன் நிர்வாகத்தில் வைத்திருந்து இப்போது சென்னையில் செக்ரட்டரியேட்டில் நிதித் துறை இயக்குநராக பதவி வகித்து வருபவர் ராமநாதன்.

குழந்தை வளர்க்கும் போதே பலர் படித்துப் பெயர் வாங்கினால் ராமநாதன் ஐ.ஏ.ஏஸ். போல் படித்துப் பெயர் வாங்க வேண்டும் என்ற லட்சியத்தைப் பலர் மனதில் விதைத்தவர் ராமநாதன்.

அவருக்கு அன்பான அழகான மனைவியாய் கோமதி இருந்தாள். பெரிய படிப்பு படித்திராவிட்டாலும், வீட்டு நிர்வாகமும் சமையலும் கைவந்த கலையாய் பெற்றிருந்தாள். அவளைப் பெற்றவர்கள் பரம்பரையாய் பணக்காரர்கள். மகளை ஒரு கலெக்டருக்கு மணம் முடித்ததில் அவர்களுக்கு ஒரு மாபெரும் சந்தோசம்.

இருவருக்கும் மகளாய் இருக்கும் ஜனனி எத்தனை செல்லமாய் வளர்க்கப் பட்டிருப்பாள் என்பதில் ஏதும் சந்தேகம் இருக்குமா என்ன? ஜனனியும் அப்பாவைப் போலவே தான். வகுப்பில் எப்போதும் ஒன்றாம் ரேங்க் தான். படு சுட்டிப் பெண். துறுதுறுவென்று இருப்பாள். அவளுக்கு எதையாவது படித்துக் கொண்டே இருக்கவேண்டும். அவளுக்கு இருந்த ஒரே கீழ்க்குணம் கர்வம். தன் தந்தை ஒரு கலெக்டர். அம்மா ஒரு பணக்காரி. இதை விட கர்வம் வர வேறென்ன வேண்டும்?

ராமநாதனின் ஒரு பக்கத்தைத் தான் இப்போது வரை பார்த்திருக்கின்றோம். அவருக்கு மறுபக்கம் கருப்பு நிறம். மாமனார் பணக்காரர் என்பதால் அவர்களுக்கு முன் தன்னையும் பணம் நிறைந்தவன் என்று காட்டிக் கொள்ளவோ என்னவோ ஹைகிளாஸ் லஞ்சம் வாங்குபவர். பெரிய காண்டிராக்ட் முடிக்க பெரிய தொகையைக் காதும் காதுமாய் வாங்குபவர்.

இந்த ஒரு காண்டிராக்டோடு அவ்வளவு தான் என்று அவர் ஆரம்பித்ததை பின்னால் அவராலேயே நிறுத்த முடியவில்லை. ஒரு தவறு ஒன்பது தவறைக் கொண்டு வரும் என்பது போல் பல தவறுகளும் செய்ய ஆரம்பித்து இருந்தார்.

கிளியைப் போல் மனைவி அமைந்தாலும் குரங்கைப் போல் என்று ஒரு பழமொழி அறிந்திருப்பீர்கள். அது போல் அவருக்கு சென்னையிலேயே இன்னொரு வீடும் இருந்தது. அவள் பெயர் ஈஸ்வரி. பேரழகி என்று சொல்ல முடியாவிட்டாலும் அழகி. பூர்வீகம் மதுரைப் பக்கம் கிராமம். படிப்பு வாசனையே அறியாதவள். இறந்து விட்ட ஒரு அரசு ஊழியரின் மகள். இளம் வயதில் தந்தையின் பணிக்கொடையை வாங்க அலுவலகத்துக்கு அலையாய் அலைந்து கலெக்டரிடம் மனுக் கொடுத்தால் நடக்கும் என்ற நம்பிக்கையில் அவரைப் பார்க்க வந்தவள். அவளது அழகில் மயங்கிய ராமநாதன் அவளைத் தான் எங்கெல்லாம் செல்கின்றாரோ அங்கெல்லாம் வீடு எடுத்துத் தங்க வைத்துப் பராமரித்துக் கொண்டார். ஈஸ்வரி தாலி வாங்காத பத்தினியாய் ராமநாதனுடன் வாழ்ந்து வந்தாள்.

இருவருக்கும் பிறந்தவன் அழகேசன். பெயருக்கேற்றபடி அழகானவன். அம்மாவைப் போல் அழகும், அப்பாவைப் போல் அறிவும் கொண்டவன். அம்மா தான் அவனுக்கு எல்லாம். அப்பா எப்போதாவது வருவார். சிறிது நேரம் இருப்பார். சென்று விடுவார். விவரம் தெரியும் போதே தன் தாயின் நிலையும் அறிந்தவன். "ஏனம்மா இப்படி?" என்று ஒரு நாள் கேட்டதில், "எல்லாம் என் விதி" என்று கண்ணில் நீர் பெருக ஈஸ்வரி அழ ஆரம்பித்து விட்டாள். அன்றிலிருந்து அது பற்றியே கேட்காதவன்.

ராமநாதன் இரு குடும்பத்திற்கும் ஒரு குறையும் வைத்ததில்லை. அழகேசனையும் பெரிய பள்ளியில் படிக்க வைப்பதாகத் தான் சொன்னார். ஈஸ்வரி தான் மறுத்து விட்டாள். ஒரு நடுத்தரப் பள்ளியில் பயின்றான் அழகேசன்.

என்றாவது தன் தந்தையை வெளியில் குடும்பத்துடன் பார்த்தால் அழகேசனுக்கு ஏக்கமாக இருக்கும். அதே சமயம் ஜனனியைப் பார்த்தால் தன் அக்கா என்று பாசத்துடன் பார்ப்பான்.

ஜனனியும், அழகேசனும் வளர்ந்து கொண்டே வந்தார்கள்.

(பரவும்)

பாகம் - 3

மயிலாய் ஒயிலாய் திரை நட்சத்திரங்கள் பங்கெடுக்கும் பல வைரநகை விளம்பரங்கள் பார்த்திருக்கின்றீர்களா? சென்னையில் இருக்கும் புகழ் பெற்ற நகை மாளிகை குபேராஸ் நகைமாளிகை. பெயரைக் கேட்டதுமே மனம் பூரிக்கும் கடை. அதன் ஒரே உரிமையாளர் தனுஷ்கோடி. எப்போதும் சிரித்த முகம். பணத்திலேயே பரம்பரை பரம்பரையாய் ஊறித் திளைத்து பணத்திலேயே பிறந்த கோடீஸ்வரன். செல்வச் செழிப்பு என்றால் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவர் முகத்தை ஒரு முறை பார்த்தால் போதும்.

தனுஷ்கோடியின் இரு பிள்ளைகளில் ஒருவன் விமல். நவநாகரீக இளைஞன். அதிலும் வெள்ளிக் கரண்டியுடன் பிறந்தவன் ஆதலால் படித்தது கான்வெண்டில். பிடித்தது சுவிட்சர்லாந்து. படிப்பது ஆஸ்திரேலியாவில் எம்.பி.ஏ. பெரியதொரு தொழிலதிபராய் வர லட்சியம். ஆனால், வாழ்வில் அனைத்தும் அலட்சியம். குடிக்காத நாளென்ன நாளே என்று இருப்பவன். டிஸ்கோத்தே பார்ட்டி என்றால் கோலாகலமாய் தலையசைப்பவன். நண்பர்கள் பலர் அவனிடம் இருக்கும் பசையால் ஒட்டிக் கொண்டவர்கள்.

இன்னொருவன் கமல். வைர வியாபாரத்தை அப்பாவிற்குப் பிறகு பார்த்துக் கொள்ளப் போகும் எண்ணம் கொண்டவன். விமலுக்கு மூத்தவன். படிப்பு அவ்வளவாக ஏற வில்லை. அதனால் கடையில் அப்பாவோடு இருக்கின்றான். இப்போது தான் அண்ணா சாலையில் இருக்கும் ப்ளூ மவுண்டன் ஓட்டல் அதிபரின் மகளுக்கும் கமலுக்கும் திருமணம் ஆகி இருந்தது. விமல் திருமணத்தன்று வந்தவன் தான். வரும்போதே இரண்டு நண்பர்களையும் விமானச் செலவையும் அவனே கொடுத்து அழைத்து வந்திருந்தான். ஆடம்பரமான அவன் குடும்பத்தில் இதெல்லாம் சர்வ சாதாரணம்.

இருவரின் அம்மா சரஸ்வதி. அவளைப் பார்த்தால் ஒரு கோடீஸ்வரி என்பதை உங்களால் கண்டு கொள்ளவே முடியாது. வைர வியாபாரியின் மனைவி வைரத்தாலேயே இழைக்கப்பட்டிருப்பாள் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. மிக மிக எளிமையானவள். இரு மகன்களின் போக்கும் பிடிக்காதவள். முன்பாவது மூத்தவனின் போக்கு அவன் தந்தையுடன் இருந்ததால் பிடித்திருந்தது. இப்போது வந்த மருமகளால் அவனையும் பிடிக்காமல் போயிற்று. அவள் விரும்பாத சுதந்திரம் அவளுக்கு அந்த பங்களாவில் இருந்தது. என்ன செய்ய முடியும்? சுதந்திரமும் ஒரு வகையில் அடிமைத் தனம் தானே?

விமலுக்கு இன்னும் இரண்டு ஆண்டுகளில் படிப்பு முடிந்து விடும். இன்னும் என்னென்ன கூத்து நடக்கப் போகின்றதோ என்று பூஜை புனஸ்காரங்களில் இறங்கி விட்டாள். ஆனால் என்ன நடந்தாலும் அதைப் பற்றிக் கவலை கொள்ளாதவர்கள் நிறைந்த வீடு அது. ராசிக் கற்களைப் பற்றி பல தொலைக்காட்சிகளில் விவரிக்கத் தெரிந்த தனுஷ்கோடியால் மனைவியின் முகராசியைப் படிக்க இயலாததில் வியப்பில்லை. ஒவ்வொருவருக்கும் வாழ்க்கை ஒரு பாதையில்.

விமல் படித்து முடிக்கும் முன்னரே அவன் எதிர்காலத்தைப் பற்றி தனுஷ்கோடி கணித்து வைத்திருந்தார். அதன்படி வந்ததும் சீக்கிரம் திருமணம் முடித்து விட்டால் எல்லாம் சரியாக நடக்கும் என்பது அவரது கணிப்பு.

(பரவும்)

பாகம் - 4

அன்புராஜ். வயது 52. அன்பானவர் தான். அவர் செய்வதை யார் சரியென்று சொன்னாலும். வம்பானவர் தான் மற்ற எல்லோருக்கும். மற்ற படி நல்லவர். அந்தக் காலத்து பி.யூ.சி. கணக்கு எழுதுவதில் வல்லவர். விஸ்வேஸ்வரனின் நிறுவனத்தில் தலைமைக் கணக்கர். இவருக்குக் கீழ் பல பட்டதாரிகள் வேலை செய்தாலும் இவர் தான் தலைமைக் கணக்கர். நிறுவனத்தில் சேர்ந்து 15 வருடங்கள் ஆகி விட்டது. அவரை நம்பி ரொக்கத்தையும் அவரிடமே ஒப்படைத்திருந்தார் விஸ்வேஸ்வரன்.

எல்லாம் சுமூகமாகத் தான் சென்று கொண்டிருந்தது. சமீபத்தில் தன் கடைசி மகள் திருமணத்திற்காக கொஞ்சம் கைமீறிச் செலவழித்து விட்டார். விஸ்வேஸ்வரனிடம் கேட்டிருந்தால் தாராளமாகக் கொடுத்திருப்பார் தான். ஏற்கனவே 50000 ரூபாய் வரை திருமணத்திற்கென்று கொடுத்திருந்தார்.

கணக்கு எழுதுபவர் கையிலேயே ரொக்கத்தையும் கொடுத்தது மாபெரும் தவறல்லவா? அன்புராஜ் மேலும் முதலாளியிடம் கேட்கக் கூச்சப்பட்டுக் கொண்டு கணக்கில் கை வைத்து விட்டார். கிட்டத்தட்ட அதுவும் 50000 ரூபாய் இருக்கும். அதுவும் விஸ்வேஸ்வரனிடம் பின்னால் சொல்லிக் கொள்ளலாம் என்று தான். ஆனால் வெகு சீக்கிரத்திலேயே விஸ்வேஸ்வரன் இதைக் கண்டு பிடித்து விட்டார். இல்லாவிட்டால் இத்தனை பெரிய நிறுவனத்தை வளர்க்க முடியுமா என்ன?

என்று அன்புராஜின் தவறைக் கண்டு பிடித்தாரோ, அன்றே அவரை அழைத்து சிரித்துக் கொண்டே தான் தவறைக் கண்டறிந்ததைச் சொன்னதோடு மட்டுமின்றி, தவறுதல் யாருக்கும் இயல்பு தான், இனியாவது சரியாகச் செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார். பணத்தை 6 மாதத்திற்குள் கட்டி விடவும் சொல்லிவிட்டார்.

விஸ்வேஸ்வரனிடம் ஒரு பழக்கம் உண்டு. அவரது அறைக்குள் யார் நுழைந்தாலும் ஒரு நிமிடத்துக்கு மேல் அவரது அறையில் நிற்க வைத்துப் பேசவே மாட்டார். உட்காருங்க பேசுவோம் என்று சொல்லி விடுவார். வயது, தகுதி வித்தியாசமே பார்க்க மாட்டார். ஆனால், அன்புராஜை மட்டும் அதன் பிறகு உட்காரவே சொல்லவில்லை.

அன்புராஜ் வம்புராஜாய் மாற நேரம் பார்த்துக் கொண்டு இருந்தார்.

(பரவும்)

பாகம் - 5

ஜனனி கல்லூரி பயிலும் மங்கையாய் வளர்ந்து விட்டாள். அதிகாரமும், பணமும் விளையாடியது அவளிடம். MCA பட்டப் படிப்பு படித்துக் கொண்டிருந்தாள். கணினியின் நுணுக்கங்களையும் அதன் பயன்பாடுகள் பற்றியும் படிப்பதில் அத்தனை ஆர்வம் அவளுக்கு. இத்தனூண்டு எலெக்ட்ரிக் சமாச்சாரம் இத்தனை கணக்குகளைத் தவறின்றி இத்தனை வேகத்தில் செய்கின்றதே என்ற ஆச்சரியத்திலேயே ஆழ்ந்து விட்டாள். அதுவும் மென்பொருள் எழுதுபவரைக் காட்டிலும் அதை உபயோகிப்பவரே மூளைக்காரர்கள் என்ற எண்ணமும் கொண்டவள் ஜனனி.

ஜனனியின் அழகும் அறிவும் அவள் படித்துக் கொண்டிருக்கும் கல்லூரியில் பெரும் பெயர் பெற்றவை! அவளது அப்பாவின் சாதனை, அவளது அறிவு இதை வைத்துப் பார்க்கும் போது ஜனனி சிகரத்தின் உச்சிக்கு எதிர்காலத்தில் செல்வாள் என்று அனைவரும் எதிர்பார்த்தனர். அதற்கேற்றாற்போல் அவள் நடவடிக்கைகளும் இருந்தது. ஏற்கனவே அவளிடம் கர்வம் உண்டு. இப்போது வயதுக்கே உரிய துடுக்குத் தனம் வேறு. கல்லூரி வாழ்க்கை மிக மகிழ்ச்சியாகச் சென்று கொண்டிருந்தது.

இந்த சமயத்தில் தான் அழகேசனுக்கும் ராமநாதனுக்கும் பிரச்னை ஆரம்பித்தது. அவன் பள்ளிப்படிப்பு முடித்து கல்லூரியில் சேரும் காலம் வந்தது. அவன் எடுத்த மதிப்பெண்ணுக்கு பி.காம் சீட் தான் கிடைத்தது. கல்லூரி விண்ணப்பத்தில் தந்தை பெயரை ராமநாதன் என்றே இட்டிருந்தான் அழகேசன். கல்லூரி முதல்வர் தாயுடன் வந்திருந்த அழகேசனைப் பார்த்து "அப்பா வரலியா கல்லூரியில் சேர்க்க? அப்பா இருக்காருல்ல?" என்றார். ஆம் என்ற வண்ணம் தலையாட்டினான் அழகேசன். "பிள்ளையைக் கல்லூரியில் சேர்ப்பதை விட உங்க அப்பாவுக்கு என்ன வேலை? கலெக்டர் உத்தியோகமா?" என்றார் முதல்வர். அம்மாவை முறைத்தான் அழகேசன். "இல்லை சார் அவர் ஒரு வேலையாய் வெளியூர் போயிருக்கார்" என்றாள் ஈஸ்வரி. "ஹும். என்ன அப்பாவோ என்ன குடும்பமோ?" என்ற வண்ணம் கையெழுத்துப் போட்டார் முதல்வர்.

வெளியேறும் போதே "இந்தக் காலேஜில எனக்குப் படிக்க இஷ்டம் இல்லம்மா. இந்த பிரின்ஸிபாலைப் பார்க்கும் போதெல்லாம் இவர் கேட்ட கேள்வி தான் ஞாபகத்துக்கு வரும். எந்தக் காலேஜிக்குப் போனாலும் இப்படித் தான் கேக்கப் போறாங்க. வேணாம். நான் ஏதாவது வேலைக்குப் போயி உங்களைக் காப்பாத்துறேன். அவரு சகவாசமே வேணாம்." என்றான். இன்னும் ஏதாவது சொன்னால், ரோட்டிலேயே ஈஸ்வரி அழுது விடுவாள் போலிருந்தது. உடனே அழகேசன், "சரி சரி. நான் இந்தக் காலேஜிலேயே படிக்கிறேன். போதுமா?" என்றான்.

ஜனனி, அழகேசன் என்ற இந்த இருவர் வாழ்விலும் விதி விளையாடும் நேரம் வந்தது. ஜனனி வாழ்வில் ஒருவன் வந்து அவள் தலைவிதியை மாற்றினான். அழகேசன் வாழ்வில் ஒருத்தி சென்று அவன் தலைவிதியை மாற்றினாள்.

(பரவும்)

பாகம் - 6

அழகேசன் முதலாம் ஆண்டு பட்டப் படிப்பை முடித்திருந்தான். நிறைய வகுப்புத் தோழர்கள் இருந்தாலும் வீட்டுக்கு யாரையும் அண்ட விட்டதில்லை அழகேசன். அவன் தாயின் மேல் உயிரையே வைத்திருந்தான். கம்புக்குக் கொடி ஆதரவு, கொடிக்குக் கம்பு ஆதரவு என்ற நிலையில் இருவரும் இருந்தனர். ஈஸ்வரிக்கு அவனைப் பெரிய படிப்பு படிக்க வைக்க வேண்டும் என்று ஆசை. ஆனால், அழகேசனுக்கோ ஏட்டுக் கல்வி கசந்தது. அதேசமயத்தில் அனுபவக்கல்வியில் சிறந்தவனாய் இருந்தான். யாரையும் பார்த்த மாத்திரத்திலேயே எடை போட்டு விடுவான்.

சேகர். மென்பொருள் நிபுணன். இந்தியாவிலேயே பெயர் பெற்ற ஒரு மென்பொருள் நிறுவனத்தில் புராஜக்ட் மேனேஜராக இருக்கின்றான். ஒரு மென்பொருள் புராஜக்டை எடுத்து அந்த வேலையைப் பலருக்குப் பங்கிட்டுக் கொடுத்து அவர்களைத் திறமையாய் வேலை வாங்கி, காலத்திற்குள் முடிக்கும் பொறுப்பான பணியை மேற்கொண்டிருந்தான். அவனிடம் எப்போதும் நகைச்சுவை உணர்வும் ஒட்டிக் கொண்டே இருக்கும். கர்ணனுக்கு கவச குண்டலம் போல இவனுக்கு ஜோக்டா என்றே நண்பர்கள் சொல்வர். அதற்கும் ஒரு ஜோக் சொல்வான்! "கவசம் போருக்கு வேண்டியது தான்! அதென்னடா குண்டலம்? அதை இந்திரன் வாங்கி என்ன செஞ்சிருப்பான்?" என்று கேட்பான்.

ஜனனி படிக்கும் கல்லூரியில் ஒரு பயிற்சி வகுப்பில் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தான். கேம்பஸ் இண்டர்வியூ அந்தக் கல்லூரியில் அவனது நிறுவனம் நடத்த வேண்டும் என்பதற்காக கல்லூரி நிர்வாகம் அவனை அழைத்து இந்தப் பயிற்சி வகுப்பு நடத்தி ஐஸ் வைக்க நினைத்திருந்தது! அவனுக்கும் அது தெரியாமல் இல்லை. சரி, நல்ல ஆர்வமுள்ள இளைஞர்கள் கிடைத்தால் நல்லது தானே என்று அவனும் ஒத்துக் கொண்டிருந்தான். பயிற்சி வகுப்பு நடந்து கொண்டிருந்தது. எதற்கெடுத்தாலும் ஜனனியே கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள். அதனால் அவள் மேல் அவனுக்கு ஒரு ஈர்ப்பு. ஆனால் அவள் அவன் வேலையையே கேள்விக் குறியாக்கி புருவத்தை உயர்த்தச் செய்தாள்.

"ஒரு கம்பெனிக்காக மென்பொருள் எழுதுவதாக வைத்துக் கொள்வோம். அது கிட்டத்தட்ட சட்டை தைப்பது போல் தானே. இப்போது ஒரு அளவை எடுத்துச் சட்டை தைத்து விடுகின்றோம். பின்னால் நிறுவனம் பல கோணங்களில் வளர ஆரம்பிக்கும் போது அந்தச் சட்டை சேராது தானே? அப்போது மென்பொருளில் தேவையான மாற்றங்கள் செய்யவோ அல்லது வேறு மென்பொருள் செய்யவோ உங்களிடம் தானே வரவேண்டியுள்ளது? எதிர்காலத்தில் ஒன்று நடக்கும் என்று உங்களுக்குத் தோன்றுகின்றது. பிராஜக்ட் மேனேஜராகிய உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வரைமுறையின் படி அந்த ஆப்சன் பிராஜக்டிலேயே இல்லை. அப்படியானால் என்ன செய்வீர்கள்? எப்போதும் அவசர கதியில் மாறிக் கொண்டே இருக்கும் இந்த உலகில் மென்பொருள் உபயோகிப்பாளரே மென்பொருள் தயாரிப்பாளராக ஆக வேண்டிய நிர்பந்தத்தை என்றேனும் நீங்கள் உணர்ந்ததுண்டா? இது பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?"

இந்தக் கேள்வியைச் சந்தித்ததும், "உங்க பெயர்?" என்றான். "ஜனனி" என்றாள். அதற்குப் பின் அவனுக்குப் படித்தது அனைத்தும் அப்படியே மறந்து விட்டது. சிறிது நேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். வகுப்பு மொத்தமும் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தது. ஜனனிக்கு முகமெல்லாம் சிவந்து விட்டது!

இங்க பாருங்க ஜனனி, "உங்க கேள்வி அருமையானது! நாங்க தையல்காரர்கள் தான். ஆனால் சாதாரண துணியை நாங்கள் தைப்பதில்லை. எலாஸ்டிக் துணி என்று வைத்துக் கொள்ளுங்கள். ஓரளவு வளரும் நிறுவனத்துக்கு எங்க மென்பொருள் ஈடு கொடுக்கும். அதற்காக கன்னாபின்னாவென்று வளரும் நிறுவனத்துக்குத் தேவையான புதிய மென்பொருள் தான் வாங்கியாகனும். எங்களுக்கும் போணியாகனுமே!

அப்புறம் அடுத்து என்ன கேட்டீங்க? ஹாங்! மென்பொருள் உபயோகிப்பாளரே தயாரிப்பாளராவும் ஆகனும்னா ரொம்ப நல்லது! நம்மையும் பங்குதாராராவோ டைரக்டரோவோ ஆக்கி நிர்வாகத்துல உட்கார வச்சா சரியாப் போகும். இது கூட நல்ல ஐடியாவா இருக்கே" என்றான் வியப்புடன்.

அங்கே சிந்தனைகள் மட்டுமா பரிமாறப்பட்டன?

(பரவும்)

பாகம் - 7

ஒரு பயிற்சி வகுப்பை நடத்தியவனுக்கும், ஒரு கல்லூரி மாணவிக்கும் என்ன நெருக்கம் இருந்து விட முடியும்? ஒரு வாரத்துக்கும் மேலாகி இருந்தது. ஜனனியால் சேகரை நினைக்காமல் இருக்க முடியவில்லை. சேகரால் ஜனனியை மறக்க முடியவில்லை. அது கணிணியையும் தாண்டி ஏதோ ஒன்று என்று மட்டும் இருவருக்கும் புரிந்திருந்தது. அடுத்த வாரமே கல்லூரிக்கு காம்பஸ் இண்டர்வியூ சேகர் வேலை பார்க்கும் நிறுவனத்திலிருந்து வந்திருந்தார்கள்! கல்லூரி நிர்வாகமோ தம்மால் தான் இந்த நேர்காணல் இங்கு வந்திருக்கின்றது என்று நினைத்தனர். சேகருக்குத் தெரியும், ஜனனிக்குத் தெரியும் இந்த நேர்காணல் எதற்கென்று!

ஒரு மணி நேர இடைவெளி இருந்தது நேர்காணலின் போது. மதிய உணவு நேரம். ஜனனிக்குப் பசிக்கவே இல்லை. சேகருக்கும் தான். கல்லூரி வளாகத்திலேயே ஒரு மரத்தில் சேகர் சாய்ந்திருக்க, ஜனனி அருகில் நின்றிருந்தாள். "என் கம்பெனிக்கு வேலைக்கு வர்றீங்களா?" என்றான் சேகர். "என் வேலைக்கு கம்பெனி தர்றீங்களா"ன்னு கேப்பீங்கன்னு நினைச்சேன் என்றாள் ஜனனி சிரித்துக் கொண்டே! சேகருக்கு சந்தோசமாய் இருந்தது. என் பக்கத்து வீட்டுல ஒரு குழந்தையோட பிறந்த நாள் போனவருசம் 12ந் தேதி செப்டம்பர் மாசம் என்றான் சேகர். டக் கென்று நிமிர்ந்து பார்த்த ஜனனி அவன் கண்களுக்குள் ஊடுருவிப் பார்த்தாள். கண்களில் மித மிஞ்சிய ஆர்வத்துடன், "எங்க வீட்டுக்கு பக்கத்து வீட்டுக்காரர் தொலைபேசி நிறுவனத்தில் மேனேஜரா இருக்கார். அவருக்கு ஏதோ மென்பொருள் எழுத முடியுமான்னு கேட்டுக் கிட்டு இருந்தார்! நீங்க தான் மென்பொருள் உபயோகிப்பவரே மென்பொருள் எழுதனும்னு சொல்றவராச்சே. ஹெல்ப் செய்ய முடியுமா?" என்றான். கொஞ்ச நேரம் ஒன்றும் பேசாமல் யோசித்துக் கொண்டிருந்த ஜனனி, இதில் ஏதோ சூட்சுமம் இருக்கின்றது என்று புரிந்து கொண்டாள். பிறந்த தேதி என்ன சொன்னீங்க? என்று திரும்பவும் கேட்டுக் கொண்டாள். அதைக் கேட்டதும் சேகருக்கும் மகிழ்ச்சி கரை புரண்டோடியது!

சேகரை அவரது பக்கத்து விட்டுக்காரர் மறுநாள் அழைத்தார். தொலைபேசியில் யாரோ அழைப்பதாக. இதுவரை யாரும் அவனை தொலைபேசியில் அழைத்ததே இல்லை. செல்போன் இருக்கின்றதே இவனிடம்! ரிசீவரை எடுத்துக் காதில் வைக்கும் போதே "சொல்லுங்க ஜனனி!" என்று தான் ஆரம்பித்தான். ஜனனி அன்று இரவு வீட்டுக்குச் செல்வதற்குள் அவன் சொன்னது பிறந்த நாள் இல்லை தொலைபேசி எண் என்று தெரிந்து கொண்டிருந்தாள்! 20060912 என்ற எண் அவனது பக்கத்து வீட்டுக் காரரின் எண் என்று சுழற்றிப் பார்த்தாள். ஒன்றும் பேசாமல் அவள் இருப்பதைப் பார்த்தும், பக்கத்து வீட்டுக் காரர் பார்த்துக் கொண்டே இருப்பதைப் பார்த்தும் சேகர் தன் செல்பேசி எண்ணை அவளிடம் கொடுத்து, "எனக்கு செல்போன் இருக்கு. அதுல கூப்பிடுங்க" என்றான்.

செல்போனில் முதல் அழைப்பு வந்ததுமே, "பரவாயில்லையே! டெலிபோன் எண்ணைக் கண்டுபிடிச்சிட்டீங்களே!" என்றான். "ஆமா! பெரிய புதிர் போட்றீங்களாக்கும், இல்லாட்டாலும் உங்களைக் கண்டு பிடிக்க முடியாதாக்கும்" என்றாள் ஜனனி. "சரி எதுக்குக் கூப்பிட்டீங்கன்னு தெரிஞ்சிக்கலாமா?" என்றான் சேகர். "டெலிபோன் நம்பரைக் கொடுத்துட்டு பேசுன்னும் சொல்லிட்டு இப்படிக் கேட்டா எப்படி?" என்றாள் ஜனனி. இப்படியே வெகுநேரம் பேசிக் கொண்டிருந்ததில் இருவரும் நெருங்கிவிட்டனர். அவர்கள் காதலும் டெலிபோன் பில் போல வளர்ந்து கொண்டிருந்தது.

அழகேசன் கல்லூரியில் அப்போது இரண்டாம் ஆண்டு பாதியில் படித்துக் கொண்டிருந்தான். ஜனனிக்கு இது இறுதி ஆண்டு. ஜனனிக்கு அழகேசனைப் பற்றியோ ஈஸ்வரியைப் பற்றியோ தெரிந்திருக்கவில்லை. ஆனால் கோமதிக்கு அரசல் புரசலாகத் தெரிந்தது தன் கணவனைப் பற்றி.

பலநாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் என்பது பழமொழி. அது தேர்தலுக்கு 5 மாதமே இருக்கும் போது நடந்தது. ஆளுங்கட்சி பிரமுகர் ஒருவரிடம் இருந்து நாற்பது லட்சம் ரூபாய் லஞ்சம் வாங்கியிருந்தார் ராமநாதன். ஒரு பொருளின் வணிக வரி விகிதத்தில் சிறு திருத்தம் செய்தால் அவருக்கு கோடிக் கணக்கில் லாபம் கிடைக்கும். ராமநாதனும் அதை அவருக்குச் செய்து கொடுத்திருந்தார். அது ராமநாதனுக்குப் போதாத காலம் போலும். தேர்தல் ஆட்சியை மாற்றியது. எதிர்க்கட்சி ஆட்சிக்கு வந்த ஒரு மாதத்திலேயே இந்த ஊழலைத் தோண்டி எடுத்ததோடன்றி சி.பி.ஐ. விசாரணைக்கும் உத்தரவிட, மொத்த வணிக வரித்துறையும் ராமநாதனைக் கை காட்ட, எலிப் பொறியில் எலி சிக்கியதைப் போல் ராமநாதன் மாட்டிக் கொண்டார். முன்பு ஆளுங்கட்சியாகவும், இப்போது எதிர்க்கட்சியாகவும் இருந்த அந்த பிரமுகர் வகையிலும் மிரட்டல் வேறு. யாரென்று சொன்னால் மொத்தக் குடும்பமும் கூண்டோடு பரதேசம் என்று.

ராமநாதன் கோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்டார். குற்றம் நிரூபிக்கப்பட்டது. கோமதியை அவள் பிறந்த வீட்டில் யாரும் பார்க்கக் கூட வரவில்லை. ஜனனி, கோமதி என்று அனைவரையும் தொலைக்காட்சியில் காட்டினர். அப்போதெல்லாம் ஜனனி அடைந்த அவமானத்திற்கெல்லாம் வடிகாலாய் இருந்தது சேகரின் அரவணைப்பு மட்டுமே.

ஈஸ்வரிக்கு இந்த சமயத்தில் தான் மாரடைப்பு ஏற்பட்டது. அழகேசனால் எதுவும் செய்ய முடியாத நிலை. வீட்டில் இருந்த அனைத்தையும் விற்று நடுத்தெருவுக்கு வந்து அம்மாவைக் காப்பாற்ற முயற்சி செய்தான். அவனால் முடியவில்லை.

இவ்வாறு சேகர் வந்து ஜனனியின் விதியை மாற்றினான். ஈஸ்வரி உலகத்திலிருந்து சென்று அழகேசனின் விதியை மாற்றினாள்.

அதிர்ச்சி அதோடு விடவில்லை இவர்களை.

(பரவும்)

பாகம் - 8

ராமநாதனைச் சிறையில் அடைத்திருந்தனர். உடலாலும் உள்ளத்தாலும் மெலிந்து நலிந்து போயிருந்தார் அவர். ஒரு எடுத்துக் காட்டாய் விளங்கிய தான் உலகமே வெறுக்கும் அளவு ஆகிவிட்டதை எண்ணி எண்ணி வருந்தினார். ஜனனியையும் கோமதியையும் பார்க்க மிகவும் ஆவலாயிருந்தார். ஆனால் இருவருமே அவரை வந்து பார்க்கவே இல்லை. அவரைப் பார்க்க வந்தது அழகேசன் மட்டுமே! அவனும் அவனாக வரவில்லை. அவனுக்காக வரவில்லை. தன் தாயின் மறைவைத் தன் தந்தையிடம் சொல்லும் பொறுப்பு அவனுக்கு இருந்தது. அதை நிறைவேற்றவே வந்தான்.

சிறையில் வாடி வதங்கிய நிலையில் ராமநாதனைப் பார்த்த அவனுக்கே கண்களில் நீர் அருவியாய் கிளம்பியது. ஈஸ்வரியின் மறைவைச் சொன்னதும், அதிர்ச்சியடைந்தார் ராமநாதன். தன் சொத்துக்கள் பலவற்றைப் பறிமுதல் செய்ததாகச் செய்தித்தாளில் படித்து அறிந்து கொண்டார். ஜனனி பற்றி ஏதேனும் தகவல் தெரியுமா என்று கேட்டார். பாவம், மகளின் திருமணத் தேதியை இன்னொருவன் சொல்லித் தெரிந்து கொள்ளும் நிலையில் அவர் இருந்தார். அடுத்த வாரத்தில் அவளுக்கு திருமணம் என்றதும் ஒரு புறம் மகிழ்ச்சியும் மறுபுறம் அதைக் காணக் கூட இயலாத நிலையையும் எண்ணி வேதனையும் கொண்டார். அவன் படிப்பைப் பற்றிக் கேட்டார். கல்லூரியில் இருந்து நின்று விட்டதாகச் சொன்னான் அழகேசன். வேலை தேடிக் கொண்டிருப்பதாகவும் சொன்னான்.

ராமநாதன் அவனைப் பாசமுடன் பார்த்தார். நான் செய்த பாவத்திற்கு நானே இந்தப் பிறவியிலேயே தண்டனை பெற்று விட்டேன் அழகேசா. இனி எனக்குக் கவலையில்லை. நான் அதிக நாட்கள் உயிரோடு இருக்கப் போவதில்லை. எனக்கிருக்கும் ஒரே வருத்தம் ஜனனி பேரில் தான். எனக்கொரு சத்தியம் செய்வாயா? என்றார். இது வரை தந்தையிடம் கேட்டே பழக்கப்பட்ட அழகேசன் அவர் கேட்கும் ஆசையை நிறைவேற்ற உறுதி பூண்டான். "நீ எங்கே இருந்தாலும் நல்லா இருப்பாய் அழகேசா. கஷ்டத்தைத் தவிர உனக்கு வேறெதையும் நான் கொடுக்கவில்லை. என் மகள் ஜனனி பற்றித் தான் கவலையா இருக்கு. கஷ்டம்னா என்னன்னே தெரியாம வளர்த்துட்டேன். அவளுக்கு நீ ஆதரவா இருக்கணும். இருப்பியா? எனக்குப் பிறகு நீ தான் என் வாரிசு. அவளைக் கை விட்றாத." என்றார்.

அழகேசனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. அடுத்த வாரம் திருமணம் ஆகிப் போகப் போகின்றாள் ஜனனி. அவளுக்கு என்ன கஷ்டம் வரப் போகுது? என்று நினைத்துக் கொண்டான். கோமதியைப் பற்றிக் கூட அவர் பேசாதது அவனுக்கு ஆச்சரியம் அளித்தது. சரி அப்பா என்றான் அழகேசன். சேகர் பற்றியும் சொன்னான். அவன் தந்தையிடம் விடைபெற்றுக் கொண்டான் அழகேசன். விடை பெறும் போது அவர் கண்களைப் பார்த்தான். அதில் ஏதோ பெரிய பொறுப்பை அவன் தலையில் ஒப்படைத்து விட்ட நிம்மதி தெரிந்தது.

சேகரின் திருமண முடிவு அவன் வீட்டார்களுக்குக் கொஞ்சம் கூடப் பிடித்தமில்லை. அவனை வைத்து வரதட்சணை வாங்க வேண்டும் என்றெல்லாம் அவர்கள் நினைக்கவில்லை. இருந்தாலும் இப்படி ஒரு குடும்பத்திலிருந்து அவனுக்குப் பெண்ணா என்று ஒரே சண்டை! இத்தனையையும் மீறி ஜனனியைக் கைப்பிடிக்க சம்மதித்திருந்தான் சேகர். அதனால் அவனைத் தலை முழுகி விட்டதாகச் சொல்லிவிட்டார் அவனது தந்தை. கோமதி வீட்டிலிருந்தும் யாரும் அவளைப் பார்க்கக் கூட சம்மதிக்கவில்லை. இதனால் திருமணத்திற்கு மிகச் சிலரே வந்திருந்தனர். ஒரு ஓரத்திலிருந்து அழகேசனும் பார்த்துக் கொண்டிருந்தான்.

(பரவும்)

பாகம் - 9

எவ்வளவோ சிறப்பாகச் செய்திருக்க வேண்டிய திருமணம் இப்படி எளிமையாக நடந்தது அனைவருக்குமே கண்ணீர் வரச் செய்தது கண்களில். ஜனனியின் மனம் முழுதும் சேகரின் பெருந்தன்மையால் நிறைந்திருந்தது. அவளது கர்வமெல்லாம் எங்கே சென்றது என்றே தெரியவில்லை. துறுதுறுப்பும் தான். பொறுப்பு ஏறியிருதது. தந்தையிடம் சென்று ஆசி வாங்க வேண்டும் என்று ஆசைப்பட்டாள். திருமணம் முடிந்ததும் நேராக சிறைச்சாலைக்கா செல்ல முடியும்? ஓரிரு நாட்களில் சேகரிடம் கேட்டு செல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். அதிகம் பாதிக்கப்பட்டது கோமதி என்றே சொல்ல வேண்டும். பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்து அதிகாரக் குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டு அடுத்து எதிர்காலத்திற்கு என்ன செய்வது என்று ஏங்கும் நிலை வரும் என்று கனவிலும் நினைத்திருக்கவில்லை!

சேகர் என்ன தான் தனிக்குடித்தனம் நீங்களும் வந்து எங்களுடனேயே இருங்கள் என்று வற்புறுத்தியும் கோமதி மறுத்து விட்டாள். தன் கணவனுடன் வாழ்ந்த வீட்டை விட்டு அவளுக்கு வர இஷ்டமில்லை. அவளது எதிர்கால வாழ்க்கைக்கு வழி செய்யவோ என்னவோ, ஜனனி திருமணம் முடிந்த மறுநாள் சிறைச்சாலையில் ராமநாதன் இறந்திருந்தார். ஜனனியின் ஆசையில் மண் விழுந்தது. அவரது ஆயுள் காப்பீட்டுப் பணம் கணிசமாக வந்தது. அதை வைத்தும் இன்னும் சில சொத்துக்களைப் பராமரித்தும் தன் காலத்தை ஓட்டி விட முடிவு செய்தார் கோமதி.

அழகேசனின் நிலை இன்னும் மோசமாகியது. தன் ஒரே உறவான தந்தையும் இழந்து அனாதையாய் நின்றான் அழகேசன். உடனடியாக வேலை சேர்ந்தே ஆக வேண்டிய கட்டாயம் அவனுக்கு. எங்கு வேலைக்குச் சென்றாலும் முதலில் கேட்கும் கேள்வி, “உங்கப்பா யாரு?” அல்லது "என்ன படிப்பு?", “என்ன ஜாதி", “எத்தனை வருடம் அனுபவம்" என்ற கேள்விகளால் வெறுத்துப் போயிருந்தான் அழகேசன்.

அப்போது தான் கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள் கவலை உனக்கில்லை ஒத்துக் கொள் என்னும் பழமொழியின் அர்த்தம் அவனுக்கு விளங்கியது. ஆம், பன்னிரண்டாம் வகுப்பு முடிந்ததும், காரோட்டப் படித்திருந்தான் அழகேசன். எல்லாம் அவன் ஜனனியைப் பார்த்து ஆசைப்பட்டதால் வந்தது தான். அவள் அநாயசமாக தன் தந்தையின் காரை ஓட்டுவதைப் பார்த்து, தானும் கார் ஓட்டப் படிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு படிக்க ஆரம்பித்தான். அவன் வாங்கி வைத்திருந்த ஓட்டுநர் உரிமம் தான் இன்று அவனுக்கு வேலை வாங்கித் தந்தது.

அவனே நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. இப்படி ஒரு வாய்ப்பு அவனுக்குக் கிடைக்கும் என்று. ஏதோ வேலை தேடிக் கொண்டு சென்றவன் மாலை நேரத்தில் வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தான். படகு போன்ற ஒரு காருக்கு வெளியே ஒரு பெரியவர் நின்று கொண்டு செல்பேசியில் கதைத்துக் கொண்டிருந்தார். ஏதோ அவசரமாய் செல்பவர் போல் தெரிந்தது. கூர்ந்து கவனித்ததில் கார் முன் சக்கரம் பஞ்சர் ஆகியிருந்ததால் வெளியே நின்று செய்வதறியாமல் பேசிக் கொண்டிருந்தது தெரிந்தது.

பக்கத்தில் சென்றான் அழகேசன். “என்ன சார்? பஞ்சராயிருச்சா? நான் வேணா ஹெல்ப் செய்யட்டா?” என்றான். “சரி" என்றார் அவர். விறுவிறுவென்று தன் வேலையை ஆரம்பித்தான். ஸ்டெப்னியை மாட்ட ஆரம்பித்தான். “ஏன் சார், லட்சக்கணக்கா செலவழிச்சி இவ்ளோ பெரிய காரை வாங்கியிருக்கீங்களே, ஒரு டிரைவரை வேலைக்குப் போட்டா என்ன?” என்றான். “நேத்து தான் வேலையை விட்டு நின்னுட்டான். யாருமே எனக்குப் புடிக்கிற மாதிரி ஒழுங்கா இருக்குறதில்ல.” என்று வருத்தப் பட்டார் பெரியவர். அவன் மாட்டி முடித்ததும் பையிலிருந்து பணம் கொடுக்க நினைத்து கை விட்டார் அவர். “அதெல்லாம் வேண்டாம் சார். இதெல்லாம் ஒரு

உதவி தானே" என்றான். ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்த அவர், “என்னப்பா செய்ற?” என்றார். “வேலை தேடும் வேலை செய்றேன் சார்". “அப்படியா?” என்று மேலும் ஆச்சரியப்பட்ட அவர், “என்ன வேலை தெரியும் உனக்கு?” என்றார். அவனும் சளைக்காமல், “நீங்க என்ன வேலை தந்தாலும்" என்றான்.

இப்படித்தான் விஸ்வேஸ்வரனிடம் காரோட்டியாகச் சேர்ந்தான் அழகேசன். காரோட்டியா தேரோட்டியா என்னும் அளவுக்கு அவருக்கு மனதுக்குப் பிடித்தவனாகவும் இருந்தான்!

(பரவும்)

பாகம் - 10

விமல் இதோ படிப்பை முடித்து விட்டு ஆஸ்திரேலியாவிலிருந்து திரும்பி வந்து விட்டான். தனுஷ்கோடிக்கு ரொம்ப சந்தோசமாகவும் பெருமையாகவும் இருந்தது. அவனுக்கு இந்த வைர வியாபாரத்தில் அவ்வளவாக நாட்டம் இல்லை. அவனது எண்ணமெல்லாம் பெரிய நிறுவனம் துவங்க வேண்டும். ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டும். அவனது நிறுவனத்தின் பெயரை நாடே உச்சரிக்க வேண்டும் என்பது தான் ஆசை.

அவனது ஆசைக்கு அவனது தந்தையே முட்டுக்கட்டை போட வேண்டிய நிலை ஏற்பட்டது. காரணம் அவனது நடவடிக்கைகள். பகலை விட, இரவே அவனுக்குப் பகலாக இருந்தது. பணத்தை விட்டெறிந்தால் வரக்கூடிய அனைத்து பழக்கங்களும் அவனுக்கு இருந்தது. சென்னையின் பல இடங்கள் அவனது ஆசைக்குத் தீனி போடுபவையாய் இருந்தன. இவனுக்கு எப்படி பெரிய தொழிற்சாலை வைத்துக் கொடுப்பது என்று கவலையில் ஆழ்ந்தார் தனுஷ்கோடி. அவனோ நச்சரிக்க ஆரம்பித்தான். “எல்லாம் ஒரு கால்கட்டு போட்டால் சரியாகிப் போய்விடும்" என்று நினைத்தார் தனுஷ்கோடி.

மதிஸ்ரீ தனது முதலாம் ஆண்டு கல்லூரிப் படிப்பை ஆரம்பித்திருந்தாள். அறிவியல் பாடத்தை எடுத்திருந்தாள் தன் விருப்பப் பாடமாக. விஸ்வேஸ்வரனுக்கு மதிஸ்ரீ என்றால் உயிரினும் மேல்! ஒரே மகள். இவ்வளவு பெரிய சொத்திற்கு அவள் தான் வாரிசு. அது மட்டும் இல்லை. தான் வளரும் போதே அவளும் வளர்ந்ததால் அவள் மேல் ஒரு மரியாதையே வைத்திருந்தார் அவர். வாங்க போங்க என்று அழைப்பார் மகளை! மதி நிறுவனத்தையும் மதிஸ்ரீயையும் ஒரு தராசில் இருபுறமும் வைத்தால் அவரைப் பொருத்தவரை இரண்டும் சமமாகவே இருக்கும்.

மதிஸ்ரீயைப் பற்றி ஏதேதோ சொல்லிக் கொண்டே போகின்றேன் பாருங்கள்! அவளைப் பற்றி ஏற்கனவே சொன்னது தான். களங்கமில்லா அழகுக்குச் சொந்தக்காரி. யாரும் பார்த்ததும் திரும்பிப் பார்க்கச் சொல்லும் முகம். பிரம்மனும் பிரமிக்கும் அழகு என்று சொல்லலாம். அன்றலர்ந்த தாமரையாய் இருந்தாள் மதிஸ்ரீ.

திடீர்ப் பணக்காரர்கள் என்பதால் கொஞ்சம் பணக்காரத்தனத்தையும் ஆடம்பரத்தையும் காட்டிக் கொள்வாள். கொஞ்சம் என்றா சொன்னேன், கொஞ்சம் என்றால் அதிகம் என்று தானே பெண்களின் அகராதியில் அர்த்தம்! அவள் நினைத்தால் அது உடனே அவளுக்கு வந்தாக வேண்டும். வந்தும் விடும். அதனால் தற்பெருமையும் தானாகவே வந்து சேர்ந்திருந்தது.

ஒற்றைக் குழந்தையாய் இருப்பதில் இது ஒரு சௌகரியம். தாயும் தந்தையும் ஒரே செல்லம் கொஞ்சுவார்கள். அதிலும் பணக்காரர்களாய் இருந்து விட்டால்? விஸ்வேஸ்வரனுக்கும் மாலதிக்கும் செல்லமாய் இருந்தாள் மதிஸ்ரீ. மொத்தத்தில் தன் வாழ்க்கையில் கஷ்டம் என்பதை அவள் உணர்ந்திருக்க வில்லை.

வேலைக்குச் சேர்ந்த முதல் வாரமே விஸ்வேஸ்வரனுடன் வெளியூர் சென்றிருந்தான் அழகேசன். ஒரு வாரம் கழித்து திரும்பி வருகையில் இருவருக்கும் ஒரு இனம் புரியா நெருக்கம் ஏற்பட்டது என்னவோ உண்மை. அவரது தொழில் நடத்தும் லாவகத்தைப் பார்த்து வியந்து அவருக்குக் கிட்டத்தட்ட அடிமையாகவே ஆகியிருந்தான் அழகேசன்.

(பரவும்)

பாகம் - 11

அழகேசன் வேலைக்குச் சேர்ந்து பத்து நாட்கள் ஆகியிருக்கும். விஸ்வேஸ்வரனின் பங்களாவில் நான்கு கார்கள் இருந்தன. மாலதிக்கு ஒன்று. மதிஸ்ரீக்கு ஒன்று. அவருக்கு ஒன்று. இவர்கள் அனைவரும் செல்வதற்கு ஒன்று. அவருக்குத் தான் ஓட்டுநராக அழகேசன் இருந்தான். மற்ற கார்களுக்கு வேறு வேறு ஓட்டுநர் இருந்தனர்.

அன்று மதிஸ்ரீயின் ஓட்டுநர் வரவில்லை போலும். விஸ்வேஸ்வரன் அவனை அழைத்தார். மகளைக் கல்லூரியில் விட்டு வரச் சொன்னார். விஸ்வேஸ்வரனின் காரிலேயே மதிஸ்ரீ ஏறினாள். பின்புறம் இடது புறம் இருந்த இருக்கையில் அமர்ந்தாள் மதிஸ்ரீ. அவள் பூசியிருந்த மணம் மிக்க செண்ட்டின் வாசனை அவன் இது வரை அனுபவித்ததே இல்லை. கண்ணாடியில் அவள் முகத்தைத் தற்செயலாகப் பார்த்தான். அப்படியே அசந்து போய் விட்டான். அந்தப் பார்வையில் காமம் சிறிதளவும் இல்லை என்றே சொல்ல வேண்டும். உலகில் அழகான எந்தப் பொருளையும் பார்த்தால் "அட" என்று சொல்லத் தோன்றும் அல்லவா? அந்த நிலையில் தான் இருந்தான் அழகேசன்.

போகும் வழியிலேயே காரை வேறு வழியில் திருப்பச் சொன்னாள் மதிஸ்ரீ. அங்கே அவளுக்கு இரண்டு நண்பிகள் காத்துக் கொண்டிருந்தனர். அவர்களையும் காரில் ஏற்றி கொண்டாள். கல்லூரிக்குச் சென்று கொண்டிருந்தது கார். அவர்களை இறக்கி விட்டு வெகு நேரம் ஆன பிறகும் அவளது வாசனை காரில் இருந்தது.

மாலை அவளைத் திரும்ப அழைத்துச் செல்வதற்காக வந்திருந்தான் அழகேசன். அவள் தோழிகளுடன் வந்து கொண்டிருந்தாள். அப்போதும் அவளது அழகைக் கண்டு வியந்த அழகேசன், “இந்த டிரஸ் உங்களுக்கு அழகா இருக்கு" என்றான்.

தன் வாழ்நாளில் யாரிடமும் வாங்கியிராத அறையை நடுத்தெருவில் பலர் பார்க்க மதிஸ்ரீயிடமிருந்து பெற்றான் அழகேசன். “உன் குரங்கு மூஞ்ச என்னைக்காவது கண்ணாடியில பார்த்திருக்கியா நீ?” என்றாள் மதிஸ்ரீ. முகம் கோபத்தில் சிவந்திருந்தது. கையும் தான், அவனை அடித்ததில் வலித்ததால்.

அழகேசன் தலையைக் குனிந்து கொண்டான். “டிரைவர், கார் கதவைத் திறந்து விடத் தெரியாதா? உன்னையெல்லாம் வேலைக்கு வச்சிருக்கிற அப்பாவைச் சொல்லனும்" என்றாள் சத்தமாக. உடனே கதவைத் திறந்து விட்டான் அழகேசன். அவளுடன் தோழிகள் இருந்ததால் கொஞ்சம் நிலைமை சரியாகி விட்டிருந்தது. அவர்களை இறக்கி விடும் இடம் வந்தது. அனைவரும் கையசைத்து விடை பெற்றனர் அவளிடம் இருந்து.

சரி தான். நம் வேலைக்கு உலை வைக்கப்பட்டது என்று நினைத்தான் அழகேசன். ஆனால் அவள் ஏதும் நடந்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை வீட்டில் இறங்கும் வரை. வீட்டை நெருங்கிய உடன், “நான் எங்கப்பா கிட்டச் சொன்னா வேலைய விட்டே தூக்கிருவாரு தெரியுமில்ல. இது தான் உனக்கு பர்ஸ்ட் அண்ட் லாஸ்ட். இனிமேல் நான் எப்போ இந்தக் காரில ஏறினாலும் ஓடி வந்து டோரைத் திறந்து விடனும். அது தான் உனக்குத் தண்டனை" என்று சொன்னாள் அதிகாரமாய்.

வீட்டுக்குள் சென்றது கார். காரை நிறுத்தியதும் அழகேசனுக்கு வெறுத்துப் போயிற்று. "கார்க்கதவை நீ தான் திறக்கனும்னு சொன்னேன். காதுல விழல?” என்றாள் மதிஸ்ரீ. இனிமேல் இவளுக்குக் காரே ஓட்டக் கூடாது என்று நினைத்துக் கொண்டான் அழகேசன். வேலையை விட்டு நின்று விடலாமா என்று கூடத் தோன்றியது அவனுக்கு,

இருந்தாலும் விஸ்வேஸ்வரன் மேல் இருந்த விசுவாசத்தால் பொறுத்துக் கொண்டான்.

(பரவும்)

பாகம் - 12

வேகமாக ஓடு தளத்தில் ஓடி ஜிவ்வென்று பறக்கும் விமானத்தைப் போல் சந்தோசமாய் ஆரம்பித்தது ஜனனியின் வாழ்க்கை. அப்பாவை இழந்த சோகம் ஒரு புறம் இருந்தாலும் நினைத்த படியே கணவனும் வாழ்க்கையும் அமைந்ததில் சந்தோசமடைந்தாள் ஜனனி. சேகர் குடும்பத்தாரைத் தான் சமாதானம் செய்யவே முடியவில்லை இருவராலும்.

மோகம் முப்பது நாள் முடிந்து சராசரி வாழ்க்கைக்கு இருவருமே வந்திருந்தனர். வேலைக்குச் செல்ல ஆசைப்படுவதாக மெல்ல ஆரம்பித்தாள் ஜனனி. செலவு மிக்க நகர வாழ்க்கையில் கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்வது சகஜம் தானே? சேகரும் ஒத்துக் கொண்டான். ஜனனி வேலை தேட ஆரம்பித்தாள்.

பட்டப் படிப்பு முடிக்காததால் அவளுக்கு வேலை கிடைப்பதில் சிக்கல்கள் இருந்தன. மீண்டும் படிப்பதில் அவளுக்கும் இஷ்டம் இல்லை. சில இடங்களில் ஜனனிக்கு வேலையும் கிடைத்தது. ஆனால் அந்த வேலைகளில் ஒன்று அவளது வேகத்துக்கு அவர்களால் ஈடு கொடுக்க முடியவில்லை அல்லது சேர்ந்த ஓரிரு மாதங்களிலேயே அவளது காதுக்குப் பின்னால் ராமநாதன் பற்றி கிசுகிசுக்க ஆரம்பித்து விடுவார்கள். இப்படியே ஓடிக் கொண்டிருந்தது அவளது வாழ்க்கை.

ஓர் நாள், சேகரிடம், “என்னங்க நாம பண்ணின சாப்ட்வேரோட அவுட்புட் இன்னும் கொஞ்ச நாள்ல வரப்போகுது" என்று பீடிகை போட்டாள் ஜனனி. சேகருக்கு முதலில் புரியவில்லை. “என்ன சொல்ற நீ" என்றான். “ஆமா, நீங்கள்லாம் ஒரு பெரிய கம்ப்யூட்டர் இஞ்சினியர்னு சொல்லிக்கங்க" என்று குறுகுறுப்புடன் பார்த்தவளின் முகத்தில் தோன்றிய பூரிப்பில் மலர்ந்தான் சேகர். ஆம், ஜனனி உண்டாகியிருந்தாள். அவர்கள் வாழ்விலேயே சந்தோசமான தருணம் அது."வேணும்னா பாருங்களேன், நம்ம நெட்வொர்க்கில் மாமாவும் அத்தையும் சேர்ந்துக்குவாங்க நம்ம ஜூனியரால" என்று சந்தோசப்பட்டாள் ஜனனி. ஆம், பேரப் பிள்ளையைக் காணவாவது தன் தந்தையும் தாயும் வருவார்கள் என்று எண்ணி திருப்திப் பட்டுக் கொண்டான் சேகர்.

ஜனனி இந்த முறை வேலை தேடிச் சென்ற நிறுவனத்தில் நேரடியாக மேனேஜிங் டைரக்டரே இண்டர்வியூ நடத்துகின்றார் என்றதும் ஆச்சரியப் பட்டாள். இவளும் உள்ளே அழைக்கப்பட்டாள். அங்கு அமர்ந்திருந்தவரைப் பார்த்ததும் இவரா இவ்வளவு பெரிய நிறுவனத்தின் முதலாளி? என்று நினைத்துக் கொண்டாள். “என் பெயர் விஸ்வேஸ்வரன்" என்று அறிமுகப் படுத்திக் கொண்டார் அவர்! என்ன இது? நாம் வேலைக்குத் தேடி வந்தோமா? அல்லது அவர் வந்திருக்கின்றாரா? என்று நினைத்துக் கொண்டாள் ஜனனி.

கேள்விகளே அதிகம் இல்லாத இயல்பான பேட்டி போல் அமைந்தது அந்த இண்டர்வியூ. ஏன் இந்த நிறுவனம் இத்தனை பெரியதாய் வளர்ந்திருக்கின்றது என்பதன் காரணத்தைச் சிறிது நேரத்திலேயே உணர்ந்து கொண்டாள். ஒரு சிலரைப் பார்த்ததும் நமக்குப் பிடித்துப் போகும். காரணம் சொல்லத் தெரியாது. அன்று விஸ்வேஸ்வரனைப் பார்க்கும் போதும் அவளுக்கு அந்த அனுபவம் ஏற்பட்டது. இங்கு வேலை கிடைத்தால் நன்றாக இருக்கும். ஆனால், இது மென்பொருள் நிறுவனம் அல்லவே! மென்பொருள் சம்பந்தமான ஆட்கள் தேவை என்றல்லவா போட்டிருந்தார்கள் என்று நினைத்துக் கொண்டாள்.

(பரவும்)

பாகம் - 13

“என்ன யோசனை செய்றீங்க?” என்றார் விஸ்வேஸ்வரன். “இல்லை சார். இங்கே சாப்ட்வேர் சம்பந்தமான ஆட்கள் தேவைன்னு விளம்பரம் வந்ததே" என்றாள். அவர் சிரித்துக் கொண்டே, “ஏம்மா? சோப்புக் கம்பெனிக்கு எதுக்கு சாப்ட்வேர்னு நினைச்சீங்களா?” என்றவர் தொடர்ந்து "எனக்கு சாப்ட்வேர் எழுதுறவங்களை விட, சாப்ட்வேரை ஒழுங்கா யூஸ் பண்றவங்க தான் வேணும்" என்றார். அவளது எண்ண ஓட்டம் ஒத்து வருவதைப் பார்த்து மிகுந்த சந்தோசமடைந்தாள் ஜனனி. அவளும் ஓர் விதத்தில் அவரை ஈர்த்திருந்தாள்.

அவளது விண்ணப்பத்தைப் பார்த்தவர், "உங்கள் தந்தை பெயர் ராமநாதனா?” என்றார். இது வரை பொறுமை காத்த ஜனனிக்குச் சடாரென்று கோபம் வந்தது. “ஆமாங்க, நான் அந்த ராமநாதன் ஐ.ஏ.எஸ். மகள் தான். போதுமா? என்னைச் சேர்த்தா நானும் இங்கே ஊழல் பண்ணுவேன். அதனால எனக்கு இந்த வேலை வேண்டாம்" என்ற படி எழுந்தாள். “நான் என்ன கேட்டுவிட்டேன் என்று உங்களுக்கு இத்தனை கோபம் வருகின்றது என்று தெரியவில்லை. உங்கள் தந்தையின் நிர்வாகத் திறன் பற்றி உங்களுக்குத் தெரியுமோ தெரியாதோ? ஆனால் அவரைக் குருவாகக் கொண்டு நிர்வாகம் படித்த ஏகலைவன் நான். அப்படிப் பட்ட பெரியவரின் பெண் நீங்கள் என்றால் எங்கள் நிறுவனத்தில் வேலை பார்க்கும் அளவுக்கு எங்கள் நிறுவனம் அத்தனை பெரியதில்லை தான்" என்று அவர் சொன்னவுடன் அவள் கோபம் எங்கே சென்றது என்றும் தெரியவில்லை. அவர் மேல் பெருகிய மரியாதைக்கும் அளவில்லை.

“என்னை மன்னித்துக் கொள்ளுங்கள் சார்" என்றாள். “எங்கள் நிறுவனத்தில் உங்களை வேலைக்கு வைத்துக் கொள்வதில் எனக்கு மிக்க சந்தோசம். இது உங்கள் நிறுவனம் போல் தான். நீங்கள் நாளை முதல் வேலைக்கு வரலாம்" என்று அதற்குப் பின் அவள் படித்த படிப்பென்ன என்று கூடப் பார்க்க வில்லை அவர். தன் வயிற்றில் வளரும் குழந்தையே தனக்கு இந்த வேலை கிடைக்கக் காரணம் என்றும் நினைத்துக் கொண்டாள்!

ஜனனியும், சாகும் வரை இந்தக் கம்பெனியில் தான் வேலை செய்யனும்னு ஒரு ஆசை வருதே. என்று நினைத்துக் கொண்டாள். வேலைக்குச் சேரவும் முடிவு செய்தாள். பாவம் ஒரு நாள் இந்தக் கம்பெனிக்கு எதிராக மட்டுமே செயல்படுவோம் என்றும் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை.

(பரவும்)

பாகம் - 14

இவ்வளவு பெரிய நகரத்தில் ஜனனியும் இவன் வேலை பார்த்த நிறுவனத்திற்கே வேலைக்குச் சேர்ந்ததை நினைத்தால் அழகேசனுக்கு ஆச்சரியமான ஆச்சரியமாக இருந்தது. அப்போது தான் கணினிகளை அலுவலகக் கணக்குகள் பார்ப்பதற்கென்று உபயோகிக்க ஆரம்பித்த நேரம். ஜனனி வருவதற்கு முன்பே அங்கே கணினி இருந்தது. ஆனால் அது ஒரு முன்னேற்றப்பட்ட தட்டச்சு இயந்திரமாகவே பயன்படுத்தப் பட்டு வந்தது. முக்கியமாக கணக்குப் பதிவியலுக்கு மட்டுமே கணினி பயன்பட்டு வந்தது அங்கே. அன்புராஜின் ராஜ்ஜியம் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்ததால் அவர் என்ன கொடுக்கின்றாரோ அதை மட்டும் கணினியில் ஏற்றி தேவையான அறிக்கைகள் மட்டும் பெற்றுக் கொள்ளுமாறு அவர்களின் மென்பொருள் வடிவமைக்கப் பட்டிருந்தது.

ஜனனி தனது திறமையாலும் ஆர்வத்தாலும் வந்த இரு மாதங்களிலேயே விஸ்வேஸ்வரனுக்கு வலது கரமாக மாறிவிட்டாள் என்றே சொல்ல வேண்டும். மதி நிறுவனத்தின் அனைத்து வியாபார நிகழ்ச்சிகளையும் கணினியின் மூலம் கண்காணிக்கவும், செயல்படுத்தவும், தீர்மானிக்கவும், லாபகரமான முறையில் இயக்கவும் ஜனனி செய்ததால் விஸ்வேஸ்வரனின் அன்பையும், அன்புராஜ் போன்றவர்களின் வெறுப்பையும் எளிதில் சம்பாதித்தாள் ஜனனி.

சில சமயங்களில் ஜனனியும் விஸ்வேஸ்வரனுடன் காரில் வந்ததுண்டு. அப்போதெல்லாம் அவளது அருகாமையும், பேச்சுக்களும் கார் ஓட்டிக் கொண்டிருக்கும் அழகேசனின் கண்களில் நீரை வரவழைத்து சாலையை மறைத்து விடும். தன் சகோதரி இந்த நிலையில் இருக்கின்றாள் என்ற சந்தோசம் ஒருபுறம் இருந்தாலும், தன் சகோதர பாசத்தை வெளிப்படுத்த முடியவில்லை என்ற ஏக்கம் அவனுக்கு இருந்தது. அதற்குக் காரணமும் இருந்தது.

ஒரு நாள் கோமதியை அவரது வீட்டில் சென்று சந்தித்தான் அழகேசன். தன் தாய் ஈஸ்வரியைப் பற்றியும், அவளுக்கும் ராமநாதனுக்கும் இருந்த உறவைப் பற்றியும், அவளது மறைவு, தான் சிறைச்சாலையில் தந்தையைச் சந்தித்தது என்று அனைத்தையும் சொன்னான். ஜனனியைப் பற்றி ராமநாதன் கேட்டுக் கொண்டதையும் தெரிவித்துக் கொண்டான். கோமதி கண்ணீருடன் கேட்டுக் கொண்டிருந்தார். வெகு நேரம் அமைதியாக இருந்த அவர், “இதெல்லாம் எனக்கு இப்போது தெரிந்து என்ன ஆகப் போகின்றது? அவரே போய் விட்டார். நீ என்னை மதிப்பதானால் உன்னை ஒன்று கேட்டுக் கொள்கின்றேன். என் மகள் இப்போது தான் திருமணம் முடிந்து சந்தோசமாக இருக்கின்றாள். இந்த சமயத்தில் உன்னைப் பற்றிச் சொன்னால் அது இன்னும் அவளது வாழ்க்கைக்கு பாதகமாகத் தான் முடியும். உன்னைப் பற்றித் தெரியாமல் இருப்பதே அவளுக்கும் நல்லது. அதனால் நீ எக்காரணம் கொண்டும் இந்த விஷயத்தை அவளுக்குச் சொல்ல மாட்டேன் என்று எனக்குச் சத்தியம் செய்து கொடு. என் கணவர் உன்னிடம் கடைசியாய் கேட்டுக் கொண்டதை உன்னால் இப்படித் தான் நிறைவேற்ற முடியும் என்று நினைக்கின்றேன்" என்றார்.

அழகேசனுக்கு மிகவும் வருத்தமாகப் போய்விட்டது. தந்தை இறந்த பிறகாவது தனக்கொரு சொந்தம் கிடைத்ததாகச் சந்தோசப் பட்டான் அவன். இப்போது அந்த சொந்தமும் தன்னை விட்டுப் போய்விட்டதை எண்ணி மனதில் கலக்கமடைந்தான்.

இப்படி எந்த சொந்தமும் இல்லாமல் அனாதையான நிலைக்குத் தள்ளப் பட்ட அழகேசனுக்கு வயதை மீறிய ஒரு நட்பு அமைந்தது. அது வாழ்நாள் முழுதும் நீடித்தது. அதற்காக அவன் பெருமைப் படாத நாளே இல்லை!

(பரவும்)

பாகம் - 15

மதி ஒரு இடத்துக்குச் சென்றாள் என்றால் அவளை அங்கிருப்போர் அனைவரும் கவனித்துப் பார்த்தாக வேண்டும் என்பது போலவே இருக்கும் அவள் நடை, உடை, பாவனை அனைத்தும். அழகும், ஆடம்பரமும் இணைந்தால் என்ன ஆகும் என்பதன் எடுத்துக்காட்டாய் அவள் விளங்கினாள். ஓரக் கண்ணால் மற்றவர்கள் பார்ப்பதையும் பார்த்தால் தான் அவளுக்கு திருப்தி ஏற்படும். எப்போதாவது சேலை அணிந்தாலும் அவளுக்குப் பிடித்த உடை சுடிதார் தான். சுடிதாருக்கு அதிக நகைகள் பொருத்தமாக இல்லாவிட்டாலும் நகைகள் அணிவதிலும் அவளுக்கு விருப்பம் உண்டு. சமீபத்தில் நடந்த கல்லூரி அழகிப் போட்டியில் பரிசும் பெற்ற பின் அவளைக் கையில் பிடிக்க முடியவில்லை. உலகமே தன் கையில் என்னும் தற்பெருமையும் இறுமாப்பும் அதிகரித்துக் கொண்டே சென்றது. இதனால் அவளுக்கென்று நெருங்கிய தோழமை என்று யாரும் இல்லை. சேரும் நான்கைந்து பேரும் அடிக்கடி மாறிக் கொண்டே இருப்பார்கள். ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் அதோடு கொஞ்சம் படிப்பு என்று போய்க் கொண்டிருந்தது அவள் வாழ்க்கை.

ஒரு துரும்பைக் கூட எடுத்து இந்தப் பக்கம் அந்தப் பக்கம் போட மாட்டாள் மதி. எப்போதாவது அவள் தாய் சமையல் கற்றுக் கொள் என்று சொன்னால் கூட, "அம்மா, நான் சமையல் படிச்சி என்ன செய்யப் போறேன்? எனக்கு இந்த உலகத்திலேயே பிடிக்காத இடம் எதுன்னா அது கிச்சன் தான்." என்பாள். அப்போ டைனிங் ஹால் மட்டும் புடிக்குது? என்னும் அன்னையிடம், கிச்சனுக்குத் தான் நீ இருக்கியே! அப்பா எனக்கு நல்லா சமைக்கத் தெரிந்தவராப் பார்த்து தான் கல்யாணம் பண்ணி வைப்பாரு, இல்லைன்னா ஒரு சமையல்காரியையும் கூடவே சீதனமா அனுப்புவாரு, தெரிஞ்சுக்கோ" என்பாள்.

தனிமையில் இருக்கும் போது அவள் மனம் எப்போதாவது தனக்கு வரப்போகும் கணவன் பற்றி நினைத்துப் பார்க்கும். தனக்கு வரும் வாழ்க்கைத் துணை எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்று கற்பனை செய்யாதோர் யார் இருக்கின்றார்கள்? அவளைப் பொருத்த வரை அவளுக்கு வரும் கணவன், அவள் அழகை எந்நாளும் போற்ற வேண்டும், உலகின் பல்வேறு இடங்களுக்கு செல்ல வேண்டும், திறந்த மனதுடன் இருப்பவனாக, அவனும் ஆட்டம் பாட்டம் என்று இருப்பவனாக இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொள்வாள். மனதுள் சிரித்தும் கொள்வாள்.

மகள் கல்லூரிக்குச் சென்ற நாளிலிருந்தே அவளுக்கு மாப்பிள்ளை தேடும் படலத்தை ஆரம்பித்து விட்டார் விஸ்வேஸ்வரன். எந்தப் பெரிய கூட்டத்துக்கோ விருந்துக்கோ சென்றாலும் அங்கு வரும் பணக்கார இளைஞர்கள் பக்கம் தான் அவர் கண்கள் செல்லும்! ஒவ்வொருவரையும் தன் மகள் அருகில் மனதுக்குள்ளேயே நிறுத்திப் பொருத்தம் பார்த்து அனைவரையும் ஒதுக்கிக் கொண்டே வந்தார்.

தன் செல்ல மகளின் விருப்பம் கோணாமல் நடக்கும் மருமகனை மட்டும் அவர் தேடவில்லை. தன் நிறுவனத்தை அடுத்து நடத்திச் செல்லும் ஒரு பொறுப்புணர்ந்தவனையும் சேர்த்து தேடிக் கொண்டிருந்ததால் அவர் திருப்திப் படும் படி யாரும் அமையவில்லை! அவ்வாறு தேடிக் கொண்டிருக்கும் போது அவர் கண்ணில் பட்டு, அவருக்கும் திருப்திகரமாய் அமைந்து தன் மகளுக்கும் அவனைப் பிடிக்கும் என்று அவர் டிக் செய்த ஒரு பையனைப் பார்க்கும் வாய்ப்பு அன்று அவருக்கு அமைந்தது. அவர் தான் மாப்பிள்ளை விமல்.

(பரவும்)

பாகம் - 16

விஸ்வேஸ்வரன் இத்தனை வளர்ந்திருந்தாலும் பழையதை மறவாதவர் என்பதை அவரது வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடமும் கூட இருப்பவர்கள் அறிந்து வைத்திருப்பார்கள். அவர் சிறு இயந்திரத்தை வைத்து சோப்பு தயாரிக்கும் போதும் சரி, இப்போது நூற்றுக் கணக்கில் நவீன இயந்திரங்கள் வைத்து சோப்பு தயாரிக்கும் போதும் சரி, அவருடன் கூடவே இருப்பவர் போர்மேன் ராமு. மற்றவர்கள் அவரை ராமு தாத்தா என்றே அன்புடன் அழைப்பார்கள். ராமு தாத்தாவுக்கு மட்டும் அந்த நிறுவனத்தில் விஸ்வேஸ்வரனை எப்போதும் பார்க்கும் அனுமதி இருந்தது! தொழிற்சாலையில் இன்று சேரும் ஒரு தொழிலாளியிடம் கூட பல ஆண்டுகள் பழகியது போல் பாசம் காட்டுபவர் ராமு தாத்தா.

உண்மையில் அவருக்கு ஒரு சிறு குடும்பம் தான். மனைவி மற்றும் ஒரே மகள். அவளுக்கும் நல்ல இடத்தில் வெளியூரில் திருமணம் முடித்துக் கொடுத்தாகி விட்டது. அவரும் அவர் மனைவியும் மட்டுமே தற்போது வீட்டில். அவர்களைப் பொருத்தவரை மதி நிறுவனம் என்பது ஒரு பெரிய குடும்பம். அதில் சேரும் அனைவருமே குடும்ப உறுப்பினர்கள். அவர்கள் வீட்டில் நல்லது பொல்லது எது நடந்தாலும் முதல் ஆளாய் ராமு தாத்தா நிற்பார்.

அன்புக்காக ஏங்கிய அழகேசனின் அன்புப் பசிக்கு மாவிருந்தாய் அமைந்தவர் ராமு தாத்தா. அவருடன் சிறிது நேரம் பேசினாலே உற்சாகம் பீறிட்டு விடும் யாருக்கும். சோகத்தில் இருப்பவர்கள் யாரும் அவரின் ஆறுதலான பேச்சைக் கேட்டால் அட! இதற்கா இத்தனை வருத்தப்பட்டோம் என்று நினைத்து விடுவார்கள். அழகேசன் தன் வாழ்நாளிலேயே பிரமிப்புடன் பார்த்தவர்கள் விஸ்வேஸ்வரனும், ராமு தாத்தாவும். விஸ்வேஸ்வரன் முதலாளி. ராமு தாத்தாவோ அவனை அரவணைத்துக் கொண்ட தாத்தா!

வேலைக்கு வந்து சேர்ந்த நாளிலேயே விஸ்வேஸ்வரனுக்கும் ராமு தாத்தாவுக்கும் இருக்கும் நெருக்கத்தைத் தெரிந்து கொண்டான் அழகேசன். வீட்டுக்கு அவசரமாய் கிளம்பிய விஸ்வேஸ்வரன் வழியில் அவருக்காக ராமு தாத்தா காத்திருப்பதைப் பார்த்ததும் காரை நிறுத்தச் சொல்லி, காரை விட்டு இறங்கி அவருடன் பேசி விட்டு காரில் மீண்டும் ஏறியதை இன்றும் நினைத்துப் பார்ப்பான் அழகேசன். இத்தனைக்கும் ஒரு நாள் கூட ராமு தாத்தா காரில் ஏறியதில்லை. அவருக்கு எப்போதும் விஸ்வேஸ்வரன் முதலாளி தான். ராமு தாத்தா பற்றிப் பேசும் போதெல்லாம் விஸ்வேஸ்வரனின் குரல் கம்மும் உணர்ச்சிப் பெருக்கில். எப்படிப் பட்ட கஷ்ட காலத்திலும் அவருடனேயே இருப்பவர் அல்லவா? நேரம் பார்க்காமல் வேலை செய்வதில் இருவரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை. தொழிலாளிகளின் பிரச்னை எதுவானாலும் நேரடியாக அவரைப் பார்த்து அதைத் தீர்த்து வைக்க ஒரு பாலமாக ராமு தாத்தா இருந்ததால் அந்த தொழிற்சாலையில் யூனியன் என்ற பிரச்னை இருந்ததில்லை. தொழிலாளர்களின் வீட்டில் ஏதும் முக்கிய நிகழ்ச்சி நடந்தால் அது பற்றி ஞாபகப் படுத்தி விஸ்வேஸ்வரனை அந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வைப்பவரும் அவர் தான்.

மதியை குழந்தையாய் இருக்கையில் தன் தோள் மீது வளர்த்தவர் தான் ராமு தாத்தா. அவள் வளர வளர அவரை அலட்சியம் செய்ய ஆரம்பித்தாள் மதி. இருந்தாலும் ராமு தாத்தா அதற்கெல்லாம் கவலைப் படுபவர் இல்லை. எல்லோரும் நன்றாக இருந்தால் தானும் நன்றாக இருக்கலாம் என்பது அவருடைய பாலிசி. கோவிலுக்குப் போனால் கூட சத்தமாக இதையே வேண்டுவார் அவர்!

அழகேசன் தன்னைப் பற்றி அனைத்தையும் சொல்லி விட்டான் அவரிடம். தான் யார், இந்த நிறுவனத்திலேயே வேலை பார்க்கும் ஜனனி யார்? அவளுக்கும் அவனுக்கும் என்ன உறவு? என்றெல்லாம். அவர் சொல்லித் தான் கோமதியைப் போய் பார்த்து தன்னைப் பற்றிச் சொன்னான் அழகேசன். அவரிடம் சத்தியம் கொடுத்ததைப் பற்றி

ராமு தாத்தாவிடம் சொன்ன போது, "அது சரி அவங்க நிலைமைல அவங்க சொல்றது தான் சரி. ஆனா உண்மை என்னைக்கும் மறைஞ்சு போகாது. என்னைக்காவது உன் அக்கா, உன்னைப் பற்றி தெரிஞ்சுக்குவா. கவலைப்படாதே" என்று ஆறுதல் சொன்னார்.

ஒன்று சொல்ல மறந்து விட்டேனே! அன்புராஜுக்கும் ராமு தாத்தாவுக்கும் ஆகாது!

(பரவும்)

பாகம் - 17

ஜனனி வீட்டில் இருக்கும் போதெல்லாம் விஸ்வேஸ்வரனின் புராணம் தான் படிப்பாள். எங்க பாஸ் அப்படி, எங்க பாஸ் இப்படி என்று. சேகர் சிரித்துக் கொண்டே ரசித்திருப்பான். கருவுற்று 7ம் மாதத்திலிருந்து வேலைக்குச் செல்லவில்லை ஜனனி. விஸ்வேஸ்வரனே வேண்டாமென்று அனுப்பி வைத்து விட்டார். நன்றாக ரெஸ்ட் எடுத்துக் கொள் என்று. அதே சமயத்தில் ஏதேனும் உதவி தேவை என்றால் அவரே தொலைபேசியில் அழைக்கவும் செய்வார். அழைக்கும் போதெல்லாம் அவள் உடல்நிலை பற்றி விசாரிக்காத நாளே இல்லை.

இதோ ஒன்பதாவது மாதம் நடந்து கொண்டிருந்தது. சேகர் அவளைப் பூவாய் கவனித்துக் கொண்டான். கோமதி வளைகாப்பு நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டதோடு குழந்த பெறும் சமயத்தில் தன்னுடன் ஜனனி இருக்க வேண்டுமென்றும் அழைத்தார். தாய் மகிழ்ச்சியாய் இருந்தால் உள்ளே குழந்தையும் மகிழ்ச்சியாய் இருக்கும் என்பதற்காகத் தானே இத்தனை களேபரங்களும்? ஜனனி சந்தோசத்தில் மிதந்து கொண்டிருந்தாள்.

வளைகாப்பு மிகவும் எளிய முறையில் அவர்கள் வீட்டிலேயே நடைபெற்றது. சேகரின் பெற்றோர்கள் மட்டும் வந்திருந்தனர். அண்ணன் குடும்பத்தினர் வரவில்லை. ஜனனி ஓரக்கண்ணால் சேகரைப் பார்த்து அவர்களை இழுக்கும் காந்தம் வயிற்றுக்குள் இருப்பதைச் சுட்டிக் காட்டினாள். வளைகாப்புக்கு வந்தவர்களில் விஸ்வேஸ்வரனும் ஒருவர். அவருடன் காரோட்டியாக அழகேசனும். அழகேசனைப் பார்த்ததும் கோமதி துணுக்குற்றார். அழகேசன் தன் கண்ணசைவால் அவருக்கு ரகசியம் காக்கப் படும் என்று சுட்டிக் காட்டி அவருக்கு நிம்மதி வரவழைத்தான்.

ஜனனிக்குக் கிளம்பும் போது கண்ணீர் பெருக்கெடுத்தது. இனி சேகரைக் கொஞ்ச நாள் தன்னால் கவனித்துக் கொள்ள முடியாதே என்று. சேகர் அவளைத் தேற்றி கோமதியுடன் வழியனுப்பி வைத்தான்.

சென்று சேர்ந்த பத்தே நாளில் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள் ஜனனி. சுகப் பிரசவம் ஆனதில் அனைவருக்கும் மகிழ்ச்சி. விஸ்வேஸ்வரன் செல்போனில் சந்தோசத்தைப் பகிர்ந்து கொண்டார். சேகர் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை எனலாம். அன்றலர்ந்த தாமரைப் பூவைப் போல் இருந்தது குழந்தை. அனைவரும் சந்தோசத்தின் எல்லையில் இருந்தனர்.

ஆனால் தன் தந்தையின் உயிரைக் குடிக்க வந்த எமன் அந்தக் குழந்தை என்று அறிய வரும் போது?

(பரவும்)

பாகம் - 18

அது ஒரு மிகப் பெரிய ஐந்து நட்சத்திர விடுதி. தண்ணீர் கூட இப்போது மதிப்பு மிக்கது. ஆனால் பணத்தைக் குப்பையாக மதித்துச் செலவு செய்து கட்டியிருப்பார்கள் போலும். கார் நிறுத்தும் இடம் கூட பெரிய மைதானம் போல் இருந்தது. அங்கு தான் மிகப் பெரிய மனிதர்களின் விருந்து ஒன்று நடந்து கொண்டிருந்தது. விஸ்வேஸ்வரனும் மாலதியும் அந்த விருந்துக்கு அழைக்கப் பட்டிருந்தார்கள். மிகப் பெரிய அதிகாரிகளைக் கைக்குள் போட்டுக் கொள்ளவும், மந்திரிகளின் லாபத்தைப் பெற்றுக் கொள்ளவும் இது போன்ற விருந்துகள் நடப்பது சகஜம் தான்.

விஸ்வேஸ்வரன் ஒன்றை வழக்கமாய் வைத்திருந்தார். அதாவது இது போன்ற விருந்துகளுக்கு மனைவியையும் அழைத்துச் செல்வது என்பதை. அவருக்கு குடி பழக்கம் இல்லாதிருந்ததும் ஒரு காரணமா யிருக்கலாம். அவர்கள் இருவரும் இறங்கிச் சென்றதும் காரை பார்க்கிங்கில் நிறுத்தினான் அழகேசன். ஓட்டலின் பிரம்மாண்டத்தைப் பார்த்து மிரண்ட வண்ணம் சுற்று முற்றும் பார்த்தான். மற்ற கார் டிரைவர்கள் எல்லோரும் ஏதோ வெளி நாட்டில் இருந்து வந்தவர்கள் போல் இருந்தனர். டிப் டாப்பாக ஆடை உடுத்துக் கொண்டு ஏதோ அதிகாரிகள் போல் இருந்தனர். அவனது முதலாளியின் வெளி நாட்டுக் காரில் சென்று இறங்கி இருக்கா விட்டால் அவனை வண்டியை நிறுத்தக் கூட அனுமதிக்க மாட்டார்கள் போல் இருந்தது.

ஓட்டலின் தரை விரிப்பே ஒரு மெத்தை போல் அரை அடி உள்வாங்கியது நடக்கும் போது. விருந்து நடக்கும் அறைக்குச் செல்லும் வரை குண்டூசி விழுந்தால் கூட ஸ்பீக்கரில் கேட்கும் அளவுக்கு நிசப்தம். நடக்கும் ஓசை கூடக் கேட்கவில்லை. விருந்து அறைக்குள் நுழைந்ததும் கண்ணாடி கிளாஸ்கள் சரசரக்கும் சத்தமும், மேசையில் இருக்கும் பிளேட்டுகளில் போர்க்குகள் சண்டையிடும் சத்தமும், இடையிடையே மனிதர்கள் பேசிக் கொள்ளும் சத்தமும் கேட்டது. ஏதோ தியேட்டருக்குள் நுழைந்தது போல இருட்டாய் இருந்தது. மிக மெல்லிய வெளிச்சத்தில் அனைத்தும் நடந்து கொன்டிருந்தது. சிறிது நேரத்தில் இருட்டு கண்களுக்குப் பழகியதும் அதுவே மிகப் பிரகாசமானதாய்த் தோன்றியது!

இதையெல்லாம் பார்த்த வண்னம் எதிர் வருபவர்களைப் புன்னகையுடன் எதிர் கொண்டு தனக்கென இருந்த இருக்கையில் சென்று அமர்ந்தார்கள் விஸ்வேஸ்வரனும் மாலதியும். மதியும் வருகின்றேன் என்று தான் சொன்னாள். அவளை ஏன் அழைத்து வரவில்லை என்று பின்னால் வருத்தப் பட்டார் விஸ்வேஸ்வரன்.

ஆம், தனுஷ்கோடியையும் விமலையும் பார்த்தது அங்கே வைத்துத் தானே. விமல் என்றால் யார் என்றே பார்த்திருக்கக் கூட மாட்டார் விஸ்வேஸ்வரன். ஏனென்றால் நூற்றுக்கும் மேற்பட்ட ஆட்கள் உள்ளே இருந்தனர். திடீரென்று மைக்கில் மெல்லிய அறிவிப்பு. சென்னை புகழ்பெற்ற குபேராஸ் நகை மாளிகை அதிபர் திருவாளர் தனுஷ்கோடி அவர்களின் புதல்வரும் ஆஸ்திரேலியாவில் எம்.பி.ஏ. படிப்பு முடித்து தற்சமயம் இந்தியா திரும்பி இருக்கும் மிஸ்டர் விமல் தனுஷ்கோடி அவர்களுக்கு இன்று பிறந்த நாள். இந்த விருந்திற்கான செலவு அனைத்தையும் அவரே ஏற்றுக் கொண்டிருக்கின்றார். எனவே, கொண்டாடி மகிழுங்கள் நண்பர்களே என்றதும் தான் யாரந்த விமல் என்று நிமிர்ந்து பார்த்தார் விஸ்வேஸ்வரன். பார்த்ததுமே முடிவு செய்து விட்டார். மதிக்கு இவனை விட்டால் நல்ல மாப்பிள்ளை கிடைக்காது என்று. மாலதியிடமும் அப்போதே கண்ணசைத்துக் காட்டினார்.

விருந்து முடிவடையும் நேரத்தில் விமலுக்குக் கை கொடுக்கும் சாக்கில் தனுஷ்கோடியுடன் பேச்சுக் கொடுத்தார் விஸ்வேஸ்வரன். விஸ்வேஸ்வரனைப் பற்றி ஏற்கனவே தனுஷ்கோடி தெரிந்து வைத்திருந்ததால் எளிதில் அறிமுகம் ஆயிற்று. வியாபாரம் சம்பந்தமாக பேசிக் கொண்டிருந்தவரை எப்படி சம்பந்தியாக்குவது திடீரென்று என்று நோட்டம் விட்ட படியே பேசிக் கொண்டிருந்தார். பேசுகின்ற போதே தனக்கு மகள் இருப்பதையும்,

கல்லூரி அழகிப் போட்டியில் வெற்றி பெற்றதையும் சொல்லி விட்டு அவளுக்கு மாப்பிள்ளை தேடுவதையும் சூசகமாய்ச் சொன்னார். பின்னர் தன் செல்பேசி எண்ணைக் கொடுத்து விட்டு விமலிடமும் கை கொடுத்து விட்டு கிளம்பி விட்டார்.

அவரது விசிட்டிங் கார்டை முன்னும் பின்னும் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்த தனுஷ்கோடி யோசனையில் ஆழ்ந்தார். அவரது வியாபார மூளை வேலை செய்து கொண்டிருந்தது. ஆடும் மேய்ச்ச மாதிரி ஆச்சு. அக்காளுக்கு மாப்பிள்ளையும் பார்த்த மாதிரி ஆச்சு. ஏற்கனவே பேக்டரி கட்டிக் கொடுன்னு நச்சரிக்கிற பையன். அவனுக்கு சீக்கிரமே கல்யாணம் பண்ண வேண்டும் என்று ஜோதிடம். இரண்டையும் கூட்டிக் கழித்துப் பார்த்து உள்ளுக்குள் சிரித்துக் கொண்டார். பாவம், தன் சொத்தும் சேர்ந்து பிரியப் போவது தெரியாமல்.

(பரவும்)

பாகம் - 19

அது ஒரு ஹை டெக் மருத்துவமனை. வெளியில் இருந்து பார்த்தால் ஏதோ மாளிகை போல் தான் தோன்றியது. உள்ளே சென்றார்கள் விஸ்வேஸ்வரனும் அழகேசனும். ஜனனிக்குக் குழந்தை பிறந்திருக்கின்றது என்ற செய்தியை முதலில் அவரிடம் தான் சொல்ல வேண்டும் என்று ஜனனி நினைத்தாள். ஆண்குழந்தை பிறந்திருக்கின்றது என்றதும் ஏதோ தனக்குத் தான் குழந்தை பிறந்ததோ என்ற சந்தோசத்துடன் பதிலளித்தார் விஸ்வேஸ்வரன். அன்று மாலையே வீட்டுக்குத் திரும்பும் போது குழந்தையைப் பார்க்கும் ஆசை வந்தது. இதோ வந்து விட்டார்.

வெளியே தான் தவிப்புடன் நின்றிருந்திருப்பான் அழகேசன். என்ன இருந்தாலும் தாய் மாமன் அல்லவா? விஸ்வேஸ்வரன் என்ன நினைத்தாரோ, நீயும் வாயேன் என்றார். மறு பேச்சுப் பேசாமல் காரைப் பூட்டி விட்டு இருவரும் உள்ளே நுழைந்தனர். உள்ளே மருத்துவமனைக்கான டெட்டால் வாசனை கூட இல்லை. சுத்தமாக பராமரித்து வருவார்கள் போலும். அழகேசன் தான் வரவேற்பறையில் விசாரித்தான். ஜனனி எந்த அறை என்று.

ஜனனி இருந்த அறைக்குள் எதிர்பார்ப்புடன் இருவரும் நுழைந்தனர். ஜனனி எதிர்பார்க்கவே இல்லை இருவரும் வருவார்கள் என்று. அங்கே அவளும் அவளது அம்மாவும் மட்டுமே இருந்தனர். குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது. சட்டென்று விஸ்வேஸ்வரனைப் பார்த்ததும் ஜனனிக்கு ஆச்சரியம். எவ்வளவு பெரிய மனிதர்? தன் குழந்தையைப் பார்க்க மருத்துவமனை தேடி வந்திருக்கின்றாரே என்று. அழகேசனுக்கு இது புதிதல்ல. காரணம் தன்னிடம் வேலை பார்ப்பவர்களின் குடும்ப நிகழ்ச்சிகளில் தவறாது பங்கேற்பதில் தன் முதலாளிக்கு அலாதி மகிழ்ச்சி என்பது தெரியும்.

ரோஜாக்களைக் குவியலாக வைத்து ஒரு செண்டு தயாரித்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது குழந்தை. ஜனனி தூக்கி விஸ்வேஸ்வரன் கையில் கொடுத்தாள். ஆசையுடன் வாங்கினார் விஸ்வேஸ்வரன். பக்கத்திலேயே ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் அழகேசன். அவனைப் பார்த்ததும் இருந்த கொஞ்ச நஞ்ச மகிழ்ச்சியும் கோமதி முகத்தில் இல்லை. வெறுப்புடன் அவனைப் பார்த்தாள். அழகேசனுக்கு அதையெல்லாம் கவனிக்க முடியவில்லை. திடீரென்று விஸ்வேஸ்வரன் என்ன நினைத்தாரோ குழந்தையை அவன் கையில் கொடுத்தார். அழகேசனுக்கு குழந்தை கண்ணுக்குத் தெரியவில்லை. கண்ணீர் குளமாய்ப் பெருக்கெடுத்து அணை பாய்ந்து விடப் பார்த்தது. நல்ல வேளையாய் கோமதி எழுந்து வந்து அவனிடம் இருந்து கிட்டத் தட்ட குழந்தையைப் பிடுங்கியதும் சகஜ நிலைக்கு வந்தான் அழகேசன்.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு விஸ்வேஸ்வரன் கிளம்பினார். கிளம்பும் போது நன்றாக ஓய்வெடுக்கும் படியும், நினைக்கும் போது வேலைக்குத் திரும்புமாறும் சொல்லி விட்டு, ஏதும் உதவி தேவைப்பட்டால் அழைக்குமாறு கூறினார். சேகர் எங்கே என்று விசாரித்தார். இவ்வளவு நேரம் இருந்து விட்டு இப்போது தான் சென்றார் அலுவலகத்துக்கு என்றாள் ஜனனி.

அன்று இரவு 12 மணி இருக்கும். ஜனனியும் கோமதியும் தூங்கிக் கொண்டிருந்தனர். திடீரென்று குழந்தைக்கு ஜன்னி வந்து விட்டது. இழுக்க ஆரம்பித்து விட்டது. தடா புடாலென்று எழுந்த இருவருக்கும் என்ன செய்வதென்றே தெரியவில்லை. நர்ஸை ஓடோடிச் சென்று அழைத்து வந்தனர். கோமதி தன் பங்குக்கு அந்த டிரைவர் கையில் எல்லாம் குழந்தையைக் கொடுத்திருக்கக் கூடாது என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டார்.

அவ்வளவு பெரிய மருத்துவமனையில், சுத்தமாகப் பராமரிக்கப் பட்ட மருத்துவமனையில் ஒரு முக்கிய மருந்து இல்லை என்றும் அது வந்தால் தான் குழந்தையைக் காக்க முடியும் என்றும் நர்ஸ் கூறி விட, அவசர அவசரமாக சேகருக்கு செல்பேசியில் அழைத்து விபரத்தைச் சொன்னாள் ஜனனி. உடனே கிளம்பிய அவன் நடுநிசியில்

சென்னை வீதியில் இது வரை அவன் ஓட்டாத வேகத்தில் வண்டியை ஓட்டிக் கொண்டு வந்தான்.

சாலையின் வலது புறத்தில் இருந்த மருத்துவமனைத் தெருவுக்கு வண்டியை வேகமாகத் திருப்பியவன், இடது புறத்தில் இருந்து வேகமாய் எமன் ஓட்டி வந்த மணல் லாரியைக் கவனிக்கத் தவறி விட்டான். மருத்துவமனை வாசலிலேயே அந்த விபத்து நிகழ்ந்தது. கிட்டத் தட்ட ரத்தக் கூழாய் மாறி இருந்தான் சேகர். அந்த இடத்திலேயே மரண தேவதை அவனை ஆட்கொண்டாள். ஜனனியின் இதயம் செய்தியைக் கேட்டதும் துடிக்க மறந்தது. கோமதி உலுக்கிய உலுக்கலில் குழந்தையை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்ற நினைவு வந்தது. யாரை அழைப்பாள் விஸ்வேஸ்வரனைத் தவிர?

அன்று இரவே தன்னை அழைப்பாள் என்று அவரும் நினைத்திருக்க மாட்டார். செய்தி கேட்டதும் விரைவாகச் செயல்பட்டு குழந்தையைக் காக்க அனைத்து முயற்சியும் மேற்கொண்டு, குழந்தையைக் காத்தார் விஸ்வேஸ்வரன்.

குழந்தையின் எதிர்காலத்தையும், ஜனனியின் எதிர்காலத்தையும் நினைத்து அழகேசன் ஒடிந்து போனான். இப்போதாவது உண்மையைச் சொல்லி விடலாம் என்று தான் நினைத்தான். கோமதி அவனைக் கிட்டத்தட்ட நடந்த அனைத்துக்கும் அவன் தான் காரணம் என்று தோன்றும் வண்ணம் வெறுப்புடன் பார்த்த பார்வையில் இனி ஜனனி பக்கம் கூடத் திரும்பக் கூடாது என்று நினைத்துக் கொண்டான்.

(பரவும்)

பாகம் - 20

சேகர் மறைந்து ஒரு மாதம் ஓடி இருக்கும். ஜனனியிடம் இருந்து அதிகம் வார்த்தைகளே வராத வண்ணம் மௌனியாகி விட்டாள். இன்னும் அதிர்ச்சியில் இருந்து மீள வில்லை. நடு இரவில் தூக்கம் கலைந்து துக்கம் மேலிட கண்களில் நீர் வழிய முன்னே சிரித்துக் கொண்டு சேகர் இருக்கும் படத்தைப் பார்த்துக் கொண்டே விடியும் வரை அமர்ந்திருப்பாள். தற்கொலை செய்யவும் மனமில்லை. அவள் தந்தை அவளை அப்படி வளர்க்கவும் இல்லை. குழந்தை வடிவில் தான் சேகரை அவள் பார்த்தாள். குழந்தைக்கு வேறு பெயர் வைக்கலாம் என்று பலர் சொல்லியும் சேகர் என்றே பெயர் சூட்டினாள்.

சேகரைக் கொன்ற குழந்தை என்றே பெயர் சூட்டி அவன் குடும்பத்தினர் அவளைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. கோமதி அம்மாளும் ஜனனியும் மட்டுமே அனாதைகளாகத் தனித்து விடப்பட்டனர். விஸ்வேஸ்வரனிடம் எத்தனை உதவி தான் கேட்பது? அவர் எது கேட்டாலும் தயங்காமல் செய்பவர் தான். ஆனால், உதவி கேட்பதற்கும் ஒரு தகுதியான காரணம் வேண்டும் அல்லவா? நன்றிக் கடனை பின்னால் எப்படி அடைப்பது என்று ஜனனி நினைத்துக் கொள்வாள்.

முன்பும் சேகருக்காகவே தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டவள், இப்போதும் சேகர் என்னும் தன் குழந்தைக்காக தன் வாழ்வை அர்ப்பணிக்கத் துணிந்தாள். குழந்தை மூன்று மாதமாக இருந்த போது மீண்டும் மதி நிறுவனத்திற்கே வேலைக்குச் செல்ல ஆரம்பித்தாள் ஜனனி. வறண்டு கிடந்த அவள் மனதில் இந்த வேலையும், குழந்தையின் கள்ளமற்ற சிரிப்பும் மட்டுமே நிம்மதி தருவதாக இருந்தது.

கோமதி கூட திருமணம் முடிந்து ஒரு ஆண்டு தானே ஆகின்றது. இள வயதில் விதவை மறுமணம் என்பது இப்போது சாதாரணமாகி விட்டது என்று சொல்லி எப்படியாவது மறுமணம் செய்து வைக்கலாம் என்று தான் எண்ணினாள். அதற்காக விஸ்வேஸ்வரனையும் நாடினார். அவரும் மெல்ல அவளிடம் கேட்டுப் பார்த்தார். "சார். தயவு செஞ்சு இப்படியெல்லாம் நினைக்காதீங்க. எங்க அப்பாவை விட மேலா உங்களை வைச்சு நான் பார்த்துக்கிட்டு இருக்கேன். இதே வேற யாராவது சொல்லி இருந்தாங்கன்னா என்ன செஞ்சிருப்பேன்னே தெரியாது. தயவு செஞ்சி இனி மேல் இப்படி கேட்காதீங்க. அப்புறம் நான் வேலைக்கே வர மாட்டேன்." என்று ஒரேயடியாகச் சொல்லி விட்டாள். அதன் பின் அவர் இந்த விஷயத்தில் தலையிடுவதே இல்லை.

அழகேசன் அடிக்கடி ஜனனியைக் குழந்தையுடன் பார்ப்பான். மனதுக்குள் எத்தனையோ ஆசைகள் இருந்தன. அத்தனையும் ஒரு நொடியில் சரிந்ததை எண்ணி கண்ணீர் வடிப்பதைத் தவிர அவனுக்கு வேறு வழியில்லாமல் இருந்தது. அவன் வேறு யாரிடம் சொல்வான்? ராமு தாத்தா தவிர? அவர் தான் அவனுக்கு ஆறுதலாய் இருந்தார். ஒரு வேளை தான் குழந்தையைத் தொட்டதால் தான் அவர்கள் குடும்பத்துக்கு இப்படி ஆகி விட்டது என்ற தாழ்வு மனப்பான்மையும் அவனுக்கு வந்து சேர்ந்திருந்தது. அவன் மீண்டும் ஜனனியை ஒரு நல்லவருக்கு மணம் முடித்து தன் தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதாக மனதில் வாழ்நாளின் லட்சியமாக எடுத்துக் கொண்டான்.

ஆனால், அது அவ்வளவு எளிதில் நிறைவேறுமா என்ன?

(பரவும்)

பாகம் - 21

அங்கே தனுஷ்கோடியின் மனம் எத்தனை துள்ளலில் இருந்ததோ அதே அளவு விஸ்வேஸ்வரனின் மனமும் இருந்தது. அன்று காலை அலுவலகம் வநத சிறிது நேரத்தில் அவரது செல்பேசி சிணுங்கியது. எடுத்து யாரென்று பார்த்தால் தனுஷ்கோடி. பரஸ்பர விசாரிப்புக்களுக்குப் பிறகு தனுஷ்கோடி விஷயத்திற்கு வந்தார். "வேற ஒன்னுமில்ல சார். நான் ஒரு வியாபாரி. நீங்க உற்பத்தியாளர். நான் அங்கே வாங்கி இங்க விக்கிறவன். எனக்கு அது தான் தெரியும். என் பையன் விமலையும் நான் அப்படித் தான் இருக்கச் சொல்றேன். ஆனா பாருங்க அவன் கேட்க மாட்டேங்குறான். எதுக்குடா ரொம்பப் படிக்க வச்சோம்னு இருக்கு. பேசாம ஒரு 100 கோடி ரூவாய்ல ஒரு பெரிய பேக்டரி கட்டப் போறேன்னு நிக்கிறான் ஒத்தக் கால்ல. நாஞ் சொன்னேன், அதெல்லாம் நடக்கக் கூடிய காரியம் கிடையாதுன்னு. ஆனா அவன் விட்ற மாதிரி தெரியல. அதான் உங்க கிட்ட ஏதாச்சும் ஐடியா கேட்கலாம்னு போன் செய்றேன். இன்னைக்கு தேதிக்கு அவ்வளவு அமௌண்ட் முதலீட் செஞ்சா உற்பத்தி செஞ்சு லாப காரமா இயங்க முடியுமா? நீங்களே புத்தி மதி செய்ங்க சார். அரசனை நம்பி புருசனை கை விட்றக் கூடாதுல்ல" என்றார்.

விஸ்வேஸ்வரனுக்கு பழம் நழுவிப் பாலில் விழுந்து அது நழுவி வாயில் விழுந்ததைப் போல் இருந்தது. இதை ஒரு நல்ல வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடிவெடுத்தார். "சார், எல்லாம் சரியாப் போகும். அனுபவம் வந்தா எல்லாம் ஈசியாச் செய்யலாம். ஏற்கனவே படிச்சிருக்காருல்ல. ஒரு ஆறு மாசம் எங்கயாவது அனுபவப் படிப்பு மட்டும் படிக்கச் சொல்லுங்க. எங்கேயோ போகலாம். வேணும்னா நம்ம கம்பெனியில ஜெனரல் மேனேஜர் போஸ்ட் தர்றேன். ஒரு ஆறு மாசம் வேலை செய்யட்டும். என்னடா முதலாளியா ஆக்கணும்னு நான் நினைக்கிறேன். இவன் தொழிலாளியா ஆக்குறானேன்னு தப்பா நினைச்சீங்கன்னா மன்னிச்சுக்கோங்க. என் மனசுல பட்டதச் சொன்னேன். அவ்வளவு தான்" என்றார்.

இந்த டீல் இருவருக்குமே சாதகமானதாகப் பட்டது. இப்போதைக்கு தனுஷ்கோடி எதுவும் செலவழிக்கவும் வேண்டியதில்லை. விஸ்வேஸ்வரனுக்கோ விமல் ஆள் எப்படி என்று அறிந்து கொள்ளலாம் அல்லவா? "நல்லா யோசிச்சு பதில் சொல்லுங்க சார்." என்றார் விஸ்வேஸ்வரன். "இதுல யோசிக்கிறதுக்கு என்ன சார் இருக்கு? நீங்க இந்த அளவுக்கு இறங்கி வந்ததை நினைச்சா பெருமையா இருக்கு. உங்களுக்குக் கீழ வேலை பார்க்குறது எவ்வளவு பெரிய விஷயம். விமல் ரொம்பக் கொடுத்து வைத்தவன் தான்" என்று உதட்டால் சொன்னார் தனுஷ்கோடி.

இருவரின் மனத்துள்ளலுக்கும் காரணம் தெரிந்து விட்டது அல்லவா! ஆனால் விமலைப் படிய வைப்பது பெரிய வேலையாகி விட்டது தனுஷ்கோடி. யாருக்கும் கீழ் கை கட்டி நான் வேலை பார்க்க முடியாது என்றான் அவன். அதற்கு அவர் தன் திட்டத்தை அவனுக்கு விளக்க ஆரம்பித்தார். "இங்கே பார்றா. அதிர்ஷ்ட தேவதை உன் கதவைத் தட்டுது. இதே மாதிரி இன்னொரு சந்தர்ப்பம் உனக்கு வராது. நீ போய் அங்கே போய் கூலி வேலையா பாக்கப் போற? ஜெனரல் மேனேஜர் உத்தியோகம் தான? எவ்வளவு பெரிய கம்பெனி தெரியுமா அது? அவனுக்கு மட்டும் உன்னைப் பிடிச்சிருச்சின்னு வையி. அப்புறமா அவ்வளவு சொத்தும் உனக்குத் தான். அது போக, அந்த பேக்டரியே உனக்குத் தாண்டா!" என்றார்.

"என்னப்பா சொல்றீங்க" என்று ஆச்சரியமாய்ப் பார்த்த விமலுக்கு மேலும் தனுஷ்கோடி விளக்கினார். "நீ அங்கே போய் மேனேஜ்மெண்ட் பார்க்கிறியோ இல்லையோ, அவனுக்கு ஒரே ஒரு அழகான மக இருக்கா. அவன் அன்னைக்கு பேசினதிலேயே தெரிஞ்சிக்கிட்டேன் அவன் உன்னை தன் மாப்பிள்ளையாக்கி விடனும்னு துடிக்கிறான். அது மட்டும் நடந்ததுன்னு வையி, குபேரா நகை மாளிகை மட்டுமா? மதி நிறுவனமும்

நம்மளோடது. ஒரு கல்ல ரெண்டு மாங்கா கேள்விப் பட்டிருக்க. ஆனா, ஒரு மாந்தோப்பையே சாய்க்கப் போகும் ஒரு வாய்ப்பு உனக்கு வந்திருக்கு. அதைச் சரியா உபயோகிச்சிக்கோ. அவ்வளவு தான் சொல்வேன்" என்றார்.

விமல் யோசிக்க ஆரம்பித்தான்.

(பரவும்)

பாகம் - 22

விமல் தன் தந்தை சொன்னதைக் கேட்டு யோசிக்க ஆரம்பித்தான். சரஸ்வதியும் அப்போது கூட இருந்தார். "அப்பா, இது உன் வாழ்க்கைப் பிரச்னை யோசிச்சு முடிவெடு" என்று சொன்னதும் அவரை முறைத்தார் தனுஷ்கோடி. அப்போதும், வெளிநாடு போய் படித்து விட்டு வந்த விமலுக்கு, தன்னை ஒரு மாங்காய் அடிக்கும் கல்லாகத் தான் பார்க்கின்றார் தந்தை என்று தோன்ற வில்லை. அவனுக்கு வேறு வழியும் இப்போதைக்குத் தோன்ற வில்லை. "சரி என்று சொல்லிவிடுங்கள் அப்பா" என்றான்.

மறுநாள் காலையே தன் மகனுடன் விஸ்வேஸ்வரனின் அலுவலகத்துக்கு ஆஜரானார் தனுஷ்கோடி. தொழிற்சாலையின் அமைப்பைப் பார்த்து பிரமித்தார் தனுஷ்கோடி. எறும்பாய் வேலை செய்யும் அதன் தொழிலாளர்கள் அதன் வெற்றிக்கு ஒரு காரணம் என்று நினைத்துக் கொண்டார். அவர்களை முக மலர்ச்சியுடன் வரவேற்றார் விஸ்வேஸ்வரன். விமல் மிகுந்த மரியாதையுடன் அவரைப் பார்த்தான். "வாருங்கள் மிஸ்டர் விமல். உங்களை இங்கே ஜி.எம். ஆக அமர்த்துவதில் ரொம்ப சந்தோசம். நீங்க படிச்ச படிப்பை முழுசும் உபயோகப் படுத்தி பார்க்க ஒரு நல்ல சந்தர்ப்பம் இது. இரண்டு பேருக்குமே நன்மை தரும் என்று நினைக்கின்றேன். அதுக்கு இப்போ என்னவோ சொல்றாங்களே! ஹாங்.. வின் - வின் சிச்சுவேசன்!" என்று சிரித்துக் கொண்டே கை குலுக்கினார். அன்புராஜையும் ஜனனியையும் அறிமுகப் படுத்தி வைத்தார்.

இருவருக்கும் பொதுவாக, "நாளை முதல் இவர் நம்ம கம்பெனிக்கு ஜி.எம். எனக்குத் தர்ற அனைத்து ஒத்துழைப்பையும் நீங்க இவருக்கும் தரணும்" என்றார். அன்புராஜ், ஜனனி இருவருக்குமே எண்ணங்கள் வேறு விதமாய் ஓடியது. அன்புராஜ்க்கோ இவனை வைத்து ஏதும் ஆதாயம் நமக்குக் கிடைக்குமா? அல்லது விஸ்வேஸ்வரனைச் சாய்ப்பதற்கு இவன் உதவுவானா? என்று எண்ணம் ஓடியது. ஜனனிக்கோ, "இவரை நாம் ஒதுங்கி இருப்பதே நல்லது" என்று எண்ணம் ஓடியது. இருவரும் புன்முறுவல் செய்து விஸ்வேஸ்வரன் சொன்னதை ஒப்புக் கொண்டதாய்க் காட்டினர்.

மறுநாளே விமல் வேலைக்கு வந்து விட்டான். டை, கோட், ஷூ என்று போடாமல் வெறும் டி-சர்ட்டில் வந்து லேட்டஸ்ட் மேனேஜர் என்பதைக் காட்டினான். வந்த முதல் நாளே அவனுக்கு அன்புராஜ், அங்கிருக்கும் இயந்திரங்கள், தொழிலாளர் நிலவரங்கள், உற்பத்தி, இருப்பு நிலவரம், சந்தைகள் பற்றி விளக்கினார். பொறுமையுடன் கேட்டுக் கொண்டான் விமல். அவனுக்கு எல்லாமே புதிதாய் இருந்தது. ஏதோ புத்தகத்தில் படிப்பதற்கும் இங்கே நேரடியாய்ப் பார்ப்பதற்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருந்தது! அடிப்படையிலேயே அனைத்தும் இருப்பதாய்த் தோன்றியது. படிக்கும் போது அவன் டிரைனிங் எடுத்த நிறுவனம் பல நாடுகளில் தன் கால்களை ஊன்றியிருந்தது. ஆனால், மதி நிறுவனம் ஏற்றுமதி செய்யும் நிறுவனமல்ல. முழுக்க முழுக்க உள்ளூர்ச் சந்தையையே குறி பார்த்து இயங்கி வந்தது. முதல் ஒரு வாரம் தான் எந்தக் கருத்தும் சொல்ல விரும்பவில்லை என்றும் இருப்பதைக் கற்றுக் கொள்வதாகவும் அவன் விஸ்வேஸ்வரனிடம் சொன்ன போது சந்தோசப் பட்டார் அவர். அன்று மாலையே அவனை வீட்டுக்கு அழைத்தார்.

விமலுக்கு தனுஷ்கோடி சொன்னது ஞாபகம் வந்தது. அவரது மகளைப் பார்க்கும் ஆவலும் வந்தது. முதலில் ரொம்ப பிகு பண்ணியவன், முடிவில் அவரது விட்டுக்கு வரச் சம்மதித்தான். விமல் தன்னுடைய காரில் தான் அலுவலகத்துக்கு வந்திருந்தான். விஸ்வேஸ்வரன் அலுவலகத்தை விட்டு வெளியே வருவதைப் பார்த்த அழகேசன் காரைக் கொண்டு வந்து அருகில் நிறுத்தினான். விஸ்வேஸ்வரனோ, "அழகேசா, காரை வீட்டுக்குக் கொண்டு வந்துடு. நான் மிஸ்டர் விமல் கூட வீட்டுக்குப் போறேன்" என்று சொல்லி விட்டு கிளம்பி விட்டார்"

அழகேசன் ஏதும் பேசவில்லை. அவனுக்கே அவரது நடவடிக்கை ஆச்சரியமாய் இருந்தது. அவர்கள் இருவரும் முன்னே செல்ல, மெதுவாக அவர்களைப் பின் தொடர்ந்தான் அழகேசன்.

இது மட்டுமா? இன்னும் மூன்று மாதத்தில் என்னென்ன நடக்கப் போகின்றதோ?

(பரவும்)

பாகம் - 23

விமலுடன் காரில் கதைத்துக் கொண்டும் அவரது வீட்டுக்கு வழி சொல்லிக் கொண்டும் சென்றார் விஸ்வேஸ்வரன். விமலுடன் பேசிக் கொண்டிருந்ததில் அவருக்கு மிகவும் திருப்தியாக இருந்தது. விமலைச் சேர்ப்பதற்குள் அவனைப் பற்றி முழுதும் விசாரித்து அறிந்திருந்தார் விஸ்வேஸ்வரன். அவன் டிஸ்கோதே செல்வதையும் நண்பிகளுடன் ஊர் சுற்றுவதையும் அறிந்தும் வைத்திருந்தார். இருந்தும், இப்போதைய நவ நாகரிக உலகில் இதெல்லாம் இல்லாத பணக்கார வாலிபன் இருக்கின்றானா என்ன? அல்லது மணம் முடித்த பின் அவனுக்கு இந்தப் பழக்கம் வந்து விட்டால் என்ன செய்ய முடியும்? அதனால் பையன் குணம் எப்படி என்றும், எப்படி பழகுகின்றான் என்றும் தெரிந்து கொண்டால் போதும் என்றே நினைத்தார். அவனுடன் ஒரு நாள் பழகியதில் அவனது கற்றுக் கொள்ளும் ஆர்வமும், பணிவும் அவரைக் கவர்ந்தன. வீட்டுக்கும் அழைத்துச் சென்று மாலதிக்கும், மதிக்கும் அவனைக் காட்ட வேண்டும் என்று நினைத்தார்.

இருவரும் பேசிக் கொண்டே வீட்டினுள்ளே நுழைந்தனர். அவ்வளவு நெருக்கமான சென்னை நகரில் இவ்வளவு விசாலமான பங்களாவா என்று நினைத்துக் கொண்டான். A good home is one, where there is a place for everything and everything in its place. என்பார்கள். அதை அனுபவபூர்வமாக உணர்ந்தான் விமல். அனைத்தும் மாலதியின் நிர்வாகம் தான் என்றார் விஸ்வேஸ்வரன். மாலதிக்கு ஆச்சரியமாய் இருந்தது. விமலை அதற்குள் விஸ்வேஸ்வரன் வீட்டிற்கே அழைத்து வந்தது.

சிறிது நேரம் குசலம் விசாரித்தார் மாலதி. அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி என்று குடும்ப உறுப்பினர்கள் பற்றி வாஞ்சையுடன் விசாரித்தார். பேசிக் கொண்டிருக்கும் போதே திடீரென நாக்கு குளறியது விமலுக்கு. ஆம், மதி என்ற பெயரில் ஒரு புயல் வந்து அந்த அறையை ஆக்ரமித்தது. அவன் மனத்தையும் தான். "ஹாய் டாட்" என்ற படி வந்து அமர்ந்தாள் மதிஸ்ரீ. "இவள் தான் என் ஒரே மகள் மதி" என்று அறிமுகம் செய்து வைத்தார் விஸ்வேஸ்வரன். விமலுக்கு அவர் சொன்னது ஏதோ கிணற்றில் இருந்து சொன்னது போல் இருந்தது. அவள் தான் உலகமா அல்லது உலகமே அவளா என்று மயங்கித் தான் போனான் விமல். அவள் கொஞ்சம் அப்படி இப்படி நகர்ந்தாலும் அதிலும் ஒரு நளினம் தெரிந்தது அவனுக்கு. இவளை எக்காரணம் கொண்டும் என் வாழ்வில் இணைத்துக் கொள்வேன் என்று நினைத்துக் கொண்டான்.

மதிக்கும் அவனை அறிமுகம் செய்து வைத்தார் விஸ்வேஸ்வரன். தனுஷ்கோடி பற்றியும், அவர்களது வியாபாரம் பற்றியும் சிலாகித்தவர், விமல் வெளிநாட்டில் படித்து வந்ததையும், தம் கம்பெனியில் ஜி.எம்மாக இருப்பதையும் விவரித்தார். பஞ்சையும் நெருப்பையும் பக்கத்தில் வைத்த பின் அதை எரிய வைக்க ஊதுகுழலும் வேண்டுமா என்ன? அவர் சொல்லாமலே அனைத்தும் விளங்கியது இருவருக்கும்.

விமல் - மதி இருவருமே அந்த உலகத்தில் இல்லை. அடுத்தடுத்து வந்த நாட்கள் அனைத்தும் சொர்க்கமாகவே இருந்தன இருவருக்கும்.

(பரவும்)

பாகம் - 24

விமலுக்கு இது போல் பெண் நட்பு அதிகம் இருந்ததாலோ என்னவோ அவனால் மதியிடமும் எளிதில் பழக முடிந்தது. அதே சமயம் அலுவலகத்திலும் ஒழுங்காக வேலை செய்ய முடிந்தது. மதிக்கோ இவனுடன் பழக ஆரம்பித்ததில் இருந்து படிப்பே ஏறவில்லை. ஒருநாள் டிஸ்கோத்தேயில் இரவு பன்னிரண்டு மணி வரை ஆடிக் களைத்து திரும்புகையில் விமலின் நடவடிக்கைகள் அனைத்தும் அவளுக்கு எங்கோ வேறுலகில் பறப்பது போல் இருந்தது. அவன் பேசிய நுனி நாக்கு ஆங்கிலமும், குடிப்பதில் இருந்த லாவகமும், அதே சமயம் போதை ஏறியும் தள்ளாட்டம் இல்லாத நடையும், வேகமான ஆட்டமும், இவள் கனவில் வருபவன் என்னென்ன செய்வானோ அது அனைத்தும் செய்பவனாகவும் இருந்தான் விமல்.

விமலின் அலுவலகப் பணிகள் அனைத்தையும் பார்த்து வியந்து போயிருந்தார் விஸ்வேஸ்வரன். மார்க்கெட்டிங்கில் புதுப் புது யுக்திகளை அவன் அள்ளி வீசிக் கொண்டே இருந்தான். அவற்றில் எதை எடுப்பது எதை விடுவது என்றே தெரியாமல் பிரமிப்புடன் இருந்தார் அவர். "இவ்வளவு பெரிய நிறுவனமாக இருக்கும் நம்மால் உற்பத்தி செய்த பொருட்களை சூப்பர் மார்க்கெட்டில் இருந்து ஒவ்வொரு கடையாக கொடுத்து தான் விற்பனை செய்ய வேண்டுமா? ஏன் நாமே பல கடைகள் ஆரம்பிக்கக் கூடாது? மதி நிறுவன சோப்புக்கள் இங்கே கிடைக்கும் என்பதை விட, மதி நிறுவனக் கடைகளில் எங்கள் பொருட்களும் இருக்க வேண்டும் என்று பலர் போட்டி போட வேண்டும். நமக்கும் வியாபாரம் ஆன மாதிரி இருக்கும், போட்டியாளர்களையும் தவிர்த்த மாதிரி இருக்கும். தரமான பொருட்களை குறைந்த லாபத்தில் விற்றால் கூட கடையின் நிர்வாகச் செலவுகளைப் பார்த்துக் கொள்ளலாம். பொதுமக்களிடம் விற்கும் சில்லறை விலையிலேயே நம் பொருட்களை விற்பதால், இடைத் தரகர்கள் அடிக்கும் கொள்ளை லாபம் இனி நமக்கே கிடைக்கும்" என்ற அவனது யோசனையை முதற்கட்டமாக இரண்டு கடைகள் ஆரம்பித்து செயல்படுத்தினார் விஸ்வேஸ்வரன். அந்தக் கடைகளின் வெற்றி அவருக்கு இரண்டே மாதத்தில் விமல் தான் மதியின் மாப்பிள்ளையாக வேண்டும் என்று உறுதி செய்தது அவர் மனதில்.

விஸ்வேஸ்வரன் விமலைப் பற்றிப் பேசும் போதெல்லாம் மலரும் மகளின் கண்களைக் கண்டு பரவசப் பட்டுப் போனார். தன்னைப் போல் அதிர்ஷ்ட சாலி இல்லை என்று நினைத்துக் கொண்டார். தனுஷ்கோடியைச் சந்தித்து விமலின் சாமர்த்தியத்தை மெச்சிய அவர், அப்படியே மதி - விமல் நெருக்கத்தைப் பற்றியும் ஆங்காங்கே தெளித்தார். தனுஷ்கோடிக்கு சொல்லவா வேண்டும்? இன்பத் தேனில் ஊறித் திளைத்தது போல் இருந்தது அவருக்கு. முதலில் சிறிது பிகு பண்ணி விட்டு இருவரும் சம்மதித்தால் திருமணம் புரிந்து கொள்ள தனக்கு சம்மதமே என்று பச்சைக்கொடி காட்டினார்.

அதன் பிறகு நடந்ததெல்லாம் அசுர வேகத்தில் நடந்தது. விமல் வந்து சேர்ந்த மூன்றே மாதத்தில் நிச்சய தார்த்த நிகழ்ச்சி இதோ நடந்து கொண்டிருக்கின்றது. திருமணமே நடக்கின்றதோ என்று அனைவரும் பிரமிக்கும் படியாக விஸ்வேஸ்வரனின் ஒரே மகளான மதிஸ்ரீக்கும் விமலுக்கும் நிச்சயதார்த்தம் நடைபெற்றது. விருந்தும் கச்சேரியுமாக வீடே விழாக்கோலம் பூண்டு அல்லோகல்லோகப் பட்டுக் கொண்டிருந்தது. அனைவரும் சந்தோசக் கடலில் ஆழ்ந்திருந்தனர்.

தொழிற்சாலை பணியாளர்கள் அனைவருக்கும் போனஸ் அறிவித்திருந்தார் விஸ்வேஸ்வரன். அனைவருக்கும் விருந்தும் வழங்கினார். நிச்சயதார்த்தமே இப்படி இருந்தால் இன்னும் கல்யாணத்திற்கு என்னென்ன கிடைக்குமோ என்று ஆச்சரியப் பட்டனர் ராமு தாத்தா, அழகேசன் மற்றும் அனைத்து பணியாளர்களும். தனுஷ்கோடிக்கு இப்படி பணத்தைத் தண்ணீராக வாரி இறைப்பது பிடிக்க வில்லை தான். ஆனால் வெளியே சிரித்துக் கொண்டும் உள்ளத்தில் பொருமிக் கொன்டும் இருந்தார்.

நிச்சயதார்த்தம் முடிந்து ஒரு மாதம் ஆகியிருக்கும். எல்லாம் நல்லபடியாக நடந்து கொண்டிருந்தது. திருமணத்திற்கு இன்னும் இரண்டு மாதங்களே இருந்தது. காரில் வீட்டுக்குத் திரும்பும் வழியில் கொஞ்சம் பதட்டமாகக் காணப்பட்டார் விஸ்வேஸ்வரன். "அழகேசா! வண்டியை ராமு வீட்டுக்கு விடு!" என்றார். அழகேசனுக்கு ஆச்சரியமான ஆச்சரியம். என்றுமே ராமு தாத்தா வீட்டுக்கு அவர் வந்ததே இல்லை! இன்று அவர் அப்படிச் சொன்னதில் ஏதோ இருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

(பரவும்)

பாகம் - 25

ராமு வீட்டுக்குச் சென்று வந்த ஓரிரு நாட்களில் தான் அது நடந்தது. யாரும் எதிர்பார்க்காமலேயே நடந்தது. மதி நிறுவனத்தின் விதியை மாற்றும் படியாக நடந்தது. மதியின் வாழ்க்கையையும் மாற்றும் படியாக நடந்தது. விதியின் விளையாட்டில் விபரீதம் நிறைந்து அதிர்ச்சியையும் எதிர்காலத்தைப் பற்றிய கேள்விக்குறியையும் அந்த நிகழ்ச்சி ஏற்படுத்திக் கொடுத்தது பலர் வாழ்வில்.

கடந்த சில நாட்களாகவே விஸ்வேஸ்வரனின் தோற்றத்தில், நடத்தையில் மாற்றம் வர ஆரம்பித்து இருந்தது. எடுத்ததெற்கெல்லாம் கோபிக்க ஆரம்பித்தார். சிறு சிறு விஷயங்களுக்குக் கூட எரிந்து விழுந்தார். மறு நாள் காரில் திரும்புகையில் அழகேசனிடம், "என் வாழ்க்கையிலேயே தவறான முடிவு ஒன்னு எடுத்துட்டேன் அழகேசா. நான் ஒரு முட்டாள்டா" என்றார். "அது என்ன?" என்று அவனும் கேட்க வில்லை. அவரும் சொல்லவில்லை. கார் ஓட்டுபவர்கள், அதுவும் பெரிய இடத்தில் கார் ஓட்டுபவர்கள் பல ரகசியங்கள் அறிந்து வைத்திருப்பார்கள். அவர்களுக்குத் தெரியாத ரகசியங்களே இருக்காது எனலாம். எத்தனையோ வியாபார விஷயங்களை அவர் பேசும் போதெல்லாம் அவன் காதில் அவை வந்து விழும். ஆச்சரியப் படுவான் தன் முதலாளியின் அறிவுக் கூர்மையையும் அனுபவ அறிவையும் கண்டு. இதோ இன்று முதலாளி அவ்வாறு கூறிய போது கொஞ்சம் திடுக்கிட்டுத் தான் போனான்.

அன்று இரவு 3 மணிக்கு விஸ்வேஸ்வரனுக்கு பலத்த மாரடைப்பு ஏற்பட்டது. இரண்டு நாட்களாக தூக்கமும் உணவும் இன்றி மாலதியும் மதியும் கூடவே இருந்து கவனித்தார்கள் அவரை. நகரிலேயே மிகச் சிறந்த பைவ் ஸ்டார் மருத்துவமனையின் ஐசியூவில் இருந்து அவருக்கு மருத்துவம் பார்க்கப் பட்டது. விமல் தான் கம்பெனி நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டான். மூன்று நாட்களாக அவருக்கு நினைவு திரும்பாதது தலை சிறந்த மருத்துவ நிபுணர்களால் மிகவும் ஆச்சரியான விஷயமாய் கருதப்பட்டது. வெளிநாட்டுக்குக் கொண்டு சென்று விடலாம் என்று விமல் சொன்னதை நிராகரித்தனர் மருத்துவர்கள். அவ்வளவு தூரம் தாங்காது என்று கை விரித்தனர். மூன்றாவது நாள் ஏற்பட்ட இன்னுமொரு மாரடைப்பில் விஸ்வேஸ்வரன் மதியையும் மதி நிறுவனத்தையும் அம்போவென விட்டு விட்டு, நிம்மதியாக சென்று சேர்ந்தார்.

துக்கக் கடலில் ஆழ்ந்தனர் அனைவரும். விதி இதோடு விட்டதா என்ன? பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்று சும்மாவா சொன்னார்கள்?

(பரவும்)

பாகம் - 26

சுனாமி வந்து சென்றது போல் இருந்தது விஸ்வேஸ்வரனின் வீடு. விமல் தான் முன்னின்று அனைத்தையும் கவனித்துக் கொண்டான். அழுது அழுது முகம் வீங்கி அழகே மாறியிருந்தாள் மதி. நினைத்தாவது பார்த்திருப்பாளா இவ்வாறு நடக்கும் என்று? கஷ்டம் என்றால் என்னவென்றே தெரியாமல் செல்லமாய் வளர்த்தாரே? அம்மா தன்னைப் பற்றி என்ன சொன்னாலும் கேட்டுக் கொண்டு சிரித்துக் கொண்டே என் இளவரசியை ஒன்றும் சொல்லாதே என்பாரே? எத்தனை கனவுகளை மனதில் விதைத்திருந்தார். நிச்சயதார்த்தத்தின் போது எத்தனை மகிழ்ச்சி அவர் கண்களில். ஆனந்தக் கண்ணீரில் அவரது ஆடையே நனைந்ததே? எத்தனை பணம் இருந்தும் என்ன? அவரைக் காப்பாற்ற முடியவில்லையே. ஆனால் இதுவே தனக்கு நிச்சயதார்த்தம் ஆவதற்கு முன்னால் நடந்திருந்தால்? நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை அவளால். நல்ல வேளையாக விமல் இருக்கின்றார் என்று நினைத்து துக்கத்திலும் கொஞ்சம் நிம்மதி இருந்தது அவளுக்கு. மாலதிக்கும் அப்படியே. கணவர் இழந்த துக்கத்தில் மகளைப் பற்றி நினைக்கக் கூட அவருக்கு மனமில்லை. வீட்டில் எங்கு சென்றாலும் விஸ்வேஸ்வரனின் நினைவுகள் அவரைச் சுற்றிச் சுற்றி வந்தது. மதியும் அடிக்கடி அவர் குரல் கேட்பது போல் திரும்பித் திரும்பிப் பார்ப்பாள்.

தொழிலாளர்களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. ராமு தாத்தா விஸ்வேஸ்வரனின் மறைவைக் கேள்விப் பட்டதுமே துடிதுடித்துப் போனார். மதி நிறுவனமே சோகத்தில் ஆழ்ந்தது. "இனி என்ன?" என்ற கேள்வி அனைவர் மனதிலும் எழுந்தது. அழகேசனுக்கோ இனி தான் யாருக்கு காரோட்டப் போகின்றோம் என்ற எதிர்காலச் சிந்தனை ஓடியது. ஏதோ ஒரு வேலை கிடைத்தது என்று ஓட்டிக் கொண்டிருந்தான். மற்ற தொழிலாளர்களுக்குக் கூட எப்படியும் இங்கேயே வேலை தொடர்ந்து இருக்கும். ஆனால் இவனுக்கு? இருந்தாலும் அவனுக்கு வேலை பற்றிய கவலையை விட, அவன் முதலாளி கடைசி நாளில் அவனிடம் பேசிய பேச்சுத் தான் திரும்பத் திரும்ப ஓடிக் கொண்டிருந்தது. ராமு தாத்தாவிடம் அன்று என்ன நடந்தது என்று கேட்கவும் ஆசை தான். ஆனால், சொல்ல வேண்டிய விஷயம் என்றால் அவன் கேட்காமலேயே அவர் சொல்லி இருப்பார். அதனால் பொறுமை காத்தான்.

ஜனனிக்கோ விமலிடம் ஒட்டுதல் இல்லை. தான் இந்த நிறுவனத்தில் இருந்து கழண்டு கொள்ளும் வேளை வந்தது என்று எண்ணிக் கொண்டாள். கஷ்டமான காலத்தில் வேலைக்கு வந்து விண்ணப்பிக்கும் போதிலிருந்து, குழந்தை பிறந்த போது அவர் வந்தது, சேகர் மறையும் போது கூடவே இருந்து ஒரு தந்தையின் பரிவுடன் அவர் நடந்து கொண்டது அனைத்தும் அவளுக்கு நினைவுக்கு வந்து அலைக்கழித்தது. இப்படி ஒவ்வொரு தொழிலாளி மனதிலும் நீங்கா இடத்தைப் பிடித்திருந்தார் விஸ்வேஸ்வரன்.

ஆனால், சந்தோசப் படவும் இருவர் இருந்தனர். ஒருவர் அன்புராஜ். இன்னொருவர் தனுஷ்கோடி.

(பரவும்)

பாகம் - 27

தனுஷ்கோடிக்கும் முதலில் அதிர்ச்சியாகத் தான் இருந்தது. ஆனால், மதி நிறுவனம் விஸ்வேஸ்வரன் இருக்கும் வரையில் அவரிடம் தானே இருக்க முடியும்? தன் கைக்கு வருவதில் பல சிக்கல்கள் இருக்குமே என்று நினைத்துக் கொண்டிருந்தார். என்ன தான் விமல் நிர்வாகம் பார்த்துக் கொண்டாலும், அவர் பாதிப்பு எப்படியும் இருக்கத் தான் செய்யும் என்பது அவரது கணிப்பு. அவருக்கு நல்ல செய்தியாகவே விஸ்வேஸ்வரனின் மரணம் வந்து சேர்ந்தது. இனி விமலின் நிர்வாகம் மட்டுமின்றி உரிமையும் மாற்றிக் கொள்வதில் எந்தப் பிரச்னையும் இருக்கப் போவதில்லை என்று அவர் மனம் துள்ளியது. விஸ்வேஸ்வரனுக்கு மதி, மாலதி தவிர வேறு யாரும் சொந்தத்தில் இல்லை என்பதில் அவருக்கு கூடுதல் மகிழ்ச்சி. பணத்திலும், சொத்திலும் அப்படி என்ன தான் இருக்கின்றதோ தெரியவில்லை. எவ்வளவோ பெரிய கடல் கூட, தன்னிடம் வந்து சேரும் நதியை வாரி அணைத்துக் கொள்கின்றதல்லவா? அது போன்ற நிலையில் தான் அவர் இருந்தார். சேர்த்துக் கொண்டே இல்லாவிட்டால் எப்பேர்ப்பட்ட கடலும் வற்றி விடும் என்பது அவரது சொந்த தத்துவம்!

மாலதிக்கு இனி எதிர்காலமே மதி தானே. எனவே மதியின் நன்மைக்காக எதையும் செய்யும் நிலையில் அவர் இருந்தார். மதிக்கும் நிறுவனத்தை விமலே பார்த்துக் கொள்வதில் தான் பூரண விருப்பம். அவளைப் பொருத்தவரை பணம் காய்க்கும் மரமாகவே மதி நிறுவனம் தெரிந்தது.

விஸ்வேஸ்வரனின் மறைவுக்கு ஒரு வாரம் துக்கம் அனுஷ்டித்த மதி நிறுவனம் அதன் நிறுவனர் இன்றி முதல் நாளாய் இயங்க ஆரம்பித்தது. கொஞ்சம் கொஞ்சமாக சகஜ நிலைக்குத் திரும்ப ஆரம்பித்தனர் தொழிலாளர்கள். அனைவரையும் அழைத்து ஒரு கூட்டம் நடத்தினான் விமல். விஸ்வேஸ்வரன் மறைந்தாலும் அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாய் அவர்கள் இங்கேயே உழைக்க வேண்டும் என்றும், அவர் இருந்தால் என்ன செய்வாரோ, அதைச் செய்யவே தான் இங்கே இருப்பதாகவும் கூறினான். உழைப்பவர்களும் கஞ்சி குடிக்க வேண்டுமே? மீண்டும் வேலை ஆரம்பித்து ஓடிக் கொண்டிருந்தது. அழகேசன் கூட வேலையை விட்டு நீக்கப் படவில்லை. இப்போதைக்கு மூன்று கார்கள் அப்படியே இருந்தன. ஆனால் வேலை தான் இல்லை ஓட்டுநர்களுக்கு. அழகேசனுக்கு சுத்தமாய் வேலை கிடையாது காரை மீண்டும் மீண்டும் தினமும் துடைப்பதைத் தவிர.

சில சமயங்களில் முக்கியமாக வெளியூர் செல்லும் நேரத்தில் காரை அவர் ஓட்டிக் கொண்டு அவனை அருகில் அமரச் சொல்வார் விஸ்வேஸ்வரன். அவரது பழைய கால நினைவுகள், ஏழ்மையில் உழன்றது, கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறியது என்று சொல்கையில் எல்லாம் அவருக்கு ஏற்படும் மனத் திருப்தியை இப்போதும் உணர்ந்தான் அழகேசன். அவரின் நினைவுகளைத் தன் வாழ்நாளில் மறக்க முடியாது என்றே அறிந்திருந்தான். அவர்களாக நிறுத்துவதற்குள் தாமாகவே நின்று கொள்வது என்ற முடிவுக்கும் வந்திருந்தான். அந்த முடிவுடன் கார் சாவியைக் கொண்டு மாலதியிடம் கொடுத்தான் அழகேசன். "ஏன் அழகேசா? உன்னை யாரு வேலையை விடச் சொன்னாங்க?" என்ற மாலதிக்கு, "இல்லம்மா, ஐயா இல்லாம நான் யாருக்கு கார் ஓட்டப் போறேன். மனசே சரியில்ல. நான் ஏதாவது வேல பார்த்துக்குறேன்" என்று பதிலளித்தான். "நீ எங்கயும் போக வேண்டாம். உன்னை மாதிரி ஆட்கள் எல்லாம் அவர மாதிரியே போய்ட்டா அப்புறம் நாங்க என்ன செய்வோம்?" என்ற பின் தான் அரை மனதுடன் வேலைக்கு நீடிக்க சம்மதித்தான்.

ஆனால் ராமு தாத்தாவுக்கும், அழகேசனுக்கும், ஜனனிக்கும், மதிக்கும் ஏன் விமலுக்கும், தனுஷ்கோடிக்கும் கூட அதிர்ச்சி தரும் செய்தியைக் கொண்டு வந்தார் அன்புராஜ்!

(பரவும்)

பாகம் - 28

அன்புராஜ்க்கு விஸ்வேஸ்வரனைப் பிடிக்காமல் போனதிலிருந்து கூண்டில் அடைபட்ட புலியாய் மனதுக்குள்ளே உருமிக் கொண்டு தான் இருந்தார். அது கொஞ்சம் கொஞ்சமாக மதி நிறுவனத்தின் மேலேயே அவர் வெறுப்பை வளர்த்துக் கொள்ளுமளவு அதிகரித்து இப்போது விஸ்வேஸ்வரனை வஞ்சம் தீர்க்க வேண்டுமானால் ஒரே வழி மதி நிறுவனத்தையே அழிப்பது தான் என்று நினைத்துக் கொண்டிருந்தார். அவரது ஆசையெல்லாம் விஸ்வேஸ்வரன் தெருவுக்கு வர வேண்டும் என்று தான். ஆனால், இப்போதோ, அவரே மரணம் அடைந்து விட்டதால் அந்த நெருப்பு அணையத் தானே வேண்டும்? ஆனால், அது அணையாமல் இன்னும் கொந்தளிப்பாய் மாறி நிறுவனத்தின் மேல் எரிமலையாய் வெடித்து நெருப்புக் குழம்பாய் வீசத் துவங்கியது.

இடையில் விமல் வந்தது அவருக்கு இன்னும் வசதியாகப் போயிருந்தது. விமலுக்கு மார்க்கெட்டிங் துறை தான் மிகவும் நாட்டம். மற்ற நிர்வாகத்துறை அனைத்தும் தன் மார்க்கெட்டிங்கை நம்பித் தான் இருக்கின்றது என்ற எண்ணம் அவனுக்கு. அது அவருக்கு மிகுந்த அனுகூலமாகப் போய் விட்டது. தகுந்த நேரம் பார்த்துக் கொண்டே இருந்தார். விமல் வந்து சேர்ந்து மார்க்கெட்டிங் யுக்தியை மாற்றியதுமே அதை வைத்தே மொத்த நிர்வாகத்தையும் சீர் குலைக்க முடியும் என்பதைச் சீக்கிரமே உணர்ந்து கொண்டார் அன்புராஜ்.

விமலின் அறிவுரையின் படி திறந்த கடைகள் இரண்டும் சக்கை போடு போட்டன. வெளியில் மதி நிறுவனப் புகழ் பரவ ஆரம்பித்தது. ஆனால், இவர்களிடம் சரக்கை வாங்கி விற்ற சிறு சிறு கடைக்காரர்களின் அதிருப்தி அதிகமாக ஆரம்பித்தது. பெருமீன்களுக்கும் சிறு மீன்களுக்கும் சண்டை அப்போது தான் ஆரம்பித்திருந்தது. அதை விஸ்வேஸ்வரனிடம் கொண்டு சென்றிருந்தால் எளிதில் தீர்த்து வைத்திருந்திருப்பார். அல்லது கடைகளையே மூடியிருப்பார். ஆனால் அன்புராஜோ விமலிடம் தூபம் போட்டு போட்டு அந்தக் கடைக்காரர்களுக்கு சப்ளை செய்யாமலும், அவர்களிடம் வம்புக்கிழுத்தும் நல்ல நல்ல வாடிக்கையாளர்களை இழக்க ஆரம்பித்து இருந்தது நிறுவனம்.

இது ஒரு புறமிருக்க, விஸ்வேஸ்வரன் இறந்ததும் மதி நிறுவனத்தின் நிர்வாகமே கேள்விக்குறியாகி விட்டிருந்தது. என்ன தான் விமல் நிர்வாகம் பார்த்தாலும், வெளியில் உள்ளவர்கள் நம்ப வேண்டுமே? இந்தியாவில் இது தான் பிரச்னை. ஏதேனும் ஒருவரின் ராஜ்ஜியமாய் நிர்வாகம் ஓடிக் கொண்டிருக்கும். ஆனால் அடுத்து வருபவர் திறமைசாலியாய் இருந்தாலும் முன்னவரை நம்பியவர்களால் புதியவரை நம்ப முடிவதில்லை. எனவே விஸ்வேஸ்வரனை நம்பிக் கடன் கொடுத்தவர்கள் அனைவரும், முக்கியமாக வங்கிகள், நிச்சயதார்த்த அவசரத்துக்குக் கடன் வழங்கியவர்கள் என்று அனைவரும் ஒரே நேரத்தில் உடனே கடனை அடைக்குமாறு நெருக்க ஆரம்பித்தனர். விமல் அதிகார பூர்வமாக வங்கிப் பத்திரங்களில் கையெழுத்துப் போட முடியாது என்பதை வங்கிகள் வலியுறுத்தின. சொத்துக்கள் அனைத்தும் விஸ்வேஸ்வரன் பெயரிலேயே இருந்தன. அவர் இறந்ததால் வாரிசு சட்டப்படி மதிக்கும், மாலதிக்கும் பங்கு வந்தது. ஆனால் இருவரும் சேர்ந்து விமலுக்கு அதை எழுதி வைத்தாலே ஒழிய அவனால் எதிலும் கையெழுத்துப் போட முடியாது. அவர்கள் இருவரை மட்டுமே நம்பி வங்கிகள் கடனும் கொடுக்க முடியாது.

இவ்வாறு இடியாப்பச் சிக்கல் ஏற்படும் நிலையில் அன்புராஜ் கோடி கோடியாய்க் கனவு காண ஆரம்பித்தார். அவருக்கு எரியும் வீட்டில் பிடுங்கியது எல்லாம் லாபம் என்று மனம் குதித்துத் தாவியது. அந்த வீட்டை எப்போது பற்ற வைக்கலாம் என்று தருணம் பார்த்துக் கொண்டிருந்தார். அதுவும் இதோ இப்போது வந்து விட்டது.

தருணம் வந்ததும் பார்க்க வேண்டியது யாரை? என்று சிந்தித்தார். சட்டென்று அவர் மனதில் வந்தவர் தனுஷ்கோடி.

(பரவும்)

பாகம் - 29

குபேரா நகை மாளிகை உண்மையில் குபேரனின் ராஜ்ஜியம் போலவே இருந்தது. உள்ளே நுழைந்ததுமே சிலீரென்ற ஏ.சி. காற்று முகத்தில் அறைந்து அன்புராஜை வரவேற்றது. சுற்று முற்றும் பார்த்தார் ஏதோ பெரிய சந்தைக்குள் நுழைந்தது போல் உணர்ந்தார். இருந்தும் கோடிக்கணக்கான வியாபாரம் நடக்கும் ஒரு தொழில் நிறுவனத்தை விட நேரடியாக வாடிக்கையாளர்களிடமே இவ்வளவு வியாபாரம் நடக்கும் நகைக் கடைகள், ஜவுளிக்கடைகளை எப்போது பார்த்தாலும் அவருக்கு ஆச்சரியமாக இருக்கும். அவர் உள்ளே நுழைந்ததுமே அழகிய சீருடை அணிந்த சிப்பந்தி ஒருவர் அவரை நோக்கி வந்து உங்களுக்கு என்ன வேண்டும்? என்று அவரையும் நகை வாங்க வந்தவர் என்று எண்ணிக் கேட்டார். "நான் தனுஷ்கோடி அவர்களைப் பார்க்க வந்திருக்கின்றேன்" என்றார் அன்புராஜ். "உங்க பேரு சொல்லுங்க அல்லது விசிட்டிங் கார்டு இருக்கா? நான் ஐயாகிட்ட கேட்டு வரச்சொன்னாருன்னா நீங்க போய் பார்க்கலாம்" என்றார் அவர். "நான் மதி நிறுவனம் அன்புராஜ்னு சொல்லுங்க" என்றார் அன்புராஜ்.

தனுஷ்கோடிக்கு ஏற்கனவே அன்புராஜைப் பற்றித் தெரிந்திருந்தது. விமல் அவரிடம் தினமும் ரிப்போர்ட் செய்வான். அப்போதெல்லாம் அன்புராஜ் தான் மதி நிறுவனத்தில் ஆல் இன் ஆல் என்று சொல்லி வைத்திருந்தான். எனவே அன்புராஜ் என்றதும், உள்ளே வரச் சொல் என்றார்.

தனுஷ்கோடியின் தனியறை. ஏசி சத்தமேயின்றி குளிரை வாரியிறைத்துக் கொண்டிருந்தது. ஏதோ பங்களாவின் வரவேற்பறைக்குள் நுழைந்தது போல் இருந்தது. ஆள் விழுங்கி சோபாக்கள் நான்கைந்து இருந்தன. அதையும் தாண்டி ஒரு பெரிய மேஜையில் ஒரு ஓரத்தில் ஒரு தொலைபேசி மட்டும் இருக்க அந்தப் பக்கம் தனுஷ்கோடி வெள்ளை வேட்டி வெள்ளை சட்டையுடன், நெற்றியில் சிறு குங்குமப் பொட்டுடன் அவருக்கென்றிருந்த சுழல் இருக்கையில் முதலாளி தோரணையில் அமர்ந்திருந்தார். மேசையின் இந்தப் பக்கம் ஐந்து இருக்கைகள் இருந்தன. அதில் நடுவில் இருந்த ஒன்று தனுஷ்கோடியை உள் வாங்கிக் கொண்டது.

அரை நிமிடம் எதுவும் பேசாமல் தலைகுனிந்த படி ஏதோ பேப்பரில் கையெழுத்துப் போட்டுக் கொண்டே தனுஷ்கோடி அன்புராஜைத் தீர்க்கமாக மனதாலேயே அளந்தார். அன்புராஜும் எதுவும் சொல்லவில்லை. புன்முறுவலுடன் அவருக்காக காத்திருந்தார். நிமிர்ந்து பார்த்த தனுஷ்கோடி அவருக்கேயான வித்தியாசமான சிரிப்புடன் "சொல்லுங்க மிஸ்டர் அன்புராஜ். உங்களைப் பற்றி விமல் நிறையவே சொல்லிருக்கான். கம்பெனி எப்படி போய்க்கிட்டு இருக்கு?" என்றார்.

"அதைப் பத்திப் பேசத்தான் இங்கே வந்தேன் சார்" என்றார் அன்புராஜ். "ஏன்? விமலிடம் சொல்லிருக்கலாமே. நீங்க ஏன் சிரமப்படுறீங்க?" என்றார் தனுஷ்கோடி. "இல்லை சார். இது உங்க கிட்டத் தான் சொல்ல வேண்டிய அளவுக்கு ரொம்ப முக்கியமானது. அதான் நேரிலேயே வந்தேன்" என்றார் அன்புராஜ். "சரி. சொல்லுங்க" என்று நன்றாகச் சாய்ந்து அவர் இருக்கையில் அமர்ந்து கொண்டார் தனுஷ்கோடி. ஒரு பத்து விநாடிகள் எப்படி ஆரம்பிப்பது என்று நினைத்த அன்புராஜ், அதன் பின் எந்த வித தங்கு தடையுமின்றி தான் சொல்ல வந்ததைச் சொல்ல ஆரம்பித்தார்.

"சார், மதி நிறுவனம் உங்களைப் போல பரம்பரை பணக்காரரால் ஆரம்பிக்கப் பட்டது இல்லை. விஸ்வேஸ்வரன் தன் கடின உழைப்பால் மட்டுமே இந்த உயரத்துக்குக் கொண்டு வர முடியாதுங்குறது உங்களுக்கும் தெரிஞ்சிருக்கும். இன்னைக்கு கம்பெனியோட மொத்த சொத்து 150 கோடின்னா, அதன் பேரில் இருக்குற கடனும் 145 கோடி இருக்கும். ஆக விஸ்வேஸ்வரனோட சொத்து எவ்வளவுன்னு பார்த்தா அது 5 கோடி தான்

இருக்கும்." என்று முதல் அதிர்ச்சியைக் கொடுத்தார் அன்புராஜ். தனுஷ்கோடி இதை சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை என்பது அவர் முகத்தில் ஒரு விநாடி தெரிந்தது. பின்னர் சுதாரித்துக் கொண்ட அவர், "சரி. தொழில்னு இருந்தா கடனும் இருக்கத் தான் செய்யும். மேலே சொல்லுங்க" என்றார்.

அந்த 150 கோடி ரூபாய் சொத்துல ஒரு 10 கோடி கம்பெனிக்கு பணம் தர்ற வாடிக்கையாளருங்க. அவங்க இப்போ பணம் கொடுக்கலன்னாலே கம்பெனி 5 கோடி ரூபாய்க்கு திவாலாகுற நிலைமைல இருக்கு. இப்போ விஸ்வேஸ்வரன் இறந்ததால பேங்கு உட்பட எல்லா கடன் காரங்களும் இப்பவே கடன் தொகையைத் திருப்பித் தரச் சொல்லி கேக்குறாங்க. கம்பெனிக்குத் தர வேண்டிய வாடிக்கையாளருங்க, இனி கம்பெனி ஒழுங்கா சரக்கு சப்ளை செய்யுமா? ங்குற சந்தேகத்துல பணத்தைத் தருவதுல லேட் பண்ணுறாங்க. அதனால இன்னைக்குத் தேதிக்கு மதி கம்பெனி பொருளாதாரச் சிக்கல்ல தள்ளாடுது." என்ற படி தனுஷ்கோடியின் கண்ணுக்குள் ஊடுருவிப் பார்த்தார் அன்புராஜ்.

(பரவும்)

பாகம் - 30

தனுஷ்கோடி யோசனையில் ஆழ்ந்தார். ஆழம் பார்க்காமல் காலை விட்டு விட்டோமோ என்று யோசித்தார். அன்புராஜை மீண்டும் பார்த்தார். அவர் முகத்திலிருந்து அவர் பொய் சொல்வதாய்த் தெரியவில்லை தனுஷ்கோடிக்கு. ச்சே! வெறும் ஐந்து கோடிக்கு என் மகனைக் கல்யாணம் செய்து கொடுப்பதாவது? என்று நினைத்துக் கொண்டார். நல்லவேளை கல்யாணம் இன்னும் நடக்கவில்லை என்று நினைத்துக் கொண்டார். தனுஷ்கோடி இயல்பில் அத்தனை கெடுதல்காரர் இல்லை. அவரைப் பொருத்தவரையில் சொத்து வரவேண்டும். பணம் சேர வேண்டும். அவ்வளவு தான். அது கல்யாணம் மூலம் வந்தாலும் ரொம்ப சந்தோசம் என்று தான் நினைத்திருந்தார். இப்போது அந்த ஆசையில் மண் விழுவதை அவரால் தாங்க முடியவில்லை.

சரி மேலும் சொல்லுங்க என்பது போல் பார்த்தார் தனுஷ்கோடி. "எது எப்படியிருந்தாலும் இந்த பேங்க்காரங்களுக்கு முதல்ல பதில் சொல்லியே ஆகணும் போல சார். மத்த கடன்காரங்கள கூட கம்பெனி ஓடிக்கிட்டு இருந்தா கொஞ்சம் சமாளிக்கலாம். இப்போ மாலதியையும் மதியையும் நம்பி கடன் தர்றதா இல்லை வங்கி." என்ற போது குறுக்கிட்டார் தனுஷ்கோடி. "ஏன்? விமலை நம்பித் தரலாமே?" என்றார். "அதைத் தான் சொல்ல வந்தேன் சார். முதல்ல மதியும் மாலதியும் அவங்களுக்கு பங்கா வந்த சொத்து மொத்தத்தையும் விமல் பேருக்கு மாத்திக் கொடுத்தா வேணும்னா பேங்க் விமலை நம்பி கடன் கொடுக்கும். ஏன்னா கம்பெனி இப்பவும் ஒரு புரோப்ரைட்டர் கம்பெனியாத் தான் இருக்குது. அதனால இப்போ முதலாளி யாருன்னு பேங்க்ல தெளிவா கேக்குறாங்க. அதனால தான் உங்களத் தேடி வந்தேன்" என்றார் அன்புராஜ்.

"சரி இப்ப என்ன செய்யலாம்னு நீங்க நினைக்கிறீங்க?" என்றார் தனுஷ்கோடி. இதோ இந்தத் தருணத்தைத் தானே எதிர்பார்த்திருந்தார் அன்புராஜ். "இது எதுவுமே நடக்காம கம்பெனி ஸ்மூத்தா ஓடணும்னா அது நீங்க நினைச்சா நடக்கும்" என்றவர் தொடர்ந்து, "நீங்க ஒரு ஜாமீன் கையெழுத்து போட்டா போதும். பேங்க் வாய மூடிக் கொள்ளும்." என்றார். "என்னது? நான் ஜாமீன் கையெழுத்து போட்றதா? அது கனவுல கூட நடக்காது. நீங்க சொல்றதைப் பார்த்தா மதி கம்பெனிக்காக என் சொத்துல இருந்து பணம் கேப்பீங்க போல" என்றார் தனுஷ்கோடி முகமெல்லாம் சிவந்து. ஆஹா! நினைத்து வந்தது போலவே நடக்குதே என்று மனதுக்குள் குதியாட்டம் போட்டார் அன்புராஜ்.

வாயில் அன்பொழுக தனுஷ்கோடியிடம் பேரம் பேச ஆரம்பித்தார் அன்புராஜ். "சார், நான் மட்டும் நீங்களா இருந்தா என்ன செய்வேன் தெரியுமா?" என்று லாவகமாகக் கொக்கியைப் போட்டார் அன்புராஜ். அதில் விழுந்த தனுஷ்கோடி "சொல்லுங்க" என்றார் ஆவலுடன். "சரி சார். சொல்றேன். ஒன்னு மதி மட்டுமா? அல்லது மதியும் மதியுமா? என்ற கேள்விக்கு விடை சொல்லுங்க. என்ன செய்றதுன்னு சொல்றேன்" என்றார் நேரடியாக. தனுஷ்கோடி குழப்பத்துடன் "மதியும் மதியுமா? புரியலையே" என்றார். "சார் நான் முதல்ல சொன்னது மதிங்கிற பொண்ணு. இரண்டாவது சொன்னது மதிங்கிற கம்பெனி. உங்களுக்கு பொண்ணு மட்டும் போதுமா? அல்லது பொண்ணும் கம்பெனியுமான்னு கேட்டேன்." என்று விளக்கினார் அன்புராஜ். "ரெண்டுக்குமே பதில் சொல்லுங்க. நானே தேர்ந்தெடுக்கின்றேன்" என்று புத்திசாலித்தனமாய் பதில் சொன்னார் தனுஷ்கோடி.

"பொண்ணு மட்டும் போதும்னா ஜாமீன் கையெழுத்துப் போட்ருவேன் சார்" என்றார் அன்புராஜ் குத்தலாக.

"பொண்ணும் கம்பெனியும்னா?" என்றார் தனுஷ்கோடி மித மிஞ்சிய ஆவலுடன். "அதுக்கு என்ன செய்யணும்னா, சொத்து முழுதையும் விமல் பேர்ல எழுதி வாங்கிக்கிட்டு நீங்க உங்க மகனுக்கு ஜாமீன் கையெழுத்து போட்டா நடக்கும்" என்றார் அன்புராஜ். "சொத்து விமல் பேர்ல வந்தாலும் நான் ஏன் ஜாமீன் கையெழுத்து போடனும்?" என்றார் தனுஷ்கோடி. "இப்போ தான் படிச்சிட்டு வந்த விமலை நம்பி அவ்வளவு கடனை வங்கி கொடுக்காது சார். கூடுதல் அடகும் கேட்கும்" என்றார் அன்புராஜ்.

இப்போது குழம்பிப் போயிருந்தார் தனுஷ்கோடி. எப்படிப் பார்த்தாலும் ஜாமீன் கையெழுத்து போடணுமோ என்று நினைத்துக் கொண்டார். அப்போது தான் தன் தூண்டிலில் ஐயா சிக்கிக் கொண்டார் என்று நினைத்துக் கொண்ட அன்புராஜ், "சார் ஜாமீன் கையெழுத்து போடாமலே, மதி கம்பெனி எந்தக் கடனும் இல்லாம உங்க கைக்கு வர்ற வழி சொல்லவா?" என்றார். அவ்வளவு தான் முகத்தில் சந்தோசம் மீண்டு வர "அத முதல்லயே சொல்லிருக்கலாமே அன்புராஜ்" என்றார் ஆர்வத்துடன் தனுஷ்கோடி. "இல்ல சார் இதுக்கு ராஜ தந்திரம் செய்தாத் தான் நடக்கும். இது கொஞ்சம் ரிமோட்டான சிச்சுவேசன் அதான் சொல்லல"என்றார் வம்புராஜான அன்புராஜ். "சொல்லுங்க யோசிப்போம்" என்றார் தனுஷ்கோடி.

உள்ளத்தில் விஷத்துடனும், வார்த்தைகளில் இனிப்புடனும் சொல்ல ஆரம்பித்தார் அன்புராஜ். "இந்த வழியில் மதியும் மதியும் உங்களுக்குக் கிடைக்காது சார். இரண்டாவது மதியான கம்பெனி மட்டும் தான் உங்களுக்குக் கிடைக்கும். நான் சொல்ற படி செய்யணும்னா விமல்-மதி கல்யாணம் நடக்கக் கூடாது. இரண்டு பேரும் பிரியணும். அப்போ மாலதியாலோ மதியாலோ கம்பெனிய நடத்த முடியாத சூழ்நிலை உருவாகும். வேற வழியில்லாம வங்கியும் கடன்காரங்களும் நெருக்க ஆரம்பிப்பாங்க. கம்பெனிய விற்க வேண்டிய சூழ்நிலை வரும். அப்போ 150 கோடி பெருமானமுள்ள மொத்த சொத்தையும் சல்லிசா 100 கோடிக்கு நீங்க சந்தையிலேயே வாங்கிக்கலாம்! உங்க மகனுக்கு கம்பெனியையே பரிசாவும் தரலாம்." என்றார். "இது சாத்தியமா? எதுக்கு 100 கோடி செலவளிச்சு நான் கம்பெனிய வாங்கணும்? மீதி 45 கோடி கடன்காரங்கள எப்படி சமாளிக்கிறது?" என்றார் தனுஷ்கோடி. "இது போல ஒரு அதிர்ஷ்டம் உங்களுக்குக் கிடைக்காது சார். எல்லா கடன்காரங்க கிட்டயும் பேசி சம்மதிக்க வைக்க நானாச்சு. எல்லாம் கம்பெனி நொடிச்சுப் போச்சு. உனக்கு வர்ற தொகையை வாங்கிட்டுப் போ. இல்லாட்டி இதுவும் கிடைக்காதுன்னு சொன்னா சரின்னு சொல்வானுங்க. ஏற்கனவே இப்போ விமல் கம்பெனி நடத்துற வித்தை கத்துக்கிட்டார். எப்படியும் ஒரு கம்பெனி அவருக்கு வச்சிக் கொடுக்கப் போறீங்க தானே? ஓடுற கம்பெனியே கிடைக்குதுன்னா அது எளிது தானே?" என்று தூபம் போட்டார் அன்புராஜ். "அதுவும் போக உங்களப் போல ஸ்டேட்டஸ் உள்ளவங்களுக்கு சரியா இனி மதியால இருக்க முடியுமான்னு நினைச்சுப் பாருங்க. உங்க விமலோட மதிப்பு வெறும் ஐந்து கோடி தானா?" என்று விலை பேசினார் அன்புராஜ். "இப்படிச் சொன்னதும் தனுஷ்கோடிக்கு உறைத்தது. "சரி வேற யாராவது ஏலத்துல கூடுதல் தொகைக்குக் கேட்டா?" என்றார் சந்தேகத்துடன். "அங்கே தான் சார் நான் உங்களுக்கு ஹெல்ப் பண்றேன்னு சொல்றேன். எனக்கு நீங்க கொடுக்கப் போற நூறு கோடியில 2% கமிசன் மட்டும் கொடுங்க. மதி கம்பெனிய விமல் கம்பெனியா மாத்திரலாம்" என்றார் தானும் ஒரு கோடீஸ்வரனாகிவிடலாம் என்ற ஆவலுடன் அன்புராஜ்.

இதை விட நல்ல யோசனை இருக்க முடியாது தான் என்று தன் மகன் ஆசை, காதல், வாழ்க்கை என்ற அனைத்தையும் விற்கத் துணிந்தார் தனுஷ்கோடி.

(பரவும்)

பாகம் - 31

விஸ்வேஸ்வரனின் பங்களா. வரவேற்பறையில் அன்புராஜ் அமர்ந்திருந்தார். "சொல்லுங்க அன்புராஜ்" என்ற படி துவண்ட கொடியாய் வந்த மாலதியைப் பார்த்ததும் பவ்யமாய் எழுந்து நின்றார். "உட்காருங்க" என்ற படி அமர்ந்த மாலதியின் எதிரில் உட்கார்ந்தார் அன்புராஜ். மதியும் மாலதியின் பக்கத்தில் வந்து அமர்ந்தாள். முகத்தில் அளவிட முடியாத கவலை குடி கொண்டிருந்தது அன்புராஜ் முகத்தில். "உங்கள நினைச்சா எனக்கு ரொம்பப் பாவமா இருக்கும்மா. ஐயா இப்படி நம்மையெல்லாம் விட்டுட்டு போவார்னு நான் கனவுல கூட நினைக்கல." என்றார் வாஞ்சையுடன். "எல்லாம் எங்க தலைவிதி." என்று நொந்து கொண்டார் மாலதி. கொஞ்ச நேரம் அமைதியில் கழிந்தது. மௌனத்தைக் கலைத்த அன்புராஜ் தான் வந்த வேலையை ஆரம்பித்தார். "அம்மா, இன்னைக்கு கம்பெனி இருக்குற நிலவரத்தை உங்க கிட்ட சொல்ற பொறுப்பு எனக்கு இருக்கு. அதைச் சொல்லத் தான் அவசரமா உங்களப் பாக்க வந்தேன்." என்றார். "ஏன்? மாப்பிள்ள கிட்ட சொல்ல வேண்டியது தான?" என்றார் மாலதி. மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை என்று மனதுக்குள் கருவிக் கொண்ட அன்புராஜ், "ஜிஎம் சார்கிட்ட சொல்றத விட உங்க கிட்ட சொன்னா பொருத்தமா இருக்கும்னு தான் உங்க கிட்ட சொல்ல வந்தேன்" என்றார். மௌனமாகத் தலையசைத்த மாலதி தொடருங்கள் என்று அதன் மூலமே சைகை காட்டினார்.

"ஐயா சிங்கம் மாதிரி மொத்த கம்பெனியையும் கைக்குள்ள வச்சிருந்தாரு. அவரு செய்ற ஒவ்வொரு முடிவும் பார்க்கவே ஆச்சரியமா இருக்கும். எதுக்குன்னே தெரியாம இருக்கும். ஆனா பின்னால அவர் நினைச்சதை விட பல மடங்கு பலன் கொடுக்கும் பாருங்க. அப்போ தான் நமக்கே புரியும். அட! எவ்வளவு முன்னெச்சரிக்கையா ஐயா இருந்திருக்காங்கன்னு" என்று விஸ்வேஸ்வரன் புகழ் பாடிவிட்டு, "போன வருசம் நாம வாங்கின வெளிநாட்டு மிசினுக்கும், பொண்ணு கல்யாணத்துக்கும் கொஞ்சம் கடன் வாங்கினாரு ஐயா. அது அவர் இருந்தார்னா தூசி கூட கிடையாது. ஆனா திடீர்னு போய்ட்டாருல்ல அதான் இப்படி ஆயிருச்சி." என்றார் அன்புராஜ். "ஏன்? என்ன ஆச்சு?" என்றார் மாலதி.

"அதை ஏன் கேக்குறீங்க அம்மா? அய்யா காலத்துல வாயைப் பொத்திக்கிட்டு சரக்கு வாங்கின பசங்களெல்லாம் இப்போ பணம் தரமாட்டேன்னு சொல்றானுங்க. கடன் கொடுத்தவனுங்க எல்லாம் ஏதோ கம்பெனியே நொடிச்சுப் போன மாதிரி உடனே கடன அடைக்கச் சொல்லுன்னு நெருக்குறாங்க. அதனால இப்போதைக்கு கம்பெனி உண்மையில் சொல்லப் போனா தள்ளாடுதும்மா. நம்ம கம்பெனியோட மொத்த சொத்தோட மதிப்பு 150 கோடி. நாம் கொடுக்க வேண்டியது ஆனா 145 கோடி தான். ஆனா இப்போ வர வேண்டிய ரூபா வராததுனாலயும், பணத்தைக் கொடுக்க வேண்டி நெருக்குறதுன்னால உடனே ஒரு பேச்சுக்கு சொத்தை அவ்வளவையும் விக்கப் போறோம்னா 100 கோடிக்கு மேல தேறாதும்மா." என்று அதிர்ச்சி வெடிகளை வீசினார் அன்புராஜ்.

மாலதியால் நம்பவே முடியவில்லை. மதியாலும் தான். அதிர்ந்து போய் அமர்ந்திருந்தனர். "என்ன சொல்றீங்க அன்புராஜ்? நம்ம கம்பெனியோட மதிப்பு 100 கோடி தானா? இப்போ கம்பெனிய விக்க வேண்டிய அவசரம் அவசியம் எதுக்கு வந்தது?" என்றார் மாலதி பதட்டத்துடன். "விக்கனும்னு நான் சொல்லலம்மா. ஆனா பேங்க்காரங்க ஐயாவை நம்பியும் சொத்தை அடகு வைத்தும் கொடுத்த கடனுக்கு இப்போ உங்க ரெண்டு பேர் பெயருக்கும் மாறின சொத்தை அடகு வைக்கணும்னு சொல்றாங்க. அது மட்டும் போதாதாம். மேலும் கூடுதல் அடகு வைக்கணும்னு கேட்குறாங்க. மத்த கடன்காரங்களைக் கூட சமாளிக்கலாம் கம்பெனி ஒழுங்கா ஓடினா. விஸ்வேஸ்வரனை நம்பித் தரலாம் எத்தனை கோடி வேணும்னாலும். ஆனா இப்போ யார் நிர்வாகத்தில் ஓடுது கம்பெனி? அவருக்கும் மாலதி & மதிக்கும் என்ன உறவு? அப்படியே உறவுன்னாலும் அவரை நம்பி எங்களால் இந்த அடகை மட்டும் வைத்து தரமுடியாதுன்னு சொல்லிட்டாங்க. அவங்க கடனே 80 கோடி ரூபா இருக்கும். இதுக்கு நாம் தீர்வு காணலன்னா, அடுத்த வாரமே வங்கி நோட்டீஸ் வரப்போகுது நமக்கு" என்றார் அன்புராஜ்.

"சரி. இதுக்கு தீர்வு என்ன செய்யலாம்னு சொல்லுங்க" என்றார் உள்ளூர பயத்துடனும் நடுக்கத்துடனும் மாலதி. "பயப்படவே தேவையில்லம்மா. நம்ம விமல் ஐயாவோட அப்பா ஒரு ஜாமீன் கையெழுத்து மட்டும் போட்டா போதும், எல்லாம் சரியாப் போகும். வங்கி கேட்குற கூடுதல் அடகா அதைக் கொடுக்கலாம். விமல் ஐயா நிர்வாகம் நடத்துறதுக்கும் வங்கிக்கு பிரச்னை இருக்காது. மகனுக்காக அப்பா ஜாமீன் போட்ருக்காருன்னு ஏத்துக்கிடும்" என்றார் அன்புராஜ்.

"அவ்ளோ தானே? நாளைக்கே மாமாகிட்ட நான் கையெழுத்து வாங்கித் தர்றேன்" என்றாள் இதுவரை மௌனமாக இருந்த மதி உற்சாகத்துடன்.

உங்களையும் என்னையும் போலவே விதியும் அவளைப் பார்த்து சிரித்தது.

(பரவும்)

பாகம் - 32

அடுத்த நாள் காலை. தன் மெல்லிய விரல்களால் செல்பேசி எண்களுக்கு ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தாள் மதி. ஒத்தடம் கூட வலித்ததோ என்னவோ? விமலின் செல்பேசி சிணுங்கியது. மதியின் எண்ணைத் திரையில் பார்த்ததும் மதி மயங்கினான் விமல். "ஹாய்! என்ன இது புதுசா இருக்கு! என்னைக்கும் அவுட் கோயிங்ல தான் உன் நம்பர் இருக்கும். இன்னைக்கு என்ன இன் கமிங்க்ல வருது!" என்றான் ஆச்சரியத்துடன். இந்த செல்போன் விசயத்தில் எப்போதும் பெண்கள் மிளகாய் அரைப்பது ஆண்கள் தலையில் தானே! சரி அவர்கள் என்ன பேசினார்கள் என்று கொஞ்சம் ஒட்டுக் கேட்போம்.

"நான் இன்னைக்கு ஒரு சர்ப்ரைஸ் குடுக்கப் போறேன்!" என்று ஆரம்பித்தாள் மதி. "என்ன? இன்னைக்கு உன் பிறந்த நாளோ என் பிறந்த நாளோ கூட இல்லையே" என்றான் விமல். "இன்னைக்கு நான் உன் வீட்டுக்கு வர்றேன்" என்றாள் உண்மையான சந்தோசத்தோடு. அவளுக்கு கையெழுத்து வாங்குவதை விட விமல் வீட்டுக்குப் போகின்றோம் என்பது தான் மனதில் நின்றது! இதைச் சாக்கிட்டு அங்கே போகலாம் என்றே நினைத்தாள். "அப்படியா?! ஆச்சரியமா இருக்கே! இரு அப்பா, அம்மா கிட்ட கேட்டு சொல்றேன்" என்ற விமலைப் பொய்க் கோபத்துடன் "ஆமா, இதுக்குக் கூட அப்பாவைக் கேக்கணுமாக்கும்? அப்புறம் இன்னும் என்னென்னதுக்கெல்லாம் கேப்பியோ?" என்று சலித்துக் கொண்டாள். "நான் வந்து பேசிக்கிறேன் எல்லாம்" என்ற படி அணைத்து விட்டாள் செல்பேசியை.

"இவள் எதற்காக வருகின்றாள்?" என்று நினைத்தான் விமல். ஒரு புறம் சந்தோசம் இருந்தாலும் மறுபுறம் சந்தேகமும் இருந்தது. அன்புராஜ் சொத்து சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்னையையும் இவன் காதுக்கே கொண்டு வராமல் சாமர்த்தியமாக மறைத்திருந்தார்.

அழகேசன் வெளியே காரைத் துடைத்துக் கொண்டிருந்தான். கிட்டத்தட்ட மணப்பெண்ணைப் போல் ஆடம்பரமாக உடை உடுத்தி வெளியே வந்தாள் மதி. அவளது காரில் ஸ்டைலாக ஏறி அமர்ந்து வண்டியைக் கிளப்பினாள். வெளியில் இருந்து விமல் காட்டி இருக்கின்றான் வீட்டை. உள்ளே முதன்முதலில் வரும் போது வலது கால் எடுத்து வைத்து ஆரத்தி எடுத்து சம்பிரதாயப்படி தான் அழைத்து வர வேண்டும் என்பது சரஸ்வதியின் விருப்பம்.

இதோ இப்போது கடைக்குச் சென்று தனுஷ்கோடியைப் பார்ப்பதா அல்லது வீட்டிலா என்று நினைத்தாள். வீட்டில் பார்ப்பது தான் நல்லது என்று முடிவெடுத்தாள். அப்போது தானே விமலும் இருப்பான். காலை தனுஷ்கோடி கடைக்குக் கிளம்பும் முன் பிடித்து விட வேண்டும் என்று காரை விரட்டினாள்.

தனுஷ்கோடியின் பங்களாவுக்குள் சென்றது கார். விறுவிறுவென்று உள்ளே சென்றாள் மதி. அவசரத்தில் வலது காலும் பார்க்க வில்லை! ஆரத்தியும் இல்லை. சாதாரண மதியாகவே நுழைந்தாள்.

வரவேற்பறை இவர்கள் வீட்டு அளவுக்கு பெரியதாக இல்லை தான். ஆனால் அழகாக இருந்தது. ஆங்காங்கே ஓவியங்கள் தொங்க விடப்பட்டு இருந்தது. நடுநாயகமாக ஒரு பெரிய டீபாயும், அதைச் சுற்றி 20 பேர் வரை அமரும் படியான ஐந்து சோபாக்களும் கொண்டு மிதமான விளக்கொளியில் இருந்தது தனுஷ்கோடியின் பங்களாவின் வரவேற்பறை. உள்ளே நுழைந்ததும் யாரோ ஒரு வேலைக்காரர் தான் கண்ணில் பட்டார். யார் வேண்டும் உங்களுக்கு என்று கேட்டார். அவளின் ஆடம்பரமான உடையைப் பார்த்ததும் ஏதோ பெரிய இடம் என்று தெரிந்தது. விஸ்வேஸ்வரன் போல் தனுஷ்கோடி வேலைக்காரர்களை மதிப்பவர் இல்லை. அதனால் இவள் விமலின் வருங்கால மனைவி என்று அந்த வேலைக்காரருக்குத் தெரியவில்லை.

அப்போது தான் அந்தப் பக்கமாக வந்த கமல், ஆச்சரியத்துடன், "அப்பா! இங்கே பாருங்க! யார் வந்திருக்காங்கன்னு" என்றான். வெளியே வந்த தனுஷ்கோடி முகத்தில் ஆச்சரியத்தை வரவழைத்துக் கொண்டார். ஏற்கனவே வருவாள் என்று எதிர்பார்த்தது தான்! ஆனால் இத்தனை சீக்கிரம் அதுவும் இத்தனை ஆடம்பரமாக வருவாள் என்று எதிர்பார்க்கவில்லை. "அடடே! வாம்மா வா! சரஸ்வதி இங்கே பாரேன். உன் மருமக வந்திருக்கா! வர்றேன்னு சொல்லிருந்தா அமர்க்களப்படுத்தி இருக்கலாமே" என்றார் சிரிப்புடன். அப்படியே "விமல், இங்கே வாடா" என்றும் அழைத்தார் மகனை.

சரஸ்வதி, தனுஷ்கோடி, கமல், விமல், மதி அனைவரும் சோபாவில் அமர்ந்திருந்தனர். பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று நினைத்தாள் மதி.

(பரவும்)

பாகம் - 33

"மாமா. அப்பா இறந்ததில் இருந்து மனசுக்கே ரொம்ப சங்கடமா இருக்கு." என்று ஆரம்பித்தாள் மதி. "எங்களுக்கும் தாம்மா. எதிர்பார்க்கவே இல்ல. இப்படி நடக்கும்னு" என்றார் தனுஷ்கோடி. "நல்லவேளையா விமலைக் கை காம்பிச்சிட்டு போய்ட்டார். இல்லாட்டி போனா ரொம்பத் தான் கஷ்டப்பட்டிருப்போம்" என்றாள். "அதுக்கென்னம்மா, நாங்க எதுக்கு இருக்கோம்?" என்றார் அவர். "அம்மா கவலையில் இருந்து மீண்டுட்டாங்களா?" என்றார் உதட்டில் பாசத்துடன். "இல்லை மாமா. அவங்க தான் பாவம். அவங்களைப் பொருத்தவரை உலகமே அப்பா தான். அவரே போனதும் ரொம்பத் தான் துவண்டிட்டாங்க." என்றாள் தயக்கத்துடன்.

"அப்புறம்? சொல்லும்மா" என்று தூண்டினார் தனுஷ்கோடி. "நான் இங்கே திடீர்னு வந்தது உங்களுக்கெல்லாம் ஆச்சரியமாவும் அதிர்ச்சியாவும் இருக்கு. அப்படித்தானே?" என்றாள். "நிச்சயமா! சொல்லாமக் கொள்ளாம திடீர்னு வந்து நின்னதும் ஆச்சரியமாத் தான் இருக்கு." என்றார் தனுஷ்கோடி சந்தேக ரேகை முகத்தில் ஓட. "நேற்று அன்புராஜ் அங்கிள் எங்க வீட்டுக்கு வந்திருந்தார். அவர் சில விஷயங்கள் சொன்னார் அதைச் சொல்லிட்டு அப்படியே விமலையும் பார்த்துட்டுப் போலாம்னு தான் வந்தேன் மாமா" என்றாள் மதி.

"அன்புராஜ்னா உங்க மேனேஜரா?" என்ற படி விமலையும் ஒரு பார்வை தெரியாதது மாதிரி பார்த்தார் தனுஷ்கோடி. விமலும் கண்ணாலேயே ஆமோதித்தான். அவனுக்கும் ஆச்சரியம். தன்னிடம் கூட சொல்லாமல் இந்த அன்புராஜ் எப்படி மதியைப் பார்த்தார் என்று. பாவம், அவன் தந்தையையும் அவர் பார்த்தது அறிந்திருந்தால் நொந்து போயிருப்பான் தானொரு பொம்மையாய் ஆட்டப் படுவதை நினைத்து!

"என்ன சொன்னாருன்னு சொல்லும்மா" என்றார் தனுஷ்கோடி. "அதாவது அப்பா இறந்ததால, அவர் பெயரில் இருந்த சொத்து எங்க பேருக்கு வந்திருச்சாம். அதனால கம்பெனி பேங்க்காரங்க இப்போ எங்களைக் கையெழுத்துப் போடச் சொல்றாங்களாம். அதுவும் போக இப்போ விமல் தான் நிர்வாகம் பாக்குறதால அவர் சைடும் யாராவது ஜாமீன் கையெழுத்துப் போடணுமாம். அது நம்ம மாமாவா இருந்தா ரொம்ப நல்லதுன்னு சொன்னார். அதான் வந்தேன் மாமா" என்றாள் தேவையான தகவலை மட்டும் சொன்ன படி. அதுக்கு வேற யாராவது இளிச்சவாயன் இருப்பான் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்ட தனுஷ்கோடி அவளையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். அப்புறம் தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார். அந்த வார்த்தைகளை இல்லையில்லை மதியின் வாழ்க்கை நடைமுறையையே மாற்றி அமைக்கப் போகும் விதியின் வார்த்தைகளைக் கேட்டதும் மதி மட்டுமல்ல விமலும் தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்!

முதலில் சிரித்துக் கொண்டே ஆரம்பித்த அவரின் பேச்சு கொஞ்சம் கொஞ்சமாகக் கடுமையடைந்து கொண்டே வந்தது! "அம்மா! நீ சொல்றதைக் கேட்டு சிரிப்புத் தான் வருது எனக்கு. எனக்கு முதல்ல கடன் வாங்குறதே புடிக்காது. கேட்டுப் பாரு கமல்கிட்ட. எங்க நகைக் கடைக்குக் கூட கடன் கிடையாது. எங்களுக்குக் கடன் கொடுத்துத் தான் பழக்கம். வாங்கிப் பழக்கமே கிடையாது. இதோ உட்கார்ந்து இருக்கானே கமல். அவன் மனைவி, அதான் எங்க மருமக கேட்டாலே நான் ஜாமீன் கையெழுத்து போட மாட்டேன். அப்படி இருக்குறப்ப எந்த முகத்தை வச்சிக்கிட்டு நீ எங்கிட்ட ஜாமீன் கையெழுத்து கிடைக்கும்னு எதிர்பார்க்குற?" என்றார் எரிச்சலாய்!

"அப்பா!" என்று இடைமறித்த விமலை நோக்கி "நிறுத்துடா விமல். நல்ல வேளை கல்யாணம் நடக்கலன்னு நினைச்சு சந்தோசப் பட்டுக்கிட்டு இருக்கேன் நான். அன்னைக்கு நிச்சயதார்த்தத்துக்கு இவ அப்பன் ஆடும் போதே நினைச்சேன். என்னடா இப்படி அற்பனுக்கு வாழ்வு வந்தா அர்த்த ராத்திரியில குடை புடிக்கிற மாதிரி ஆடுறானேன்னு, அது சரியாத் தான் இருக்கு. ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம் உள்ளே இருக்குறது ஈறும்

பேனுமாம்னு சொன்ன மாதிரி வெளியே பெரிய கம்பெனின்னு பேரு. உள்ள பூரா கட்ட முடியாத படி கடன். எனக்குத் தெரியாதுன்னு நினைச்சியா. நீ போய் என்ன தான் நிர்வாகம் பாக்குறேன்னு தெரியல. இன்னைக்குத் தேதிக்கு மதி கம்பெனி மஞ்ச நோட்டீசு கொடுக்குற நிலமைல இருக்கு. இதுல நான் போய் ஜாமீன் கையெழுத்து போட வேண்டியது தான் பாக்கி" என்றார் கோபமாய் சத்தத்துடன்.

பேச்சு தடம் மாறிப் போவதுடன் மித மிஞ்சிய வருத்தத்தை ஏற்படுத்தியது மதிக்கு. இது வரை இவளை யாரும் இப்படிப் பேசியதில்லை. தன் அப்பாவை ஒருமையில் பேசியதை அவளால் பொறுக்க முடியவில்லை. கண்களில் தன்னிச்சையாய் கண்ணீர் ஓடியது. தான் இங்கு வந்ததே தவறோ என்று நினைத்தாள் முதன்முறையாய். கண்ணீரின் ஊடே விமல் பல பிம்பங்களாய்த் தெரிந்தான். விமல் ஆறுதல் சொல்வது போல் எழுந்தான் சோபாவில் இருந்து. அவனைக் கையமர்த்திய தனுஷ்கோடி, "உட்கார்டா பேசாம. எல்லாம் எனக்குத் தெரியும்" என்றார்.

"என்னென்ன வார்த்தையெல்லாம் பேசீட்டிங்க மாமா. யாரோ உங்களுக்குத் தப்பா சொல்லிருக்காங்க. எங்க அப்பா அப்படி எல்லாம் கிடையாது. எங்க சொத்து பூரா விமலுக்குத் தானே மாமா" என்றாள் கெஞ்சியபடி மதி. "ஆமா. சொத்து. பெரிய சொத்து. எல்லாம் சொத்தை. வெளிய பார்க்க நல்ல விளாம்பழமாத் தான் தெரிஞ்சது. உள்ளே பார்க்கும் போது தானே புழு அரிச்சுப் போனதுன்னு தெரிஞ்சது. நல்ல வேளை இப்பயாவது எனக்குத் தெரிஞ்சது. எனக்குத் தெரிஞ்சவன் பூரா வாய்க்குள்ளே நமட்டுச் சிரிப்பு சிரிப்பான் உன்னை விமலுக்குக் கலியாணம் செஞ்சு வச்சா. இங்க பாரு நான் ஒரு தடவை தான் சொல்லுவேன். இனிமே விமல் உங்க கம்பெனிக்கு வர மாட்டான். உங்களுக்கு நிச்சயம்னு ஒன்னு நடந்ததுன்றதே மறந்திருங்க. தெரிஞ்சதா? டேய் விமல். உனக்கும் தான் சொல்றேன். இப்போ சொடக்கு போட்டா கூட உன்னைக் கட்டிக்க ஆயிரம் பேரு வரிசையில நிப்பா. அவ்ளோ தான் சொல்லுவேன்." என்றார்.

சரஸ்வதிக்கு மனது தாங்கவில்லை. முதலில் இந்தத் திருமணம் வேண்டாம் என்று சொன்னவளும் அவள் தான். ஆனால் இப்போது? "என்னங்க, நிச்சயமும் முடிஞ்சது, நம்ம மகனுக்கும் பிடிச்சிப் போச்சு பொண்ணை. பேசாம ஜாமீன் கையெழுத்து போடாட்டாக் கூட கல்யாணத்த நிறுத்த வேணாங்க" என்றாள் சுரத்தின்றி. "ஆமா, பிச்சைக் காரியக் கல்யாணம் முடிக்கத் தான் இவனைப் பெத்தோமாக்கும்" என்றார் சுடுசொல்லாய் தனுஷ்கோடி. விமல் ஏதேனும் உதவிக்கு வருவான் என்று நினைத்தாள் எதிர்பார்த்தாள் மதி. அவனோ தலை குனிந்த படி அப்பாவின் பேச்சைத் தட்ட முடியாமல் உட்கார்ந்திருந்தான். அப்பாவை எதிர்த்தால் அவ்வளவு தான் என்பதைத் தெரிந்து வைத்திருந்த நல்ல பையனாக இருந்தான்.

"அப்போ என்ன தான் முடிவு" என்றாள் மதி. "முடிவு என்ன முடிவு? சீக்கிரம் விமலோட கல்யாணப் பத்திரிகை அனுப்பி வைக்கிறேன். தயவு செஞ்சு வந்துராதீங்க நீயும் உங்கம்மாவும்" என்றார் தனுஷ்கோடி.

மதிக்கு இப்போது கண்ணீர் உறைந்திருந்தது. நிமிர்ந்து பார்த்தாள். விமல் என்ற ஒருவன் இனி நமக்குக் கிடைக்கமாட்டான் என்ற நினைவே சுட்டெரித்தது. எத்தனை ஆசையுடன் வந்தாள் இங்கே? அவ்வளவும் தவிடு பொடியாகி விட்டதே? இனியும் இவர்களைக் கெஞ்சிப் பிரயோசனமில்லை என்று தெரிந்து விட்டது. மேலும் அவமானப் பட அவள் விரும்பவில்லை. மெல்ல எழுந்தாள் இருக்கையிலிருந்து. திரும்பிக் கூடப் பார்க்கவில்லை யாரையும். வெளியேறும் போது "சனியன் உன்னை விட்டதுன்னு நினைச்சிக்கோடா விமல்" என்ற தனுஷ்கோடியின் குரல் மட்டும் காதில் விழுந்தது.

பௌர்ணமியாய் வந்த மதி அமாவசையாய் திரும்பினாள் வீட்டுக்கு.

(பரவும்)

பாகம் - 34

மதிக்கு இப்போது நடந்த விஷயங்களை அம்மாவிடம் எப்படிச் சொல்வது என்று பயமாக இருந்தது. பாவம் இப்போது தான் அப்பாவை இழந்த அதிர்ச்சியில் இருந்து கொஞ்சமாய் மீண்டு வருகின்றார். இந்த நிலையில் நிச்சயம் முடிந்த தன் பெண்ணுக்கு கல்யாணம் நடக்காது என்று தெரிந்தால் எவ்வளவு வருத்தப் படுவாள் என்று நினைத்துக் கொண்டாள். ஆனால் சொல்லாமலும் இருக்க முடியாதே? வீட்டுக்குச் சென்றதும் ஆர்வமாய் அழைத்தார் மாலதி. வந்ததும் வராததுமாய் பேச ஆரம்பித்தாள் மதி. "அம்மா, அவருக்கு ஜாமீன் கையெழுத்து போட்றது புடிக்காதாம். அதனால முடியாதுன்னு சொல்லிட்டாரு" என்று போட்டு உடைத்து விட்டாள். "அது சரி தாம்மா. நடமுறையில நம்ம கேட்டது தான் தப்பு. கல்யாணம் முடியாம இருக்கும் போதே சம்பந்தி வீட்டுல கேட்டது தப்புத் தான்" என்றார் மாலதி. சம்பந்தியாம் சம்பந்தி என்று நினைத்துக் கொண்டாள் மதி. "அம்மா, எந்தக் கம்பெனியில தன் மருமகனாகப் போறவனை நிர்வாகம் நடத்த வச்சிருக்காங்க? அப்போ மட்டும் இனிச்சிச்சி?" என்றாள் வெடுக்கின்று உதடுகள் துடிக்க. அவள் வீட்டுக்கு வந்ததும் அவளுக்கு அப்பாவின் பேரிலேயே கோபம் வந்தது தன் இயலாமையை நினைத்து. இந்த விமலைத் தனக்குக் காட்டாமலே இருந்திருக்கலாம் என்று நினைத்துக் கொண்டாள். மேலே எதுவும் சொல்லாமல் தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்தி விட்டு பொத்தென்று கட்டிலில் விழுந்தாள். உடல் முழுதும் பாரமாய்த் தெரிந்தது. அன்று முழுதும் யோசித்தாள்.

எப்படியும் இனி இந்தக் கல்யாணம் நடக்கப் போவதில்லை என்ற நினைவில் மேலும் மேலும் கண்ணீர் பெருக்கெடுத்தது. அங்கே விமலுக்கும் அப்படித் தான். அவன் அழ வில்லையே தவிர, மதி இப்போது என்ன செய்வாளோ என்று கவலைப்பட்டுக் கொண்டு இருந்தான். செல்பேசியில் அழைத்துப் பார்ப்போம் என்று அழைத்தான். அவன் எண்ணைப் பார்த்ததும் எப்போதும் ஆர்வத்துடன் எடுக்கும் மதி, இப்போது மௌனமாக காதில் வைத்தாள். எதுவும் பேசவில்லை. "நீ அவசரப்பட்டுட்ட மதி. என்கிட்ட சொல்லிருந்தா நான் ஈசியா அப்பா கிட்ட கையெழுத்து வாங்கிருப்பேன். இல்லாட்டி கூட பேங்க் காரங்ககிட்ட நான் பேசியிருப்பேன். நீ எதுக்கு எங்க வீட்டுக்கு வந்த?" என்றான் நிசமான கவலையுடன். "ஆமா. நான் செஞ்சது பூராவுமே தப்புத் தான். அவ்வளவு பேசினாரே உங்கப்பா. பிச்சைக்காரின்னு அப்போ எங்கே போச்சு உன் பேச்சு? சரி இப்போ என்ன செய்யலாம்னு சொல்ற. நான் இப்பவே உங்கூட சந்திச்சிப் பேசனும் நம்ம எதிர்காலத்தப் பத்தி" என்றாள் மதி. "அய்யோ! எங்க அப்பாவுக்குத் தெரியாமலோ அல்லது எதிர்த்தோ நம்மால எதுவும் செய்ய முடியாது மதி. அத முதல்ல புரிஞ்சிக்கோ. நம்மைக் கொல்லக் கூடத் தயங்க மாட்டாரு எங்கப்பா." என்று பேசிக் கொண்டிருந்த போதே அவன் அறைக்குள் நுழைந்தார் தனுஷ்கோடி. அவனிடம் இருந்து செல்பேசியை வாங்கியவர் "ஏற்கனவே உங்கிட்ட சொல்லிருக்கேன்ல. இனிமே என் மவன் கூட பேசினேன்னு தெரிஞ்சதுன்னாக் கூட எனக்குக் கோவம் வந்திரும். அப்புறம் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. அவ்வளவு தான் சொல்வேன்" என்றார் ஏதோ மதி தான் அவனை அழைத்தது போல். அது தான் விமலிடம் இருந்து கடைசியாக வந்த தொலைபேசி அழைப்பு. அவளும் அதன் பின் அழைத்ததில்லை. அதன் பிறகு அவன் தொடர்புள்ள எந்த எண்ணிலிருந்து அழைப்பு வந்தாலும் அவள் எடுக்க வில்லை.

மறுநாள் அன்புராஜ் அவசர அவசரமாய் அவர்கள் வீட்டுக்கு வந்தார். வந்ததுமே "இனி விமல் ஐயா வரமாட்டாராமே" என்ற படி தான் ஆரம்பித்தார்.

(பரவும்)

பாகம் - 35

மாலதியால் நம்பவே முடியவில்லை. மதியும் இதைப்பற்றிச் சொல்லவில்லையே என்று நினைத்துக் கொண்டே மதியை ஏறிட்டார். மெல்ல மௌனமாக தலையாட்டி அதை ஆமோதித்த மதி, "ஆமாம்மா. இனி மேல் விமல் வர மாட்டாரு. நாம் தான் என்ன செய்றதுன்னு யோசிக்கனும்" என்றாள். "என்ன சொல்ற நீ? நான் சம்பந்திகிட்ட பேசிறேன்" என்ற படி தொலைபேசிக்காக எழுந்தவரிடம் மதி "அம்மா! நீங்க உட்காருங்க என்று அமர்த்தி விட்டு முந்தைய நாள் தனுஷ்கோடி வீட்டில் நடந்ததை ஒவ்வொன்றாய் அன்புராஜையும் வைத்துக் கொண்டே சொல்லி முடித்தாள்." கேட்டதும் அதிர்ச்சியில் உறைந்து விட்டார் மாலதி. அன்புராஜும் உடனே "நல்லவேளைம்மா. அந்த விமல் ஒன்னும் நிர்வாகத்துல பெரிய ஆளெல்லாம் இல்ல. சும்மா மார்க்கெட்டிங் மட்டும் தெரிஞ்சா போதுமா. அவன் சொல்லிக் கடை தெறந்து தான் இப்போ பணம் தரமாட்டேங்குறாங்க வாடிக்கைக்காரங்க:" என்றார் பச்சோந்தியாய்.

"இப்போ என்ன செய்றது?" என்றார் மாலதி. "அம்மா இப்போ உங்க முன்னால ஒரே வழி தான் இருக்கு. எளிதான வழி அதான்னு என் மனசுக்குப் படுது. ஆனா எப்படி சொல்றது தான்னு தெரியல" என்றார். "சும்மா சொல்லுங்க" என்றார் மாலதி. "இன்னைக்கு நம்ம கம்பெனி நிர்வாகம் இடியாப்பத்தை விட குழப்பத்துல சிக்கி இருக்கு. இப்போதைக்கு இதை நடத்துறது மேலும் மேலும் நட்டத்தைத் தான் குடுக்கும். பேசாம கை மாத்தி விட்டுறது தான் நல்லது. வந்த விலைக்கு வித்துட்டாக் கூட உங்க தனிச் சொத்தான இந்த வீடு, கொஞ்சம் நிலபுலன் எல்லாம் தப்பிச்சுக்கும்." என்றார் அன்புராஜ் கொஞ்சம் கூட பிசிறின்றி. "கடன்காரங்க நம்மள அதையும் தரச் சொல்லி கேக்க மாட்டாங்களா?" என்றாள் மதி. இதைத் தான் எதிர்பார்த்திருந்தார் அன்புராஜ். ஏற்கனவே உள்ளதும் போய்விடும் என்ற பயத்தில் இருந்தவர்களிடம் வீடும் சில சொத்தும் மிஞ்சும் என்றதும் நிம்மதி அவர்கள் முகத்தில் வந்ததையும், இனி அவர்களை விற்கச் சம்மதிக்க வைப்பது எளிது என்றும் அவருக்குத் தோன்றியது. "ஐயாவை மாதிரி விவரமானவரு யாரும் கிடையாதும்மா. அவரு தன் வீடு அப்புறம் பல்லாவரம் தோட்டம் இதெல்லாம் பேங்குல அடகு வைக்கல. அதுவே 10 கோடிக்கு மேல தேறும். இப்போ கம்பெனியில வச்சிருக்கிற அடகுக்கு கடன் காரங்க கிட்ட பேசி எவ்வளவு விக்குதோ அந்தத் தொகைக்குள்ளே கடனை ஒத்துக்குற மாதிரி முடிச்சிடலாம். எல்லாம் நம்ம ஐயா மேல பாசம் வைச்சிருக்குறவுங்க தான். நான் சொன்னா கேட்பாங்க. பேங்க் காரங்க கடனை முதல்ல அடைச்சா போதும். மத்தவங்களை சரிக்கட்டிடலாம்." என்றார்.

வெகுநேரம் யோசித்த மாலதி மதி இருவருக்கும் வேறு வழியிருப்பதாய்த் தெரியவில்லை. நிர்வாகத்திற்கு என்று சரியான ஆள் என்று நினைத்திருந்த விமலும் போனதால் கம்பெனியையே விற்று விடலாம் என்றும், பின்னர் பல்லாவரம் தோட்டத்தையும் விற்று வரும் பணத்தை வங்கியில் முதலீடு செய்து சாப்பிட்டுக் கொள்ளலாம் என்றும், வேறு ஒரு நல்ல இடத்தில் திருமணம் செய்து கொள்ளலாம் என்றும் அன்புராஜே யோசனையும் சொன்னார். "சரி" என்று இரண்டே வார்த்தையில் சொன்னார் மாலதி.

அடுத்த ஒரு வாரத்தில் சோற்றில் மறைத்த பூசணியாய் அனைத்து விஷயங்களும் வெளியேற ஆரம்பித்தது. தொழிலாளர்கள் மத்தியில் பெரிய அமளி ஏற்பட்டது. நிர்வாகம் செய்ய ஆளில்லாததால் தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்னும் நிலை ஏற்பட்டது. ஸ்டிரைக்கில் ஈடுபடத் துணிந்தனர் அனைத்து தொழிலாளர்களும். ராமு தாத்தா தான் சமாதானம் செய்து வைத்தார். இன்னும் என்னென்ன நடக்கின்றது என்று பார்ப்போம் என்றும், புதிதாக கம்பெனியை வாங்குபவர்கள் சரியில்லை என்றால் ஸ்டிரைக் செய்யலாம் என்றும் ஒரேயடியாகச் சொல்லி விட்டார்.

இந்தச் சமயத்தில் அழகேசன் மனதில் என்ன ஓடியது என்று பார்ப்போமா? அவனுக்கு மிகுந்த கவலையாய் இருந்தது உண்மை தான். விமல் மதி திருமணம் நின்றதில் உள்ளூர சந்தோசமும் எங்கோ இருந்தது. அவன் எத்தனை தான் அதை அமுக்கியும், காற்று நிறைந்த பந்தை நீருக்குள் அழுத்தினால் மேலெழும்புவதைப் போல் அதுவும் மேலெழும்பியது.

கடைசியாய் முதலாளி சொன்னது நினைவுக்கு வந்தது. "டேய் அழகேசா! நான் என் வாழ்நாளிலேயே செய்யாத ஒரு தப்பைச் செய்திட்டேண்டா" என்றாரே? அது என்ன?

இந்த அன்புராஜை வேலைக்கு வைத்ததா? அளவுக்கு மீறிக் கடன் வாங்கியதா? விமல் சொன்ன படி கடைகள் வைக்கச் சம்மதம் சொன்னதா? விமலுக்கு தன் மகளை நிச்சயம் செய்ததா?

இந்த நான்கில் எதுவாக இருக்கும்? எல்லாமே பெருந்தவறு தான் என்று நினைத்துக் கொண்டான்!

(பரவும்)

பாகம் - 36

மாலதி சரி என்று சொன்னதுமே அன்புராஜ் தான் நினைத்த படி அனைத்தும் நடந்து வருவதை எண்ணி மனம் பூரித்தார். நேராக தனுஷ்கோடியைச் சென்று பார்த்தார். இப்போது விமலும் அவருடனே இருந்தான். இவர்கள் ஏற்கனவே பழக்கமானவர்கள் என்று தெரிந்ததும் ஆச்சரியத்தின் உச்சிக்கே சென்றான். "விமல், இதெல்லாம் செய்யாட்டி நாம பொழைக்கவே முடியாது தெரிஞ்சிக்கோ. இந்த மதி என்னடா மதி? நாம நினைச்சா அந்த ரதியே உனக்கு மனைவியா ஆக்கலாம். அந்த சொத்து முழுசும் நமக்கே எந்தக் கடனும் இல்லாம வரப்போகுது. நீ கேட்ட மாதிரி ஒரு பேக்டரிய, நீ டிரையினிங் எடுத்த பேக்டரியையே உன் பேரில வாங்கப் போறேன் நான்! உனக்குக் கல்யாணப் பரிசுடா" என்றார் தனுஷ்கோடி. விமல் யார்? அவர் பிள்ளை தானே? ரதி என்றதும் அவன் மதி மாறி விட்டதில் ஐயமில்லையே! அவனுக்குத் தேவை இப்போது பேக்டரி! பிசினஸ். அதுவும் வேறு ஒரு புது பெண்ணோடு வருகின்றது என்றால்? நமக்கு எங்கேயோ மச்சம் இருக்கு என்று நினைத்துக் கொண்டான்.

பத்து நாட்களாக வேலை இருந்தது அன்புராஜ்க்கு. பத்திரம் தயார் செய்யவும், கடன் காரர்கள் நாற்பது பேர் இருந்தார்கள்; அவர்கள் அனைவரிடமும் சம்மதம் வாங்கவும் செய்தார். அவர்களும் சரி பணம் வந்தால் போதும் என்றே நினைத்தார்கள். அப்படி ஒரு நினைப்பை எல்லோர் மனதிலும் ஏற்படுத்தி வைத்தார் அன்புராஜ். இப்போது அவர் தோரணையே மாறி இருந்தது. தொலைபேசியில் மதியை அழைத்தார். "எல்லாம் ரெடியா இருக்கு. ஆபீசுக்கு வந்து பத்திரத்தை வாங்கிக்கிறீங்களா. அம்மா கிட்ட கையெழுத்து வாங்கனும்" என்றார். இதுவரை அவர்கள் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்தவர், இப்போது அவளையே அலுவலகத்துக்கு அழைக்கும் அளவுக்கு ஆக்கி வைத்திருந்தார் கைப்பாவையாக.

மதியும் அம்மாவிடம் சொல்லிவிட்டு பத்திரத்தை வாங்கி வருவதற்காக வெளியே வந்தாள். வெளியே வந்ததும் அவள் கண்ணில் பட்டவன் அழகேசன். மொதல்ல இவனத் தூக்கனும் என்று நினைத்துக் கொண்டாள் மனதில். என்ன நினைத்தாளோ அலுவலகத்துக்கு அப்பா காரிலேயே செல்ல வேண்டும் என்ற ஆசை அவளுக்கு. அழகேசனுக்கே ஆச்சரியமாய் இருந்தது. கார்க் கதவைத் திறந்து விட்டான், ஏறி அமர்ந்தாள். "ஆபீசுக்குப் போ" என்றாள். சரியென்று கிளப்பினான் அழகேசன். வழியில் எதுவும் பேசவில்லை இருவரும். கண்ணாடியில் அவள் முகத்தைப் பார்த்தான் அழகேசன். எந்த உணர்ச்சியும் இல்லை அவள் முகத்தில். அலுவலகத்திற்குள் கார் நுழைந்ததுமே பல தொழிலாளர்கள் காரின் அருகில் வந்தனர். அழகேசன் தான் கார்க்கதவைத் திறந்து விட்டது மட்டுமின்றி ஒருவரும் அருகில் வராமல் கண்ணாலே துரத்தினான். விடுவிடுவென்று உள்ளே நுழைந்த மதி நேராக அன்புராஜ் இருந்த அறைக்குச் சென்றாள். ஜனனி இருந்த இடத்திலிருந்தே இதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கும் கம்பெனி விற்கப் படப் போவது தெரிந்திருந்தது. பத்திரத்தை கம்ப்யூட்டரில் அடிக்கச் சொல்லி அன்புராஜ் அவளிடம் தான் கொடுத்தார். அதில் விமலுக்கு விற்கப் போவதாக அறிந்ததும் ரொம்ப ஆச்சரியப் பட்டாள் ஜனனி. ஏதோ பெரிய இடத்து விவகாரம் என்று மட்டும் நினைத்துக் கொண்டாள்.

"நீங்க எங்கே கையெழுத்துப் போடனும், அம்மா எங்கே கையெழுத்துப் போடனும்னு தனித்தனியா நம்பர் போட்டு வச்சிருக்கேன். முதல்ல போட்டுடுங்க. அனேகமா அடுத்த வாரமே பத்திர ஆபீசுல போயும் போடனும்." என்றார் அன்புராஜ். சரியென்று தலையாட்டிய வண்ணம் வாங்கிக் கொண்ட மதி வேறெங்கும் செல்லவில்லை. நேராக திரும்ப காரை நோக்கி வந்தாள்.

மீண்டும் கார் கிளம்பியது. "வீட்டுக்குப் போ" என்று மட்டும் கட்டளையிட்டு விட்டு அமர்ந்து கொண்டாள் மதி. போய்க்கொண்டிருந்த கார் பிரேக் அடித்து நின்றது. கார்க் கதவைத் திறந்து விட்டான் அழகேசன். வீடு வந்து விட்டது என்று நினைத்து இறங்கப் போன மதிக்கு அதிர்ச்சியாக இருந்தது. அது ஒதுக்குப் புறமான ஒரு ரோடு என்றும் அங்கே எப்படி அழகேசன் அழைத்து வந்தான் என்றும் நினைத்தாள் மதி. "இறங்குங்க அம்மா" என்று

வலியுறுத்தினான் அழகேசன். "எதுக்கு? வீட்டுக்குப் போ" என்றாள் மதி. "வீட்டுக்குத் தான் போகப் போறேன். ஆனா அதுக்கு முன்னாடி உங்க கிட்ட கொஞ்சம் பேசனும். பயப்படாதீங்க. முதல்ல இறங்குங்க" என்றான் அழகேசன்.

குழப்பத்துடன் காரை விட்டு இறங்கினாள் மதி.

(பரவும்)

பாகம் - 37

"கண்டவன்லாம் என்னை அதிகாரமாச் சொல்ற அளவுக்கு ஆகிப் போச்சு." என்று எண்ணிக் கொண்டே தான் இறங்கினாள் மதி.

அப்போது காலை 11 மணி இருக்கும். நண்பகல் ஆனாலும் வெயில் அடிக்கவில்லை. மழை வருமோ என்று எண்ணத் தூண்டும் அளவுக்கு மேகம் கருத்திருந்தது. குளிர் காற்று இதமாக வீசிக் கொண்டிருந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாய் சிறு தூறல் விழுந்தது. ஆனால் அதையெல்லாம் ரசிக்கின்ற மனநிலையில் இருவருமே இல்லை.

கார் பேனட் மேல் மெல்ல சாய்ந்து கொண்டே என்ன சொல்ல வேண்டுமோ சொல் என்பது போல் பார்த்தாள் மதி அழகேசனை. பவ்யமாக ஆரம்பித்தான் அழகேசன். "ஏம்மா வெளியே பேசிக்கிறாங்களே அதெல்லாம் உண்மையா?" என்றான். "என்ன பேசிக்கிறாங்க?" என்றாள் மதி. "இல்ல. கம்பெனிய விக்கப் போறதா பேசிக்கிறாங்களே அதான் கேட்டேன்" என்றான். இதெல்லாம் உனக்கு எதுக்கு என்பது போல் எரிச்சலுடன் பார்த்தவள், "ஆமா. இப்ப என்ன அதுக்கு?" என்றாள். "என்னம்மா சொத்தை விற்கிறேன்னு இவ்வளவு சாதாரணமா சொல்றீங்க?". என்றான் "பின்னே என்ன ஊரைக் கூட்டி தண்டோரா போட்டு அழுதுக்கிட்டே சொல்லச் சொல்றியா? எங்க சொத்து நாங்க என்ன வேணா செய்வோம்" என்றாள் மதி. "இல்லம்மா. ஐயா இருந்தா எவ்வளவு வருத்தப் பட்டுப் போயிருப்பாரு" என்றான் உண்மையான கவலையுடன். கிட்டத் தட்ட அவன் கண்களில் நீர் கோர்த்திருந்தது. அவனது கவலையைப் பார்த்ததும் அவளுக்கே ஆச்சரியமாய் இருந்தது. தன் தந்தை இவனை எப்படி வைத்திருந்தால் அவன் இப்படிக் கவலைப் படுவான் என்று நினைத்துக் கொண்டாள். "வேலை போயிருமுன்னு பயப்படுறியா? நானே உனக்கு வேற எங்கேயாவது வேலை வாங்கித் தர்றேன். போதுமா?" என்றாள். "வேலை கிடக்கும்மா வேல. இப்ப சொத்து அவ்வளவையும் விக்கிற அளவுக்கு நெருக்கடி என்ன வந்துச்சி?" என்றான்.

மதிக்கும் யாரிடமாவது தன் உள்ளக் குமுறலைக் கொட்டினால் மனது ஆறும் போல் இருந்தது. மெல்ல ஒவ்வொன்றாய் சொல்ல ஆரம்பித்தாள். "இங்க பாரு. அப்பா இருந்தவரை கம்பெனி எப்படி ஓடிச்சோ தெரியல. கம்பெனி சொத்தை விட அதிகமா அவர் வாங்கின கடன் இருக்கு. இருக்குற கடனைப் பார்த்ததும் விமலோட அப்பா விலகிப் போயிட்டார். விமல் கூட என்னைக் கைவிட்டுட்டாரு" என்று சொல்லும் போதே விம்மினாள். கண்களில் நீர் துளிர்த்தது. சிறிது நேரம் அமைதியாய் இருந்தாள். கன்னத்தில் ஓடிய நீரை கைக்குட்டையால் மெல்லத் துடைத்தாள். "இன்னும் எங்க கிட்ட சொத்து இருந்து என்ன பிரயோசனம்? நீ சொல்ற மாதிரி எல்லா சொத்தையும் விக்கல. கம்பெனிய மட்டும் தான் விக்கிறோம். அதுக்குள்ள கடனை அடைச்சிட்றதா அன்புராஜ் அங்கிள் சொல்லிருக்காரு."

"அன்புராஜ் அங்கிளா?" என்று சந்தேகத்துடன் கேட்டான் அழகேசன். ஆமாம் என்று தலையசைத்தாள் மதி. அவன் தான் விளையாடுறானா என்று யோசிக்க ஆரம்பித்தான் அழகேசன்.

சிறிது நேரம் யோசித்தவன், "நான் ஒரு கேள்வி கேட்டா தப்பா நினைச்சிக்க மாட்டீங்கல்ல" என்றான். இதற்குள் சகஜமாய் அவனுடன் பேச ஆரம்பித்திருந்தாள் மதி. "கேளு" என்றாள். "அந்த அன்புராஜை நம்பி இவ்வளவு பெரிய பொறுப்பை எப்படி ஒப்படைச்சீங்க?" என்றான். "எங்கப்பாவே அவர் கிட்டத் தான் அத்தனை பொறுப்பையும் கொடுத்திருந்தாரு. அதான் இதையும் அவர் கிட்ட ஒப்படைச்சோம். எங்க பேமிலிக்கே வெல்விஷர் அவர் தான்." என்றாள்.

"சரி. மொத்தம் எவ்வளவு ரூபாய்க்கு கம்பெனி கை மாறுதுன்னு தெரிஞ்சிக்கலாமா?" என்றான். "நூறு கோடி" என்றாள் மதி. "வெறும் 100 கோடியா?" என்றான் ஆச்சரியமாய். "ஏன்? அவ்வளவுக்குத் தான் போகும்னு அவர் சொன்னார்." என்றாள். "எவ்வளவு பெரிய விஷயத்தை எவ்வளவு எளிதாச் சொல்றீங்க நீங்க?" என்றான் ஆத்திரத்துடன். "உங்க கம்பெனிக்கு முதல்ல எங்கெங்கே சொத்து இருக்குன்னு தெரியுமா? யாரு யாரு கடன்காரங்கன்ற லிஸ்ட் இருக்கா? அதெல்லாம் எப்போ வாங்கினது? யாருக்கு விக்கப் போறீங்க? அவங்க இந்தக் கம்பெனிய என்ன செய்யப் போறாங்க? கடன் பட்ட கம்பெனிய வாங்குறதுல அவங்களுக்கு என்ன லாபம்?" என்றான் படபடவென.

இப்போதும் மதி கலங்கவில்லை. அந்தளவுக்கு அன்புராஜை அவள் நம்பினாள். ஏதோ அன்புராஜைப் பிடிக்காமல் இவளைக் குழப்புகின்றான் என்றே அவள் நினைத்தாள். அவன் கேட்ட கேள்விக்கெல்லாம் ஒவ்வொன்றாய் பதில் சொல்ல ஆரம்பித்தாள்.

அன்புராஜுக்கு பிடித்தது வினை.

(பரவும்)

பாகம் - 38

"நான் தான் ஏற்கனவே சொன்னேனே. கம்பெனிய மட்டும் தான் விக்கிறோம்னு. அதனால பேக்டரியும் ஆபீஸ் நிலத்தையும் மொத்தமா அதோட இயந்திரங்கள், கம்பெனிக்கு வர வேண்டிய பணம் எல்லாத்தையும் சேர்த்து தான் இந்த விலை. உனக்கே தெரியும்ல சொத்து பெரிசாக பெரிசாக அதை வாங்க ஆள் தேட்றதும் கஷ்டம். விலை கிடைக்கிறதும் கஷ்டம். இருக்குறதுலேயே பெரிய கடன் பேங்க்காரங்க தான். அவங்க தான் கடனுக்கு ஈடாக் கொடுத்த சொத்து போதாது அது இதுன்னு சொல்லி கம்பெனியவே விக்க வச்சவங்க. அவங்க கடன் மட்டுமே 80 கோடி இருக்கும்னு அங்கிள் சொன்னாரு. மீதிக் கடன் காரங்கள்ல என் நிச்சயதார்த்தத்துக்கு வாங்கியது, அப்புறம் கொஞ்சம் கொஞ்சமா அப்பா வாங்கியது, ரா மெட்டீரியல் காரங்களுக்கு பணம் கொடுக்க வேண்டியது, தொழிலாளிகளுக்குக் குடுக்க வேண்டிய பணம்னு 60 கோடி வரைக்கும் இருக்குறதா அவர் சொன்னாரு. யாருக்கு விக்கப் போறேன்னு எனக்குத் தெரியல. ஆனா கையெழுத்துப் போடும் போது தெரிஞ்சி போகும்ல. அது மட்டுமில்ல மதி கம்பெனி அப்டியே தொடர்ந்து நடக்கும்னும், தொழிலாளர்களுக்கு எந்தப் பிரச்னையும் இருக்காதுன்னும் உறுதி சொல்லிருக்கார். அதனால தான் தைரியமா சம்மதிச்சோம்." என்றாள் விட்டுக் கொடுக்காமல்.

"சரி. நூறு கோடியில 80 கோடி பேங்க் கடனுக்கு மொத்தத் தொகையும் கொடுக்கணும்ல? மீதி இருக்குற 20 கோடியில எப்படி 60 கோடி கடன் அடைக்க முடியும்?" என்றான் அழகேசன். "அதுக்கு தான் தெய்வம் மாதிரி அன்புராஜ் அங்கிள் ஹெல்ப் பண்றதா சொல்லிருக்கார். ஒவ்வொரு கடன்காரங்க கிட்டயும் பேசி சமாளிக்கிறதா." இதைக் கேட்டதும் சிரித்தே விட்டான் அழகேசன். "நீங்க சொல்றது வேடிக்கையா உங்களுக்கே தெரியல? யாராவது மேனேஜர் சொன்னா கொடுத்த கடன் காரங்கள்லாம் எனக்கு 1 ரூபாய்க்கு 33 பைசா திருப்பிக் கொடுத்தா போதும்னு சொன்னா அப்புறம் இன்னைக்குப் பெய்ற மழையில 10 அடிக்கு மேல வெள்ளம் ஓடணும். அதுவும் ஒரு ரூபா இரண்டு ரூபாயா? 60 கோடி. தொழிலாளர்களுக்குக் குடுக்க வேண்டிய தொகையும் சேர்த்துன்னு சொல்றீங்களே. எந்தத் தொழிலாளர் கிட்ட அவர் கேட்டாரு? உங்க ரூபாயில 1 ரூபாய்க்கு 33 பைசா தான் குடுப்போம்னு? அதுக்கு மிச்ச கடன்காரங்க ஒத்துக்கிட்டாலும் தொழிலாளர்கள் எப்படி ஒத்துக்குவாங்க?" என்றான் அவளது அறியாமையை வியந்து.

மதி யோசிக்க ஆரம்பித்திருந்தாள். "அட! இது எப்படி எனக்குத் தெரியாமல் போயிற்று. முதல் வேலையா கடன்காரங்க லிஸ்டை வாங்கிட்றேன்" என்றாள் அவள். "ஒரு மேனேஜர் சொன்னா கடன்காரங்க எல்லாம் இவ்வளவு கேட்டுக்குவாங்கன்னா, முதலாளி நீங்க கேட்டா கடனே வேண்டாம்னு சொல்லிருவாங்க போல இருக்கே?" என்றான் அழகேசன்.

"சரி இப்போ என்னை என்ன செய்யச் சொல்ற?" என்றாள் மதி குழப்பத்துடன். "நீங்க முதல்ல நிறுத்தனும்" என்றான் அழகேசன். "எதை? கம்பெனியை விக்குறதையா?" என்றாள் மதி.

"இல்லை" என்றான் ஆணித்தரமான குரலில்.

"பின்னே எதை?" என்றாள் மேலும் குழப்பத்துடன்.

(பரவும்)

பாகம் - 39.

"நீங்க இப்படி யார் சொன்னாலும் நம்புறதை முதல்ல நிறுத்தனும்." என்று புதிர் போட்டான் அழகேசன். "அன்புராஜ் சொன்னா உடனே அவர் சொல்ற படி கேக்குறதும், அப்புறம் நான் ஏதாவது சொன்னா உடனே அது படி கேக்குறதுன்னு இருக்கீங்க பாருங்க. அதைத்தான் நிறுத்தனும்னு சொல்றேன். நீங்களா யோசிக்க மாட்டீங்களா? விக்கப் போறது ரோட்ல போற யாரோ ஒருத்தரோட சொத்து இல்ல. உங்க சொத்து. உங்க அப்பா என்ன பரம்பரை பணக்காரரா? இல்லையே! தன் ரத்தத்தை வியர்வையா சிந்தி எப்படில்லாம் கஷ்டப்பட்டு இந்த சொத்தை சேர்த்திருப்பாருன்னு தெரிஞ்சா நீங்க இப்படி செய்ய மாட்டீங்க. அவரு உங்க மேலயும் கம்பெனி மேலயும் எவ்வளவு பாசம் வச்சிருந்தாரு? பத்து வார்த்தை பேசினாருன்னா அதுல அஞ்சு வார்த்த உங்களைப் பத்தித் தான் இருக்கும். மீதி அஞ்சு வார்த்த கம்பெனியப் பத்தித் தான் இருக்கும். இப்போ நீங்க செய்ற இந்தக் காரியத்தால ரெண்டுமே பாதிக்கப் படப் போகுதுன்னு தெரியலியா?" என்றான் குமுறலுடன்.

அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு அப்பாவின் நினைவு வந்து விட்டது. கண்ணீர் தாரை தாரையாக ஓடியது. கொஞ்ச நேரம் இருவரும் எதுவும் பேசவில்லை. "நீ சொல்றது எதையுமே நான் மறுக்கல. எல்லாம் என் தலை விதி. அப்பா திடீர்னு இப்படிப் போய்ச் சேருவாருன்னு கனவுல கூட நினைக்கல. என் வாழ்க்கையில அவர் கை நீட்டிக் காம்பிச்ச விமலும் அவரை மாதிரியே கானல் நீராப் போயிட்டாரு. எல்லாத்துக்கும் காரணம் இந்தச் சொத்து தானேன்னு நினைக்கத் தோணுது. சொத்து இல்லாட்டா உன்னை மாதிரி நிம்மதியா சந்தோசமா இருக்கலாம்ல." என்றாள் மதி.

"நீங்க சொல்றது வாஸ்தவம் தான். சொத்து இல்லாட்ட நிம்மதி தான். ஆனா வாழ்க்கையில ஏதோ பொறந்தோம், இருந்தோம் செத்தோம்னு இருந்தா அது என்னங்க வாழ்க்கை. எல்லாருக்கும் அவங்கவங்க சக்திக்குத் தகுந்தாற் போல் பிரச்னை இருக்கத் தான் செய்யும். விரலுக்குத் தகுந்த வீக்கம். பிரச்னை உங்களுக்குப் பெரிசா இருக்குன்னா நீங்க பெரிய ஆளுன்னு அர்த்தம்!

"சரி. சொத்தை விக்க வேணாமான்னு கேட்டாலும் இல்லைன்னு சொல்ற. அன்புராஜையும் உன்னையும் நம்பக் கூடாதுன்னும் சொல்ற. நானோ சின்னப் பொண்ணு. எங்கம்மாவாலயும் எதுவும் முடியாது. நெருங்குன சொந்தமும் எதுவும் கிடையாது. நாங்க இப்போ என்ன செய்றது?" என்றாள் இன்னும் குழப்பம் தெளியாமல் மதி.

"நீங்க கேட்ட எல்லாமே தப்புத் தான்!" என்றான் அழகேசன். இவன் என்ன இத்தனை சாமர்த்தியமாப் பேசுறானே என்று நினைத்தாள் மதி. "எல்லாமே தப்புத் தான்னா?" என்றாள். "பின்ன என்னங்க? நான் முதல்ல இருந்தே சொத்தை விக்கக் கூடாதுன்னு தான் மறைமுகமா சொல்லிட்டு வர்றேன். அப்புறம் நம்பக் கூடாதுன்னு சொன்னதுலயும் ஒரு விஷயம் இருக்கு. அதாவது நம்பிக்கை தாங்க வாழ்க்கை. அதுக்காக எல்லாத்தையும் நம்பிடக் கூடாதுன்னு சொல்ல வந்தேன். நம்புறவங்களை நம்புற விஷயத்துக்கு நம்பித் தான் ஆகணும். நம்பிட்டு சந்தேகப்பட்றத விட, சந்தேகப் பட்டு நம்புறது எவ்வளவோ மேல். அப்புறம் இந்த விஷயம் நடக்குறதால யார் யாருக்கெல்லாம் ஆதாயம் கிடைக்குதுன்னு பார்க்கணும். இப்போ உதாரணமா உங்க சொத்தை விக்குறதுன்னால எனக்கு ஏதாவது ஆதாயம் கிடைக்க வாய்ப்பிருக்கா? ஆனா அன்புராஜுக்கு வாய்ப்பு இருக்கு. ஏன்னா அவர் விளையாட்றது கோடியில. அதுவும் கடன் காரங்க இவர் சொல்றதைக் கேக்குற அளவுக்கு இருக்காங்கன்னா, அதுல பாதி இவரே ஏன் செட்டப் செய்தவங்களா இருக்கக் கூடாது? அதுக்கு வாய்ப்பு இருக்குல்ல!" என்றான் அவள் முகம் பார்த்து. அவன் சொல்வதை எல்லாம் ஆச்சரியமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் மதி.

"அப்புறம் என்ன சொன்னீங்க? நீங்க சின்னப் பொண்ணுன்னா? அது சரி. நிர்வாகத்துக்கும் வயசுக்கும் சம்பந்தமே கிடையாது. அத முதல்ல தெரிஞ்சிக்கோங்க. இந்த மாதிரி எனக்கு ஒரு வாய்ப்பு மட்டும் வந்துச்சின்னு வைங்க சும்மா பிச்சு உதறிருவேன்! இளங்கன்று பயமறியாதுன்னு சொல்வாங்க. உங்க அப்பா நல்லா அஸ்திவாரம் போட்டு கட்டிடமும் கட்டி வைத்திருக்காரு. அந்த வீட்டை ஒழுங்கா பார்த்துக்கிட்டு அதுல குடித்தனம் செய்றதுக்கு இவ்வளவு மலைக்கிறீங்களே. உங்க அப்பா அவர் கம்பெனிய ஆரம்பிக்கும் போது இப்படி எல்லாம் நினைச்சிருந்தா இவ்வளவு பெரிசா கம்பெனி வளர்ந்திருக்குமா? அம்மாவால எதுவும் முடியாதுன்னு சொல்லாதீங்க. அம்மா உங்களோட இருக்குறதே பெரிசு இல்லையா. எங்களை மாதிரி இந்தச் சின்ன வயசிலேயே அம்மாவை இழந்தவங்களுக்குத் தான் அம்மாவோட பெருமையெல்லாம் தெரியும் போல. அவங்க உங்க கூட இருக்காங்கன்ற தைரியமே எல்லாம் செய்ய வைக்குமே. நெருங்குன சொந்தம் பத்திச் சொன்னீங்க. உங்களுக்கு எவ்வளவு சொந்தம் இருக்குன்னு தெரியுமா?" என்றான் வேகமாக.

தன்னம்பிக்கையூட்டும் அவனது வார்த்தைகள் ஒவ்வொன்றும் இடியாய் அவளுள் இறங்கியது.

(பரவும்)

பாகம் - 40

"நீ சொல்றது எல்லாம் எனக்கு ரொம்பப் புதுசா இருக்கு" என்று சொன்னாள் மதி.

"புதுசு எதுவும் இல்லம்மா. உங்களுக்குச் சொந்தமே கிடையாதுன்னு சொன்னீங்க பாருங்க. அதான் ஆச்சரியமா இருக்கு. பொதுவா பணக்காரங்களுக்கு அதிக சொந்த பந்தங்கள் இருப்பாங்க. உங்க அப்பா அப்படி யாரையும் நெருங்க விடலையா இல்ல உண்மையாவே சொந்த பந்தம் இல்லையான்னு தெரியல. ஆனா உங்க அப்பாவைச் சொந்தமாக் கொண்டவங்க நிறைய பேரு இருக்காங்க." என்றான் மீண்டும் புதிர் போடும் விதமாக.

"யார் அவங்க?" என்றாள் மதி. "ஒரு உண்மை சொல்லட்டுமா? உங்க அப்பாவுக்கு உங்க குடும்பமும் ஒன்னு தான் மதி கம்பெனியும் ஒன்னு தான். கம்பெனின்றது ஒரு உயிரில்லா ஜடம்னு நினைச்சீங்கன்னா அதை முதல்ல மறந்துருங்க. ஒரு கம்பெனி அல்லது நிறுவனம்னா முதல்ல சொல்றது அதுல இருக்குற மனுசங்க தான். அப்புறம் அந்த மனுசங்களுக்கிடையே இருக்குற உறவு அல்லது நிர்வாகம் செய்முறை. அப்புறம் உபயோகிக்கிற இயந்திரங்கள். அப்புறம் அந்த இயந்திரங்கள்ல உபயோகப்பட்ற மூலப் பொருட்கள். அப்புறம் தான் பணம் இதைத் தான் நிர்வாகத்துல (Men, methods, machines, materials, money) 5 M என்று சொல்வாங்கன்னு படிச்சிருக்கேன் நான் காலேஜ் போன கொஞ்ச நாள்ல. இதுல பணம் என்கின்ற ஒன்னு கடைசியா வர்றது. முதல்ல வர்ற மனிதர்கள் உங்க கம்பெனிக்கு எப்படிப் பட்டவங்க வாய்ச்சிருக்காங்க தெரியுமா? அவங்கள எல்லாம் உங்கப்பா ஒரே குடும்பமா எப்படி நடத்துனாரு? அவங்களோட நல்லது பொல்லதுக்கு எல்லாம் முன்னால நின்னு எப்படி அவங்கள்ல ஒருத்தரா நடத்தி வச்சாருன்னு தெரியுமா? இன்னைக்கும் கம்பெனியில வேலை நிறுத்தம் இல்லாம ஓடிக்கிட்டு இருக்குன்னா அதுக்கு உங்கப்பாவோட அன்பு தான் காரணம். அவரும் ராமு தாத்தாவும் சேர்ந்து அத்தனை பேரையும் கட்டி வைச்சிருந்தாங்க அன்பால. ஏங்க, தொழிலாளர்களுக்கு ஒன்னுன்னா உங்கப்பா ஓடிப் போய் நின்னாருல்ல. அது போல உங்களுக்கு ஒன்னுன்னா தொழிலாளருங்க ஓடி வந்து நிக்க மாட்டாங்கன்னு நினைச்சீங்களா? அந்த அளவுக்கு நன்றி கெட்ட ஜென்மங்களா அவுங்க? நீங்க பணக்காரங்க. நாங்க ஏழைங்க. அவ்வளவு தான் வித்தியாசம். எல்லாருக்கும் ஒரு உயிர் தான். எல்லாருக்கும் ஒரு மனசு தான். எல்லாருக்கும் ஒரே மானம் தான். நீங்க என்னங்க கடனை அடைக்கிறது? உங்க கம்பெனியில இருக்குற 300 தொழிலாளிங்க வீட்டில இருந்து ஆளுக்கு 10 பவுன் நகையை வித்தாக்க 3000 பவுன் நகை சேரும். தெரிஞ்சிக்கோங்க. அதுவே 3 கோடி மதிப்பு இல்லையா? நீங்க தொழிலாளிங்களுக்கு எதுவும் தரவேண்டியது இல்ல. ஆனா அவங்க தரத் தயாரா இருக்காங்க. நாளைக்கே வந்து உங்க கால்ல கொட்டச் சொல்லவா?" என்றான் உணர்ச்சிப் பெருக்குடன்.

அவன் சொன்னதை அதே உணர்ச்சிப் பெருக்குடன் கேட்டுக் கொன்டிருந்தாள் மதி. உடல் நடுக்கமெடுத்தது அவளுக்கு. எத்தனை பெரிய காரியம் செய்யத் துணிந்தோம் என்று நினைத்துக் கொண்டாள். "நீ சொல்றது எல்லாமே ஏதோ மிதக்குற மாதிரி என்னைச் செய்ய வைக்குது. நாங்க தொழிலாளிக கிட்ட இருந்து பணம் பிடுங்கி வாழ வேண்டியதில்லை. அவங்க அன்பே எங்களுக்குப் போதும். ஏதோ நமக்கு வாழ்க்கை தர்ற முதலாளி குடும்பமும் நல்லா இருக்கட்டும்னு அவங்க வாழ்த்துறது எங்களுக்குப் போதும். அவங்க அப்படி வாழ்த்திருந்தா எங்க குடும்பம் இப்படி ஆயிருக்குமா?" என்றாள் வருத்தத்துடன்.

"ஹூம். நடக்குறதெல்லாம் நம்ம கிட்டக் கேட்டா நடக்குது? அதது பாட்டுக்கு நடக்குது. ஆனா ஒன்னு மட்டும் நிச்சயமா எனக்குத் தெரியுங்க. நீங்க கம்பெனிய வித்தீங்கன்னு வைங்க கட்டாயம் கம்பெனி மதி கம்பெனியா இருக்காது. அப்புறம் இந்தத் தொழிலாளர்கள் எல்லாரும் இதே மாதிரி வேலை செய்வாங்கன்னும் சொல்ல முடியாது. முதல்ல கம்பெனிக்கு ஆட்களை விட, அங்கே வேலை பார்க்கிற சூழ்நிலை இருக்கனும். அதைத் தான் உங்க அப்பா ஏற்படுத்திக் கொடுத்தாரு. அந்தச் சூழ்நிலை நீங்க சொத்தை இன்னொரு ஆளுக்கு விற்கும் போது

மொத்தமா நிலைகுலையும். நீங்க உங்க குடும்பத்துக்கு மட்டும் முடிவு எடுக்கல. உங்கள அண்டி இருக்குற 300 குடும்பங்களுக்கும் சேர்த்துத் தான் முடிவு எடுக்கிறீங்கன்றதப் புரிஞ்சிக்கிட்டாலே போதும்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே மழை சடச்சடவென்று பொழிய ஆரம்பித்தது.

இருவரும் காருக்குள் ஏறினர்.

(பரவும்)

பாகம் - 41

வெளியே மழை கொட்டிக் கொண்டு இருந்தது. உள்ளே இதமான ஏசி குளிருடன், வண்டி ஓடும் சத்தமே கேட்காமல் சாலையில் மெதுவாய் வழுக்கிக் கொண்டு சென்று கொண்டிருந்தது கார். மதி பலத்த யோசனையில் ஆழ்ந்து விட்டாள். "இவன் என்ன? யாரையும் நம்பாதே என்கின்றானே! அப்போ இவன் சொல்வதை மட்டும் எப்படி நம்புவது?" என்று நினைத்துக் கொண்டாள். கையில் இருந்த செல்பேசியைப் பார்த்தவள் அதில் முதல் பெயராய் இருக்கும் விமலுடன் பேசினால் என்ன? என்று நினைத்தாள். அவனிடம் யோசனை கேட்கலாமே என்றும் எண்ணம் தோன்றியது. சரி. இப்போது வேண்டாம். வீட்டுக்குப் போனதும் பேசிக் கொள்வோம் என்று நினைத்தவள் அப்படியே தனுஷ்கோடி சொன்னதையும் நினைத்துக் கொண்டாள். பெரிய வில்லங்கமான ஆள் தான். இனி அவர்கள் வீட்டுக்கு மருமகளாய்ப் போவோம் என்று எண்ணிப் பார்க்கவாவது முடியுமா? என்றும் நினைத்தாள். கண்களில் நீர் கோர்க்க ஆரம்பித்தது. வீட்டுக்குச் சென்ற பின்னும் வெகு நேரம் தூக்கமின்றி விழித்திருந்தாள். சாப்பிடவும் பிடிக்கவில்லை. என்ன வாழ்க்கை இது? என்று நினைத்தாள்.

மெல்ல விடிந்திருந்தது மறுநாள் காலை. இன்று மதியின் மனதில் கொஞ்சம் தெளிவும் திடமும் உண்டாகியிருந்தது. நியூஸ் பேப்பரைத் தற்செயலாய் புரட்டிக் கொண்டிருந்தாள். தன் கல்லூரித் தோழிகளிடம் எல்லாம் செய்தித்தாள்களில் வந்த மதி நிறுவன விளம்பரங்களைக் காட்டி பெருமைப்பட்டுக் கொண்டது ஞாபகத்துக்கு வந்தது. எந்த ஒரு நிறுவனமும் ஒரு மனிதன் போல் தானோ? அதற்கும் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு அனைத்தும் உண்டு போலும் என்று நினைத்துக் கொண்டாள். அவள் சோகமாய் உட்கார்ந்திருந்ததைப் பார்த்த மாலதி அருகில் வந்து அமர்ந்தார். "என்னம்மா யோசனையாய் இருக்க?" என்றார். அவரிடம் அழகேசனுடன் பேசிய அனைத்தையும் சொன்னாள் மதி. பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த மாலதி கடைசியில் ஒரு பெருமூச்சை விட்டுக் கொண்டு "எல்லாம் ஆண்டவன் சித்தப் படி நடக்குது. நாமென்ன செய்ய முடியும் இதுல? உங்கப்பா இருந்திருந்தார்னா சரியா இருந்திருக்கும். உனக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைச்சிக் கொடுத்துட்டா நிம்மதியா கண்ணை மூடலாம்னு தான் நினைச்சேன். அதுவும் நடக்கல. இந்த உலகத்துல யாரை நம்புறது யாரை நம்பாம இருக்குறதுங்குறதே தெரியல. எதுவானாலும் யோசிச்சு முடிவெடு. அம்மா எப்பவும் உன் பக்கம் தான்" என்று சோகமும் ஊக்கமும் கலந்து கொடுத்த அம்மாவைப் பார்த்தபடி இருந்தாள் மதி.

இன்று என்ன செய்ய வேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டாள். முதலில் கடன்காரர்கள் பற்றிய தகவலும், யார் வாங்கப் போகின்றார்கள் என்ற தகவலும் அன்புராஜிடம் கேட்க வேண்டும். கையெழுத்துப் போடச் சொல்லிக் கொடுத்த விற்பனைப் பத்திரத்தில் கூட யாருக்கு விற்கப் போகின்றோம் என்பது வெற்றிடமாய் இருந்தது அவளது சந்தேகத்தை அதிகப் படுத்தியது. அப்புறம் சில தொழிலாளர்களையும் சந்தித்துப் பேச வேண்டும். சொத்துக்களின் மொத்த பட்டியல் வாங்க வேண்டும். முடிந்தால் வங்கிக்குப் போய் அங்கும் கடன் விபரமாய் பேச வேண்டும். இந்த விபரங்களைத் தெரிந்து கொண்டு பின்னர் முடிவெடுப்போம் என்று நினைத்துக் கொண்டாள். ஒரு நாளின் செயல்பாடுகளைத் திட்டமிட ஆரம்பித்ததுமே அன்றைய நேரம் மிக அதிகமாக இருப்பது போலவும் போனதும் எதை முதலில் முடிக்க வேண்டும் யாரிடம் என்ன கேட்கலாம் என்று தனக்குத் தானே மூளை கணக்குப் போடுவதைப் பார்த்ததும் ஆச்சரியமடைந்தாள்!

இதோ இன்றும் அழகேசனுடன் காரில் கிளம்பி விட்டாள். அவளது முகத்தில் இப்போது கொஞ்சம் புன்முறுவல் ஆக்கிரமித்திருந்தது. அவளும் அவள் தந்தை உட்காரும் இடமான பின் சிட்டில் டிரைவருக்கு எதிர்புறம் இருந்த இடது புற சீட்டில் உட்கார்ந்தது அவனுக்கு வசதியாகி விட்டது. எப்போதும் விஸ்வேஸ்வரன் அங்கே தான் அமருவார். முதலாளிக்கேயான சீட்டு போலும் அது. அங்கு அமர்ந்தால் ஒரு பாதுகாப்பு உணர்வு ஏற்படும். விபத்து நடந்தால் அதிகம் பாதிக்காத பகுதி அதுவாகத் தான் இருக்கும். மேலும் டிரைவர் என்ன செய்கின்றான் என்று நோட்டமிடவும் சிறந்த இடம் அது. டிரைவருக்கும் அது சௌகரியமானது தான். ஏனென்றால்

கண்ணாடியைப் பார்த்தாலே அவர்களுடன் நேருக்கு நேர் பேசுவது போல் பேசிக் கொண்டே செல்லலாம்! முதலாளியின் முக பாவனை தெரிந்து கொண்டு அது படி வண்டி ஓட்டலாம்! அங்கேயே மதியும் உட்கார்ந்ததால் அவள் முகத்தை அவ்வப்போது பார்த்துக் கொண்டே வண்டியோட்டிய அழகேசனுக்கு அவள் நடவடிக்கையில் தோன்றிய மாற்றங்கள் மகிழ்ச்சியைக் கொடுத்தது என்றே சொல்ல வேண்டும்.

கம்பெனிக்குள் கார் நுழைந்தது. காரை விட்டு இறங்கிய மதியின் கையில் நேற்று வாங்கிச் சென்ற விற்பனைப் பத்திரங்கள் ஏதும் இல்லை. வெறுங்கையுடன் கம்பெனிக்குள் சென்றவள் அன்புராஜின் அறையைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. நேராக அவளது தந்தையின் அறைக்குள் சென்றாள். சுத்தமாக இருந்த அந்த அறையை நோட்டம் விட்டுக் கொண்டு அவர் அமர்ந்திருந்த நாற்காலியை மெல்லக் கை வைத்து சுற்றிக் கொண்டே அருகில் இருந்த கண்ணாடி ஜன்னலின் வழியே தெரிந்த மதி நிறுவனத் தொழிற்சாலையைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது தான் அன்புராஜ் இவள் வந்ததை அறிந்து கொண்டு உள்ளே நுழைந்தார்.

(பரவும்)

பாகம் - 42

உள்ளே நுழைந்த அன்புராஜிற்கு எப்படி இருந்ததோ இல்லையோ மதியின் யோசனைகள் அனைத்தும் எப்படிக் கேட்பது என்றே ஓடிக் கொண்டிருந்தது. அன்புராஜ் மனதிலும் மதியின் நடத்தையில் கொஞ்சம் கலக்கம் ஏற்பட்டு இருந்தது. ஆனால் அவர் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், "என்ன மதி? கையெழுத்துப் போட்டாச்சா? அடுத்த வாரம் பதிய வேண்டும்" என்றார். ஒரு நிமிடம் தீர்க்கமாக அவரைப் பார்த்த மதி மெல்ல ஆரம்பித்தாள். "நேத்து அம்மா கிட்டக் காட்டினேன் சார். ரொம்ப சந்தோசப் பட்டாங்க. அதுக்குள்ள விக்குறதுக்கு ஆள் கிடைச்சாச்சான்னு கேட்டாங்க." என்ற படி அவரது முக மாற்றத்தைக் கணிக்க ஆரம்பித்தாள். மனதுக்குள் கொஞ்சம் நிம்மதியடைந்த அன்புராஜ், "ஆமாம்மா. சீக்கிரம் வித்தாத் தான வட்டியில இருந்து தப்பிக்க முடியும். இந்த வட்டி இருக்கே ரொம்ப மோசமானது. பொங்கல் தீபாவளிக்குக் கூட லீவு இருக்கும். ஆனால் இந்த வட்டிக்கு? சூரியன் எந்திரிச்சு படுத்தா மீட்டர் ஓட ஆரம்பிச்சிரும். அதனால் எவ்வளவு சீக்கிரம் முடிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கு லாபம்னு நினைச்சிக்கோங்க" என்றார்.

"ஆமா, விக்கிற சொத்து எல்லாமே தனித்தனியா வித்தா எவ்வளவுக்கு விக்கலாம்?" என்று அடுத்த குண்டை வீசினாள் மது. "தனித்தனியா வித்தா 150 கோடிக்குக் கூட போகும்மா. ஆனா நாம விக்கனும்னு போகும் போது வாங்குறவங்க தயாராய் இருக்கணுமே. அதுவும் போக, இந்த பேக்டரி இடத்தைக் கூறு போட்டு விக்க முடியாது. அதனால வாங்குறவங்களுக்கு பிரயோசனம் இருக்காது. நீங்க ஏன் கவலைப் படுறீங்க. அதெல்லாம் நல்ல விலைக்குத் தான் நாம விக்கிறோம்." இப்ப எதுக்கு இந்தக் கேள்வி வந்தது என்று எண்ணிக் கொண்டே பதில் கொடுத்தார் அன்புராஜ். "சரி சார். நாம கையெழுத்துப் போட்றதே எல்லாமே எழுத்துப் பூர்வமா இருந்தாத் தான் பின்னால பிரச்னை இருக்காதுன்றதுக்குத் தானே?" என்ற கேள்விக்கணை வீசினாள் மதி. புதைகுழி என்று தெரியாமலேயே காலை விட்டார் அன்புராஜ் அந்தக் கேள்வியில். "ஆமாம்மா. பின்னால எந்தப் பிரச்னையும் வராம இருக்குறதுக்குத் தான் கையெழுத்துப் போட்டு எழுத்துப் பூர்வமாக் கொடுக்குறதே" என்றார். "அப்போ நாம் கடனா வாங்குனவங்க அவ்வளவு பேரும் எனக்குக் கடன் தீர்ந்ததுன்னு எழுதிக் கொடுத்தாத் தானே நமக்கு எந்தப் பிரச்னையும் பின்னால இருக்காது?" என்றாள் மதி கொஞ்சமும் சந்தேகப் படுவது தெரியாதவண்ணம்.

ஒரு நிமிடம் திக்கு முக்காடிப் போன அன்புராஜ் மெல்ல சுதாரித்துக் கொண்டார். "அம்மா, வங்கி கடன் நாம் முழுசாத் தான் அடைக்கப் போறோம். அது பத்திரத்தின் படி தான் இருக்கு. மீதி இருக்குற கடன்ல பாதிக்கடனுக்கும் மேல வித்தவுட்ல அதாம்மா கணக்குல காட்டாத ரூபாயா சேட்டுங்க, வட்டிக் கடைக்காரங்க கிட்ட வாங்குனது. அதுக்கு பத்திரம் கூட உங்க அப்பா கையெழுத்து மட்டும் வெள்ளைப் பேப்பர்ல இருக்கும். அதனால் அதுக்கு பத்திரம் தேவையில்ல." என்றார் சமாளித்து விட்ட சந்தோசத்தில். கொஞ்ச நேரம் என்ன சொல்வது என்று யோசனையில் ஆழ்ந்தாள் மதி. வங்கிக்குச் செல்ல வேண்டும் என்று காலையில் முடிவு செய்தது நினைவுக்கு வந்தது. திடீரென்று ஒரு யோசனை உதித்தது. இந்தப் பிரச்னையை நோக்கி நாம் செல்லாமல், நம் இடத்தில் உட்கார்ந்து கொண்டு பிரச்னையை எதிர்கொண்டால் என்ன? என்ற எண்ணம் தோன்றியது மதிக்கு. "சார். ஒன்னு செய்ங்க. நாளைக்கு ஒரு மீட்டிங் கூட்டுங்க. எல்லா கடன் காரங்களும் அந்த மீட்டிங்குக்கு வரட்டும். எங்கப்பா கையெழுத்துப் போட்ட பத்திரத்தோட ஜெராக்ஸ் காப்பியோட வரணும்னு சொல்லுங்க. முக்கியமா பேங்க் மேனேஜரும் வரணும்னு சொல்லுங்க. மொத்தத்துல நாம கொடுக்க வேண்டிய அத்தனை கடன்காரங்களும் நாளைக்கு இங்கே இருக்கணும்." என்றாள் படபடவென.

அன்புராஜுக்கு சப்தநாடியும் ஆடிப் போய்விட்டது. மனதுக்குள் கணக்குப் போட ஆரம்பித்து விட்டார். "பேங்க் மேனேஜரா? அவங்கெல்லாம் பெரிய ஆபீசருங்க இல்லையா? நாம கூப்புட்ட நேரத்துக்கு வருவாங்களா? அது போக ஒருத்தன்ட்ட உங்கப்பா வாங்கின கடன் பத்தி இன்னொருத்தனுக்குத் தெரியாது. இப்போ எல்லாருக்கும் தெரிஞ்சு போச்சுன்னா அப்புறம் கடன் தொகை கொஞ்சம் கூடக் கிடைக்காதோன்னு பயந்து போயிருவாங்க

அவ்வளவு பேரும். வாங்குறவங்களும் என்ன முடிவெடுப்பாங்களோ தெரியாது. இப்போத் தான் அவங்க கூட பேசிக்கிட்டு இருக்கேன். அதனால இதெல்லாம் நடக்குற காரியம் கிடையாது" என்றார். "அதே தான் சார் நானும் சொல்றேன். பேங்க் ஆபீசர் பெரிய ஆளுன்னா நாமளும் பெரிய கடன்காரங்க தானே? கடன அடைக்கப் போறோம்னு சொன்னா எல்லாரும் ஓடி வருவாங்க. அது போக நீங்க தான் ஏற்கனவே கடன்காரங்க கிட்ட எல்லாம் பேசி முடிச்சிட்டீங்கல்ல? அதுக்கான சம்மதக் கூட்டமா இது இருக்கட்டும். நாளைக்குக் காலையில நடக்கப் போற கூட்டத்துக்கு எல்லா கடன்காரங்களும் இன்க்ளூடிங் பேங்க் மேனேஜரும் வர்றாங்க. சரியா? அவங்க கிட்ட எல்லாம் நான் பேசி, இந்த திட்டத்துக்கு ஒத்துக்குறாங்களான்னு கேட்டு, எழுத்து பூர்வமா எல்லாரும் சம்மதிச்சா, நாமளும் கையெழுத்துப் போடுவோம்னு அம்மா முடிவெடுத்திருக்காங்க. எனக்கு அதுல உடன்பாடே இல்ல. அன்புராஜ் சார் தான் எல்லாத்துட்டயும் பேசிட்டாருல்லன்னு சொன்னேன். அதுக்கு அவங்க என்ன இருந்தாலும் எழுத்து பூர்வமா இருக்குறது தான் சரின்னு அப்பா எப்பவும் சொல்வாராம். அத நினைச்சிக்கிட்டே இருக்காங்க. பழைய ஆளுங்களே இப்படித் தான். அதனால நீங்க ரெடி பண்ணீருங்க." என்று அம்மாவின் மேல் பாரத்தைப் போட்டு விட்டு, இன்னும் அங்கேயே நின்றிருந்தால் அன்புராஜ் எதுவும் சொல்வார் என்று நினைத்ததால் விருட்டென்று வெளியே கிளம்பினாள் மதி.

நாளைக் கூட்டத்தை எப்படி ஏற்பாடு செய்யலாம் என்று நினைத்துக் கொண்டே நிமிர்ந்த அன்புராஜுக்கு முன்னால் வெறும் அறை தான் இருந்தது.

(பரவும்)

பாகம் - 43

விறுவிறுவென்று காரில் ஏறிய மதி முதலில் எங்கே செல்ல வேண்டும் என்றே சொல்லவில்லை. அசட்டுத் துணிச்சலில் இறங்கி ஆகாத வேலை செய்கின்றோமோ என்று பயந்தாள். ஆனால், இப்போது வேறு வழியில்லை. கூட்டம் கூட்டச் சொல்லி அறிவித்தாகி விட்டது. இனி முன் வைத்த காலைப் பின் வைக்க முடியாது. இவ்வாறு அவள் எண்ணம் ஓடிக் கொண்டிருந்தது. அவள் காரில் ஏறி உட்கார்ந்ததுமே மெல்ல காரை நகர்த்திய அழகேசன் வீட்டை நோக்கிச் செலுத்த ஆரம்பித்தான். கார் போய்க் கொண்டிருக்கும் போதே மதியின் செல்போன் சிணுங்கியது. யாரென்று பார்த்தால் மதி நிறுவன அலுவலக எண் காட்டியது. எடுத்து காதில் ஒற்றினாள் மதி. அங்கே அவசரக் குரலில் அன்புராஜ் பேசினார். "நான் உங்க அம்மா கிட்ட இப்போத் தான் பேசினேன்! அவங்க மீட்டிங் பத்தி எல்லாம் ஒன்னுமே சொல்லலையாமே. நீங்க அம்மா தான் எல்லாம் சொன்னாங்கன்னு சொன்னீங்க. ஆனா அவங்க என்னடான்னா இப்படிச் சொல்றாங்க? இப்போ நான் என்ன செய்ய? நீங்க செய்றது எதுவும் சரியாத் தோணல" என்றார் அவளை மடக்கி விட்டதாய் நினைத்த அன்புராஜ். ஒரு விநாடி தான் மதி யோசித்திருப்பாள். "அட! உடனே அம்மாகிட்ட பேசுற அளவுக்கு இவருக்கு என்ன அவசரம்? அவசியம்?" என்ற மதியின் சந்தேகம் அன்புராஜ் மேல் வலுத்துக் கொண்டே சென்றது. உடனே பொய்யான கோபத்துடன் அதட்டும் குரலில் "அப்போ? நான் பொய் சொல்றேன்னு சொல்றீங்களா? அம்மா சொன்னது சரியாத் தான் போச்சு. என் கிட்ட இப்படிச் சொன்ன அம்மாவே இப்போ பேச்சை மாத்தி நான் சொல்லலைன்னு உங்களுக்காகச் சொல்றாங்கன்னா, கடன் கொடுத்தவங்க மட்டும் பணத்தைக் கொடுத்ததுமே பேச்சு மாற மாட்டாங்கன்னு என்ன நிச்சயம்? அதனால நீங்க என்ன செய்றீங்கன்னா, முதல்ல நாளைக்கு கூட்டத்தைக் கூட்டுறீங்க. யோசனையே வேண்டாம். சரியா?" என்று அவரது பதிலுக்குக் கூடக் காத்திராமல் பட்டென்று போனை அணைத்தாள் மதி. ஹும். என்ற படி போனைத் தூக்கி சீட்டில் போட்டவள், "இப்போ எங்கே போகுது வண்டி?" என்று கேட்டாள். வீட்டுக்குத் தாம்மா என்றான் அழகேசன். "ஓஹோ. வொர்க்கர்ஸ் கூடக் கொஞ்சம் பேசிப் பார்க்கணும்னு நினைச்சேன். மறந்தே போச்சு" என்றாள். அதற்குள் வீடு வந்து விட துள்ளலுடன் வீட்டுக்குள் நுழைந்தவள் நேராக அம்மாவிடம் சென்று, "என்னம்மா இப்படிக் காலை வாரிட்டீங்களே! அம்மா எப்பவும் உன் பக்கம்னு சொன்னீங்கன்னு நினைச்சு ஒரு பொய்யை அவுத்து விட்டா தலையாட்ட வேண்டாமா? இனி எதுவானாலும் மதி சொல்றது தான் நான் சொல்றதுன்னு சொல்லனும். சரியா?" என்ற படி சாப்பாடு மேஜையில் மதிய உணவு அருந்த அமர்ந்தாள்.

மாலை ஆறு மணி இருக்கும். மதியின் அறைக்கு மாலதி வந்தார். மதிய உணவு அருந்தியதும் அவள் அறைக்குள் வந்த மதி சும்மா இருக்கவில்லை. கையெழுத்துப் போடச் சொல்லிக் கொடுத்த விற்பனைப் பத்திரத்தை முழுதுமாய் வாசித்து அதில் சொல்லப்பட்டிருந்த சொத்துக்களின் முழு விவரத்தையும் மனதில் இருத்திக் கொண்டாள். நிலம் என்றால் அதன் விஸ்தீரணம், இருக்கும் இடம், நான்கு எல்லைகள், எந்தப் பத்திரத்தின் மூலம் வாங்கியது என்று எல்லாம் இருப்பதையும் ஒவ்வொன்றாய் மனத்தில் ஏற்றினாள். பக்கம் பக்கமாய்ச் சென்றது பத்திரம். நிலங்கள், அதில் இருக்கும் கட்டிடங்கள், நிறுவன இயந்திரங்கள், நிறுவனத்தின் பெயர் என்று எல்லாவற்றுக்கும் ஒரே தொகையாய் எழுதியிருந்தது கண்டு பெருமூச்சு விட்டுக் கொண்டாள். உள்ளே வந்ததும் மதியைப் பார்த்த மாலதி, "என்னவோம்மா எனக்கு இந்தப் பிரச்னையில் இருந்து எப்படித் தப்பிக்கப் போறோம்னு இருக்கு. அழகேசன் உன்னைப் பார்க்கணும்னு சொன்னான். அதான் உங்கிட்டச் சொல்லலாம்னு வந்தேன்." என்றார். "என்னவாம்?" என்ற படி வந்த மதி வீட்டை விட்டு வெளியே வந்தாள் போர்டிகோவில் நின்றிருந்த அழகேசனைக் காண. "நீங்க காலையிலேயே வேலைக்காரங்களைப் பார்க்கணும்னு சொன்னீங்களா? அவங்களைப் பேக்டரியில பாக்குறத விட வெளியில பார்த்தாத் தான் சரியா இருக்கும். பேக்டரியில் இருந்து ஒருத்தர், ஆபீஸில் இருந்து ஒருத்தர்னு இரண்டு பேர்கிட்டச் சொல்லிருக்கேன். அவங்களை இங்கே வரச்சொல்லட்டுமா அல்லது நீங்க அங்கே வர்றீங்களா?" என்றான். "அங்கேன்னா? எங்கே?" என்றாள்

மதி. "நம்ம ஆபீஸுல வேலை பார்க்குற ஜனனியம்மா வீட்டுக்கு" என்றான் அழகேசன். அந்த ரகசிய ஆலோசனைக் கூட்டத்துக்கு பேக்டரியில் இருந்து ராமு தாத்தாவையும் ஆபீசில் இருந்து ஜனனியையும் பொருத்தமாய்த் தேர்ந்தெடுத்திருந்தான் அழகேசன். இருவரிடமும் கேட்ட பின்னர், ஜனனியின் வீட்டில் கூட்டத்தை வைத்துக் கொள்ளலாம் என்றான் அழகேசன். காரணம் இரண்டு. ஒன்று ஜனனி வீட்டில் அவளையும் அவள் அம்மா குழந்தையையும் தவிர யாரும் இல்லை. இரண்டாவது மருமகன் சேகரை அப்படியே பார்க்கலாம் அல்லவா? எங்கே அவங்களை இங்கே வரச்சொல்லு என்று சொல்லி விடுவாளோ மதி என்று தான் நினைத்தான். மதி ஏற்கனவே தான் சென்று வேலைக்காரர்களைப் பார்ப்பதாக நினைத்திருந்ததாலும் எங்காவது வெளியே சென்று வந்தால் நாளை மீட்டிங்கில் பேசும் போது எப்படிப் பேசுவது என்று தெரிந்து கொள்ள வசதியாய் இருக்குமென்றும் நினைத்ததாலும் "அங்கேயே வச்சிக்குவோம். கொஞ்ச நேரத்துல கிளம்பி வர்றேன்." என்றாள்.

இருவரும் கிளம்பி காரில் ஜனனி வீட்டிற்குச் சென்றார்கள். அங்கு ஏற்கனவே ராமு தாத்தா வந்திருந்தார். மதியையும் அழகேசனையும் சிரித்த முகத்துடன் வரவேற்றாள் ஜனனி. மதியைப் பற்றி ஜனனிக்கு நன்றாகத் தெரியும். அவளது தந்தை தான் மூச்சுக்கு முன்னூறு தடவை மதி மதி என்று உயிரையே விடுவாரே. மதிக்கும் ஜனனி பற்றி தெரிந்திருந்தது. வீட்டில் சமீபத்தில் ஆபீஸ் விஷயம் பற்றிப் பேச்சை எடுத்தாலே விஸ்வேஸ்வரன் ஜனனி பற்றிச் சொல்ல ஆரம்பித்திருப்பார். ராமு தாத்தாவைப் பற்றியும் அவளுக்குத் தான் தெரியுமே. அவரைப் பல தடவை அவள் அலட்சியப் படுத்தியிருக்கிறாள். அவரது தோளில் போட்ட குழந்தை இப்படி வளர்ந்திருப்பதில் அவருக்கும் மகிழ்ச்சி இருந்ததில் வியப்பில்லையே?! கோமதி அம்மாளுக்கு எல்லாம் சந்தோசம் தான். ஆனால் அழகேசன் கூட வந்தது தான் பிடிக்கவில்லை. அவர்கள் பேச ஆரம்பிக்கும் போதே சேகரின் அழிச்சாட்டியம் எல்லை மீற ஆரம்பித்தது. ஒரு வயதுக் குழந்தையை எப்படித் தான் அடக்கி வைக்க முடியும்? பொறுத்துப் பார்த்த ஜனனி அழகேசனை அழைத்து, "அழகேசா இந்தா இவனை வெளியே கூட்டிப் போய் ஏதாவது வாங்கி கொடுத்து ஏமாத்திப் பாரேன்." என்றாள். ஆஹா, இந்தத் தருணத்திற்காக எவ்வளவு காத்திருந்திருப்பான் அவன். கோமதி அம்மா பேச வாயெடுப்பதற்குள், குழந்தையை வாரியணைத்துக் கொண்டு வெளியே காருக்கு அழைத்துச் சென்றான் அழகேசன். வாழ்வில் உறவுடன் கழிக்கும் தருணங்கள் தான் எத்தனை சந்தோசமானவை? அதுவும் எந்த உறவும் இல்லாத அழகேசனுக்கு?

அங்கே கூட்டம் ஆரம்பித்திருந்தது.

(பரவும்)

பாகம் - 44

ராமு தாத்தா, ஜனனி, மதி மூவரும் முதலில் யார் ஆரம்பிப்பது என்ற குழப்பத்தில் ஒருவரை ஒருவர் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தனர். பெரியவர் என்ற முறையில் ராமு தாத்தா தான் பேச்சை ஆரம்பித்தார். "என்னம்மா! நீங்க கம்பெனிய விக்கப் போறீங்கன்னு ஒரே பேச்சா அடிபடுதே?" என்று கலக்கத்துடன் ஆரம்பித்தார். மதி குறுக்கே மறித்து, "அதப் பத்திப் பேசத் தான் இங்கே வந்திருக்கேன். எங்கப்பா இப்படி நம்மையெல்லாம் விட்டு இப்படித் திடீர்னு போவார்னு யாருமே எதிர்பார்க்கல. நடந்ததைப் பத்திப் பேசிப் பிரயோசனமும் இல்ல. இவ்வளவு கடன வச்சிட்டு எங்கப்பா போவார்னு எனக்குத் தெரியாது. கிட்டத்தட்ட விக்கிற சூழ்நிலைக்குப் போனது என்னவோ நிஜம் தான். ஆனா, இப்போ யோசிக்க ஆரம்பிச்சிருக்கேன்." சிறிது நேரம் அமைதியாய் அவளையே பார்த்துக் கொண்டிருந்த ராமு தாத்தா அடுத்துப் பேசிய பேச்சில் தான் அவர் எவ்வளவு உயர்ந்த எண்ணம் கொண்டவர் என்பது மதிக்குப் புரிய ஆரம்பித்தது.

"இங்க பாருங்கம்மா. நீங்க பொறக்குறதுக்கு முன்னேருந்தே உங்கப்பாவை எனக்குத் தெரியும். தானும் உயர்ந்தது மட்டுமில்லாம எத்தனை ஏழைக் குடும்பத்துக்கு வாழ்க்கையில விளக்கேத்தி வச்சிருக்காருன்னு உங்களுக்குத் தெரியாது. இன்னைக்கு நாங்கள்லாம் ஏதோ பசிக்கு கூழோ கஞ்சியோ குடிக்கிறோம்னா அதுக்கு உங்கப்பா தான் காரணம். அந்த நன்றிக் கடன் மட்டும் என்னைக்கும் நாங்க மறக்க மாட்டோம். நீங்க கம்பெனிய வித்தாலும் சரி, விக்கலைன்னாலும் சரி, எங்களோட மனசுல இருக்குற தெய்வம் உங்கப்பா தான். நீங்க விக்கலைன்னா உங்க கூட இருப்போம். ஆனா வித்துட்டா, அதுக்காக வாங்குறவங்க பின்னாடியே போயிருவோம்னு மட்டும் கனவுல கூட நினைக்காதீங்க. உழைக்கிறவங்களுக்கு எங்கே போனாலும் வேலை கிடைக்கும். ஆனா எங்க ஐயாவோட சொத்தை ஒருத்தன் கடனுக்காக வாங்கினான். அவன் நடத்துற கம்பெனியில போய் வேலை பார்ப்போம்னு கையை நனைக்க மாட்டோம். அதே சமயத்துல எங்களால உங்களுக்கு எந்தக் கஷ்டமும் வர விட மாட்டோம். எங்களுக்கு நீங்க எதுவும் தர வேண்டியதில்லைன்னு எங்கே வேணாலும் எழுதிக் கொடுக்க நாங்க தயார். நாங்க தான் உங்களுக்குக் கடன் காரங்களே தவுர நீங்க எக்காலத்திலும் இருக்க மாட்டீக. அம்புட்டுதேன்." என்று ஆவேசமாய் முடித்தார். மதியின் கண்களில் கண்ணீர் ததும்பி நின்றது. இப்படி அன்பினால் ஆட்பட்டவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கையில் நான் ஏன் கவலைப் படவேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

இதுவரை அமைதியாய் இருந்த ஜனனி இப்போது பேசத் துவங்கினாள். "இங்க பாருங்க மிஸ். மதி! இந்தச் சொத்து விக்கிறதா இருந்தா யார் வாங்கப் போறாங்கன்னு எனக்குத் தெரியும்." என்ற வார்த்தையைக் கேட்டதும் ஆச்சரியத்தில் அவளை நிமிர்ந்து பார்த்தாள் மதி. "யாரு?" என்றாள் மித மிஞ்சிய ஆவலில். "மிஸ்டர் விமல்." என்ற இரு வார்த்தைகள் அவள் காதில் விழுந்ததும் சிரிப்புத் தான் வந்தது ஜனனிக்கு. கம்பெனியை மட்டுமின்றி தன்னையும் இலவசமாகவே அவர்களுக்குத் தருவதாக இருக்கையில், தனுஷ்கோடி பாவம் கம்பெனியை விலை கொடுத்து வேறு வாங்குவாரா என்ன? என்ற சந்தேகம் அவளுக்கு வந்தது. "உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றாள் சந்தேகம் தீராமலேயே. "இன்று காலை நீங்கள் சென்ற பிறகு அன்புராஜ் யாரிடமோ தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தார் போனில். அவரது அறைக்கு ஒரு வேலையாகப் போன என் காதில் அது விழுந்தது. அவருக்கு 2% கமிசன் என்று வேறு பேசி இருக்கார் அன்புராஜ்" என்றாள் ஜனனி. இதைக் கேட்டதும் ராமு தாத்தா கோபத்தில் துள்ளினார். "அந்த அன்புராஜை வெட்டிப் போட்டாத் தான் சரியா வரும். அவனை முதல்ல வேலைய விட்டுத் தூக்கிருந்தா இந்தப் பிரச்னையே வந்திருக்காது." என்று ஆவேசப்பட்டவர், அப்போது கூட விஸ்வேஸ்வரன் முந்தைய நாள் தன் வீட்டுக்கு வந்ததையும் சில விஷயங்கள் பேசியதையும் சொல்லவில்லை!

"சரி! இதை இவ்வளவு ரூபாய் கொடுத்து வாங்குறதால அவருக்கு என்ன லாபம்?" என்றாள் மதி புரியாமல்.
"நான் அன்புராஜோட அறைக் கதவைத் திறக்கும் போது அவர் குனிஞ்சுக்கிட்டே பணிவா தனுஷ்கோடியிடம் தான் பேசிக் கொண்டிருந்தார் என்று நினைக்கிறேன். நீங்க உங்க மகனுக்குக் கல்யாணப் பரிசா வாங்கித் தரணும்னு நினைச்ச கம்பெனிய விக்குறதுக்கு இப்போ மதி ஏனோ முட்டுக் கட்டை போட்றா. ஆனா அது எல்லாத்தையும் நான் உடைப்பேன். உங்களுக்குத் தான் இந்த கம்பெனி என்று குழைந்து பேசியவர், அப்படியே என்னோட ரெண்டு பெர்சண்டை மறந்துறக் கூடாதுன்னு சொன்னதும் தான் அவரோட மாஸ்டர் பிளானே எனக்குத் தெரிய வந்துச்சு. நான் உடனே சத்தமில்லாம கதவைப் பூட்டிட்டு என் டேபிளுக்கு வந்து உட்கார்ந்துக்கிட்டேன் என்றாள் ஜனனி.

"என்னது? மேரேஜ் கிப்டா?" என்று ஒரு முறை மனதுக்குள்ளும் ஒரு முறை வெளியே சத்தமாகவும் தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள் மதி. அதன் பின் அதிகம் பேசவில்லை அவள். அதிர்ச்சியில் மூழ்கி விட்டாள் என்பது மட்டும் தெரிந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளத் தயங்கியவள், உடனே வீட்டுக்குக் கிளம்ப வேண்டும் என்று நினைத்து எழுந்தாள்.

"உங்களோட பேசுனதுல நான் நிறைய விஷயங்கள் தெரிஞ்சிக்கிட்டேன். இன்னும் ரெண்டு நாளைக்குள்ள கம்பெனியில பல களேபரங்கள் நடக்கப் போவுதுன்றது மட்டும் உறுதி. அப்படி நான் எதுவும் போல்டா முடிவெடுத்தா அது நீங்கள்லாம் என் கூட இருக்கீங்கன்ற தைரியத்துல எடுக்குறதாத் தான் இருக்கும். நீங்க என் கூட இருக்கீங்கள்ல?" என்றாள் ராமு தாத்தாவின் கண்களை ஊடுருவி.

அவர் வார்த்தை ஏதும் பேசவில்லை. ஆனால் அவரது தலையசைப்பு அவரது சம்மதத்தைப் பறை சாற்றியது.

(பரவும்)

பாகம் - 45

மறுநாள் சூரியனுக்கு என்ன தெரியும்? காலை வழக்கம் போல் விடிந்தது. மதி வெகுநேரம் இரவு விழித்திருந்ததில் கண்கள் சிவந்திருந்தது. யோசனை பலவாறாக ஓடியது. ஒரு சமயம் தன்னம்பிக்கையில் சிகரத்தின் மேல் நிற்பது போல் தோன்றும் அதே சமயத்தில் பயத்தில் அதல பாதாளத்தில் நிற்பது போல் தோன்றி அவளை அலைக்கழித்தது. அன்புராஜோ அழகேசனோ யாரேனும் ஒருவரைச் சார்ந்தே இருக்க வேண்டிய சூழ்நிலையிலும் தனக்கும் தனிப்பட்ட முறையில் முடிவெடுக்க சுதந்திரம் இருக்கின்றதே என்று நினைத்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தாள். விமல் தான் கம்பெனியை வாங்க முயற்சிக்கிறான் என்று தெரிந்ததும் ஏற்பட்ட வருத்தம் சொல்லி மாளாது. இது என்ன வியாபார தந்திரம்? என்று நினைத்துக் கொண்டாள். வாழ்க்கையையும் வியாபாரமாக்குகிறார்களே! நான் அப்படிச் செய்யப் போவதில்லை. வியாபாரத்தை வாழ்க்கையாக்க நினைக்கிறேன். அவர்களுக்காகப் பரிதாபப்படுவதைத் தவிர எனக்கு வேறெதுவும் தெரியவில்லை என்று நினைத்து ஒரு முடிவெடுத்துக் கொண்டாள். தான் இது வரை பார்த்திராத கடன்காரர்களைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்தைத் தானே ஏற்படுத்திக் கொண்டது அதிபுத்திசாலித்தனமா? அல்லது அடிமுட்டாள்தனமா என்ற கேள்விக்கு இது வரை அவளுக்கு விடையில்லை. ஒருவேளை அன்று நடக்கவிருந்த கூட்டத்திலாவது அதற்கு விடை கிடைக்கின்றதா என்று பார்ப்போம்.

அன்புராஜைப் பொருத்தவரை இப்போது பயங் காட்டினால் தான் மதி வழிக்கு வருவாள் என்று தோன்றியது. எனவே மொத்த எண்ணிக்கையில் 40 பேர் இருந்த பெரிய கடன்காரர்களை எல்லாம் அழைத்திருந்தார். அன்புராஜ் கடன்காரர்களைப் பொருத்தவரை சொன்னது எல்லாமே உண்மை தான். மொத்த கம்பெனி சொத்துக்கு அவர் மதிப்பிட்டதும் சரி தான். ஆனால் வாடிக்கையாளர்களிடம் வசூலிக்க வேண்டிய கடன்களை மட்டும் வேண்டுமென்றே கணக்கில் சேர்க்கவில்லை. அது வராக் கடன் என்று அனைவரிடமும் சொல்லி வந்தார். விமல் வந்த பின்னர், விமலும் அன்புராஜும் மட்டுமே வாடிக்கையாளர்களையும் சந்தைப் படுத்துதலையும் கவனித்துக் கொண்டார்கள். எனவே அவர் சொல்வது தான் வேத வாக்காய் இருந்து வந்தது. கம்பெனியை தனுஷ்கோடி வாங்கி ஓட விட்டதும் தன்னை விடுவிக்கப் போவதில்லை என்று முழுதும் நம்பியிருந்தார் அவர். எனவே கம்பெனி நிர்வாகம் மீண்டும் தன் கைக்கு வரும் போது அந்தப் பணத்தையும் சேர்த்துச் சுருட்டலாம் என்று பேராசைப்பட்டார் அன்புராஜ். காலை 10 மணிக்கே தொலைபேசியில் மதியை அழைத்தார். தோரணையாய்க் கொஞ்சம் குரலைக் கடுமையாய் வைத்துக் கொண்டார். "கடன்காரங்க எல்லாம் ஒவ்வொருத்தரா வர ஆரம்பிச்சிட்டாங்க. இன்னைக்கு என்னென்ன நடக்கப் போவுதோ? நீங்க எத்தனை மணிக்கு வரப் போறீங்க? வரும் போது உங்கம்மாவையும் கூட்டிட்டு வந்தாத் தேவல." என்றார்.

மதி எதற்கும் சளைக்காமல், "எல்லாரும் வந்துட்டாங்களா? அப்புறம் அவர் வரலை இவர் வரலைன்னு சொல்லக் கூடாது. அம்மா எதுக்கு? தேவையில்லாம? நானே போதும். நான் இதோ கிளம்பிக்கிட்டே இருக்கேன்" என்று மட்டும் சொல்லிவிட்டு 1 மணி நேரம் கழித்துத் தான் புறப்பட்டாள். அதற்குள் இரண்டு முறை அன்புராஜ் அழைத்து விட்டார். எல்லாரும் வந்துட்டாங்க, பேங்க் மேனேஜர் கூட வந்துட்டார் என்று புலம்ப ஆரம்பித்திருந்தார். இதோ மதி இன்று பிறந்த மதியாகப் புறப்பட்டு விட்டாள். கடன்காரனைப் பார்க்கப் போகும் போது மாப்பிள்ளையைப் போல் போக வேண்டும், வருமான வரி அதிகாரியைப் பார்க்கப் போகும் போது பிச்சைக்காரனைப் போல் போகவேண்டும் என்று அவளுக்கு எப்படித் தெரிந்ததோ? இருப்பதிலேயே ஆடம்பர உடை ஒன்றை உடுத்திக் கொண்டாள். அவளைப் பார்த்தவர்கள், அட இன்னைக்கு இந்தப் பொண்ணுக்குக் கல்யாணம் போல என்று தான் நினைத்துக் கொள்வார்கள். அவளது பாவனையைப் பார்த்த மாலதியே ஆச்சரியப்பட்டுத் தான் போனார். என்னடி இது? என்று கேட்டார். "அம்மா, இனிமேல் நான் வெறும் மதி இல்லம்மா, மதி விஸ்வேஸ்வரன். உன் புருசனை இனிமேல் என்கிட்ட நீ பார்க்கப்போற" என்று மட்டும் சொல்லிவிட்டுக் கிளம்பிவிட்டாள்.

காரில் ஜம்மென்று ஏறி உட்கார்ந்த மதி, "ஆபீஸுக்குப் போலாம்" என்று அழகேசனைப் பார்த்துச் சொன்னாள். அழகேசன் எதுவுமே பேசவில்லை. அவள் பதட்டமாய் இருந்தது அந்த ஏசி குளிரிலும் அவள் முன் நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைத்துக் கொண்டே வந்த போது அவனுக்குத் தெரிந்தது. "எல்லாத்துக்கும் மேல ஒரு சக்தி இருக்குன்னு நம்புறவன் நான். அதோ இருக்கு பாருங்க ஒரு கோயில். காருக்குள்ளே இருந்தே அந்தச் சாமியையும் உங்க அப்பாவையும் நினைச்சி பாரத்தை அவங்க மேல போட்டுருங்க. எல்லாம் நல்ல படியா நடக்கும்" என்றான் ஆபத்பாந்தவனாக. கண்ணசைப்பில் ஏற்றுக் கொண்ட மதி "தலைக்கு மேலே வெள்ளம் போயாச்சு, இனி ஜாண் என்ன முழமென்ன? நான் எல்லாத்துக்கும் துணிஞ்சிட்டேன்" என்றாள்.

கார் உள்ளே நுழைந்தது. அனைவரும் ஆர்வத்துடன் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்க, கம்பீரமாய் காரை விட்டு இறங்கி செல்போனை மட்டும் கையில் கொண்டு நிமிர்ந்த நன்னடையுடன் அலுவலகத்துக்குள் நுழைந்தாள் மதி. அவளை வைத்து விதி நடத்தப் போகும் நாடகத்தை நாமும் கண் கொண்டு பார்ப்போம் இனி.

(பரவும்)

பாகம் - 46

அவர்கள் அலுவலகத்திலேயே இருந்த கூட்ட அறைக்குள் பிரவேசித்தாள் மதி. நீள்வட்ட மேசை போட்டு சுற்றிலும் அரைவட்டமாய் உட்கார்ந்த படி பேசிக் கொண்டிருந்தனர் அனைவரும். உள்ளே பெரிய சத்தத்துடன் விவாதித்துக் கொண்டிருந்த அனைவரின் குரலும் சட்டென ஒரு அமைதிக்கு வந்தது. மதி யாருடைய முகத்தையும் கூர்ந்து பாராமல் மொத்தமாக ஒரு பார்வை பார்த்த வண்ணம், எல்லோருக்கும் முன்னே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். அவளது நடை, உடை, பாவனை அனைத்தும் அனைவரின் விழியையும் ஒரு கணம் உயர்த்தும் விதமாய் அமைந்திருந்தது. அனைவரையும் அலட்சியமாய் மீண்டும் ஒரு முறை கண்களால் சுற்றிப் பார்த்தாள். யாருமே தெரிந்த முகமாயும் தோன்றவில்லை. யாரும் இவள் சொல்வதைக் கேட்கப் போவதாயும் தெரியவில்லை. அன்புராஜ் அவளது இடது புறம் உட்கார்ந்திருந்தார். வலது புறம் அவர்களுக்கு அதிகக் கடன் வழங்கியிருந்த வங்கியின் பிரதிநிதியாக அந்த வங்கியின் மேலாளர் வந்திருந்தார்.

அன்று அவள் பேசிய பேச்சு அவள் வாழ்நாளிலேயே மறக்க முடியாத பேச்சாய் அமைந்தது. அவளுக்கு மட்டுமல்ல. அன்புராஜுக்கும் மற்ற அனைவருக்கும் தான்.

"குட்மார்னிங் பிரெண்ட்ஸ்" என்ற வண்ணம் ஆரம்பித்தாள் மதி. "முதல்ல என்னை நானே உங்க எல்லாத்துக்கும் அறிமுகம் செய்துக்கனும்னு ஆசைப்பட்றேன். நான் மதி விஸ்வநாதன். மதி கம்பெனியின் தற்போதைய உரிமையாளர். எங்கப்பா ஊன்றி வச்ச விதை இப்போ இவ்வளவு பெரிய மரமா வளர்ந்து எல்லாருக்கும் பலன் தருதுன்னா அந்த மரத்தோட வேருக்குத் தண்ணி ஊத்துனவங்க நீங்க எல்லாரும். உங்க எல்லாத்தையும் தனித்தனியாப் பார்த்துப் பேசனும்னு தான் நினைச்சிக்கிட்டு இருந்தேன். ஆனா இப்படி ஒரு கூட்டமா கூடினா எல்லோரையும் ஒரே நேரத்துல பாக்குறது மட்டுமில்லாம இன்னைக்கு இருக்குற நிலைமை என்னான்னு உங்க கிட்ட பகிர்ந்துக்குற ஒரு நல்ல சந்தர்ப்பமா இது அமையும்னு தான் இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செஞ்சேன். என்னடா, சின்ன வயசுக்காரியா இருக்காளே, அதுவும் பொண்ணா இருக்காளேன்னு வித்தியாசமா நினைக்காதீங்க. நீங்க என்னென்ன சொல்லனும்னு நினைக்கிறீங்களோ அதைத் தயங்காமச் சொல்லலாம்." என்று சொல்லிக் கொண்டே அன்புராஜ் பக்கம் திரும்பிய மதி, "இவங்க எல்லார் லிஸ்டும் ரெடி பண்ணியாச்சா?" என்றாள். "இதோ இருக்கு" என்று ஒரு பட்டியலைக் கொடுத்தார் அன்புராஜ்.

அதைக் கையில் வாங்கிய மதி "இப்போ இதை நான் வாசிக்கப் போறேன். உங்களுக்குத் தரவேண்டிய தொகை எல்லாம் சரியா எழுதிருக்கான்னு பார்த்துக்கோங்க." என்ற படி மொத்தப் பட்டியலையும் வாசிக்க ஆரம்பித்தாள் மதி. அன்புராஜ் எரிச்சலில் இருந்தார். ஏதோ இப்பவே எல்லாருக்கும் கொடுக்க வேண்டியதக் கொடுத்து செட்டில் செய்றது போல வாசிக்கிறா என்று நினைத்துக் கொண்டார். பத்து லட்சம் ரூபாயில் ஆரம்பித்து 40 லட்சம் ரூபாய் வரை இருந்தது பட்டியலில். இருப்பதிலேயே பெரிய தொகையான வங்கிக் கடன் தொகையைக் கடைசியில் 79 கோடி என்று சொல்லி முடித்து விட்டு, அவளைப் பரிதாபமாய்ப் பார்த்த வங்கி மேலாளரையும் மிடுக்காய்ப் பார்த்து விட்டு இதுவரை அமர்ந்திருந்தவள் ஏதோ சண்டைக்கு வருபவர்களையும் எதிர்கொள்ளும் தோரணையில் எழுந்து நின்றாள்.

"உங்க எல்லாருக்கும் ஒன்னு சொல்லிக்கிட ஆசைப்பட்றேன். இதோ இன்னும் கொஞ்ச நாள்ல இந்தக் கம்பெனிய வித்துருவாங்க. உங்க பணம் எல்லாம் உங்களுக்குக் கிடைக்கும்னு நப்பாசையில யாராவது இருந்தா அதை அடியோட மறந்துருங்க. நான் இந்தக் கம்பெனிய விக்குறதா இல்ல" என்றாள் அதிரடியாக. ஒவ்வொரு கடன்காரரும் அன்று நடந்து கொண்டதைப் பார்த்து அவளுக்கே அதிசயமாய்ப் போய்விட்டது. பணம் என்றால் பிணமும் வாயைப் பிளக்கும் என்பது சரிதானோ என்று நினைக்கும் படியாக வானத்துக்கும் பூமிக்குமாய்க் குதித்தார்கள் ஒவ்வொருவரும். "நான் முதல்ல கொடுத்தேன். எனக்குத் தான் முதல்ல பணம் வரணும் என்றும்,

கைமாத்தாக் கொடு ஒரு மாசத்துல தர்றேன்னு தான் விஸ்வேஸ்வரன் சொன்னாரு. அத நம்பித்தான் கொடுத்தேன். எனக்குத் தான் முதல்ல தரணும் என்றும் ஒவ்வொருவரின் குரலும் அடுத்தவரின் குரலை மீறியதாய், கிட்டத்தட்ட அங்கே ஒரு கலவரம் நடப்பதற்கான சாத்தியக்கூறுகள் தென்பட ஆரம்பித்தன.

"இதுக்குத் தான் நான் முதல்லேயே சொன்னேன். இப்படி ஒரு கூட்டமெல்லாம் கூட்டினா வேலைக்கு ஆகாதுன்னு. இப்போ விக்க மாட்டேன்னு சொன்னா விட்ருவாங்களா? அதெல்லாம் நீ நினைச்சுக் கூடப் பாக்க முடியாது" என்று ஒருமைக்குத் தாவி இருந்தார் அன்புராஜ். அவரை ஒருமுறை முறைத்து விட்டு கையை உயர்த்தினாள் மதி.

கொஞ்சம் அவள் என்ன தான் சொல்லப் போகின்றாள் என்று நினைத்து அமைதியானது கூட்டம். அவளது பிரம்மாஸ்திரத்தை ஏவினாள் மதி.

"இங்க பாருங்க, நான் இந்த பைல்ல இருக்குற எங்கப்பா கையெழுத்துப் போட்ட எல்லாக் கடன் சம்பந்தப்பட்ட டாக்குமெண்ட்ஸையும் பார்த்தேன். இதுல பாதிக்கும் மேல ரெவின்யூ ஸ்டாம்ப் ஒட்டாமக் கூட வெள்ளைப் பேப்பர்ல இருக்குது. எங்க லீகல் அட்வைசரைக் கேட்டதுக்கு இந்த மாதிரி டாகுமெண்ட்ஸெல்லாம் போலியா இருந்தாலும் இருக்கும் அதனால நம்பாதீங்கன்னு சொல்றார். அதுவும் போக, நீங்க கொடுத்த முக்கால்வாசிப் பணம் கணக்குல இல்லாததா இருக்கு. இதெல்லாம் எங்கப்பா வாங்கவே இல்லைன்னு நான் பிளேட்டைத் திருப்பிப் போட்டா உங்க கதியெல்லாம் அதோகதி தான்னு நினைச்சுக்கோங்க. இவ்வளவுக்கும் நான் உங்க கடன் எதையுமே கொடுக்கமாட்டேன்னே சொல்ல வரல. இதோ உட்கார்ந்துருக்காரே பேங்க் மேனேஜர். அவருக்கும் சேர்த்துத் தான் சொல்றேன். அவுங்க கடன்ல 40 கோடி ரூபாய்க்கு இப்போ வாங்கின புது மெசின் இன்ஸ்டால் பண்ணத் தான் கடனா வாங்கிருக்கோம். அந்த லோன் இன்னும் மெச்சூரிட்டியே ஆகல. எல்லாம் எங்க ஆடிட்டர்கிட்ட நான் கிளியர் பண்ணிக்கிட்டேன். மெச்சூர் ஆகாத லோனைக் கேட்கக் கூட முடியாதுன்னு அவங்களுக்கே தெரிஞ்சிருக்கும்னு நினைக்கிறேன். அந்த லோன் மெச்சூர் ஆகும் போது சரியாக் கட்டலைன்னா அவங்க கேட்க ரைட்ஸ் இருக்கு. அப்போ கூட கம்பெனியை விக்கனும்னு யாரும் .... யாரும் எங்களை வற்புறுத்த சட்ட ரீதியா இடமே இல்லை.

கம்பெனிய விக்கனும்னு வற்புறுத்துற அதிகாரம் கோர்ட் கிட்ட மட்டும் தான் இருக்கு. அதுக்கு நீங்க எப்போ கோர்ட்டுக்குப் போய் எங்க கம்பெனியை நாங்க விக்க வைக்க முடியும் தெரியுமா? நான் நீங்க கொடுத்த கடனைத் திருப்பித் தர முடியாதுன்னு சொன்னா மட்டும் தான். அப்போ தான் நீங்க கோர்ட்டுக்கே போக முடியும். அப்பவும் கோர்ட்ல நீங்க பணம் கொடுத்ததை நிரூபிச்சு அதுக்கப்புறம் கோர்ட் எனக்கு நோட்டீஸ் தந்து, அதுக்கு நான் வாய்தா வாங்கி, பதில் எழுதி, ஒன்னுமே நடக்க முடியலைன்னாத் தான் சொத்தை வித்து கடனை அடைக்கவும் அப்படீன்னு கோர்ட் சொல்லும். அப்போக் கூட உங்களுக்குப் பணம் வந்து சேராது. முதல்ல பேங்க், அப்புறம் தொழிலாளிங்களுக்குக் கொடுக்க வேண்டிய கிராஜுவிட்டியைக் கொடுத்த பின்னால தான் நீங்க யாருன்னே கோர்ட் பார்க்கும். அதுக்குக் குறைந்த பட்சம் என்னோட கணக்குப் படி 20 வருசமாவது ஆகும். இதெல்லாம் நான் உங்களைப் பயமுறுத்துறதுக்காகச் சொல்ல வரல. உண்மை நிலவரம் என்னான்னு உங்களுக்கு விளக்குறதுக்காகச் சொல்ல வர்றேன். வேணுமின்னா இனி என்னோட லீகல் அட்வைசரும், ஆடிட்டரும் உங்க கூடப் பேசுவாங்க. ஆனா அவங்க பேசுற தோரணையே வேற மாதிரி இருக்கும். அந்தளவுக்கு நான் போக விரும்பல. நம்ம எல்லாருக்கும் சமாதானமா நான் ஒன்னு சொல்லட்டுமா?" என்று முத்தாய்ப்பாய் தன் பேச்சை நிறுத்தினாள் மதி.

அந்த அறையில் அனைவருமே அவள் மேல் கோபத்தில் இருந்தார்கள் என்பது அவர்களின் முகத்திலேயே தெரிந்தாலும், அவர்களின் கையாலாகாத் தனமும் எரிச்சலும் சேர்ந்தே தெரிந்தது.

(பரவும்)

பாகம் - 47

கடன்கொடுத்தவர்கள் அத்தனை பேருமே அவளது பேச்சில் ஆட்டம் கண்டார்கள் என்றே சொல்ல வேண்டும். அங்கே ஒரு அமைதி நிலவியது. ஒரு நிமிடம் பேச்சை நிறுத்தி விட்டு சுற்றிலும் ஒரு பார்வை பார்த்த மதி மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

"நான் ரொம்ப நியாயமாத் தான் நடந்துக்கணும்னு நினைக்கிறேன். எங்கப்பா உங்க கிட்டக் கடன் வாங்குனது நிஜம் தான். ஆனா அதுக்காக எல்லாரும் ஒரே நேரத்துல வந்து கேட்டா என்னால எப்படி அடைக்க முடியும்?

எனக்கு ஒரு இரண்டு வருசம் அவகாசம் கொடுங்க. அப்பவும் என்னால கடனை அடைக்க முடியலைன்னா கம்பெனிய விக்கிறதுக்கு நானே கையெழுத்துப் போட்டுத் தர்றேன். இட்ஸ் எ ஜெண்டில்மேன் அக்ரிமெண்ட்" என்றாள்.

"அந்த இரண்டு வருசத்துல நீங்க இன்னும் கடன் வாங்கிட்டீங்கன்னா?" என்றார் ஒரு கடன்காரர்.

மதிக்கு மனதில் ஏற்பட்ட நிம்மதிக்கு அளவே இல்லை! ஆம். அதெல்லாம் இரண்டு வருடம் அவகாசம் தருவதற்கு சம்மதிக்க முடியாது என்று சொல்லாமல், அந்த இரண்டு வருச காலத்தில் என்ன செய்யப் போறீங்கன்னு கேட்டதால் அனைவரும் கால அவகாசத்துக்கு ஒத்துக் கொண்டார்கள் என்ற நிம்மதியோடு எழுந்து ஆவேசமாகப் பேசிக் கொண்டிருந்தவள் இப்போது இருக்கையில் அமர்ந்தாள்.

உட்கார்ந்து கொண்டு அவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல ஆரம்பித்தாள். "என்னை நம்பி இன்னும் கடன் தர்றதுக்கு ஆள் இருக்காங்களா என்ன? உங்கள்ல யாரும் தரமாட்டீங்கன்னு நினைக்கிறேன். கவலைப்படாதீங்க, இனிமேல் கடன் எதுவும் வாங்கப் போறதில்ல. ஸோ, நீங்க எல்லாரும் எனக்கு டைம் கொடுத்ததா எடுத்துக்கலாமா?" என்றாள் உறுதிப்படுத்திக் கொள்ளும் குரலில்.

பேங்க் மேனேஜர் மட்டும், "இதை என்னால் சொல்ல முடியாது. எங்க ஏ.ஜி.எம். கிட்டக் கேட்கணும்" என்றார்.

நீங்க நினைச்சா உங்களால் உங்க மேலதிகாரியை சமாதானப் படுத்த முடியும் சார். இல்லாவிட்டா உங்க ஏ.ஜி.எம். கிட்ட எனக்கு அப்பாயிண்ட்மெண்ட் வாங்கிக் கொடுங்க. நானே பேசுறேன்.

உங்க எல்லாருக்கும் ஒன்னு சொல்லிக்கணும்னு ஆசைப்பட்றேன். போன ரெண்டு வருஷத்துக்கு முன்னால குஜராத்துல பூகம்பம் வந்தப்ப நான் காலேஜுல படிச்சிக்கிட்டு இருந்தேன். எங்க காலேஜ் ப்ரெண்ட்ஸா சேர்ந்து அங்கு இருந்த மக்களுக்கு துணிமணிகள் கூட இல்லாம கஷ்டப்படறாங்கன்னு சொல்லி துணிமணிகள், போர்வைகள்னு பொட்டலமாக் கட்டி ஒரு சரக்கு ரயில் பெட்டியில ஏத்துனோம். அப்போ மாவட்ட கலெக்டர் தலைமையில் பெட்டியில் ஏத்துன பிறகு, அந்த வண்டியை நகர்த்தனும்னு அவர் ஆசைப்பட்டாரு. உடனே எல்லாருமா சேர்ந்து அதைத் தள்ள ஆரம்பிச்சோம். 50 பேர் சேர்ந்து தள்ளுறோம் எங்களால முடியல. அப்புறம் கொஞ்சமா கூட்டம் கூடி எல்லாரும் ஐலசா பாடி வண்டியைக் கொஞ்சம் நகர்த்தினோம். அவ்வளவு கஷ்டப்பட்டு நகர்த்துன பிறகு தான் தெரிஞ்சது அந்த வண்டியை நிறுத்துறது அதை விடக் கஷ்டம்னு. 100 பேரு சேர்ந்து தள்ளுன வண்டியை 200 பேர் சேர்ந்து நிறுத்த வேண்டியதாப் போச்சு. இதை எதுக்கு சொல்றேன்னு கேக்குறீங்களா?

எங்கப்பா உங்க உதவியால தான் கம்பெனிங்குற தண்டவாளம் அமைச்சு, தொழிலாளர்கள்ங்குற ரயில் பெட்டிகளை உருவாக்கி முன்னால எஞ்சின்குற பெயர்ல நிர்வாகம்குற பெரிய ரயிலை ஓட்டி வந்தாரு. இப்போ ஓட்ற ரயிலை எஞ்சின் சரியில்லைன்னு நிறுத்தனும்னு நீங்க நினைக்கிறீங்க. நான் என்ன சொல்றேன் தெரியுமா? டீசல் இஞ்சினை மாத்திட்டு எலெக்ட்ரிக் இஞ்சின் அடுத்து வரப்போகுது. பட்டன்ல கைவச்சாலே போதும்.

கிளம்பவும் செய்யும். வண்டி தயாரா இருக்கு. பச்சைக் கொடி காட்டத் தான் உங்களைக் கூப்புட்றேன். எல்லாரும் பச்சைக் கொடி காட்டுவீங்கன்னு நம்பிக்கையோட வந்திருக்கேன். காட்டுவீங்க தானே?" என்றாள் புன்சிரிப்பை முகத்தில் ஏந்தி.

அவள் பேச்சைக் கேட்டதும், சரி தான் பொண்ணு அவங்கப்பாவை அப்படியே உரிச்சு வந்திருக்கு என்ற நம்பிக்கையுடன் ஒவ்வொருவராய் அவளிடம் வந்து இரண்டு வருசம் அவகாசம் கொடுப்பதில் ஆட்சேபணை இல்லையென்றும், அவர்கள் அவள் மேல் வைத்த நம்பிக்கையைக் காக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

அன்புராஜின் முகத்தில் ஈயாடவில்லை.

(பரவும்)

பாகம் - 48

அங்கே விமலை சமாதானம் செய்து கொண்டிருந்தார் தனுஷ்கோடி. விமல் வெடித்துக் கொண்டிருந்தான். "ஒரு சாதாரண ஜாமீன் கையெழுத்து. அதைப் போடமாட்டேன்னு சொல்லி நீங்க எவ்வளவு இழந்திருக்கீங்க தெரியுமா? நீங்களெல்லாம் பெரிய பிசினஸ் மேன், ராஜதந்திரின்னு வெளியே சொல்லிக்கிடாதீங்க. புள்ளைக்கு ஒரு கையெழுத்துப் போடத் துப்பில்ல. நீங்க எனக்கு கம்பெனி வாங்கித் தர்றீங்களாக்கும்?" என்றான். தனுஷ்கோடி இப்படி எல்லாம் நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. யார் தான் எதிர்பார்த்தார்கள்? மதி உட்பட!

அன்புராஜ் போனில் விஷயத்தைச் சொன்னதும் விட்டது சனியன் என்று தான் நினைத்தார் தனுஷ்கோடி. அவருக்கும் கடன் இத்தனை இருக்கும் ஒரு கம்பெனியை விலைக்கு வாங்கி அதை ஓட்டுவது என்பது பிடிக்காத விஷயம் தான். இருந்தாலும் அன்புராஜ் அவ்வளவு சொல்லி எளிதில் வாங்கித்தருவதாய்ச் சொன்னதாலேயே சம்மதித்திருந்தார். இப்போது அது இல்லை என்றதும் 100 கோடி ரூபாய் மிச்சம், என்றும் நினைத்துக் கொண்டார். ஆனால் பாதிக்கப்பட்டது இருவர். ஒருவர் அன்புராஜ். இந்த பேரத்தின் மூலம் 2 கோடி ரூபாய் குறைந்த பட்சம் அடிக்கலாம் என்று கணக்குப் போட்டவர். இன்னொரு ஆள் விமல். கம்பெனியை எவ்வளவோ எதிர்பார்த்தான் அவன். கெடுத்து விட்டாரே தன் தந்தை என்று அவர் மேல் தான் அவனுக்கு அத்தனை ஆத்திரமும். தன்னை ஒரு கைப்பொம்மையாய் விளையாடி விட்டார் என்ற கோபம் வேறு.

இப்போது மதியின் முன் தான் ஒரு சிறுவன் போல் நிற்கின்றோம் என்ற நினைவு அவனுக்கு வந்து விட்டது. மதம் பிடித்த யானை போல் அலைய ஆரம்பித்து விட்டது அவன் மனம். "அப்பா! நீங்க என்ன செய்வீங்களோ தெரியாது. மதி கம்பெனிய விட பெருசா எனக்கு ஒரு கம்பெனி உடனே எனக்கு வேணும். என்ன செலவானாலும் பரவால்ல. இப்போ மட்டும் நீங்க மாட்டேன்னு சொன்னீங்க, அப்புறம் என்னோட சொத்த எனக்குப் பிரிச்சுக் கொடுத்துருங்க. நான் என் வழியைத் தனியாப் பார்த்துக்கறேன்." என்று குண்டைத் தூக்கிப் போட்டான்.

இப்படிச் சொல்வான் தன் அருமை மகன் என்று தனுஷ்கோடி நினைத்தாவது பார்த்திருப்பாரா? எந்தப் பிரச்னை வரக்கூடாது என்று சரஸ்வதி அம்மாள் வேண்டிக் கொண்டே இருந்தாரோ, அந்தப் பிரச்னை இதோ வந்தே விட்டது. தான் கணித்த ஜாதகம் சரியாகத் தான் இருக்கின்றது என்று தனுஷ்கோடி நினைத்துக் கொண்டார். "விமல், இப்போ என்ன நடந்துருச்சின்னு தேவையில்லாததெல்லாம் பேசுற? உனக்கு ஒரு கம்பெனி வேணும் அவ்வளவு தானே? நம்ம கிட்ட இருந்த பணம் என்ன தொலைஞ்சா போச்சு? இப்பவும் ஒன்னும் கெட்டுப் போகல. புதுக் கம்பெனியையே உருவாக்குவோம். அவ கூட இரண்டு வருசம் தவணை கேட்டுருக்கா. அந்த மதி கம்பெனி என்னடா மதி கம்பெனி. நம்ம விமல் கம்பெனிய இன்னும் ஆறே மாசத்துல நீ உருவாக்கு. என்ன செலவாகுதோ நான் தர்றேன். ஆனா சொத்தைப் பிரிக்கணும்ம்னு எல்லாம் என் கண் மூடுறதுக்குள்ள பேசக் கூடச் செய்யாதீங்கப்பா." என்று கெஞ்ச ஆரம்பித்து விட்டார். புது கம்பெனி வைத்துத் தருகின்றேன் என்று சொன்னதும் தான் விமல் கொஞ்சம் அடங்கினான். உடனே அதற்கான வேலையையும் ஆரம்பித்து விட்டார்கள்.

தொழிலாளர்களோ இயந்திரமோ இல்லாத விமலிடம் ஏற்கனவே கம்பெனியை நிர்வாகம் பார்த்த அனுபவம் இருந்தது. நிர்வாகம் பற்றி ஒன்றுமே தெரியாத மதியிடம் ஏற்கனவே வேலை பார்த்த தொழிலாளர்களும் நடந்து கொண்டிருந்த கம்பெனியும் இருந்தது. விதி யாரை எங்கே வைக்கப் போகின்றது என்பது விதிக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்.

இதோ அன்று மாலையே மதி தன் வேலையை ஆரம்பித்து விட்டாள்.

(பரவும்)

பாகம் - 49

மதியம் வீட்டுக்குச் சாப்பிட வந்த மதி, அம்மாவிடம் நடந்த விஷயம் அனைத்தையும் தெளிவாக விளக்கினாள். "இனி நான் தான் கம்பெனிய நிர்வாகம் செய்யப் போறேன்மா. என்ன தான் நடக்குதுன்னு பார்த்துரலாம்." என்றாள். "உன்னால் எப்படி முடியும்?" என்று கேட்ட அம்மாவுக்கு, "அப்பா எந்தப் படிப்பும் படிக்காமலேயே இவ்வளவு பெரிய கம்பெனியை கட்டிக் காக்கலியா? அவர் உடம்புல ஓடுன ரத்தம் தானே என் உடம்புலயும் ஓடுது. பார்க்கப் போனா நான் கூடக் கொஞ்சம் படிச்சிருக்கேன். உங்க ஆசீர்வாதம் இருந்தா எல்லாம் நல்லபடியா நடக்கும்மா" என்ற மகளைப் பார்த்து, "ம். இந்நேரம் கல்யாணம் பேசி முடிக்க வேண்டிய பொண்ணு. எல்லா பாரத்தையும் சுமக்கப் போறேன்னு சொல்ற" என்றார் கவலையுடன். "இப்போ என்னம்மா கல்யாணத்துக்கு அவசரம்? எல்லாம் அமோகமா நீங்க நினைச்ச படியே நடக்கும்." என்று விமலை நினைத்துக் கொண்டே சொன்னாள் மதி.

"நீ முதல்ல செய்ய வேண்டிய வேலையா அந்த அன்புராஜை வேலையில இருந்து தூக்கிரு மதி" என்றார் அம்மா. "நானா வெளிய போங்கன்னு சொல்லப் போறதில்ல அம்மா. அவரா வெளிய போனாலும் தடுக்கப் போறதில்ல. அவரை வைச்சு எனக்கொரு காரியம் ஆக வேண்டியிருக்கு. அதனால இப்போதைக்கு இருக்கட்டும். நான் முதல்ல செய்ய வேண்டிய வேலையா தேவையில்லாம ஓபன் பண்ணின அந்த இரண்டு கடைக்கும் மூடுவிழா நடத்தப் போறேன். அப்பாவோட நிர்வாகம் இருந்தப்ப கம்பெனி எந்த நிலைல இருந்துச்சோ அந்த நிலைக்கு திரும்பவும் கொண்டு வரப் போறேன். இனி மதியம் சாப்பிட எல்லாம் வர மாட்டேன். முடிஞ்சா அனுப்பி வைங்க அல்லது நான் அங்கேயே சாப்டுக்கிறேன்." என்றாள் மதி.

மதியம் சாப்பிட்ட உடனேயே கிளம்பி விட்டாள் மீண்டும் மதி. ஏதோ வேகத்தில் இத்தனையையும் செய்து விட்டாளே ஒழிய மதிக்கு உள்ளூர கொஞ்சம் பயம் இருந்து கொண்டே தான் இருந்தது. இத்தனை பெரிய நிறுவனத்தை தான் எப்படி நிர்வாகம் செய்யப் போகின்றோம் என்று கவலைப்பட்டாள். தன் தந்தை அரும்பாடுபட்டு உருவாக்கியதைத் தானே அழித்து விடுவோமோ என்றும் வருத்தப்பட்டாள். பயங்கர யோசனையில் இருந்த போது தான் வண்டியோட்டிக் கொண்டிருந்த அழகேசன் பார்த்தசாரதி போல் அவளது தந்தை நிர்வாகம் எப்படிச் செய்தார் என்பதைச் சொல்லித் தர ஆரம்பித்தான். "என்னம்மா யோசனையாவே இருக்கீங்க? இன்னைக்கு நீங்க பேசுன பேச்சுல எல்லாருமே அசந்து போய் உட்கார்ந்துட்டாங்களாமே? இப்பத் தான் நீங்க சரியான ரூட்டைத் தேர்ந்தெடுத்துருக்கீங்க." என்றான். "எல்லாம் சரி தான். ஆனா எப்படி சமாளிக்கப் போறேன்னே தெரியல. இரண்டு வருசம் நாளைக்கே முடியிறது மாதிரி ஒரு ஃபீலிங்." என்றாள்.

"உங்கப்பா காலேஜ் போய் படிக்கலையே தவிர அவர் கிட்ட எல்லா அறிவுமே இருந்துச்சு. உங்கப்பா அடிக்கடி என்கிட்ட சொல்வாரு, டேய் நமக்கு ஒரு விஷயம் தெரியாம இருக்கலாம். ஆனா தெரிஞ்ச மாதிரி நடிக்கலாம். ஆனா உடனே அது பத்தி நேரம் கிடைக்கும் போது தெரிஞ்சிக்கனும்னு. அது மாதிரி இப்போ நீங்க நிர்வாகம் தெரிஞ்ச மாதிரி நடிச்சிட்டீங்க. இனிமே அதைப் பத்தி நீங்க நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிக்கனும். உங்களுக்கு அனுபவ பாடம் இங்கே டெய்லி கிடைக்கும். புஸ்தகப் பாடம் படிக்கனும்னாலும் உங்கப்பாவோட வழி எனக்குத் தெரியும்மா. உங்களுக்கும் தெரிஞ்சிருக்கலாம். உங்கப்பா விரும்பிப் படிக்கிற புஸ்தகம் எதுன்னு சொல்லுங்க பார்ப்போம்." என்றான் காரை மெதுவாக ஓட்டிக் கொண்டே. கொஞ்சம் யோசித்த மதி, "அவருக்குப் புடிச்சது திருக்குறள் தான்." என்றாள். "சரியாச் சொன்னீங்கம்மா. அவரு சொல்வாரு, நேர்மையா நம்ம கூட ஒருத்தன் மோதினான்னா அவனைத் தோற்கடிக்கனும்னா திருக்குறளை ஒழுங்காப் படிச்சு அதை நடைமுறைப் படுத்தினாப் போதும்னு. அதே சமயம் அநியாயமா மோதுறவனை வீழ்த்த சரியான வழி அர்த்தசாஸ்திரம்ங்கிற புஸ்தகத்துல இருக்குடா. நாம எங்கேயும் வெளியிலேயே போக வேண்டியது இல்ல. இதை இரண்டையும் படிச்சாலே போதும்னு சொல்லுவாரு. அதனால இந்த ரெண்டு புஸ்தகத்தையும் நீங்களும் அப்பப்போ படிக்க

ஆரம்பிங்க. மத்தபடி ஆபீஸை ஜனனி பாத்துக்குவாங்க. பேக்டரியையும் தொழிலாளர்களையும் ராமுதாத்தா கவனிச்சிக்குவாரு. நீங்க வெளி வேலையில் முதல்ல கவனத்தை வைங்க. அப்படியே இந்த அன்புராஜ் மேலயும் ஒரு கண்ணை வைங்க." என்றான்.

அட, அழகேசனுக்கு இத்தனை விஷயம் தெரிஞ்சிருக்கே என்று நினைத்துக் கொண்டாள் மதி. தினமும் காரில் போகும் நேரம் முழுமையும் தனக்கு ரொம்ப உபயோகமாய் இருக்கும் என்ற நினைவே அவளுக்கு தன்னம்பிக்கையை ஊட்டியது.

அலுவலகம் வந்தாள் மதி. விஸ்வேஸ்வரனின் அறை. அவரது இருக்கையில் மதி இன்னும் அமரவில்லை. மிகவும் மரியாதையுடன் அதைப் பார்த்துக் கொண்டிருந்த மதி, கடன் மொத்தத்தையும் அடைக்கும் வரை இந்த நாற்காலியில் அமருவதில்லை என்று முடிவெடுத்தாள். அந்த அறையிலேயே அவளுக்கு ஒரு சிறு மேசை போடப்பட்டது. அதில் அமர்ந்து மதி கம்பெனியில் தன் பரிபாலனத்தை ஆரம்பித்தாள் மதி.

அன்புராஜின் நிலையைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை அல்லவா? என்னென்னவோ மனக்கோட்டை கட்டியிருந்தார் அன்புராஜ். அவை அனைத்துமே ஒரே நொடியில் இடிந்து விழுந்து விட்டாலும் அவரது எண்ணம் மட்டும் மாறவே இல்லை. ஆனால், தனுஷ்கோடியோ தெளிவாகச் சொல்லி விட்டார். இனி உன் தயவு தேவையில்லை என்று. அவருக்கே தெரியும் மதி கம்பெனியை விட்டு வெளியே சென்றால் தான் ஒரு செல்லாக் காசு என்று. அதனால் இப்போதைக்கு கம்பெனியை விட்டு வெளியேறக் கூடாது என்று முடிவு செய்தார். தான் பேரம் பேசிய விஷயம் மதிக்குத் தெரிய வாய்ப்பில்லை என்று நம்பிக்கை வேறு கொண்டார்! அதனால் மதியிடம் அப்படியே பேச்சை மாற்றினார் அன்புராஜ். "நீங்க எடுத்த முடிவு பிரமாதம் போங்க! எனக்குக் கூட இப்படித் தோணல பாருங்க. புலிக்குப் பொறந்தது பூனையாகுமா? இரண்டு வருசம் டைம் வாங்கிட்டோம்ல. இனி கவலையே வேண்டாம். எளிதா அவ்வளவு கடனையும் அடைச்சிரலாம்." என்றார். மதியும் விட்டுக் கொடுக்காமல், "நீங்கள்லாம் இருக்கீங்கன்ற தைரியத்துல தான இத்தனையும் நான் செஞ்சிக்கிட்டு இருக்கேன். இப்போ முத வேலையா நம்ம கடை இரண்டையும் மூடுறத நீங்க செய்ங்க மத்ததை இப்போதைக்கு நான் கவனிச்சிக்கிறேன். ஏதோ நானும் படிச்ச மாதிரி இருக்கும்" என்றாள் மதி.

ஜனனியையும் ராமுதாத்தாவையும் அழைத்தாள் மதி அடுத்ததாக. உள்ளே வந்ததும் அவர்களை அமரச் சொன்ன மதி, "எங்கப்பா இருந்தப்ப கம்பெனி எப்படி நடந்ததுன்னே எனக்குத் தெரியாது. அவர் இருந்தப்போ எப்படி நடந்துச்சோ அதே மாதிரி ஆபீசும், பேக்டரியும் நடக்கனும். எல்லாத் தொழிலாளர்கிட்டயும் நீங்க தான் பேசனும் தாத்தா. பழைய அவுட்புட் அப்படியே நமக்குக் கிடைச்சாகனும். க்வாலிட்டியில காம்ப்ரமைசே பண்ணக் கூடாது. ஆபீசை நீங்க கவனிங்க ஜனனி. வெளியில தெரிஞ்ச வரை அன்புராஜ்கிட்ட ஆபீஸ் பொறுப்பை ஒப்படைச்சதா தெரிஞ்சாலும் நீங்க தான் ஆபீசை உண்மையில் நிர்வாகம் செய்றீங்க. ராமு தாத்தா பேக்டரியில் மெசின்களையும் வொர்க்கர்ஸையும் பார்த்துக்குவாரு. நான் மார்கெட்டிங் என்னானு பார்க்குறேன். சரியா?" என்றாள் மதி. இருவரும் தலையசைத்தனர்.

ஆனால், நிர்வாகம் என்பது அவள் நினைப்பது போல் அத்தனை எளிதல்ல என்பதும், கிட்டத்தட்ட ஒரு மாதம் நிறுத்தப்பட்ட கம்பெனியில் இருந்து வரும் பொருட்களைச் சந்தைப் படுத்துவது கல்லில் நார் உரிப்பது போல் கடினமானது என்பதும் அவளுக்குத் தெரிய வரும் போது மதி என்ன செய்தாள்?

(பரவும்)

பாகம் - 50

உரலுக்கு ஒரு புறம் இடி. மத்தளத்துக்கு இருபுறம் இடி என்பார்கள். மதிக்கு திரும்பிய பக்கமெல்லாம் இடி என்னும் நிலை வந்து சேர்ந்தது. அவள் முன்னால் இருந்த பிரச்னைகளைக் கண்ட மதிக்கு இவையெல்லாவற்றையும் எப்படித் தீர்க்கப் போகின்றோம்? அதன் பின்னால் நடைமுறைப்படி எப்போது நிறுவனத்தை நடத்த ஆரம்பிப்பது? அதன் பின்னால் எப்படி கடன்காரர்களின் கடனைத் தீர்க்க? என்ற கவலை கவ்விக் கொண்டது.

என்ன தான் இயந்திரம், தொழிலாளர்கள் எல்லாம் இருந்தாலும் வெறுங்கையால் முழம் போட முடியாது அல்லவா? வொர்க்கிங் கேபிடல் என்னும் நடைமுறை முதல் தானே ஒரு நிறுவனத்தை இயக்குவது? மூலப்பொருட்களின் இருப்பு கிட்டத்தட்ட முடிவடையும் தருவாயில் இருந்தது. இவளை நம்பி கடனுக்கு யார் மூலப் பொருட்களைத் தருவார்கள்? இன்னும் பத்து நாட்களில் மொத்த தொழிலாளர்களுக்கும் சம்பளம் பட்டுவாடா செய்ய வேண்டும். அதற்கான பணம் தேவை மொத்தம் 40 லட்சம் ரூபாய் என்று மேசையில் அவள் முன்னால் ஒரு பட்டியல் இருந்தது.

இந்தப் பிரச்னைகள் போதாதென்று மகுடம் வைத்தால் போல் ஒரு மாபெரும் பிரச்னை அவளால் எப்படித் தீர்ப்பது என்று தெரியாமல் தவிக்க வைத்தது. மதி நிறுவனத்தின் முக்கிய வியாபாரப் பொருள் சோப் தான். அந்தச் சந்தையை வைத்துத் தான் மற்ற தயாரிப்புக்களையும் விற்பனை செய்து வந்தது நிறுவனம். இந்நிலையில் கடந்த இரண்டு மாதங்களாக சரியாக சந்தையில் மதி நிறுவனப் பொருட்கள் வராதது பலருக்கு சாதகமாயிற்று. முக்கியமாக பன்னாட்டு பிராண்டுகள் உள்ளே நுழையத் துவங்கின. ஆனால் அவை கூட விலை மதி நிறுவன சோப்பை விட அதிகம் தான். இவர்கள் விற்கும் விலையை விட மலிவாக போலி சோப்புகளை சந்தையில் விட்டிருந்தார் ஒரு புண்ணியவான். அச்சு அசப்பில் சட்டென்று பார்த்தவுடனே இது மதி சோப்பு என்று நம்பும் வகையில் வடிவமைக்கப்பட்டு Mathi யில் 'M' க்கு பதிலாக 'N' என்று போட்டு நதி சோப்பாக மாற்றி மொத்த சந்தையையும் தரத்தையும் பாழடித்து, விலையையும் அடிமட்டமாக்கி நாசமாக்கி இருந்தார்கள். முதலில் விற்பனைப் பிரதிநிதிகள் கூட்டத்தில் இதை அவர்கள் சொல்லும் போது கூட அவளால் நம்ப முடியவில்லை. ஆனால் ஒரு கடையில் இவளே நேரடியாகச் சென்று ஒரு மதி சோப்பு கொடுங்க என்று கேட்ட போது அவளுக்கு நதி சோப்பு தான் கிடைத்தது. இது மதி இல்லையே என்று கேட்டதற்கு கடைக்காரர் அந்த சோப்பு இப்போ வர்றதில்ல. அதை விட இது விலையும் கம்மி என்று சொன்னவுடன் வெறுத்தே போய்விட்டாள்.

ஒரு பக்கம் மூலப் பொருட்களின் இருப்பு குறையக் குறைய மற்றொரு பக்கம் உற்பத்தியான பொருட்களின் இருப்பு உயர ஆரம்பித்தது. அதே சமயத்தில் மொத்த மதி நிறுவனச் சந்தையில் பாதிக்கும் மேல் பாதிக்கப் பட்டு இருக்கும் கொஞ்ச நஞ்ச சந்தையையும் இழந்து விடுவோமோ என்ற பயத்தை வெளிக்காட்டினர் விற்பனைப் பிரதிநிதிகள்.

மதி அப்போது நான் நினைத்துக் கொண்டாள். வியாபாரம் செய்வது என்பது அத்தனை எளிதல்ல. அது எத்தனை பெரிய நிறுவனமாய் இருந்தாலும் சரி. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு முடிவும் வியாபாரத்தின் வளர்ச்சியையும் ஸ்திரத் தன்மையயும் சோதிப்பதாகவே இருக்கும் என்பதை உணர்ந்தாள். அன்புராஜ் மனதுக்குள் சந்தோசப் பட்டார். வெளியே எந்த யோசனையும் வராதது போல் காட்டிக் கொண்டார். அல்லது அவர் சொல்லும் யோசனைகள் அனைத்தும் அவள் ஏற்கனவே யோசித்து விற்பனையாளர்களிடம் நடைமுறைப்படுத்தி தோல்வியடைந்ததாகவே இருந்தது.

அழகேசனுக்குக் கூட இத்தனை பிரச்னை இதில் இருக்கும் என்பது தெரியாமல் மதியை மாட்டி விட்டு விட்டோமோ என்று நினைப்பு வந்தது. எல்லோரும் மதி அடுத்து என்ன செய்யப் போகின்றாள் என்ற ஆவலில் இருந்தனர். மதி என்ன செய்யப் போகிறாள்?

(பரவும்)

பாகம் - 51

"சரி இருங்க. யோசிச்சு சொல்றேன். வேறெதுவும் யோசனை வந்தாலும் சொல்லுங்க" என்ற படி வீட்டுக்குக் கிளம்பினாள் மதி. அன்று இரவு முழுதும் விஸ்வேஸ்வரனின் அறையில் இருந்த பல புத்தகங்களை எடுத்து வாசிக்க ஆரம்பித்தாள். இரவு வெகு நேரம் ஆகியும் அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அதிகாலை மணி 3 இருக்கும். இதோ அவளுக்கு யோசனை தரும் புத்தகம் கிடைத்து விட்டது போலும். குழந்தை போல் மார்போடு புத்தகத்தை அணைத்துக் கொண்டு ஒரு துள்ளலில் எழுந்து படுக்கையறைக்குச் சென்றாள். உடல் தூக்கம் வேண்டியது. மனமோ இப்போதே அலுவலகம் செல்லலாமா என்று நினைத்தது. உடலின் அலுப்பு மனத்தை வெல்ல மெல்ல படுக்கையில் ஆழ்ந்தாள்.

அசந்து உறங்கியதில் காலை 11 மணி ஆகியிருந்தது. கண் விழித்துப் பார்த்தவள் விறுவிறுவென்று அலுவலகத்துக்குக் கிளம்பினாள். அங்கே சென்றதும் அவள் ஜனனியையும், ராமு தாத்தா, அன்புராஜ், பேக்கிங் மேனேஜர், விற்பனைப் பிரதிநிதிகள் என்று ஒரு சிறு கூட்டத்தையே தன் அறைக்கு அழைத்தாள். கண்களை மூடிக் கொண்டு ஆணைகளைப் பிறப்பிக்க ஆரம்பித்தாள். அவளது ஆளுமைப் பண்புகளைக் கண்டு அன்று வியக்காதவர்களே இல்லை எனலாம்.

ஜனனியைப் பார்த்து, "நம்மோட காஸ்டிங் கால்குலேஷன்ஸ் எல்லாம் என் முன்னால சீக்கிரம் வரணும். விலையனைத்தையும் மாற்றனும். மினிமம் மார்ஜின் இருந்தாப் போதும். அதிக பட்சம் 10%க்கு மேல வேண்டாம்" என்றாள். அப்புறம் பொதுவாகப் பேச ஆரம்பித்தாள் கண்ணை மூடிக் கொண்டே, "நம்ம போலியை எதிர்க்க கோர்ட் வாசப் படியெல்லாம் இறங்கி ஏறினா இந்த ஜென்மத்துல அவங்களை அழிக்க முடியாது. அதுக்கு நான் ஒன்னு நினைச்சிருக்கேன். இது கிட்டத்தட்ட தற்கொலை முயற்சி தான். ஆனா, மதி நிறுவனத்துக்குள்ள புது ரத்தம் பாய்ச்சிருக்குன்னு பொதுமக்களும் தெரிஞ்சிக்கிற மாதிரி நம்மோட பிராண்ட்ல இருந்து சோப் ரேப்பர் வரைக்கு எல்லாத்தையும் கலர்புல்லா மாடர்னைஸ் பண்ணுங்க. மதிங்கிற பேர் மட்டும் தான் பழசு. மற்ற எல்லாமே, ஐ மீன் எல்லாமே புதுசா இருக்கனும். சோப் சைஸ்ல இருந்து மாற்றம் ஆரம்பிக்கனும். ஆனா க்வாலிட்டில எந்த காம்ப்ரமைஸும் வேண்டாம். அதே மாதிரி இப்போ நம்ம கிட்ட இருக்குற 100கிராம், 200 கிராம், 50கிராம் பேக்கிங்னு இருக்குறதை நிறைய வெரைட்டியா மாத்துங்க. 10கிராமுக்குக் கூட சோப்பு இருக்குடான்னு பேசனும். கிட் பேக், டிராவல் பேக், பேமிலி பேக்னு நிறைய புதுமைகள் கொண்டு வாங்க. அப்புறம் குழந்தைகளை வைத்து எல்லோரும் மூக்கு மேல விரலை வைக்கின்ற மாதிரி ஒரு அட்வெர்டைஸ்மெண்ட் கான்செப்ட் ரெடி பண்ணுங்க. முக்கியமான பத்திரிகைகள், டிவிக்கள் என்று எங்கு பார்த்தாலும் மதி மதின்னு பேச வைக்கனும். கன்ஸூமர் மார்க்கெட்டில் மக்கள் மறக்காத படிக்கு நாம தான் விளம்பரம் தந்துக்கிட்டே இருக்கனும். தரம் நிரந்தரமா இருந்து மக்கள் மறக்காம இருந்தா நாம தான் ராஜா. பழைய டிசைனை போலிகளே கட்டிக்கிட்டு அழுகட்டும். நம்ம விலைக்கு நம்ம தரத்துக்கு யாராலயும் கொடுக்க முடியாதுன்னு நிரூபிக்கனும்! அதைப் பொதுமக்கள் கிட்ட கொண்டு போய் சேர்க்கனும். இது அவ்வளவும் இன்னும் 5 நாட்களுக்குள் நடக்கனும். என்ன ராமு தாத்தா, நம்ம மிசின்ல பல சைஸ்ல சோப்பு ரெடி செய்யலாம்ல?" என்றாள் மதி. ராமு தாத்தா ஆர்வத்துடன் "இப்போ நாம இறக்குமதி பண்ணி இருக்குற மெசின்ல 5 பைசா அளவுல இருந்து 10 கிலோ சைஸுக்குக் கூட சோப்பு செய்ய முடியும். ஆனா இருக்குறதை எப்படி காலி பண்றது?" என்றார் கவலையுடன்.

விற்பனைப் பிரதிநிதிகள் அனைவரும் வாயடைத்துப் போய் இருந்தனர் என்பது அவர்களின் முகங்களிலேயே தெரிந்தது. ஏதோ பழைய பிராண்டு என்று பாதியாவது விற்றுக் கொண்டிருக்கின்றோம். இப்போது அதையும் மாற்றினால் கிட்டத்தட்ட புது கம்பெனி எத்தனை கஷ்டம் அனுபவிக்குமோ அத்தனையும் அனுபவிக்கனுமே

என்ற கவலை அவர்களுக்கு. ஆனால், அடுத்து அவள் சொன்னது அவர்களை இன்னும் இன்னும் ஆச்சரியப்பட வைத்து, உண்மையிலேயே இது தற்கொலை முயற்சி தானோ என்று நினைக்க வைத்தது.

"இப்போ வாங்கிருக்குற மெசினோட புரொடக்சனை எல்லாத்தையும் விற்கனும்னா நம்மோட பழைய மார்க்கெட் மட்டுமே போதாதுல்ல?" என்று ஒரு கேள்வி கேட்டாள் மதி.

அறையே நிசப்தமாய் இருந்தது. "ஆமாம்மா" என்றார் விற்பனை பிரதிநிதி ஒருவர்.

"அப்போ எப்படியும் நாம ஒரு மார்க்கெட்டை உருவாக்கியே தீரணும் தானே?" என்றாள் மதி. மௌனமாய்த் தலையசைத்தனர் சிலர். மற்றவர்கள் அவளையே பார்த்த வண்ணம் இருந்தனர்.

"நான் இதுவரை சொன்ன புதுமைகள் எல்லாமே இப்போது நமக்கு இருக்கும் மெயின் கோர் (Core) மார்க்கெட்டுக்கு என்று நினைத்தால் தயவு செஞ்சு அதை மாத்திக்கிங்க. இது எல்லாமே நம்ம மார்க்கெட்டுக்கு இல்ல. அதைச் சுத்தி இருக்குற சில்லறை மார்க்கெட்டுக்கும், பக்கத்து ஸ்டேட்டுகளுக்கும் தான். நாம உருவாக்கப் போறது நம்ம புராடக்டுக்கு புது மார்க்கெட். அங்கே நடக்குற மாற்றங்களைக் கண்டே நம்ம மெயின் மார்க்கெட்ல எனக்கும் அது மாதிரி வேணும்னு இங்கே நம்மோட ரெகுலர் கஸ்டமர்ஸ் கேட்கனும். அப்போ நம்ம இங்கே நம்மோட ராஜ்ஜியத்தை ஆரம்பிக்கலாம்."

"அது வரை நம்மோட பழைய ஸ்டாக் எல்லாத்தையும் அடக்கத்துக்கே விற்குறதுன்னு முடிவு செஞ்சிருக்கேன். ஸ்டாக் கிளியரன்ஸுன்னு சொல்லுங்க எல்லாக் கடைக்காரங்க கிட்டயும். கொஞ்ச நாளைக்கு நல்ல விலைக்கு வித்து லாபம் அனுபவிக்கட்டும்." என்றவள், "இது பத்தி என்ன நினைக்கிறீங்க?" என்று கேட்டாள்.

(பரவும்)

பாகம் - 52

அனைவரும் மௌனமாகவே இருந்தனர். "மௌனம் சம்மதம்னு எடுத்துக்கலாமா?" என்றாள் மதி.

"இதுக்கு நிறைய செலவாகுமே? ஏற்கனவே நாம பள்ளத்துல இருக்கோம். இன்னும் பள்ளம் தோண்டிக்கிட்டே இருந்தா எப்படி?" என்று திருவாய் மலர்ந்தார் அன்புராஜ். "ஏன் இப்படி வைத்துக் கொள்ளக் கூடாது? நாம் பள்ளத்தில் இருக்கோம். வெளியே இருந்து மண் கொண்டு வந்து மேடாக்கி நாம மேல வர முடியாத நிலைமை. இன்னும் பள்ளத்தைத் தோண்டி அதில் படி கட்டி வெளியே வரும் முயற்சி தான் இது." என்று அதற்கும் ஒரு பதில் வைத்திருந்தாள் மதி.

"சரி. செலவோட செலவாய் இதைச் செய்து விட வேண்டியது தான். நம்ம எல்லாரோட வேலையும் இப்பவே ஸ்டார்ட் ஆகுது. அடுத்த வாரம் நம்ம கம்பெனி புது மதி புராடக்ட்ஸை லாஞ்ச் பண்ணுது. ஓகே?" என்றாள் மதி.

அடுத்த ஒரு வாரம் யாருக்குமே ஓய்வு ஒழிச்சல் இல்லை. 24 மணி நேரம் காணவில்லை போல இருந்தது. மதி கிட்டத்தட்ட அலுவலகம் தொழிற்சாலை என்றே தன் பகலையும் இரவையும் கழித்தாள். ஒரு பக்கம் புது டிசைனில் பிராண்டும், கவர்களும் வடிவமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு பக்கம் அட்வெர்டைஸ்மெண்ட் வேலை. ஒரு பக்கம் சோப்பிற்கான அச்சு - டை செய்யும் வேலை. ஒரு பக்கம் அடக்க விலை பார்த்து விலை வைக்கும் வேலை. ஒரு பக்கம் புது மார்க்கெட் என்று எந்தெந்த பகுதியை டார்கெட் செய்யலாம் என்று அனைத்து விற்பனை பிரதிநிதிகளையும் அனுப்பி குட்டி சர்வே ரிப்போர்ட் என்று படு பிசியாய் இருந்தாள் மதி. அனைத்திலுமே மதி இருந்தாள் என்று சொல்ல வேண்டும். எங்கு திரும்பினாலும் அவள் முகம் தெரிந்தது. இதுவே கிட்டத்தட்ட 10 லட்ச ரூபாய் வரை முழுங்கி விட்டது. பழைய டிசைன்கள் அப்படியே ஓரங்கட்டப் பட்டன. அவள் தொழிற்சாலையும் அலுவலகமும் புதுமையில் உழன்றது.

இதோ சரியாக ஒரு வாரம். நினைத்த படி திருப்தியாக புதிய கார்ட்டூன் வடிவ பிராண்ட், புதிய ப்ராடக்ட் டிசைன்கள் என்று வந்திருந்ததில் மகிழ்ச்சியாய் இருந்தது மதிக்கு. இது மட்டும் வெற்றி பெற்று விட்டால் தன்னுடைய கனவை எப்படியும் நிறைவேற்றி விடலாம் என்று மனக்கணக்கு போட்டாள் மதி.

மறுநாள் இதோ கன்னட டிவியில் தமது புராடக்ட் விளம்பரம் ஜொலிப்புடன் வரப்போகின்றது பாருங்கள் என்று அம்மாவையும் வற்புறுத்தி காலையிலேயே அருகில் உட்கார வைத்து டிவியின் முன் உட்கார்ந்து கொண்டிருந்தாள் மதி. "செய்திகளுக்கு முன் வரப்போகும் விளம்பரம் தான் அம்மா" என்று சொல்லி தயாராக இருந்தனர்.

சரியாக, மிகச்சரியாக மதி நிறுவன விளம்பரம் வரும் போது தானா மின்சாரம் தடை பட வேண்டும்? ஐந்தே நிமிடத்தில் மீண்டும் மின்சாரம் வந்த போது மதியின் கன்னமெங்கும் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. தன் உழைப்பெல்லாம் வீணாகப் போகுமோ? நான் துரதிருஷ்டக்காரி போலும் என்று மதி நினைத்து பொருமிக் கொண்டிருந்தாள். அவளை எப்படித் தேற்றுவது என்றே மாலதி நினைத்தார். "ச்சே ச்சே இதுக்கெல்லாமா மனசு உடைஞ்சு போவாங்க? உன்னோட திருஷ்டி எல்லாம் இதுல கழிஞ்சு போச்சுன்னு நினைச்சுக்கோ" என்றார் அவள் தலையைக் கோதிய படி. அம்மா மேல் சாய்ந்து கொண்டாள் மதி.

அன்று காலை வழக்கம் போல் அலுவலகம் சென்றாள். ஏதோ புயல் வந்து ஓய்ந்த அமைதி இருந்தது. விற்பனைப் பிரதிநிதிகள் யாருமே இல்லை. அனைவரும் புதிய மார்க்கெட் பகுதிகளுக்கு பொருட்களை அறிமுகம் செய்து வைக்கப் போய் விட்டனர். ஒரு கடை விடாமல் மாதிரியைக் கொடுக்கச் சொல்லியிருந்தாள் மதி.

நான்கு நாட்கள் இப்படியே கழிந்தது. பிரதிநிதிகள் அனைவரும் வந்து விட்டனர். விளம்பரம் நல்ல முறையில் செய்திருப்பதாகவும், பிராண்ட் பற்றி கடைக்காரர்கள் அறிந்திருந்ததாகவும் ஒவ்வொரு கடையிலும் கொஞ்சம் மாதிரி பொருட்கள் கொடுத்திருப்பதாகவும் நம்பிக்கையுடன் சொன்னார்கள். "சரி விடாதீர்கள். இது வாழ்வா சாவா போராட்டம். இதில் நாம் வென்றே ஆக வேண்டும்." என்றாள் மதி உற்சாகத்துடன்.

ஆனால் அவள் உற்சாகம் எல்லாம் ஒரே வாரத்தில் வடிந்து விட்டது. கடைக்காரர்களிடம் எத்தனை முறை கேட்பது? "இன்னும் ஒருத்தரும் வாங்கல. வேணுமின்னா திருப்பி எடுத்துக்கோங்க" என்ற பதிலே அவர்களிடம் இருந்தது.

"நாம எல்லாமே சரியாகத் தானே செஞ்சிருக்கோம்? இத்தனைக்கும் குறைந்த விலையில் நல்ல தரமான பொருள். இத்தனை விளம்பரம் இருந்தும் மக்கள்ட்ட ரீச் ஆகலியே? இப்போ என்ன பண்றது?" என்று தலையில் கை வைத்து உட்கார்ந்து இருந்தாள் மதி.

ஆனால் அடுத்த வாரம் நிகழ்ந்த அதிசயம்...

(பரவும்)

பாகம் - 53

பைத்தியம் பிடித்தது போல் இருந்தாள் மதி. ஏதோ இயந்திரம் போல் அலுவலகத்துக்கு வந்து போய்க் கொண்டு இருந்தாள். ராமு தாத்தா அவளைப் பார்க்க வந்திருந்தார். "சொல்லுங்க தாத்தா" என்றாள் மதி. அவளுக்கும் தாத்தா ஆகியிருந்தார் அவர். "நீங்க எதிர்பார்த்த புரொடக்சன் இன்னும் ஒரு வாரத்துக்கு கிடைக்காதும்மா". என்றார் ராமு. "ஏன்?" என்று கேட்ட மதி, "இதுவரைக்கும் பேக்டரியில தான் பிரச்னை இல்லைன்னு நினைச்சேன். இப்போ அங்கேயும் வந்தாச்சா" என்று நினைத்துக் கொண்டாள். "கிட்டத்தட்ட 40 பேரு லீவுல போறாங்க" என்றார். எரிச்சலுடன் மதி, "போகச் சொல்லுங்க. இப்போ என்ன அதுக்கு? நல்லது தானே?" என்றாள். அமைதியாய் நின்றிருந்தார் ராமு தாத்தா. "லீவு சம்பளமெல்லாம் தரமாட்டேன்னு சொல்லிருங்க" என்றாள் மதி. "அதெப்படிக் கேப்பாங்க. ஒரு வாரம் தாம்மா. அதுக்கப்புறம் வந்திருவாங்க" என்றார். "அப்படியே போகனும்னாலும் போகச் சொல்லுங்க" என்று சொல்ல நினைத்தாள். ஆனால் சொல்லவில்லை. கண்ணை மூடிக் கொண்டாள். திறந்து பார்க்கும் போது ராமு தாத்தா அங்கே இல்லை.

அடுத்த வாரம் முடிந்தது. கிணற்றில் போட்ட கல்லாய் மார்க்கெட் அமைதியாக இருந்தது. முதன் முறையாக ஒரு பிரதிநிதி போன் செய்து அவளிடம் மகிழ்ச்சியுடன் "இப்போ தான் ஒரு கடைக்காரர் நம்ம புராடக்டைக் கேட்டிருக்காரு" என்று சொல்லும் போதே மதிக்கு கண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. கொஞ்சம் நிம்மதியுடன் சாப்பிட்டாள் அன்று.

அதற்கடுத்த இரண்டு மாதங்கள் நடந்தவை அனைத்தும் மதி நிறுவன சரித்திரம்.

அன்புராஜ், விமல், தனுஷ்கோடி, அழகேசன், ஜனனி, ராமு தாத்தா ஏன் மதியே நினைத்திருப்பாளா இப்படி எல்லாம் நடக்குமென்று?

கொஞ்சம் கொஞ்சமாய் ஆர்டர் வர ஆரம்பித்தது. ஒருமுறை வாங்கியவர்கள் மறுமுறை வாங்க ஆரம்பித்தார்கள். புதுமார்க்கெட் சூடு பிடிக்க ஆரம்பித்தது. மதி நிறுவனப் பொருட்கள் வியாதி போல் பரவ ஆரம்பித்தது! இதையெல்லாம் பெரிய இடைத்தரகர்கள் பார்க்காமலா இருப்பார்கள்? அந்தந்த மார்க்கெட்டுக்கு என்று பெரும் இடைத்தரகர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு எந்த ப்ராண்டு என்பதெல்லாம் கணக்கு கிடையாது. பணம் வைத்திருப்பவர்கள் அவர்கள். அப்போது எந்த பொருள் மார்க்கெட்டில் விலை போகின்றதோ அந்தப் பொருளுக்கு அவர்களே ஒரு விலை வைத்து மொத்தமும் வாங்கி விடுவார்கள். எப்போதும் மார்க்கெட் அவர்கள் கையில் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு மார்வாடி பாசத்துடன் மதி நிறுவன விற்பனைப் பிரதிநிதியை அன்று வரவழைத்திருந்தார்.

இது வரை அந்தப் புதிய பிரதிநிதி கேட்டிராத 100000 பெட்டி சோப் வேண்டும் என்று ஆர்டர் அளவைச் சொன்னதும் மனதுக்குள் மகிழ்ந்தார் அந்தப் பிரதிநிதி. மொத்த பணமும் ரொக்கமாவே தர்றேன். எனக்கு சரக்கு எப்போ கிடைக்கும் ? என்றார் அந்த மார்வாடி. பழைய பிரதிநிதி என்றால் அவர் இதற்கெல்லாம் ஒத்துக் கொள்ளவே மாட்டார். ஏனென்றால் விஸ்வேஸ்வரனின் பயிற்சி அப்படி. எந்த இடைத்தரகருக்கும் ஒரு அளவுக்கு மேல் சரக்கு கொடுக்க மாட்டார் விஸ்வேஸ்வரன். ஒரே கூடைக்குள் அத்தனை முட்டையையும் வைக்கக் கூடாது என்பார்.

ஆனால் இது தெரியாத அந்தப் புதியதாய் வேலைக்குச் சேர்ந்திருந்த மதியின் பிரதிநிதியோ, "நேரடியாக நீங்க எங்க எம்.டி. கிட்டயே பேசுங்க." என்று மதியின் செல்பேசி எண்ணைத் தந்து விட்டார். மார்வாடி என்று தான் பெயர். அழகிய தமிழில் மதியிடமே அவர் பேசினார். அப்போது அழகேசன் காரோட்ட மதி பயணித்துக் கொண்டிருந்தாள். மதிக்கு பெரிய தொகையில் பெரிய ஆர்டர் கிடைத்த சந்தோசத்தில் சரக்கை உடனே அனுப்பி

வைப்பதாகவும், பணத்தை டி.டி.யாக எடுத்து அனுப்புங்கள் என்றும் மரியாதையாகச் சொல்லி விட்டு நிம்மதிப் பெருமூச்சு விட்டபடி அழகேசனிடம் "அப்பாடா 15 நாள் பிரச்னை தீர்ந்தது. பெரிய பார்ட்டியே நம்ம பக்கம் வந்தாச்சு" என்றாள் சந்தோசத்துடன் அழகேசனிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டபடி.

போய்க்கொண்டிருந்த கார் சடக்கென்று நின்றது. "என்ன ஆச்சு?" என்றாள் மதி. "என்னவோ பெரிய பார்ட்டின்னு சொன்னீங்களே? அவருக்குத் தான் சரக்கை அனுப்புறதாச் சொன்னீங்களா?" என்றான் அவசரமான குரலில் அழகேசன். இவனுக்கென்ன அதனால என்று நினைத்தாள் மதி. "ஆமா" என்றாள். "உங்க செல்போன்ல உடனே அந்த நம்பரை திரும்பப் போட்டு அது முடியாதுன்னு சொல்லுங்க." என்றான் அழகேசன். "எவ்வளவு பெரிய ஆர்டர்? அதுவும் கேஷ் ஆர்டர். அதைப் போயி ஏன் வேண்டாம்னு சொல்லனும்?" என்றாள் மதி. "நீங்க முதல்ல சொல்லுங்க" என்றான் அழகேசன் விட்டுக் கொடுக்காமல். மதிக்கே ஆச்சரியமாய் இருந்தது. அழகேசனா இப்படி என்று. ஒருவேளை இவனும் அன்புராஜ் கோஷ்டியுடன் சேர்ந்து விட்டானோ என்று நினைத்தாள். "நானே அனுப்புறேன்னு சொல்லிட்டு என்னாலேயே மாட்டேன்னு சொல்ல முடியாது" என்றாள் மதி. அவளுக்கு இந்த ஆர்டரை விட மனதில்லை. "நீங்க உங்க செல்போனைக் கொடுங்க. நான் பேசுறேன்." என்று கேட்டான் அழகேசன். "நான் சொல்றேன்னா அதுல அர்த்தம் இருக்கும். கொடுங்களேன்" என்றான் அழகேசன்.

தயக்கத்துடனே கொடுத்தாள் மதி.

கடைசியாக வந்த எண்ணுக்கு அழைத்தான் அழகேசன். மறுமுனையில் மார்வாடி எடுத்துப் பேசினார். "நான் தான் மதி கம்பெனி சீப் சேல்ஸ் ரெப் குமார் பேசுறேன் சார். எங்க மேடம் இப்போ தான் உங்க ஆர்டரைப் பத்திச் சொன்னாங்க. சாரி சார். அவங்க ஸ்டாக் பாக்காமயே சொல்லிட்டாங்க. நீங்க கேட்ட அளவுக்கு எங்களால உடனே சரக்கு சப்ளை செய்ய முடியாது. இன்னும் பத்து நாளாவது ஆகும்." என்றான் அழகேசன். எதிர்முனையில் எதிர்பார்க்கவில்லை என்பது இவனுக்கு தெரிந்தது. "ஏன்? உங்க முதலாளியே சொன்னாங்களே?" என்றார் மார்வாடி. "அவங்களுக்கு என்ன சார் தெரியும்? நாங்க தான் சார் பீல்டுல இருக்குறவங்க. வேணும்னா உங்க ஆர்டரை புக் பண்ணிக்கிறோம். ஏற்கனவே அந்த ஏரியாவுல புராடக்ட் டிமாண்ட் ரொம்ப ஜாஸ்தியா இருக்கு. உங்களுக்கு வேணும்னா எங்க எம்.டி. சொன்னதுக்காக 10000 பாக்ஸ் உடனே அனுப்பி வைக்கிறேன். அது தான் என்னால முடியும். உங்க ஆர்டரை புக் செஞ்சிக்கிறேன். கொஞ்சம் கொஞ்சமா சப்ளை செய்றோம்." என்றான் அப்பாவியாய். "சரி. சரி. அதாவது உடனே அனுப்பி வைங்க" என்ற படி போனை கட் செய்தார் மார்வாடி.

"இப்போ நீங்க 15000 பாக்ஸ் அவருக்கு அனுப்பச் சொல்லி நம்ம ரெப்புக்கு சொல்லுங்க" என்றான் அழகேசன் செல்போனைத் திருப்பித் தந்த படி. மதிக்கு ஒரே குழப்பம். "100000 பெட்டி சரக்கு நம்மிடம் இருந்தும் 10000 பாக்ஸ் தான் தர முடியும்னு சொல்லிட்டு இப்போ 15000 அனுப்பச் சொல்றானே?" என்று குழப்பத்துடன் பார்த்தாள் அழகேசனை. "என்னம்மா பார்க்கிறீங்க. இதெல்லாம் நம்ம ஐயா டெக்னிக். நம்ம கிட்ட ரொம்ப சரக்கு இருக்குங்குறது அவனுக்குத் தெரிஞ்சா எங்கே மூவ் ஆகாததை நமக்குக் கொடுக்குறாங்களோன்னு நினைப்பான். அதுக்காக குறைவாச் சொல்லிட்டு, கொஞ்சம் அதிகமா அனுப்பி வைச்சா சரி, நமக்காக கம்பெனி கவனம் வைச்சு அனுப்பி வைக்குதேன்னு நினைச்சுக்குவான். தொழில் ஒரு விளையாட்டு. யார் கண்ணை யார் கட்றாங்கன்றதுல தான் வெற்றி தோல்வியே நிர்ணயிக்கப் படும்." என்று அடுத்த பாடத்தை அவளுக்குக் கற்றுக் கொடுத்தான் அழகேசன். ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்த மதி அப்போதிலிருந்து நிதான மதியானாள். அதிலேயே நிம்மதியுமானாள்.

(பரவும்)

பாகம் - 54

அவன் சொன்ன விஷயத்தை அப்படியே அடுத்த பிரதிநிதிகள் கூட்டத்தில் சொன்ன போது, மூத்த பிரதிநிதிகள் எல்லோரும் நல்ல காரியம் செய்தீர்கள். இப்படிப்பட்ட பெருந்திமிங்கலங்களிடம் நாம் மாட்டிக் கொள்ளக் கூடாது. இதிலெல்லாம் உங்கப்பாவோட அணுகுமுறை தான் சரி. அவங்க மூலமா நம்ம காரியத்தைச் சாதிச்சிக்கனும். அதே சமயத்துல அவங்களை வெட்டி விடவும் முடியாது என்றனர்.

அதிலிருந்து அழகேசன் மேல் இருந்த பார்வை மாற ஆரம்பித்தது மதிக்கு. முக்கியமான முடிவுகளுக்கு அவனையும் கேட்க ஆரம்பித்தாள்.

அடுத்த இரண்டு மாதங்கள் எப்படி ஓடியது என்றே தெரியவில்லை. வேகமாய் உருண்டோடியது. ஆர்டர் வர. அதற்கு சப்ளை செய்ய என்று வழக்கமாக ஓட ஆரம்பித்தது வண்டி. திடீரென்று இறக்குமதி செய்யப்பட்ட மெசின் ஓடாமல் நின்ற போது தான் கொஞ்சம் பாதிக்கப்பட்டது உற்பத்தி. அதற்கு மெசின் தயாரிப்பாளரான ஜப்பான் நிறுவனத்தில் இருந்தே இஞ்சினியரை வரவழைக்க வேண்டியிருந்தது. அங்கிருந்து வந்த ஆளைப் பார்த்ததும், இவருக்காக ஐந்து லட்சம் செலவு செய்து வேறு அழைக்க வேண்டியிருக்கின்றதே என்று நினைத்தாள் மதி.

ஆனால் வந்த மனிதர் செய்த வேலைகள் வேடிக்கையாக இருந்ததோடன்றி ஆச்சரியமாயும் இருந்தது. அனுபவமான ஒருவர் இந்த இயந்திரம் ஆபரேட் செய்யத் தெரிந்தவர் வேண்டும் என்றார் அவர். ராமு தாத்தா தான் அவருடன் இருந்தார். சில சைகைகள் பற்றி அவருக்குச் சொல்லிக் கொடுத்தார் நிபுணர். அவருக்கோ ஆங்கிலம் கொஞ்சம் தான் தெரிந்தது. ராமு தாத்தாவுக்கோ ஆங்கிலமும் தெரியாது. மதிக்கு வெளிநாட்டுக்காரர் என்றால் ஏற்பட்ட ஆர்வமும், மெசின் உடனே ஓட வைக்க வேண்டும் என்ற தேவையும் இருந்ததால் கூடவே இருந்து அவள் தான் அவர் சொன்ன சைகைகள் அனைத்தும் ராமு தாத்தாவுக்கு விளக்கினாள்.

ஒரு அறை முழுதும் பரவியிருந்த அந்த மெசினைக் கழட்டிய அவர் உள்ளே சென்று விட்டார். ஒரு கை மட்டும் வெளியே காட்டும் படி ஒரு அமைப்பு இருந்தது அதில். அப்போது தான் அவர் சைகைகள் பற்றிச் சொன்னதே ஏனென்று ராமு தாத்தாவுக்கும் மதிக்கும் புரிந்தது. உள்ளே இருந்த வண்ணம் சைகை காட்ட காட்ட, ராமு தாத்தா சைகைப்படி இயக்க அந்த இயந்திரம் அந்த மனிதர் உள்ளே இருக்கவே இயங்க ஆரம்பித்தது. ஜப்பான்காரன் ஜப்பான்காரன் தான் என்று ராமு தாத்தாவும் ஆச்சரியப்பட்டார். மூன்று மணி நேரத்தில் மீண்டும் இயந்திரம் ஓட ஆரம்பித்தது. வெளியே வந்த அந்த நிபுணர் ராமு தாத்தா முதுகைத் தட்டிக் கொடுத்தார். அவருக்கு பெருமிதம் பிடிபடவில்லை. சுற்றி இருந்த தொழிலாளர்கள் கைத்தட்டி உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

மார்க்கெட் கொஞ்சம் கொஞ்சமாய் சரியாக ஆரம்பித்தது. வெளியே பார்த்துக் கொண்டிருந்த மதி அப்போது தான் கம்பெனியின் உள்ளே பார்க்க ஆரம்பித்தாள். தொழிற்சாலைக்குள்ளும் அவளது விசிட் இருந்தது தினமும். ஒவ்வொரு மிசினும் என்ன வேலை செய்கின்றது. அதன் பெயர் என்ன? எத்தனை ஆண்டுகள் ஆகின்றன. அவற்றின் அதிக பட்ச வெளியீடு என்ன என்பதைப் பற்றியெல்லாம் ஆர்வத்துடன் தெரிந்து கொண்டிருந்தாள். தொழிலாளர்களின் பெயர் முதற்கொண்டு பழக்கத்துக்கு வந்திருந்தது. அவள் அப்படி உள்ளே வந்து கலந்து கொண்டது ராமு தாத்தாவுக்கு ரொம்ப மகிழ்ச்சியாய் இருந்தது. பழைய விஸ்வேஸ்வரனைப் பார்த்த சந்தோசம் அவருக்கு. அவளும் ராமு தாத்தா என்று வளைய வந்தாள்.

மதி நிறுவனம் இத்தோடு அவ்வளவு தான் என்று நினைத்திருந்த அன்புராஜ், தனுஷ்கோடி, விமல் மூவருக்குமே எதிர்பார்க்க முடியாத ஏமாற்றம் தந்திருந்தாள் மதி. அதுவே தனுஷ்கோடிக்கும் விமலுக்கும் தன்மானப் பிரச்னையாகி உத்வேகமளித்தது என்று சொல்ல வேண்டும். மூன்று மாதங்களில் விமல் கம்பெனி தன் பொருளை

வெளியிடத் தயாராக இருந்தது. மதிக்கும் அவ்வப்போது விமல் கம்பெனி பற்றித் தகவல் காதில் விழும். கண்டு கொள்ள மாட்டாள். கடனை அடைக்கும் வரை எதையும் பார்ப்பதில்லை என்ற முடிவில் இருந்தாள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. அலுவலகமும் விடுமுறையில் இருந்ததால் மதி வீட்டில் ஓய்வில் இருந்தாள். அவளது நெருங்கிய கல்லூரித் தோழி விமலா வெகுநாட்களுக்குப் பிறகு மதியின் வீட்டுக்கு வந்திருந்தாள். அன்று மாலை வடபழனி முருகன் கோவிலில் வைத்து அவளைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வருவதாகவும் அவளுக்குத் துணையாக வரமுடியுமா என்று அவளை அழைக்கவும் வந்திருந்தாள். “ஏண்டி உனக்கு கொஞ்சமாவது அறிவிருக்கா? என்னைப் போயி கூப்பிட்றியே. வர்ற மாப்பிள்ளை எனக்குப் பொண்ணு வேண்டாம். அந்தப் பொண்ணோட தோழி போதும்னு சொல்லிருவாரே” என்று அவளைக் கலாய்த்தாள் மதி. வெகுநாட்களுக்குப் பிறகு மகிழ்ச்சியுடன். “ச்சீ. போடி. எனக்கு என்ன அக்கா தங்கச்சியா இருக்காங்கன்னு உன்னைக் கூப்பிட வந்தேன். இப்போ வர்றியா இல்லையா?” என்றாள் பொய்க்கோபத்துடன் அவளது தோழி. “சரி வர்றேன். எப்போ வரணும்?” என்றாள் மதி. “நீ ஒன்னும் வர வேண்டாம். நானே வந்து உன்னைக் கூப்பிட வர்றேன். சாயங்காலம் 4 மணிக்கு ரெடியா இரு.” என்று சொல்லிவிட்டுச் சென்றாள்.

மதிக்கும் கோவிலுக்குச் செல்வதில் மிகுந்த ஆசை. கடவுளுக்கு நன்றி சொல்லவே இல்லையே. இன்று செய்து விட வேண்டியது தான். என்று நினைத்துக் கொண்டாள். கஷ்ட காலம் வரும் போது மட்டும் கடவுளை நினைப்பவர்கள் மத்தியில் நன்றாக இருக்கும் போது கடவுளை மதி நினைத்தது ஆச்சரியம் தானே? சொன்ன படி அலங்கரித்துக் கொண்டு வந்த தோழியுடன், மிகக் குறைந்த மேக்கப்புடன் சிம்பிளாக கிளம்பினாள் மதி.

கோவிலில் கூட்டம் மிக அதிகமாக இருந்தது. அங்கே அவளுக்கு ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. அர்ச்சனைச் சீட்டு எடுக்கும் இடத்தில் அழகேசன் கையில் அர்ச்சனைத் தட்டுடன் நின்று கொண்டிருந்தான். மதியை அவன் கவனிக்கவில்லை. மதி அழகேசனை அந்த இடத்தில் எதிர்பார்க்கவில்லை. அவனைக் கண்டு கொள்ளாமல் தோழியுடன் உள்ளே சென்றாள். மாப்பிள்ளைப் பையன் வந்து விமலாவை ஓகே என்று சொன்னதும் இருவருக்குமே மகிழ்ச்சி தாங்கவில்லை. சரி சாமி கும்பிட்டு வருவோம் என்று கிளம்பினர். அங்கே அழகேசன் அப்போது தான் அர்ச்சனைத் தட்டை அர்ச்சகரிடம் கொடுத்தான். “யார் பேருக்கு அர்ச்சனை செய்யனும்?” என்று கேட்டார் அர்ச்சகர். “ஜனனி” என்று அழகேசன் சொன்னதும், மதி துணுக்குற்றாள்.

ஜனனி பேருக்கு எதற்கு அர்ச்சனை செய்ய வேண்டும்? இருவருக்கும் என்ன தொடர்பு? ஒருவேளை இருவருக்குள்ளும் காதல் இருக்குமோ? அதனால் தான் ஜனனி வீட்டில் கூட்டத்தை வைத்துக் கொள்ளலாம் என்று அன்று அழகேசன் சொன்னானோ? என்ற குழப்பத்துடனே வீட்டுக்குக் கிளம்பினாள். நமக்குத் தெரியாமல் எத்தனை விஷயம் இப்படி நடக்குது? என்றும் நினைத்துக் கொண்டாள்.

(பரவும்)

பாகம் - 55

அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் அழகேசனைப் பார்த்தாலும் சரி ஜனனியைப் பார்த்தாலும் சரி எரிந்து விழ ஆரம்பித்திருந்தாள் மதி. அவளுக்கே அது குழந்தைத்தனமாய்த் தோன்றினாலும் அதைத் தவிர்க்க நினைத்தாலும் அவளால் முடியவில்லை. இருவரிடமும் நேருக்கு நேர் கேட்கவும் விருப்பமில்லை அவளுக்கு.

ராமு தாத்தாவுடன் ஒருநாள் தொழிற்சாலைக்குள்ளே நடந்து போய்க் கொண்டிருக்கும் போது “இந்த சேம்ப்பிளை வீட்டுக்கு அனுப்பனும்.” என்று அவர் கையில் கொடுத்தாள் மதி. உடனே அவர் அங்கிருந்த ஒரு தொழிலாளியைக் கூப்பிட்டு, வெளியே காரில் அழகேசன் இருப்பான். அவனிடம் கொடுத்து விடு என்று கொடுத்தார். அவ்வளவு தான் மதிக்குக் கோபம் வந்து விட்டது. “அழகேசன். அழகேசன்னு எல்லாரும் ஏன் தான் அவன் பின்னாலேயே போறீங்களோ?” என்றாள் மதி வெடுக்கென்று.

ராமு தாத்தா சிரித்துக் கொண்டே, “ஏம்மா! அழகேசன் நல்ல பையன் தானம்மா? தங்கமான பையன்.” என்று சர்டிபிகேட் வேறு கொடுத்தார். “ஆமா. நீங்க தான் மெச்சிக்கனும்” என்றாள் மதி. அவள் ஏதோ அவனைப் பற்றித் தவறாகப் புரிந்து கொண்டிருக்கின்றாள் என்று அவளது வேகத்தைப் பார்த்ததும் தெரிந்து கொண்டார் ராமு தாத்தா.

அப்போது அவர் ஒன்றுமே பேசவில்லை. மாலை அவள் சாவகாசமாய் இருக்கும் போது அவளது அறைக்குள் நுழைந்தார் ராமு தாத்தா. “உங்க கிட்ட ஒன்னு சொல்லனும்.” என்றவரை உட்காரச் சொன்னாள். “சொல்லுங்க” என்றாள்.

“அன்னைக்கு ஒரு நாள் 40 பேரு ஒரு வாரம் லீவு போட்றதாச் சொன்னேன் ஞாபகம் இருக்கா உங்களுக்கு?” என்றார். “ஆமா.” என்றாள் இப்போது சற்றுக் குழப்பத்துடன்.

“அது அவங்களாப் போட்ட லீவு இல்லம்மா. அழகேசன் சொல்லிப் போட்டது.” என்றதும் அவளுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. இப்போதும் அழகேசன் புராணம் ஆரம்பிச்சாச்சா என்பது போல் பார்த்தாள். “அழகேசனா?” என்றாள் ஆர்வமாய்.

நம்ம புது ஏரியாவுக்கு சரக்கு எல்லாம் அனுப்புன நேரம். சரக்கு விக்றதுக்கு கஷ்டப்படுதுன்னு எல்லோரும் பேசும் போது மனசு ரொம்பக் கஷ்டப்படும். அப்போ தான் எங்க வீட்டுக்கு வந்து இந்த ஐடியா சொன்னான் அழகேசன். கம்பெனிக்கு விசுவாசமா இருந்த நாற்பது பேரத் தேர்ந்தெடுத்தோம். ஒரு வாரம் லீவு போடச் சொன்னோம். நம்ம தொழிலாளிங்க எல்லார் கையிலும் இருந்த ரூபாய் எல்லாம் திரட்டினோம். மொத்தமா அவங்க கையில கொடுத்தோம். எல்லோரும் நம்ம புது மார்க்கெட்டுக்குப் போக வேண்டியது. அங்கிருக்கும் கடைகளில் மதி சோப்பு வேணும்னு கேட்க வேண்டியது. வாங்க வேண்டியது. இது தான் அவங்க வேலை. இன்னைக்கும் எங்க வீட்டில துவைக்கிறது அப்போ வாங்கின சோப்பு தாம்மா. என்ன தான் நாம விளம்பரம் செஞ்சாலும், மக்கள் இரண்டு பேரு வேணும்னு கேட்டாத் தான் கடைக்காரன் சோப்பை எடுக்குற இடத்துல வைப்பான். அப்போ தான் அது முன்னால இருக்கும். மதி சோப்புன்னு கேட்டா நம்ம சோப்பைக் கொடுக்கக் கூடாது. சோப்புன்னு கேட்டாலே மதி சோப்பைத் தான் எடுத்துக் கொடுக்கனும்னு அழகேசன் சொன்னான். அது படி நடந்தோம்.” என்றார்.

இதைக் கேட்டதும் மனம் ரொம்ப நெகிழ்ந்து போய் விட்டாள் மதி. “இதை என் கிட்ட அப்பவே சொல்லிருக்கலாம்ல. எனக்காக இத்தனை பேரு கஷ்டப்பட்டதை நினைச்சா எனக்கே ரொம்ப வெக்கமா இருக்கு. நாங்க செஞ்ச எல்லாத்தையும் விட, நீங்க செஞ்சதால தான் நம்ம கம்பெனியே இப்போ நிக்குது.” என்று

சொல்லும் போதே அவள் குரல் கம்மியது. கண்களில் நீர் எட்டிப் பார்த்தது. “ச்சே அப்படில்லாம் பெரிய வார்த்தை சொல்லாதீங்கம்மா. நாங்க எங்க கடமையைத் தான் செஞ்சோம். ராமர் பாலத்துல அணில் செஞ்ச வேலை தான் நாங்க செஞ்சது.” என்றார் ராமு தாத்தா. அங்கு ஒரு கனத்த மௌனம் நிலவியது.

நிலைமையைக் கலகலப்பாக்க நினைத்த ராமு தாத்தா, “உங்களுக்கு இன்னொன்னும் சொல்லனும். அழகேசனுக்குன்னு யாருமே கிடையாது. அவனோட வாழ்க்கை பத்தி எல்லாத்தையும் என்கிட்டச் சொல்லிருவான். ஆனா அவன் இப்போ ஒரு பொண்ணைக் காதலிக்கிறான்.” என்றார் ராமு தாத்தா.

“அந்தப் பொண்ணு யாருன்னு எனக்குத் தெரியும்.” என்றாள் சடாரென்று மதி.

“அட! எனக்கே சொல்லாம டபாய்ச்சிக்கிட்டு இருக்கான் அவன். உங்களுக்குத் தெரியுமா?” என்றார் ராமு தாத்தா மித மிஞ்சிய ஆர்வத்தோடு.

“ஆமா. நானே என் கண்ணால பார்த்தேன் அந்தக் கண்றாவியை.” என்றாள் மதி வெறுப்புடன்.

“யாரு அது?” என்றார் ராமு தாத்தா.

“ஜனனி” என்றாள் மதி.

இடி இடியென்று அவர் சிரித்ததைப் பார்த்ததும் இந்தக் கிழடுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று தான் நினைத்தாள் மதி.

(பரவும்)

பாகம் - 56

"இப்போ என்ன சொல்லிட்டேன்னு இப்படி சிரிக்கிறீங்க தாத்தா" என்று மதி ஆர்வத்துடன் கேட்டாள்.

"ஆமா. நீங்க பார்த்தேன்னு சொன்னீங்களே? எங்க பார்த்தீங்க?" என்று ஆரம்பித்தார் ராமு தாத்தா கேள்வியுடன்.

"அன்னைக்குக் கோவில்ல தான். ஜனனி பேருக்கு அழகேசன் அர்ச்சனை பண்ணதைப் பார்த்தேன். எதுக்கு ஜனனி பேர்ல அர்ச்சனை பண்ணனும்?" என்றாள் மதி இன்னும் தீராத சந்தேகத்துடன்.

சுற்றுமுற்றும் ஒரு முறை பார்த்துக் கொண்ட ராமு தாத்தா அழகேசன் பற்றிச் சொல்ல ஆரம்பித்தார். "ஏம்மா அக்காவைப் போயி யாராவது காதலிப்பாங்களா? அழகேசனுக்கு ஜனனி அக்கா முறை வரும்மா. இரண்டு பேரோட அம்மாவும் வெவ்வேறன்னாலும் அப்பா ஒருத்தர் தான். அவர் தான் பெரிய பேரெல்லாம் வாங்கி கடைசியில ஊழல் வழக்குல சிக்கி சிறையில் இறந்து போன ராமநாதன் ஐ.ஏ.எஸ். ஆனா, ஜனனிக்கு இதெல்லாம் தெரியாது. ஜனனியோட அம்மா அழகேசன் கிட்ட அவனைப் பத்தி எதுவும் ஜனனிகிட்ட சொல்லக் கூடாதுன்னு சத்தியம் வாங்கிட்டாங்க. அதே சமயத்துல ஜனனிக்கு நல்ல வாழ்க்கை அமைச்சுக் கொடுக்கனும்னு அவங்கப்பாவும் அழகேசன் கிட்ட சத்தியம் வாங்கிட்டு செத்துப் போயிட்டாரு. இப்போ எப்படி இரண்டு பேர் கிட்டயும் கொடுத்த சத்தியத்தைக் காப்பாத்துறதுன்னு அழகேசன் முழிச்சிக்கிட்டு இருக்கான். அதுக்காக ஜனனிக்கு சீக்கிரம் நல்ல வாழ்க்கை அமையனும்னு கோவில்ல அர்ச்சனை பண்ணிருப்பான். நீங்க அதைப் போய் தப்பா எடுத்துக்கிட்டீங்க போல." என்று உண்மை அனைத்தையும் விளக்கினார் ராமு தாத்தா.

இப்போது மதிக்கு பல விஷயங்கள் விளங்கியதுடன், அழகேசன் மேல் பல்மடங்கு அபிமானம் பெருகியது. அவன் எக்கேடு கெட்டால் உனக்கென்ன என்று மூளை சொல்லியது. மனம் உடனே அதை எதிர்த்தது! அவளுக்குள் ஏதோ உடைந்தது போல் தோன்றியது.

"சரி. அவன் யாரையோ காதலிக்கிறான்னு சொன்னீங்களே? அது யாரை?" என்றாள் மதி இப்போது கெஞ்சலாய்!

"எல்லாத்தையும் எங்கிட்டச் சொல்றவன் அதை மட்டும் சொல்லல. கொஞ்ச நாளாவே அவன் மோட்டுவளையைப் பார்த்துக்கிட்டு அப்பப்போ உட்கார்ந்திருக்குறதப் பார்த்து நானாத் தான் கேட்டேன். இந்த வயசுல இவ்வளவு யோசனை ஒருத்தன் செய்றான்னா அது காதலாத் தான இருக்கும்னு. கேட்டேன். பய ஒத்துக்கிட்டான். ஆனா யாருன்னு கேக்காதீங்கன்னு சொல்லிட்டான். நானும் விடல. தொளைச்சு தொளைச்சு கேட்டுப் பாத்தேன். அவன் கொஞ்சமும் மசியல. தாத்தா இதெல்லாம் பெரிய இடத்து சமாச்சாரம். முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படக்கூடாது தான். ஆனா என்ன செய்ய முடவனுக்கும் ஆசை வருதே. இது ஆவாத பேராசை தாத்தா. அந்தப் பொண்ணுக்கு சொடக்குப் போட்டா ஆயிரம் பேரு வரிசைல நிப்பாங்க. ஆனா நான் அந்த வரிசைல நிக்குறதுக்குக் கூட தகுதி இல்லாதவன் தாத்தா. நான் அந்த வரிசைய ஒழுங்கு படுத்துற மாதிரி கடைசி ஆளா நின்னுக்குவேன். எனக்கு அதுவே போதும்னு சொல்லிட்டான். சரி அவனாச் சொல்லுவான்னு விட்டுட்டேன்." என்றார்.

"சரி நீங்க கிளம்புங்க" என்றாள் மதி.

"அம்மா, நான் அழகேசன் விஷயத்தைச் சொன்னதை நீங்க யார் கிட்டயும் சொல்லிறாதீங்க." என்றார் ராமு தாத்தா.

"இப்படியே நீங்க எத்தனை பேருகிட்ட சொல்லிருக்கீங்க." என்றாள் மதி சிரித்துக் கொண்டே.

"அய்யோ! உங்க கிட்ட மட்டும் தான் சொல்லிருக்கேன். அது கூட நீங்க அவன் மேல சந்தேகப்பட்டதால தான்." என்றார் ராமு தாத்தா உடனே வேகமாய்.

"சரி. சரி. நான் யாரு கிட்டயும் சொல்ல மாட்டேன். நீங்களும் எங்கிட்ட சொன்னேன்னு அவன் கிட்ட சொல்லிறாதீங்க." என்றாள் மதியும்.

அவர் சென்றதும் மதி மனதுக்குள் பெரிய விவாதமே நடந்தது. அழகேசன் தன்னிடம் அறை வாங்கியதில் இருந்து, அழகேசன் வண்டியைத் திடும் என்று நிறுத்தி நிறுவனத்தை விற்க விடாமல் செய்தது என்று எல்லாவற்றையும் இணைத்துப் பார்த்தாள். அழகேசன் மனதில் தன்னைத் தவிர வேறு யாரும் இருக்க வாய்ப்பில்லை என்று நினைத்துக் கொண்டாள். அவன் சொன்னது போல் இது நிறைவேறாத காதல் தான். நான் தான் ஏற்கனவே என் மனதை விமலிடம் பறி கொடுத்து விட்டேனே. அவரை மறக்க முடியுமா? அவருடைய இடத்தில் இன்னொருத்தரை நினைக்கக் கூட முடியாது என்று தோன்றியது. அழகேசன் மேல் மித மிஞ்சிய வருத்தமே மேலிட்டது.

ஆனால் அழகேசன் அவளுக்குச் செய்த நன்மைகள் அத்தனைக்கும் அவனுக்கு எப்படியாவது திருப்பிச் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

(பரவும்)

பாகம் - 57

தனுஷ்கோடிக்கு முதலில் ரொம்பத் தயக்கமாகத் தான் இருந்தது. விமலை நம்பி இவ்வளவு பெரிய தொகையை ஒரு தொழிற்சாலையில் முதலீடு செய்வதா என்று குழம்பிப் போயிருந்தார். ஆனால் விமலின் நச்சரிப்பு காரணமாகவும், அதே சமயம் அவனுக்கு எதிர்காலத்திற்கென ஏதாவது தொழிலை எப்படியும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியிருந்ததாலும், வெளிநாட்டில் போய் எம்.பி.ஏ. படித்த பையன் இதைச் சிறந்த முறையில் கவனிப்பான் என்ற நம்பிக்கையிலும் பெரியதொரு நுகர்வோர் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை (கிட்டத்தட்ட மதி நிறுவனத்திற்கு போட்டி போடும் வகையில்) உருவாக்கித் தந்தார்.

விமலைப் பொருத்த வரை அவனுக்கு தொழில் நிர்வாகம் எல்லாம் நாம் ஏற்கனவே படித்தது தான் என்ற மெத்தனம் இருந்தது. தவிர அவனால் தன் குடிப்பழக்கத்தை நிறுத்தவே முடியவில்லை. மதியைப் பிரிந்ததிலிருந்து இந்த மூன்று மாதங்களில் அந்தப் பழக்கம் அதிகரித்திருந்தது. முன்பு இரவு மட்டுமே இருந்த பழக்கம் இப்போது மாலையிலேயே துவங்க ஆரம்பித்திருந்தது. அதற்கேற்ப அவனுக்கு ஜால்ரா போடும் நண்பர்கள் அமைந்திருந்தனர். பசையுள்ள பணக்காரர்களுக்கென்று நண்பர்கள் எங்கிருந்து தான் வந்து சேர்வார்களோ? தொழிற்சாலை துவங்கினால் அவனது கவனம் தொழிலின் பக்கம் திரும்பி விடும் என்று எண்ணி வெகுவிரைவில் தொழிற்சாலையைக் கட்டி முடித்தார் தனுஷ்கோடி.

இந்தச் சூழ்நிலையில் ஒரு சுபயோக சுபதினத்தில் விமல் நிறுவனம் துவங்கி வைக்கப்பட்டது. பணம் மட்டுமே எந்த ஒரு நிர்வாகத்தையும் நடத்தி விடப் போதாது என்பதை விமலும் உணர்ந்திருந்தான். தொழிலாளர்கள் அமைவது மிகக் கடினமான ஒன்றாய் இருந்தது. அத்தனையும் தான் ஒருவனே பார்க்க வேண்டும் என்ற நிலையில் விமல் ரொம்பத் தான் தவித்துப் போனான். ஒரு கட்டத்தில் தொழிலாளர்கள் கூட அமைந்து விட்டார்கள். ஆனால் அவர்களை மேற்பார்வை பார்க்க நம்பிக்கையான மேற்பார்வையாளர்களும் மேலாளர்களும் அமைவது மிகுந்த சிரமமாயிருந்தது. நாலைந்து முறை செய்தித்தாள்களில் விளம்பரம் கொடுத்துப் பார்த்தாகி விட்டது. விமலும் அயராது உழைத்துப் பார்த்தான். வேலைவாய்ப்பு தேடும் பலர் இருப்பது வாஸ்தவம் தான். ஆனால் தகுந்த வேலைக்குத் தகுந்த ஆட்கள் கிடைப்பது இன்னும் தட்டுப்பாடாகவே இருப்பதை உணர்ந்தான் விமல். அர்ப்பணிப்போடு வேலை பார்ப்பவர்கள் என்னவோ அவனுக்கு அமையவே இல்லை. சந்தைப்படுத்தலில் மிகவும் ஆர்வத்துடன் இருந்த அவனுக்கு உற்பத்தித் துறையும், அலுவலக மேற்பார்வையும் மிகவும் கடினமாக இருந்தது.

இந்த நேரத்தில் தான் மதி நிறுவனம் மீண்டும் காலூன்றி ஆச்சரியப்படத்தக்க வகையில் வளர ஆரம்பித்தது.

தனுஷ்கோடியிடம் போய் விமல் ஒருநாள் தலையைச் சொரிந்து கொண்டு நின்றான். "அப்பா, எனக்கு ஒரு யோசனை தோணுது." என்றான்.

"என்ன?" என்றார் தனுஷ்கோடி.

"அன்புராஜை நம்ம கம்பெனியில ஜெனரல் மேனேஜராப் போட்டா எப்படி இருக்கும்? நம்பிக்கையான ஆளே கிடைக்க மாட்டேங்குராங்க." என்றான்.

"வேலியில போற ஓணானை வேட்டிக்குள்ள எடுத்து விடனும்னு நீ நினைக்கிறியே. நீ எப்படித் தான் நிர்வாகம் பண்ணுவியோ? அவனே ஒரு நம்பிக்கைத்துரோகி. அவனை எப்படி நம்ம வேலைக்கு வைக்க முடியும்? நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில வைக்க முடியாது. ஆனா, நீ யோசிச்சது நல்ல வழி தான். எரியிறதைப் புடுங்குனா கொதிக்கிறது அடங்கும்னு சொல்லுவாங்க. அவ கம்பெனி வளருதுன்னா அதுக்கு அவ மட்டுமே

காரணமா இருக்க முடியாது. அன்புராஜ் நிச்சயமாக் கிடையாது. அதனால அங்கே இருந்து முக்கியமான அந்த ஆளை நம்ம பக்கம் இழுத்தோம்னா, அந்தக் கம்பெனி வளர்றதும் குறையும், நமக்கும் பிரச்னை இல்லை. அப்படி யாரு அங்க இருக்காங்க?" என்றார் தனுஷ்கோடி.

"எனக்குத் தெரிஞ்சு அன்புராஜ் இல்லைன்னா, அந்த ஜனனியாத் தான் இருக்கனும்" என்றான் விமல்.

"அப்போ அவளை நம்ம பக்கம் சேர்க்க என்னென்ன செய்யனுமோ அதைச் செய்." என்றார் தனுஷ்கோடி.

அன்புராஜ் மூலமாகவே தூது விட்டார்கள் இருவரும். ஜனனியை அலுவலகத்தில் தன் அறைக்கு வரச் சொன்ன அன்புராஜ் ஜனனியை விமல் நிறுவனத்தில் ஜெனரல் மேனேஜராகச் சேர அழைப்பதாகவும் மாதம் 30000 ரூபாய் வரை சம்பளமாகத் தர நினைத்திருப்பதாகவும் தூபம் போட்டார். ஜனனி எந்த யோசனையும் இன்றி உடனே மறுத்து விட்டாள்.

அன்புராஜ் தன்னால் இதைக்கூட தனுஷ்கோடிக்குச் செய்ய முடியவில்லையே என்று வருத்தப்பட்டார். ஆனால் அந்த வருத்தம் ஒருநாள் கூட நீடிக்கவில்லை. மறுநாளே அவரை வந்து சந்தித்த ஜனனி "சார், நேத்து மாட்டேன்னு சொன்னதுக்கு மன்னிச்சிக்கோங்க. நேத்து வீட்டில் போய் நல்லா யோசிச்சுப் பார்த்தேன். என் குழந்தையோட எதிர்காலத்தை நினைச்சிப் பார்த்ததுல நான் பேசாம நல்ல பதவியில நல்ல சம்பளம் தரும் விமல் கம்பெனியில சேர்றதே நல்லதுன்னு தோணிச்சி. எனக்கு சம்மதம்னு சொல்லிருங்க சார்." என்றாள்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட ராமு தாத்தாவும், மதியும், அழகேசனும் அதிர்ச்சியடைந்தனர். "ஏன் இப்படி செஞ்சீங்க?" என்று மதி கேட்டதற்கு, "நீங்க இன்னைக்கே கம்பெனிக்கு என்னை ஜெனரல் மேனேஜர்னு சொல்லிட்டு 25000 ரூபாய் சம்பளம் கொடுங்க பேசாம இங்கேயே இருந்துர்றேன். எனக்கு என் குழந்தையோட எதிர்காலமும் முக்கியம்." என்றாள் பதிலாய் ஜனனி.

இப்போதைய சூழ்நிலையில் 10000 ரூபாயில் இருந்து அவளது சம்பளத்தை மட்டும் இரண்டரை மடங்கு அதிகரித்தால் அப்புறம் இதையே காரணம் காட்டி ஒவ்வொரு தொழிலாளியாய் நான் வெளியேறப் போகின்றேன் இல்லாவிட்டால் சம்பளம் அதிகம் வேண்டும் என்று கேட்க ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவளை ஆட்கொண்டது. இது ஒரு முன்னுதாரணமாய் இருக்கக் கூடாது. ஜனனி போனால் போகட்டும் என்று முடிவெடுத்தாள். அதற்கு மேல் மதி ஏதும் பேசவில்லை.

இப்படித் தான் ஜனனி மதி நிறுவனத்தை விட்டு விமல் நிறுவனத்தில் இணைந்தாள். முழுக்க மதி நிறுவனத்திற்கெதிரான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாயத்துக்கும் ஆளானாள்.

(பரவும்)

பாகம் - 58

வேலைக்குச் சேர்வதற்கு முன்னமே விமலிடம் பேசினாள் ஜனனி. "என்னை ரொம்ப மதிச்சிருந்த அந்தக் கம்பெனியில இருந்து நான் வந்ததுக்கு மூன்று காரணம் இருக்கு." என்றாள்

"என்ன?" என்பது போல் பார்வையாலேயே கேட்டான் விமல்.

"ஒன்னு எனக்கு நீங்க தர்றதாச் சொன்ன சம்பளம். இரண்டு எனக்கு நீங்க கொடுத்திருக்குற பதவி. மூனு எனக்கு இங்க கிடைக்கும்னு நான் நினைச்சிருக்கிற சுதந்திரம்." என்றாள்.

"சுதந்திரமா?" கேள்வியோடு கேட்டான் விமல்.

"ஆமா. நான் சின்ன வயசிலேயே இப்படி புதுசா ஒரு பெரிய கம்பெனியை ஆரம்பிச்சு நடத்தனும்னு ஆசைப்பட்டவ. என்னென்னவோ கனவு வச்சிருந்தேன். குடும்ப சூழ்நிலை காரணமா மதி நிறுவனத்துல சேர்ந்தேன். விஸ்வேஸ்வரன் என்னை அவருக்கு அடுத்தபடியா வச்சிருந்தார்னு உங்களுக்கே தெரிஞ்சிருக்கும். ஆனா மதி வந்த பிறகு எனக்கு அந்த நிலைமை இல்ல. அவ போர்மேன் பேச்சையும், டிரைவர் பேச்சையும் கேட்டு ஆடிக்கிட்டு இருக்கா. அதனால நீங்க கொடுக்கப் போற பதவி ஒரு பக்கம் இருக்கட்டும். எனக்கு நீங்க முழு உரிமையும் கொடுங்க. நம்பிக்கையும் வைங்க. விமல் கம்பெனியை வளர்க்குறதுல என் பங்கு முழுமையா இருக்கும். இல்லைன்னா இப்பவே சொல்லிருங்க. நான் என் போக்குல போய்க்கிட்டே இருக்கேன்." என்றாள்.

"நான் இண்டர்வியூ செய்றேனா, இவ செய்றாளா? எப்பவுமே இவளுக்கு இருக்குற திமிரு போகலியே" என்று நினைத்துக் கொண்ட விமல், இப்போதைக்கு வேறு வழியில்லை என்று முடிவுக்கு வந்தவனாக, "சரி ஜனனி. உன் இஷ்டப்படியே நடக்கட்டும். பேக்டரியும், பர்ச்சேஸும் உன் வசம் ஒப்படைக்கிறேன்" என்றான்.

ஜனனி விமல் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்திருந்தாள்.

அவளது ஈடுபாடையும் எஜமான விசுவாசத்தையும் பார்த்து தனுஷ்கோடியே ஆச்சரியப்பட்டுத் தான் போனார். இனி கவலையில்லை என்று நினைத்தார்.

வந்ததிலிருந்து எறும்பாய் உழைத்தாள் ஜனனி. எதையும் முறைப்படிச் செய்ய வேண்டும் என்று எல்லாவற்றையும் முறைப்படுத்தினாள். யாராவது அவள் அறைக்கு வந்து பார்த்தால் அவள் தான் இத்தனை பெரிய கம்பெனியின் பொது மேலாளர் என்று நம்பவே மாட்டார்கள். ஒரு கணினி, ஒரு தொலைபேசி தவிர எதுவுமே அவள் மேசையில் இருக்காது. ஒரு காகிதம் கூட அவள் மேசையில் தங்காது. அத்தனை சுத்தமாக வைத்திருந்தாள் ஜனனி.

இதோ விமல் நிறுவனப் பொருட்களும் சந்தைக்கு வரத் தயாராய் இருந்தன. ஜனனி ஏற்கனவே மதியின் அடக்க விலை அமைப்பைத் தெரிந்திருந்தாள். அதிக லாபத்துக்கு அவள் விற்க வில்லை என்றும் அறிந்திருந்தாள். விமல் நிறுவனம் புதிய நிறுவனமாதலால் ஆரம்பச் செலவுகள் அதிகமாய் இருந்ததால் நிச்சயம் மதி விற்கும் விலைக்கு அவளது தரத்துக்கு விமல் நிறுவனத்தால் விற்பதை நினைத்துக் கூட பார்க்க முடியாது என்று நினைத்தாள்.

விமலும் அவளும் இது பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது, "சார் மார்க்கெட்டிங்ல நான் மூக்கை நுழைக்கிறேன்னு நினைக்காதீங்க. மதியோட மார்க்கெட் மட்டுமே இந்தியாவுல மார்க்கெட் கிடையாது. தமிழ்நாட்டுல ஹார்லிக்ஸ் தான் பிரபலம். விளம்பரமும் அதிகம் இருக்கும். அதுவே கேரளா போனீங்கன்னா, ஹார்லிக்ஸா? காம்ப்ளான் தான் சிறந்த பானம்னு சொல்லுவாங்க. அப்படி ஒவ்வொருத்தரும் தனக்கான

சந்தையை உருவாக்கி வைச்சிருக்காங்க. இப்போ மதி நிறுவனம் தனக்கான மார்க்கெட் உருவாகுறதுல ஸ்ட்ராங்கா இருக்கு. அவங்களோட இப்போதைய மார்க்கெட் கர்நாடகா தான். பழைய மார்க்கெட் தமிழ்நாடு. நமக்கு இரண்டும் வேண்டாம். அவங்க கூட போட்டி போட இப்போ முடியாது. நாமும் ஏதாவது ஒரு இடத்துல காலை ஊன்றிட்டு தான் அவங்க கூட போட்டி போட முடியும். இப்போதைக்கு ஆந்திரா, கேரளான்ற பக்கத்து ஸ்டேட்ல ட்ரை பண்ணுவோம்." என்றாள்.

"நீ சொல்றதப் பார்த்தா, மதி, விமல் கம்பெனியைத் தவிர இந்தியாவுல வேற பிராண்டே இல்லைன்னு சொல்ற மாதிரி தெரியுது. கேரளா ஆந்திரான்னாலும் நம்ம புராடக்டைக் கொண்டாங்க கொண்டாங்கன்னா கேட்டுக்கிட்டு இருக்காங்க? அங்கேயும் லோக்கல்ல இருந்து இண்டர்நேஷனல் ப்ராண்டு வரை பேமஸா இருக்கு." என்றான் விமல்.

"அப்படியில்ல சார். லோக்கல், இண்டர்நேஷனல் ப்ராண்டுகள் கூடப் போட்டி போட்றது கூட எளிது. ஆனால் நமக்குச் சமமா இருக்குறவங்க கூடத் தான் மோதும் போது ரொம்ப கேர்புல்லா இருக்கனும். அதிலயும் அவங்க முந்திக்கிட்டாங்க. முந்தினவனுக்குத் தான் பந்தின்னு ஒரு பழமொழி இருக்கு. அது தொழிலுக்கு ரொம்பத் தான் பொருந்தும்." என்றாள் ஜனனி.

ஜனனி சொல்வதில் இருந்த உண்மைகளை விமலும் ஒத்துக் கொண்டான். அவன் இடைத்தரகர்கள் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. ஒரு பெரிய டிஸ்ட்ரிப்யூட்டர் கிடைத்ததும் அவரிடம் மொத்த மார்க்கெட் பொறுப்பையும் ஒப்படைத்தான். இப்படியாக விமல் நிறுவனப் பொருட்களுக்கும் சந்தை உருவானது.

அப்படியே அவனது குடிப்பழக்கமும் மீண்டும் மகிழ்ச்சியில் அதிகரிக்க ஆரம்பித்திருந்தது.

(பரவும்)

பாகம் - 59

காலச் சக்கரம் வெகுவேகமாய் உருண்டோடியது. மதி பொறுப்பேற்று அன்றோடு ஒரு ஆண்டு முடிந்தது. பொறுப்பேற்ற அன்று போலவே கடன் கொடுத்தோரின் கூட்டத்தைக் கூட்டி இருந்தாள் மதி. அனைவரும் ஆர்வத்துடன் கூடியிருந்தனர். இரண்டாண்டுகள் கெடு கேட்டவள் இப்போது ஏன் வரவழைத்தாள் என்ற கேள்வி எல்லோர் மனதிலும் இருந்தது.

அன்புராஜ் கூட இன்னும் ஒரு ஆண்டு இருக்கின்றதே என்று கேள்வி கேட்டு வைத்தார். அன்புராஜைப் பொருத்தவரை அவரை சொல்வதைச் செய்யும் இயந்திரம் போல் ஒரு டம்மியாகவே வைத்திருந்தாள் மதி.

கூட்டத்திற்கு வந்தவர்கள் அனைவரையும் வரவேற்ற மதி நேரடியாக கூட்டத்திற்கான நோக்கத்தைப் போட்டு உடைத்தாள். "உங்க எல்லாருக்கும் என்னோட பணிவான வணக்கம். நீங்க எனக்குக் கொடுத்த வாய்ப்பை நான் சரியா பயன்படுத்தி இருக்கேனான்னு தெரியல. இந்த சமயத்துல ஒரு வருஷம் இன்னும் இருக்கும் போதே எதுக்கு உங்களையெல்லாம் வரவழைக்கனும்னு உங்களுக்குள்ளே கேள்வி எழுந்திருக்கும். அதுக்கு முதல்ல பதில் சொல்றேன்.

இது வரை இருக்கும் வட்டி பாக்கியை முதல்ல எல்லாருக்கும் கொடுக்க விரும்புறேன். இந்தக் கவர்ல எல்லோருக்கும் அவங்க வட்டி பாக்கிக்கான செக் இருக்கு." என்றாள்.

முதலுக்கே மோசம் என்று நினைத்தவர்களுக்கு வட்டி பாக்கியைத் தருகின்றேன் என்று மதி சொன்னதும் மகிழ்ச்சி தாங்கவில்லை. ஆரவாரத்துடன் கைதட்டி வரவேற்றனர். அத்துடன் மதி நிறுத்த வில்லை. "இது மட்டுமில்ல. எல்லார் கடன்லையும் 25% கடனை இப்போ திருப்பித் தரப்போறோம். மீதியை அடுத்த வருடத்துக்குள் திருப்பித் தரலாம்னு நினைக்கிறேன். உங்களுக்குச் சந்தோசம் தானே?" என்றாள்.

வட்டி கைக்கு வந்தவுடன் எல்லோருக்கும் பழைய புத்தி எட்டிப் பார்த்தது. "இன்னும் ஒரு வருசம் இருக்கே அப்பவே மொத்தமா திருப்பித் தரலாமே?" என்றார் ஒருவர்.

மதி சிரித்துக் கொண்டே, "செலவைக் குறைத்தாலே அதுவும் ஒரு லாபம் தான்னு நான் உணர்ந்திருக்கேன். இப்போ 25% உங்க கிட்டக் கொடுத்திட்டா வட்டிச் செலவு எனக்குக் குறையுமே! தவிர நீங்களெல்லாம் தங்க முட்டை போட்றவங்க. கடனைத் திருப்பக் கொடுத்தா எப்போ வேணுமோ அப்போ வாங்கிக்கலாம் அல்லவா?" என்றாள் மதி.

கூட்டத்திற்கு வந்தவர்கள் அனைவரும் சந்தோசமாய்ச் சென்றார்கள்.

மதி அன்று மிகவும் உற்சாகத்தில் இருந்தாள். காரில் திரும்பும் போது அழகேசனைக் கவனித்தாள். அமைதியாகக் காரோட்டிக் கொண்டிருந்தான் அவன். இவன் என்னைத் தான் காதலிக்கின்றானா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது என்று நினைவு வந்தது. அவள் அவனைப் பற்றி நினைத்தது அவனுக்கு எப்படித் தெரியுமோ தெரியவில்லை. கண்ணாடி வழியாய் அவளைப் பார்த்தான் அழகேசன். அவனை அவள் பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்ததும் சாலையை நோக்கிப் பார்க்க ஆரம்பித்தான். மதி சிரித்துக் கொண்டாள்.

"புது கார் சீக்கிரம் மாத்தனும்மா" என்றான் அழகேசன்.

"ஏன் இதுக்கென்ன?" என்றாள் மதி.

"வீடு அசையாமத் திங்கும். யானை அசைஞ்சு திங்கும்பாங்க. காரும் அப்படித் தாம்மா. மூனு வருசமாச்சு. சீக்கிரம் மாத்தலைன்னா செலவு அதிகமாயிரும்."

"இன்னும் ஒரு வருசம் போவட்டும். நினைக்கிற கார் வாங்கலாம். " என்றவள் தொடர்ந்தாள், "இன்னைக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு. இதுக்கு எல்லாமே காரணம் யாருன்னு தெரியுமா?"

"எனக்கும் தாம்மா சந்தோசமா இருக்கு. கேள்விப்பட்டேன். இன்னைக்கு கடன்காரங்க எல்லாருக்கும் கால்வாசியைத் திருப்பிக் கொடுத்திட்டிங்களாம். காரணம் யாரும்மா? நீங்க தான். உங்க அசராத உழைப்பு தான்."

"நான் மட்டும் உழைச்சாப் போதுமா? நிறைய நல்ல மனசுங்களோட எண்ணங்களும், வாழ்த்துகளும், செயல்களும் தான் காரணம். அதுல ரொம்ப முக்கியமாச் சொல்லப்போனா ராமு தாத்தா, ஜனனி, நீங்க எல்லாரும் முன்னால நிப்பீங்க"

"நாங்க என்னம்மா செய்துட்டோம்? எல்லாம் எங்க கடமையைத் தான் செய்தோம். ஆனா ஜனனி இப்படி வெளியே போவாங்கன்னு நினைக்கல. என்னம்மா மரியாதை எல்லாம் தர்ற மாதிரி இருக்கு?" என்றான்.

"ஆமா. உண்மையிலேயே உங்களுக்கு கடமைப்பட்டிருக்கேன். அந்த 40 பேரு லீவு போட்டதைப் பத்தி ராமு தாத்தா சொன்னாரு." என்றாள் மதி.

நெற்றியைச் சுருக்கினான் ஆச்சரியத்தால் அழகேசன். யார்கிட்டயும் சொல்லாதீங்கன்னு சொன்னா யார் கிட்ட சொல்லக் கூடாதோ அவங்க கிட்டயே போய் சொல்லிருக்காரே இந்த தாத்தா. இன்னைக்கு போயி உண்டு இல்லைன்னு பண்ணனும். என்று நினைத்துக் கொண்டான்.

"என்ன யோசனை?" என்றாள் மதி.

"அது ஒன்னுமில்லை. இருக்குற இடத்தையெல்லாம் விட்டுட்டு சுற்றிலும் இருக்குற புது மார்க்கெட்டுக்குப் போகனும்னு உங்களுக்கு எப்படி யோசனை வந்துச்சு?" என்றான் பேச்சை மாற்றி.

மதிக்கு அந்த நாள் ஞாபகம் வந்தது. மறக்க முடியுமா அன்று நிகழ்ந்ததை? கண்களை மூடினாள் மெல்ல. "அன்னைக்கு அப்பா ரூம்ல நிறைய புக்ஸ் படிச்சிக்கிட்டே இருந்தேன். நேரம் போய்ட்டே இருந்துச்சே ஒழிய யோசனை ஒன்னும் தோணல. நானும் நிறைய பிசினஸ் சம்பந்தப்பட்ட புக்ஸ் படிச்சேன். எல்லாமே நாம ஏற்கனவே முயற்சி செய்தது தான் சொல்லிருந்தாங்க. புதுசா ஒன்னும் சொல்லல. அப்போ தான் பழங்காலப் போர்முறைகள்னு ஒரு புக் கண்ல பட்டது.

சரின்னு அதை எடுத்து உட்கார்ந்தேன். படிச்சிட்டே வரும் போது ஒரு பக்கத்துல கட்டம் கட்டி ஒரு கதை சொல்லிருந்தாங்க.

யாரோ ஒரு சோழ மகராஜா பல நாளா எதிரியோட கோட்டையைப் புடிக்க முடியாம போர் செஞ்சிக்கிட்டு இருக்காரு. அவருக்கு எப்படி ஜெயிக்கிறதுன்னே தோணல. ஒரு நாள் மாறுவேடம் போட்டு தன்னோட ராஜ்ஜியத்துல சுத்திக்கிட்டு இருந்தாரு. பசியோட ஒரு வீட்டோட திண்ணைல போய் உட்கார்ந்தாரு. திடீர்னு மழை பெரிசா பிடிச்சிக்கிருச்ச்சி. உள்ளே இருந்த ஒரு பாட்டி அவரை வீட்டுக்குள்ள வரச் சொல்லி உட்காரச் சொல்லிருக்கா. அவளுக்கு அவர் தான் சோழ மகராஜான்னு தெரியாது. ரொம்ப நேரமா மழை பெஞ்சதும் உள்ளே பசியெடுக்க ஆரம்பிச்சிருச்சி ராஜாவுக்கு. அதுக்கேத்தது போல அந்தப் பாட்டியும் சுடச் சுட சோறாக்கி மஹராஜாவுக்குப் படைச்சா.

மஹராஜா கையை வைச்சதுமே சோறு ரொம்பச்சுடுதுன்னு கையை உதறினாரு. பல்லில்லாத பாட்டி குலுங்கிக் குலுங்கிச் சிரிச்சிருக்கா. ஏன்னு ராஜா பாத்திருக்காரு. அதுக்கு பாட்டி சொல்லிருக்கா, ஏம்பா எங்க மஹராஜா மாதிரியே நீயும் இருக்கியே? நீ எப்படி சாப்பிடப் போற, எங்க ராஜா எப்போ செயிக்கப் போறாருன்னு சொல்லிருக்கா.

ராஜாவுக்கு ஆச்சரியமாப் போச்சு. எப்படிச் சாப்பிடனும்னு சொல்ற பாட்டி? அப்படின்னு கேட்ருக்காரு. அதுக்கு பாட்டி சிரிச்சிக்கிட்டே சோறு சூடா இருந்தா நடுவில கை வைக்க முயற்சி செய்யலாமா? சுற்றி இருக்குற சோறை கொஞ்சம் கொஞ்சமா சாப்பிட்டா போதாதா? நடுவுல இருக்குற சோறு அதுக்குள்ள ஆறிரும். எங்க ராஜாவும் இது தெரியாம எதிரியோட கோட்டையை முற்றுகை இட்டுக்கிட்டே இருக்காரு. சுற்றி இருக்குற அந்தக் கோட்டைக்கு உதவி செய்ற ஒவ்வொரு படையா ஜெயிச்சுட்டா அப்புறம் கோட்டையை மட்டும் ஜெயிக்கிறது சுலபம் தானே? ன்னா பாட்டி.

ராஜா கால்ல விழுந்தாராம் வேசத்தைக் கலைச்சுட்டு. போர்லயும் ஜெயிச்சாராம். பாட்டிக்கு நிறைய பரிசும் கொடுத்தாராம்.

இதப் படிச்சதும் எனக்குள்ள பொறி தட்டுச்சு. இதை நாம ஏன் உபயோகிக்கக் கூடாதுன்னு. உடனே செயல்ல இறங்கிட்டேன்.

ஆனா உங்களோட சாணக்கிய தந்திரம் தான் கடைசியில ஜெயிச்சது." என்றாள் சிரித்துக் கொண்டே.

"அப்படி இல்லை. நீங்க நினைக்கிறது தப்பு. நீங்க விளக்கு வாங்குனீங்க, எண்ணை ஊத்துனீங்க, பஞ்சுத் திரியும் வைத்தீங்க, பத்தவும் வைச்சீங்க. ஆனா தீபம் எரியல. நான் வந்து திரியைக் கொஞ்சம் எண்ணையில முக்கி கிள்ளி விட்டதும் எரிய ஆரம்பிச்சிருச்சி. அவ்ளோ தான். இதுக்குப் போய் பெரிசா நினைக்கிறீங்களே?" என்றான் அழகேசன்.

வீடும் வந்திருந்தது.

(பரவும்)

பாகம் - 60

அழகேசனுக்கு மேகத்தின் மேல் மிதப்பது போல் இருந்தது. மதி அவனுடன் அவ்வளவு அன்னியோன்யமாய்ப் பேசியதில் ஜென்ம சாபல்யம் அடைந்ததாய் உணர்ந்தான். அவன் மனதில் அப்போது இருந்தவர்கள் இருவர். ஒருவர் மதி. இன்னொருவர் ஜனனி. இருவர் மீதும் தீராத அன்பு கொண்டிருந்தான் அழகேசன். இருவரில் யார் வந்து உன் உயிரைக் கொடு என்று கேட்டாலும் கொடுத்து விடுவான்.

ஜனனி மேல் அப்படி ஒரு பாசம் வந்ததில் ஆச்சரியம் இல்லை. ஏனென்றால் அவள் அவனது அக்கா. சிறு வயதிலிருந்தே அவளைப் பார்த்து வருகின்றான். தந்தையிடம் சத்தியம் வேறு செய்து கொடுத்திருக்கின்றான். ஆனால் மதி பேரிலும் அப்படி ஒரு அளவு கடந்த பாசம் வரும் காரணம் என்ன என்று அவனே பல முறை சிந்தித்திருக்கின்றான். அப்போதெல்லாம் அவனுக்குள் ஒரு இன்ப மழையில் நனைவதாய் உணர்ச்சி ஏற்படும். எனவே அடிக்கடி அப்படி சிந்தித்ததுண்டு. அப்படி ஒரு தருணத்தில் தான் ராமு தாத்தா அவனைப் பார்த்து யாரையாவது காதலிக்கின்றாயா என்று துளைத்துக் கேட்க ஆமென்று ஒத்துக் கொண்டான்.

தன் தந்தைக்கு சத்தியம் செய்து கொடுத்தது உண்மையில், நனவில் நடந்தது என்றால், மதியை நல்ல முறையில் பார்த்துக் கொள்வேன் என்று விஸ்வேஸ்வரனுக்கு மனதில், கனவில் பலமுறை சத்தியம் செய்தது போல் அவனுக்குள்ளேயே தோன்றும். விஸ்வேஸ்வரனுடன் தனக்கிருந்த உறவு ஒரு முதலாளி தொழிலாளி உறவை விட, ஒரு வழிகாட்டியின் உறவாகவே அவனுக்குத் தோன்றியது. மதி, ஜனனி என்ற இருவரையும் இருபுறமும் தாங்க ஆரம்பித்ததும் தான் அழகேசனின் பாரம் சமமானது! ஆனால் இரண்டையும் நிறைவேற்ற தன்னால் என்ன செய்து விட முடியும் என்ற நினைப்பு அவனுள் இருந்து கொண்டே இருக்கும். உடனே ஜனனியிடம் சென்று சொல்லி விட உதடுகள் துடிக்கும். இன்னொரு சத்தியம் இடையில் தராசு முள்ளாய் வந்து மறிக்கும். சத்தியங்களுக்கிடையே இது என்ன வாழ்வு என்று சில சமயம் வெறுக்கவும் செய்யும். அப்போதெல்லாம் அவனுக்கு கோவிலும் கடவுளும் தான் கதி!

நேராக ராமு தாத்தா வீட்டுக்குச் சென்றான். அப்போது தான் சாப்பிட உட்கார்ந்திருந்தார் ராமு தாத்தா. நேரே போய் பக்கத்தில் உட்கார்ந்தான்.

"ஆமா முதலாளியம்மா கிட்ட என்னைப் பத்தி என்ன சொன்னீங்க?" என்றான்.

ராமு தாத்தா குழம்பித் தான் போய்விட்டார். ஜனனியைப் பற்றிச் சொன்னதை மதி இவனிடம் கேட்டு விட்டாள் போல இருக்கின்றதே? அடடா அதைச் சொல்லி இருக்கக் கூடாதோ என்று நினைத்துக் கொண்டார். அவன் முகத்தைப் பார்த்தார். அதில் குறும்பு தான் இருந்ததே ஒழிய சந்தேகமோ கவலையோ இருக்கவில்லை. இவனைப் போல் எத்தனையோ பேரைக் கண்டிருந்த ராமு தாத்தா சுதாரித்துக் கொண்டார்.

"எதைச் சொல்லனுமோ அதைத் தான் சொன்னேன். ஏன்? இப்போ என்ன?" என்றார்.

"ஆமா, உங்களை யாரு அந்த 40 பேரை லீவு போட்டதைச் சொல்லச் சொன்னது? நான் தான் யார்கிட்டயும் சொல்லாதீங்கன்னு சொன்னேன்ல?" என்றான்.

நிம்மதிப் பெருமூச்சு ஒன்றை விட்டார் ராமு தாத்தா. "ஆமா. ஆனா இப்போலாம் அவங்க பேக்டரிக்குள்ள ரவுண்டு வர ஆரம்பிச்சிட்டாங்க. அந்த 40 பேர்ல யாராவது ஒருத்தன் போயி இந்த விஷயம் பத்தி வாய் தவறி உளறிட்டான்னா நல்லா இருக்காதுல்ல. அதான் நானே விஷயத்தைப் பக்குவமா அவங்க கிட்டச் சொன்னேன். அதுக்காகச் சந்தோசப் படுவானா? அதை விட்டுட்டு கேட்க வந்துட்டான் கேள்வி. நீ யாரைக் காதலிக்கிறேன்னு கேக்குற கேள்விக்கு மட்டும் பதில் சொல்லத் தெரியல." என்றார் அவனுக்குப் பிடித்த படி பேச்சை மாற்றி.

"அது சரி. அதை உங்க கிட்டச் சொல்லிட்டாலும்... இன்னைக்கு நைட் டியூட்டி இருக்கு அதைப் போய் பாருங்க முதல்ல." என்ற படி கிளம்பினான்.

"நல்ல வேளை நான் தப்பிச்சேன்" என்று எண்ணிக் கொண்டார் ராமு தாத்தா.

இப்படியே ஓடிக் கொண்டிருந்தன நாட்கள். அப்படி ஓடிக் கொண்டிருந்த நாட்களில் இருவருக்கும் இடையில் நடந்த உரையாடல்கள் மதி நிறுவனத்தை மேலும் மேலும் லாபகரமாக்கியது என்றே சொல்லலாம். நிறுவனம் பற்றியும் நிர்வாகம் பற்றியும் பேச ஆரம்பித்தால் இருவருக்குமே உற்சாகம் வந்து தொற்றிக் கொள்ளும்.

அப்படி ஒரு நாள்.

அழகேசனுடன் போய்க் கொண்டிருக்கும் போது, "லாபத்தைக் கூட்ட செலவைக் குறைக்கனும்னு தான் வட்டியையும், கொஞ்சம் முதலையும் திருப்பித் தந்தாச்சு. இன்னும் எப்படில்லாம் லாபத்தைக் கூட்டலாம்?" என்றாள் மதி.

"எந்த கம்பெனிக்குள்ளயும் கழிவு, களவு ன்னு ரெண்டு விஷயம் இருக்குங்க. இதைக் கட்டுப் படுத்தினாலே இன்னும் லாபத்தைக் கூட்டலாம். கழிவுன்றது யாருக்கும் உபயோகம் இல்லாம போறது. களவுன்றது யாரோ ஒருத்தருக்குத் தேவையில்லாம போய்ச் சேர்றது. ஆனா, அதுக்காக இரண்டையும் கண்டு புடிக்கிறேன்னு ரொம்ப செலவளிக்கக் கூடாது. சில கழிவுகள், களவுகள் ரொம்பச் சின்னதா, கண்டு புடிக்க முடியாததா, அதைக் கண்டுபுடிக்கிற செலவு அதோட மதிப்புக்கும் மேல செலவாகுறதா இருக்கும். நல்ல வேளையா நமக்கு வாய்ச்சிருக்குற தொழிலாளர்கள்ல களவாட்றவங்க ரொம்பக் குறைச்சல் தான்" என்றான்.

இது பேசி கொஞ்ச நாட்கள் ஆகியிருக்கும்.

சோப்பைப் பல வடிவங்களில் போட்டதால் டிசைன்கள் போக சிறு சிறு சோப்புக் கட்டிகளைச் சுற்றிலும் இருக்கும் கசடுகளை அச்சிலிருந்து எடுத்து ஒரு அம்பாரமாய்ப் போட்டிருந்தார்கள். இது என்ன என்று ராமு தாத்தாவைக் கேட்டாள் மதி.

"முன்னெல்லாம் ஒன்னு இல்லைன்னா இரண்டு டிசைன்ல தான் நாம சோப்பு போட்டோம். இப்போ பல டிசைன்ல போட்றதுனால இந்த மாதிரி கசடு வந்து சேருது." என்றார்.

"இதை மறுபடி உபயோகிக்க முடியாதா?" என்றாள்.

"இல்லைம்மா. இது புது சோப்போட தரத்தைக் கெடுத்துரும்." என்றார் ராமு தாத்தா.

அழகேசன் சொன்னது ஞாபகம் வந்தது. கழிவைக் குறைத்தால் அதுவும் லாபமே. இதை எண்ணிக் கொண்டே அவளது அலுவலக அறைக்குத் திரும்பினாள்.

அடுத்த வாரமே வெளியானது அந்தக் கழிவுகளைப் பொடியாக்கி "மதி எகானமி பேக்" என்ற பெயரில் குறைந்த விலையில் சோப்புத் தூசி!

அது மதி சோப்பை விட அதிக அடிதடியாய் விற்பனையானது. மதி சோப் வாங்கினால் தான் எகானமி பேக் தருவோம் என்று கடைக்காரர்களிடம் பேரம் பேச வேண்டியதாயிற்று! அப்புறம் எகானமி பேக்குக்காகவே தனியாக மெசின் வாங்கியது பெரிய கதை!

(பரவும்)

பாகம் - 61

இப்படி மதியைப் பொருத்தவரை சூழ்நிலைகளைத் தனக்குச் சாதகமாய்த் திருப்பினாலே பல விஷயங்களைச் சாதிக்க முடியும் என்று அறிந்திருந்தாள். அதுமட்டுமல்லாது, தான் எதிர்வரும் எதிலாவது தினமும் படித்துக் கொண்டே இருப்பது தவிர்க்க முடியாதது என்றும் உணர்ந்தாள். அனுபவம் என்பது நிகழ்வுகளின் கோர்வையே என்று நினைத்துக் கொள்வாள்!

ஒரே ஆண்டில் இத்தனை பொறுமையும் பொறுப்பும் தன்னை வந்தடைந்ததை நினைத்து அவள் பெருமைப்படவில்லை. இன்னும் இன்னும் தான் கற்றுக் கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கின்றது என்று அவள் அறிந்திருந்தாள். எந்த ஒரு சூழ்நிலையையும் நிதானம் என்னும் ஆயுதத்தால் முதலில் எதிர்கொள்ள வேண்டும் என்று நம்பினாள்.

அந்த இறக்குமதி செய்யப்பட்ட பெரிய இயந்திரத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்குள் வியப்பும் பிரமிப்பும் ஏற்படும். அதைச் செய்தவர் எப்பேர்ப்பட்ட பெரிய கனவினைக் கொண்டிருந்தால் இத்தனை பெரிய இயந்திரத்தை மனதிலேயே உருவாக்கிப் பின் அதை நிஜத்திலும் வடிவமைத்திருப்பார்? இதுவும் நிச்சயம் ஒருவரின் முயற்சியாய் இருக்காது தான். ஆனால் ஒருவரின் மூளை தான் இதை ஆரம்பித்து வைத்திருக்கும்? என்று நினைத்துக் கொள்வாள். ஒருநாள் தற்செயலாய் அந்தப் பக்கமாய்ப் போய்க் கொண்டிருக்கும் போது அவளுக்குள் ஒரு ஆர்வம். அந்த ஜப்பானியர் இந்த இயந்திரத்துக்குள்ளேயே போய்விட்டாரே? அப்படி என்ன தான் இருக்கின்றது உள்ளே? என்று நினைத்து விட்டாள். உடனே உள்ளே போய்த் தான் பார்ப்போமே என்ற எண்ணம் வந்து விட்டது அவளுக்கு.

ராமு தாத்தாவை உடனே அழைத்தாள். அந்த ஜப்பானியர் சொன்ன சைகையெல்லாம் உங்களுக்கு ஞாபகம் இருக்கா என்று கேட்டாள்.

"அதை மறக்க முடியுமாம்மா? இப்போ அவர் வந்தாக் கூட மறக்காமச் செய்வேன்ல" என்று பெருமை கொட்டினார் அவர்.

"சரி நான் உள்ளே போய் பார்க்கப் போறேன். என் சைகையைப் பார்த்தே மெசினை ஓடவிடுங்க பார்ப்போம்." என்றாள் கூலாக!

திடுக்குற்ற ராமு தாத்தா, "உங்களுக்கு என்ன பைத்தியம் புடிச்சிருச்சா? இதுக்கெல்லாம் நான் அனுமதிக்க மாட்டேன்." என்றார்.

"ஒன்னும் ஆகாது தாத்தா. என்ன தான் இருக்குன்னு தான் பாக்கப் போறேன்." என்ற படி இயந்திரத்தை நிறுத்த உத்தரவிட்டாள்.

ரொம்பத் தயக்கத்துடன் "பார்த்தும்மா. ரொம்பக் கவனம் " என்றார் ராமு தாத்தா. அவருக்குக் கைகள் நடுங்க ஆரம்பித்திருந்தது.

மதி எந்த வித பயமுமின்றி உள்ளே நுழைந்தாள். வெளியில் இருந்த வெளிச்சம் உள்ளே இல்லை. இருட்டாய் இருந்தது. ஆனால் ஒரு நிமிடத்துக்குள்ளேயே உள்ளே ஒரு விளக்கும் அதற்கான ஸ்விட்சும் இருப்பதைக் கண்டு கொண்டாள். அதைப் போட்டாள். உள்ளே அவள் எதிர்பார்த்தது போல் பெரிய இயந்திர பாகமெல்லாம் இல்லை. நிறைய சர்க்யூட்களும், ப்யூஸ் கேரியர்களும், வயரிங் படமும் தான் இருந்தது. சரி தான். இதில் அனைத்துப் பாகங்களின் எலெக்ட்ரிக் சமாச்சாரங்களும் இருக்கின்றது போலும். இதைச் சரி செய்ய

முடியாவிட்டால் தான் இயந்திரத்தையே கழற்ற வேண்டியிருக்கும் என்று நினைத்துக் கொண்டாள். வெகு நேரமாய் அவள் உள்ளே போய் எந்த சைகையும் இல்லாததால் "மதி" என்று ராமு தாத்தா கூப்பிடுவது அவளுக்குக் கிணற்றில் இருந்து கேட்பது போல் கேட்டது.

கையை அதற்கென்று இருந்த துவாரத்தின் வழி விட்டாள். மெசினை ஓட்டச் சொல்லி சைகை செய்ய ஆரம்பித்தாள். மெல்ல ஓடியது இயந்திரம். அந்த இயந்திரத்தைத் தயாரித்தவர் மீது இன்னும் இன்னும் மதிப்புக் கூடிக் கொண்டே சென்றது அவளுக்கு. எளிதில் புரியும் படி ஒரு இயந்திர கட்டுப்பாட்டறையையும் இந்த இயந்திரத்திலேயே அமைத்திருக்கின்றார்களே என்று வியந்த வண்ணம் மெசினை நிறுத்தச் சொல்லி வெளியேறினாள். எல்லோரும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தனர். சிரித்துக் கொண்டே, "அடுத்த தடவை இந்த மெசின் ரிப்பேராயிருச்சின்னா 5 லட்சம் நமக்கு மிச்சம்! நம்ம எலெக்ட்ரிசியனை வரச் சொல்லுங்க, எனக்கே இத்தனை ஈசியா இருக்குன்னா, அவருக்கு இன்னும் தெளிவாப் புரியும். வெளிநாட்டு மெசின்னா என்ன? வானத்தில இருந்தா குதிச்சிருக்கு?" என்றாள் உற்சாகமாய்.

"அதில்லம்மா, நாங்களும் போக ரெடி தான். ஆனா உள்ளே போயி மெசினுக்கு ஏதாவது ஆச்சின்னா, நீங்க செஞ்சா ஒன்னுமில்ல. நாங்க செஞ்சா தேவையில்லாத பிரச்னை தானே?" என்றார் ராமு தாத்தா.

"நீங்க சொல்றதிலேயும் நியாயம் இருக்கு" என்றாள் மதி.

அந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் அவள் மேல் தொழிலாளிகளின் மதிப்பு எங்கேயோ போய்விட்டது.

அங்கே ஜனனிக்குத் தான்...

(பரவும்)

பாகம் - 62

விமல் நிறுவனத்தில் ஒரு ஆண்டு முடிந்து கொண்டாட்டம் நடந்து கொண்டிருந்தது. தனுஷ்கோடியை ஏற்கனவே சில முறை பார்த்திருக்கின்றாள் ஜனனி. ஆனால் தனுஷ்கோடி விமல் நிறுவனத்தின் நிர்வாகத்தில் எப்போதும் மூக்கை நீட்டியதே இல்லை. எப்போதும் ரிமோட் ஸ்விட்சாகவே இருந்தார்.

எப்போதாவது விமல் பேச்சு வாக்கில் "அப்பா இப்படி இருந்தா நல்லா இருக்கும்னு சொல்றாரு" என்று சொல்லும் போது தான் விமல் நிர்வாக விஷயத்தை எல்லாம் தனுஷ்கோடியிடம் பகிர்ந்து கொள்வதும், அவர் யோசனை சொல்வதும் தெரியவரும். மற்ற படி எப்போதாவது அத்தி பூத்தாற் போல் விமலுடன் வருவார் தனுஷ்கோடி. அவளிடம் அதிகம் பேசியதில்லை. வெறும் புன்சிரிப்போடு சரி. தொழிற்சாலையைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பி விடுவார்.

அவருக்கு விமலுக்கென்று ஒரு தொழிற்சாலை உருவாக்கிக் கொடுத்த மகிழ்ச்சி மட்டுமின்றி, வெறுமனே வாங்கி விற்கும் தொழிலே பரம்பரைத் தொழிலாய் இருக்க, உற்பத்தித் தொழிலில் மகன் ஈடுபட்டதில் பெருமிதமும் இருந்தது. அங்கங்கு கிடைக்கும் கச்சாப் பொருட்கள் பல இயந்திரங்களின் வழியே சென்று, பல தொழிலாளர்களின் கை பட்டு முடிவுற்ற ஒரு பொருளாகக் கையில் வந்து சேர்வது ஆச்சரியமாய் அவருக்குத் தோன்றும்.

அன்று அனைத்து தொழிலாளர்களுக்கும் இனிப்பும், புத்தாடையும் வழங்கப்பட்டது. இதெல்லாம் ஜனனியின் யோசனை தான். அவர்களாகவே கேட்கும் முன்னர் தொழிலாளர்களுக்குத் தேவையானதைப் பார்த்துத் தந்து விடுவது அவள் வழக்கம்.

தன்னாலும் ஒரு தொழிற்சாலையைத் திறம்படச் செயலாற்ற முடிகின்றது என்று மிகுந்த சந்தோசத்தில் இருந்தாள். அன்று சில ஒப்பந்தங்களில் விமலின் கையெழுத்து வேண்டியிருந்தது. அவனது வெளிநாட்டு நண்பர்களுடன் பேசி பொருட்களை ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்ற விமலின் யோசனையில் வெளிநாட்டுச் சந்தையையும் வென்று விடும் சந்தோசத்தில் இருந்தாள். தனுஷ்கோடியுடன் வந்த விமல் அவருடனேயே புறப்பட்டுச் சென்று விட்டான்.

மாலை 4 மணி வரை விமல் வருவான் என்று எதிர்பார்த்திருந்தாள் ஜனனி. அவன் வருவதாய்த் தெரியவில்லை. இன்று சரியாய் ஒரு வருடம் முடிந்த நாளென்பதால் இன்று கையெழுத்திட்டால் நன்றாக இருக்குமே என்று நினைத்த ஜனனி செல்பேசி எண்ணில் அவனை அழைத்தாள். விபரத்தைச் சொல்லி அவன் கையெழுத்துக்காகக் காத்திருப்பதாய்ச் சொன்னதும் அரைமணி நேரத்தில் வருவதாய்ச் சொன்னான் விமல்.

ஆனால், பேச்சிலேயே அவன் தள்ளாடியதில் இப்போது தான் அழைத்தது தவறோ என்று நினைத்தாள் ஜனனி.

அரைமணி நேரத்தில் வருவதாய்ச் சொன்னவன் ஒரு மணி நேரத்தில் வந்தான். மது போதையில் கண்கள் சிவந்திருந்தன. நடையில் சிறு தள்ளாட்டம். லேசாக உளரும் பேச்சு. தேவையில்லாத சிரிப்பு. இன் செய்த சட்டை ஒரு புறம் மட்டும் வெளி வந்திருக்க அவளது அறையைக் கடந்து தன் அறைக்குள் சென்றான் விமல். அன்று ஓராண்டு முடிந்த கொண்டாட்டத்தை நண்பர்களுடன் வைத்திருந்ததால் கொஞ்சம் ஓவராகி விட்டது.

அவன் சென்றதைப் பார்த்த ஜனனியும் சிறிது நேரம் கழித்து அவனது அறைக்குச் சென்றாள். அவளைப் பார்த்ததும் விகாரமாய்ச் சிரித்த விமல், "வா ஜனனி, எங்கே கையெழுத்துப் போடனும்?" என்றான்.

கொஞ்சம் கடுப்புடனே அவன் அருகே வந்த ஜனனி, "நீங்க இப்படி இருப்பீங்கன்னு தெரிஞ்சா, நான் காலையிலேயே கையெழுத்து வாங்கிருப்பேன்." என்றாள்.

விமல், "நோ. நோ. எல்லாம் எக்ஸ்போர்ட் பேப்பர்ஸ் தானே. நான் இப்பவே போட்றேன். நான் ஸ்டெடி தான் ஜனனி. என்னைப் பத்தி உனக்கு சரியாத் தெரியாது. ஒரு புல்லையே அப்படியே ராவா முழுங்கிட்டு கார்ல வீடு போய்ச் சேர்ந்திருவேன்."

சரியென்று அவனிடம் கையெழுத்துக்கு நீட்டினாள் தாள்களை. ஒவ்வொன்றாய்க் கையெழுத்துப் போட்டு முடித்தான் விமல்.

அப்போது தான் அது நிகழ்ந்தது. மது போதையில் மதி இழந்த விமல், காமாந்தகாரனாய் விட்டான். ஜனனியின் அழகு அவன் கண்ணை மறைத்தது. அவன் நிலையையும் மறைத்தது. ஆசையுடன் ஜனனியின் அழகிய கைகளைப் பற்றித் தனக்காக இழுத்தான் விமல். நொடியில் அவனது செய்கையைப் புரிந்து கொண்ட ஜனனிக்குக் கோபம் உச்சத்தை எட்டியது. சட்டென்று அவனது கைகளைத் தட்டி விட்ட ஜனனி, கையெழுத்து வாங்க வந்த தாள்களைக் கூட அப்படியே போட்டு விட்டு ஒரு ஓட்டமாய் அவளது அறைக்குச் சென்றவள், உடனே தன் கைப்பையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பி விட்டாள்.

(பரவும்)

பாகம் - 63

விமலுக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. தான் ஏதோ தவறு செய்து விட்டோம் என்று மட்டும் தெரிந்தது. ஜனனி, ஜனனி என்று கூப்பிட்டுப் பார்த்தான் உளறல்களினூடே. அப்படியே மல்லாந்தான்.

வீட்டுக்கு வந்த ஜனனிக்கு அவமானமாய் இருந்தது. பெண்ணென்றால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைக்கின்றார்களே இந்த ஆடவர்கள். தனக்கென சேகர் இருந்தால் எப்படி ஒரு நிலை இன்று நமக்கு வந்திருக்குமா? கண்ணீர் கூட வரமறுத்தது அந்தப் புதுமைப் பெண்ணுக்கு. அன்றிலிருந்து விமல் நிறுவனத்திற்கு அவள் செல்லவில்லை.

ஒரு வாரம் ஆனது. இதோ இன்று வந்து விடுவாள். நாளை வந்து விடுவாள் என்று தான் விமல் எதிர்பார்த்தான். ஆனால் அவளிடம் இருந்து எந்த ஒரு தகவலும் இல்லை. அவளை நேரே பார்ப்பதற்குக் கூட அவனுக்கு வெட்கமாய் இருந்தது. தான் செய்த தவறை எண்ணி வருந்தி இப்போது ஒன்றும் ஆவதில்லை என்பதை உணர்ந்திருந்தான் விமல். தனுஷ்கோடி தான் அவனது முகக் கலக்கத்தைப் பார்த்து என்ன தான் நடந்தது என்று கேட்டார். மெல்ல மெல்ல விமல் அன்று நடந்ததை தட்டுத் தடுமாறிச் சொல்லி முடித்தான்.

"உனக்குக் கொஞ்சமாவது அறிவு இருக்கா?" என்று தான் அவனைக் கேட்டார் தனுஷ்கோடி. "உன்னோட பழக்கம் உன்னை எங்கே கொண்டு போய் விட்டுருச்சீன்னு பாரு. தலைக்கு மேல வளர்ந்த புள்ள தோழன்னு சொல்லுவாங்க. அப்பாவா நான் சொல்றதக் கேக்காட்டாலும் ஒரு தோழனா நான் சொல்றதக் கேளு. பேசாம அவ வீட்டுக்கே போய் அவ கிட்ட மன்னிப்புக் கேளு. அவள மாதிரி ஒரு நிர்வாகியை நம்ம கம்பெனி இழந்துடக் கூடாது." என்றார்.

"இல்லப்பா. என்னால முடியாது. என்னால அவ முகத்தைப் பார்த்துக் கூடப் பேச முடியாது." என்றான் விமல்.

"இதெல்லாம் நீ செஞ்ச காரியத்தைச் செய்றதுக்கு முன்னால யோசிச்சிருக்கனும்." என்று கோபத்தில் வார்த்தைகளை விட்ட தனுஷ்கோடி யோசிக்க ஆரம்பித்தார்.

அன்று மாலையே அவரும், சரஸ்வதியும் ஜனனியின் வீட்டுக்குச் சென்றார்கள். கதவைத் திறந்த ஜனனிக்கு ஆச்சரியமான ஆச்சரியம். சேகரும் அம்மாவையும் எதிர்பார்த்திருந்த ஜனனிக்கு நம்பவே முடியவில்லை. அந்த இடத்தில் அந்த நேரத்தில் தனுஷ்கோடியை அதுவும் தம்பதி சமேதராய் ஜனனி எதிர்பார்க்கவில்லை என்பது ஸ்பஷ்டமாக அவள் முகத்தில் தெரிந்தது.

"வாங்க சார் என்ற படி அவர்களை உள்ளே அழைத்தவள், அமரச் சொல்லி அங்கிருந்த சோபாவைக் காட்டினாள். இருங்க ஒரு நிமிசத்துல வர்றேன் என்று உள்ளே சென்றாள். அவள் காபி தயார் செய்து வருவதற்குள் ஒரு முறை சுற்றிலும் நோட்டம் விட்டார் தனுஷ்கோடி. அலுவலகம் போலவே அவளது இல்லமும் சுத்தமாக இருந்தது. சேகரின் படத்திற்கு போடப்பட்டிருந்த வாடாத மலர்கள், குழந்தை சேகரின் புகைப்படங்கள் ஆங்காங்கே என்று அவளது அன்பிற்குரியவர்களைக் காட்டிக் கொண்டிருந்தது இல்லச் சுவர்கள்.

அப்போது தான் குழந்தையை வெளியே அழைத்துச் சென்றிருந்த கோமதி உள்ளே நுழைந்தார். ஒரு தட்டில் காபி டம்ளர்களை வைத்துக் கொண்டு வெளியே வந்த ஜனனி அம்மாவைப் பார்த்ததும் மலர்ந்தாள். அம்மா, இவர் தான் மிஸ்டர் தனுஷ்கோடி. இவங்க அவரோட வைஃப். என்று அறிமுகம் செய்து வைத்தாள்.

இருவருக்கும் வணக்கம் சொன்ன கோமதி பொதுவாய் பேசிக் கொண்டிருந்தார். மகள் அலுவலகம் செல்லாததற்கும் இவர்கள் வந்திருப்பதற்கும் ஏதோ காரணம் இருக்க வேண்டும் என்று யூகித்துக் கொண்டார்.

ஒரு வாரமாய் தன் மகள் வீட்டிலேயே இருப்பது ஏன் என்று அவளிடமே சில முறை கேட்டார். முதலில் ஒன்றுமில்லை என்று சொல்லி வந்த ஜனனி. அடுத்த சில முறைகளில் எரிச்சலாகி "சொல்றதா இருந்தா உங்க கிட்டச் சொல்ல மாட்டேனா? நான் வேற வேல தேடப் போறேன்" என்று மட்டும் வெடுக்கென்று சொல்லிவிட்டாள். அதன் பின் கோமதி அம்மாள் எதுவும் அவளைக் கேட்கவில்லை. அலுவலகத்தில் ஏதோ பிரச்னை என்று நினைத்துக் கொண்டார்.

தனுஷ்கோடியும் சரஸ்வதியும் ஒரு சோபாவில் அமர்ந்திருக்க. எதிரில் சேரில் கோமதி அம்மாள் அமர்ந்திருந்தார். பின்னால் சுவரில் சாய்ந்து கொண்டு சேகரைக் கையில் வைத்துக் கொண்டு நின்றிருந்தாள் ஜனனி. அங்கு சொல்லவொண்ணா அமைதி நிலவியது. கோமதி அம்மாளின் வரவு தனுஷ்கோடி தான் சொல்ல வந்த ஏதோ ஒன்றைச் சொல்ல முடியாதது போல் எண்ணத் தோன்றியது. அதை ஜனனியும் உணர்ந்தாள். அவர் என்ன தான் சொல்கின்றார் பார்க்கலாம். தான் இனி அலுவலகம் வர முடியாது என்பதைத் திட்ட வட்டமாக இவரிடமே சொல்லி விடலாம் என்று நினைத்தவள் அதற்கு ஒரு வழி ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக, "அம்மா, சேகருக்குத் தூக்கம் வர்றது போல இருக்கு. அவனை ரூம்ல போய் தூங்க வைங்க." என்றாள்.

தனுஷ்கோடி லேசுப்பட்டவரா? "நீயும் போ சரஸ்வதி. இரண்டு பேரும் பேசிக்கிட்டு இருங்க. நான் ஜனனி கிட்ட ஒன்னு சொல்லனும்" என்றார்.

அவர் சோபாவில் உட்கார்ந்திருந்தார். ஜனனி அங்கேயே நின்றிருந்தாள். "சொல்லுங்க சார்." என்றாள் ஜனனி.

"விமல் நடந்தத எல்லாம் சொன்னானம்மா. நடக்கக் கூடாத ஒரு விஷயம் நடந்ததில் எனக்கு ரொம்ப வருத்தம் தான். அவனை நல்லா வைதிருக்கேன். என்ன செய்றது? எல்லாம் நான் செஞ்ச பாவம். அப்படியே மொத்த உருவமா என் முன்னால வந்து நின்னு என்னையே ஆட்டிப் படைக்குது." என்று தத்துவம் பேச ஆரம்பித்தார்.

ஜனனி எதுவும் பேசவில்லை. அவர் முகத்தையே பார்த்த வண்ணம் இருந்தாள். அதில் எந்த ஒரு உணர்ச்சியும் இல்லை.

"இந்தக் கம்பெனி அவனுக்கு நான் வச்சிக் கொடுத்தாலும் அத்தனை ரூவாயும் கீழே போட்ருவான்னு நான் நினைச்சிக்கிட்டு இருந்தப்ப தான் நீ வந்து சேர்ந்த. அதுக்கப்புறம் தான் கம்பெனி வேரூன்ற ஆரம்பிச்சுது. எல்லாம் நல்லா போய்க்கிட்டு இருக்குறப்ப தான் வெண்ணெய் திரண்டு வரும் போது தாழியை உடைச்ச மாதிரி இப்படி ஒரு காரியம் செஞ்சுப்புட்டான். போதையில என்ன செய்றதுன்னு தெரியாம..." என்று சொல்லிக் கொண்டே போனவரை கையமர்த்தினாள் ஜனனி.

"அது தான் நடந்தது நடந்து போச்சே. அது பத்திப் பேசி இனிமே என்ன சார் ஆகப் போகுது? என்னால இனிமேல் கம்பெனிக்கு வரமுடியுமா சொல்லுங்க?" குரல் கம்மியிருந்தது ஜனனிக்கு.

"அவன் செஞ்சதுக்கு நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேம்மா. ஏற்கனவே மதிங்கிற ஒரு பொண்ணோட வாழ்க்கையில நான் விளையாடியிருக்கேன். அவளோட சாபம் தான் அவனை இந்த மாதிரி அலைக்கழிக்குதுன்னு நினைக்கிறேன். உன்னோட சாபமும் சேர்ந்துக்கிருச்சின்னா அவ்வளவு தான் அவனால தாங்க முடியாது. நீ எப்பவும் போல கம்பெனிக்கு வரணும். வேணும்னா அவன் உன் கால்ல விழுந்து மன்னிப்புக் கேட்க வைக்கிறேன்." என்றார் தனுஷ்கோடி.

தனுஷ்கோடியின் மாற்றம் அவளுக்கே ஆச்சரியமாய் இருந்தது. தர்மசங்கடமான நிலை அப்போது நிலவியது. வெகு நேரம் யோசித்திருந்த ஜனனி, "சரி சார். நான் திரும்பவும் கம்பெனிக்கு வர சம்மதிக்கிறேன். ஆனா அதுக்கு முன்னாடி நான் விமல் கிட்ட பேசனும்." என்றாள்.

(பரவும்)

பாகம் - 64

விமல் நிறுவன அலுவலகம். விமல் அறை. ஏ.சி. மெல்லிய குளிருடன் சத்தமில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது. அன்று தான் தெளித்திருந்த ரூம் பிரஷ்னர் ஜாஸ்மின் வாசனை கம்மென்று இருந்தது. விமல் அவனது இருக்கையில் தலை கவிழ்ந்த வண்ணம், முகமெல்லாம் வருத்தத்திலும் கழிவிரக்கத்திலும். எதிரில் ஜனனியும் தனுஷ்கோடியும். ஜனனியின் முகம் நிச்சலமாய் தெளிநது இருந்தது. யாரும் வெகு நேரம் பேசவில்லை. அவன் அவளைத் தலை நிமிர்ந்து பார்ப்பான் என்று காத்திருந்தாள் ஜனனி. அவனோ குனிந்த தலை நிமிராமல் பேனாவை உருட்டிக் கொண்டே இருந்தான். சட்டென்று எழுந்தாள் ஜனனி. நிமிர்ந்த விமலின் கண்களில் கண்ணீர்.

ஜனனிக்கும் பாவமாய் இருந்தது. "தவறுக்குத் துணிந்த மனிதன் அழுவதில்லையே" என்ற சிவாஜி கணேசனின் தியாகம் படப் பாடல் அவள் காதில் ஒலித்திருக்குமோ என்னவோ?

ஜனனி தான் சம்பந்தமில்லாமல் பேச ஆரம்பித்தாள். "உங்களுக்கு ஒரு பிளாஷ்பேக் சொல்லனும்னு தான் உங்கப்பாகிட்ட சொன்னேன்." மீண்டும் உட்கார்ந்தாள் ஜனனி.

"நீங்க அன்புராஜ் சார் மூலமா என்னை வேலைக்குச் சேர முடியுமான்னு கேட்டவுடனேயே நான் முடியாதுன்னு மறுத்துட்டேன். அன்னைக்கு சாயங்காலம் என்ன நடந்ததுன்னு தெரியுமா? அன்னைக்கு சாயங்காலம் வீட்டுக்குப் போறதுக்கு முன்னாடி மதியோட ரூமுக்குப் போனேன். விமல் கம்பெனிக்கு நம்ம கம்பெனியில இருந்து ஆட்களைக் கலைக்கப் பார்க்குறாங்க. அன்புராஜ் மூலமா எனக்குக் கூடத் தூது விட்டிருக்காங்கன்னு சொன்னேன். அதுக்கு நீங்க என்ன பதில் சொன்னீங்கன்னு கேட்டா மதி. நான் மாட்டேன்னு சொல்லிட்டேன்னு சொன்னேன். அதுக்கு அவள் என்ன சொன்னா தெரியுமா?"

குழப்பமாய்ப் பதிலேதும் சொல்லாமல் விழித்தான் விமல்.

"விமல்னு உங்க பேரைச் சொன்னதுமே அவளோட முகம் மலர்ந்திருச்சி. அவரோட கம்பெனிக்கா? ப்ளீஸ். நீங்க எங்கப்பாவுக்காக நன்றிக் கடன் ஏதாவது பட்டிருந்தீங்கன்னு உங்க மனசுல தோணிச்சின்னா, எனக்காக நீங்க அங்கே போய்ச் சேரனும், அதுவும் நம்ம கம்பெனி தான். அதனால அதையும் கீழே விழாமப் பாத்துக்கனும். எனக்கு ஹெல்ப் பண்ண நிறைய பேர் இருக்காங்க. பாவம் அவருக்கு ஹெல்ப் பண்ணத் தான் யாருமே இல்லைன்னு நினைக்கிறேன். கூட இருக்குறவங்க எல்லாம் பணத்தாசை புடிச்சவங்கன்னு சொன்னா. உன்னை அவமானப்படுத்துனவங்க கம்பெனின்னு உனக்குக் கோபம் வரலியான்னு தான் கேட்டேன். நீங்க வேற ஏதாவது ஒரு கம்பெனின்னு சொல்லிருந்தாக் கூட எனக்குக் கோவம் வந்திருக்கும். விமல் எப்பவும் என் மனசுக்குள்ள தான் இருக்கார். அவருக்கு என்னால எதுவும் செய்ய முடியாதோன்னு நினைச்சிக்கிட்டு இருந்தேன். கடவுளாப் பார்த்து உங்களை அனுப்பி வச்சிருக்காரு. நீங்க தான் சரியான ஆள். தயவு செஞ்சு இந்த வேலையை ஏத்துக்கோங்க. என்னைக்காவது ஒரு நாள் விமல் மனசு மாறுவாரு. அன்னைக்கு அவர் கிட்ட நாம இப்போ பேசுனதைச் சொல்லுங்க. சரியா?" ன்னு மதி கேட்டாள். என்னால மறுக்க முடியல. அதனால தான் நான் உங்க கம்பெனிக்கே வந்தேன்." என்றாள் ஜனனி.

"அதுக்கப்புறம் தான் நான் மறுநாள் அன்புராஜ் சாரைப் பார்த்து வேலைக்கு சேர எனக்கு சம்மதம்னு சொன்னேன். இப்போ கூட நானும் மதியும் அடிக்கடி பேசிக்குவோம். உங்களோட குடி பழக்கம் பத்திச் சொல்லும் போதெல்லாம் ரொம்ப வருத்தப்படுவா. நான் தான் வேணுமின்னே மதி கம்பெனி எங்கேல்லாம் மார்க்கெட்டிங் பண்றாங்களோ அங்கெல்லாம் நாம பண்ணாம பார்த்துக்கிட்டேன். இப்போ ரெண்டு கம்பெனியுமே நல்ல நிலையில இருக்குறதுல சந்தோசப்படுறது நானாத் தான் இருப்பேன்.

ஆனா, உங்களோட பழக்கம் உங்களை எந்த நிலைக்குத் தள்ளிருச்சின்னு பார்த்தீங்களா? இந்த விஷயத்தை நான் மதிகிட்டச் சொன்னா என்ன பாடுபடும் அவளோட மனசு? அவ மனசுல ஆசையை விதைச்சி அவளோட நல்ல மனசையும் கெடுத்து இப்போ என்னோட கறபிலேயும் விளையாடப் பார்த்தீங்களே, உங்களுக்கு பொம்பளைங்க என்ன விளையாட்டு பொம்மைங்களா?

இப்பவும் ஒன்னும் கெட்டுப் போயிடல. இனி மேலாவது நீங்க மாறனும். அப்படி மாறுவேங்கிற நம்பிக்கையை நீங்க எங்கிட்ட எப்படியாவது நிரூபிக்கனும். அப்படி செஞ்சீங்கன்னா நான் தொடர்ந்து உங்க கம்பெனியில இருப்பேன். ஆனா ஒன்னு மட்டும் சொல்றேன். என்னை மாதிரி ஆயிரம் மேனேஜருங்க கிடைப்பாங்க. ஆனா மதியை மாதிரி ஒருத்தி உங்களுக்குக் கிடைப்பாளா? இதைச் சொல்றதுக்குத் தான் நான் உங்கப்பா கூட வரச் சம்மதிச்சேன்.

இனி நான் இங்கே இருக்குறதும், கிளம்புறதும் உங்க கையில தான் இருக்கு" என்ற படி மீண்டும் எழுந்து கிளம்பினாள் ஜனனி.

(பரவும்)

பாகம் - 65

ஜனனி கிளம்ப எத்தனித்த போது அவளைத் தடுத்து நிறுத்தியது விமலின் குரல் அல்ல. தனுஷ்கோடியின் குரல். "நில்லும்மா. நீ எங்கயும் போக வேண்டாம். நீ கேட்ட உத்திரவாதத்தை விமல் தர்றத விட நான் தர்றது தான் பொருத்தமா இருக்கும். ஏன்னா அவனோட இந்த நிலைக்குத் தெரிஞ்சோ தெரியாமலோ நானும் ஒரு காரணமா இருந்திருக்கேன். அந்தப் பொண்ணு மதியோட பெருந்தன்மைய நினைச்சு நான் தலை வணங்குறேன். பணம் மட்டுமே வாழ்க்கைன்னு நினைச்சிக்கிட்டு தான் இவ்வளவு காலம் இருந்துட்டேன். இங்க இருக்குற ஏழைத் தொழிலாளிங்களோட வாழ்வு, வேலையில உன்னோட அர்ப்பணிப்பு, தனக்கு துன்பமே செஞ்சிக்கிட்டு இருந்தவங்களுக்கும் நல்லதே செய்யனும்னு நினைக்கிற மதியோட நல்ல குணம் இதெல்லாம் என்னோட நினைப்பை அடியோட மாத்திருச்சிம்மா. உனக்கு நான் உத்தரவாதம் தர்றேன். இனி நீ புது விமல் மட்டுமில்ல புது தனுஷ்கோடியையும் பார்க்கப் போற." என்றார்.

"அது மட்டுமில்ல. மதியோட சொத்து பத்தியெல்லாம் இனி நான் கவலைப் படப் போறதில்ல. அவளோட நல்லதுக்கு நான் எதை வேணும்னாலும் விட்டுக் கொடுக்குற முடிவுக்கு வந்துட்டேன்." என்றார்.

விமலின் பதிலே சொல்ல முடியாத தலையசைப்பு அவர் சொல்வது அனைத்தும் உண்மை என்று பறை சாற்றியது.

"அப்போ சரி. கூடிய சீக்கிரமே மதி கிட்ட நடந்தது பூரா சொல்லி... என்ன சார் பார்க்குறீங்க. இன்னைக்கு நடந்தது மட்டும் தான் சொல்லுவேன். கவலைப்படாதீங்க. இரண்டு பேரும் சந்திக்க நானே ஏற்பாடு பண்றேன். இப்போ கம்பெனியோட எக்ஸ்போர்ட் சம்பந்தமா எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கு. நான் பாக்கப் போறேன். உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?" என்றாள் ஜனனி சகஜமாக இதை எதிர்பார்த்தவள் போல்.

"ஒரு ஆட்சேபணையும் இல்லம்மா." என்று மனப்பூர்வமாகச் சொன்னார் தனுஷ்கோடி.

அவர்களின் மாற்றம் யாரை ஆச்சரியப்படுத்தியதோ இல்லையோ சரஸ்வதிக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தந்தது. எல்லாரும் பட்டாத் தான் திருந்துவாங்க போல என்று நினைத்துக் கொண்டார். எப்படியோ நல்லா இருந்தாச் சரி தான் என்று சந்தோசப்பட்டார்.

இது நடந்து ஒரு வாரம் ஆகியிருக்கும்.

விஸ்வேஸ்வரன் முதன் முதலில் விமலை எங்கே பார்த்தாரோ அதே ஐந்து நட்சத்திர ஓட்டலின் விடுதி. மணி இரவு 9 மணிக்கு மேல் ஆகியிருந்தது. இன்றும் அழகேசன் அதே காரில். ஆனால் இந்த முறை மதியைக் கொண்டு வந்து விட வந்திருந்தான். வாசலில் ஏற்கனவே விமல் மதிக்காகக் காத்திருந்தான். அழகேசனுக்கு மனத்தில் உள்ளூரக் கவலை சூழ்ந்தது. ஆனால் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. "நான் கிளம்பட்டுமா?" என்றான்.

"என்னைத் தனியா விட்டுட்டா? வெயிட் பண்ணுங்க. வந்துடறேன்." என்றாள் மதி.

மதியும் விமலும் இதோ உணவகத்துக்குள் நுழைகின்றார்கள். ஒரு ஒதுக்குப்புறமான மேசையைத் தேர்ந்தெடுத்து அமர்ந்தார்கள். விமல் மதியை ஒரு நிமிடம் அந்த அரை விளக்கொளியில் ஏதோ அப்போது தான் புதிதாகப் பார்ப்பது போல் பார்த்தான். சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அவள் புதிய மதி தான். அவனுடன் முன்பு பழகிய மதியின் கனவில் மிதக்கும் கண்களோ, உல்லாசத்தில் எப்போதும் துள்ளும் மனமோ இப்போது மதியிடம் மிஸ்ஸிங். மற்ற படி இந்த ஒன்றரை ஆண்டில் கொஞ்சம் இளைத்து விட்டாள் என்று நினைத்தான்.

எப்போதும் மாடர்ன் டிரஸ்ஸிலேயே அவனுடன் வலம் வந்த மதி அன்று சிம்ப்பிளான ஒரு சேலையே உடுத்தியிருந்தாள். அதிக மேக்கப் கூட இல்லை. மிகச் சாதாரணமாக இருந்தாள். ஆனால் சந்திரனுக்கு ஒப்பனை தேவையா என்ன?

மதியும் விமலை இது போல் எடை போட்டுக் கொண்டு தான் இருந்தாள். விமலைப் பார்த்ததுமே அவளுக்கு எதுவுமே நினைவுக்கு வரவில்லை. அவனது தந்தை இவளை சனியன் தொலைந்தது என்று நினைத்துக் கொள் என்று சொன்னபோது மறுக்காத விமலே கண்ணுக்கு வந்து நின்றான். அந்த விமலை விட இந்த விமல் நன்றாகவே தெளிந்து இருக்கின்றார். கண்களில் கொஞ்சம் சோபை கூடியிருக்கின்றது. நடையில் பழைய அலட்சியம் இல்லை. குடிப்பழக்கத்தைக் கூட விட்டு விட்டாராமே? என்று நினைத்துக் கொண்டாள்.

அன்றைய தினம் அவனுக்கு எடுப்பானதொரு சூட் போட்டுக் கொண்டு வந்திருந்தான் விமல். இன்றைக்கு விமல் அவரோட பெயரைப் போலவே சுத்தமானவராத் தான் இருக்கார் என்று நினைத்து மகிழ்ந்தாள் மதி.

சரி இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்கட்டும். நாம் அழகேசனுடன் கொஞ்ச நேரம் வெளியில் இருப்போம்.

அங்கே அழகேசன் என்ன தான் செய்து கொண்டிருக்கின்றான்? காரில் டிரைவர் சீட்டில் உட்கார்ந்து தனது வாழ்க்கையை அசைபோட்டுக் கொண்டு இருந்தான் அழகேசன். மதியை என்று பார்த்தானோ அன்றே மனதாரக் காதல் கொண்டான். அது அழகாலோ சொத்துக்களாலோ வந்த காதல் அல்ல. அவளது குழந்தைத் தனத்தால் வந்தது. அவளைப் பற்றி விஸ்வேஸ்வரன் அவனிடம் சொல்லும் போதெல்லாம் அவள் மேலிருந்த காதல் கூடிக் கொண்டே சென்றது. அவனது காதலை வெளியில் சொல்லப் பல முறை நினைத்திருக்கின்றான் அழகேசன். அவன் பணக்காரப் பெண், தான் ஏழை என்றெல்லாம் கவலைப்பட வில்லை. ஆனால் அவளைக் கண்டது முதல் காதலை வெளிப்படுத்தும் தருணம் அவனுக்கு அமையவே இல்லை. விரைவிலேயே நிச்சயதார்த்தம், தந்தையின் மறைவு, சூழ்ச்சி என்று மாட்டிக் கொண்ட மதியைக் காத்தே தன் காதலை வெளிப்படுத்தினான் அழகேசன். அவள் அறிய வேண்டும் என்று கூட அவன் எதிர்பார்க்கவில்லை.

அவனது வாழ்க்கையின் லட்சியம் வேறு ஜனனி ரூபத்தில் குறுக்கிட்டுக் கொண்டே இருந்தது. இப்போது ஜனனியைக் கூட அடிக்கடிக் காண முடிவதில்லை. தான் எத்தனை துரதிருஷ்டசாலி என்று வறட்டுச் சிரிப்புத் தான் அவனுக்கு வந்தது. அப்படியே நினைவில் மூழ்கியிருந்த அவனை கார்க்கதவைத் தட்டி மதி தான் எழுப்பினாள்.

சடாரென்று நனவுலகுக்கு வந்தான் அழகேசன். வெளியே மதி நின்றிருந்தாள். வேகமாக இறங்கி பின்பக்கமாகச் சென்று அவளுக்குக் கார்க்கதவைத் திறந்து விட்டான் அழகேசன். "எந்த உலகத்தைப் புடிக்க பலமான யோசனை?" என்று சிரித்துக் கொண்டே ஏறினாள் மதி.

"வீட்டுக்குப் போகலாம்" என்றாள் ஏறிக்கொண்டே.

அப்போது தான் கவனித்தான் அழகேசன். உள்ளே ஒன்றாகப் போன மதியும் விமலும் வெளியே வரும் போது ஒன்றாக வரவில்லை. மதி காரில் ஏறியதும் தான் விமல் வெளியே வந்தான். அவன் முகத்தில் ஏதோ யோசனை இருந்ததாகப் பட்டது அழகேசனுக்கு.

(பரவும்)

பாகம் - 66

மறுநாள் காலை. மதியின் வீட்டுக்கு ஜனனி சேகரையும் அழைத்துக் கொண்டு காலையிலேயே வந்து விட்டாள். அவளுக்கு ஆர்வம் பொறுக்க முடியவில்லை. இருவரையும் நேற்று சந்திக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தவள் அவள் தானே?

"என்ன நேத்து ரொம்ப லேட்டாயிருச்சோ? கண்ணெல்லாம் சிவப்பா இருக்கு?" என்று குறும்பாகக் கேட்டாள் ஜனனி, மதியிடம்.

"ச்சீ. அப்படியெல்லாம் இல்ல. கண்ல தூசி விழுந்திருச்சி. உறுத்திக்கிட்டே இருந்துச்சி. அதை எடுத்து இப்போ தான் போட்டேன். அதான் காரணமா இருக்கும்" என்றாள் மதி.

"சரி. கம்பெனிய விட்டுப் போயிட்டேன்னு எனக்கு பத்திரிகை கொடுக்காம விட்றக்கூடாது. நான் இரண்டு வீட்டுக்கும் வேண்டப்பட்டவளாக்கும்!" என்று சிரித்துக் கொண்டே சோபாவில் அமர்ந்தாள் ஜனனி.

"எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கும்மா. இப்பத் தான் பழைய மதியை நான் பார்க்கப் போறேன். உனக்குத் தான் நாங்க நன்றி சொல்லனும்." என்ற படி ஜனனிக்கு காபியும் சேகருக்கு பிஸ்கட்டும் ஒரு தட்டில் வைத்துக் கொண்டு வந்து கொடுத்தார் மாலதி.

"அய்யோ நான் எதுவுமே செய்றதுக்கில்லம்மா. எல்லாம் மதியோட சாமர்த்தியம் தான். மதிய விட்டா வேற எங்கே போவாரு விமல்?" என்றாள் ஜனனி.

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு "இப்போல்லாம் நான் ஆபீசுக்கு லேட்டாவே போறதில்ல தெரியுமா? சேகர் இப்போ ப்ரீ.கே.ஜி. போறான். ஸ்கூலுக்கு டைம் ஆயிருச்சி. நாங்க கிளம்புறோம். இவன் டைமுக்கு நானும் கிளம்பிருவேன். ஏதோ பெரிய படிப்பு படிக்க வைக்கிற மாதிரி இருக்கு இப்பவே. மதியம் அம்மா போய் இவனை அழைச்சிக்குவாங்க" என்ற படி கிளம்பினாள் ஜனனி. வாசல் வரை வந்து அவளை வழியனுப்பி வைத்தாள் மதி.

அப்போது தான் வேலைக்கு வந்திருந்த அழகேசன் காரைத் துடைத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஜனனியை இங்கே பார்த்ததில் மிகுந்த ஆச்சரியம், மகிழ்ச்சி. அதுவும் சேகரை யூனிபார்மில் பார்த்ததுமே பூரிப்பில் கைகால் ஓடவில்லை அவனுக்கு. மதியும் அதை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஆமா ரெண்டு பேரும் எதுல வந்தீங்க?" என்றாள்

"ஆட்டோல தான். இதோ ரோட்டுக்குப் போனா ஆட்டோ புடிச்சிக்குவோம்." என்றாள் ஜனனி.

"அதெல்லாம் எங்கிட்ட நடக்காது. கார்ல தான் இன்னைக்கு நீங்க போகனும். இவனை ஸ்கூல்லையும், ஜனனியை அவங்க ஆபீஸ்லையும் விட்டுட்டு வாங்க" என்றாள் அழகேசனிடம்.

அழகேசனைக் கையில் பிடிக்க முடியுமா என்ன? தன் மருமகனை முன் சீட்டிலும், ஜனனியைப் பின் சீட்டிலும் உட்கார வைத்தான். அவனுடன் பேசிக்கொண்டே கார் ஓட்டும் போது தன்னிலையிலேயே அவன் இல்லை. அவன் கேட்கும் மழலை விளக்கங்களுக்கு எல்லாம் பதில் பேசிக் கொண்டே ஓட்டியதில் சீக்கிரமே அவனது பள்ளி வந்தது.

அடுத்து ஜனனியை விமல் கம்பெனிக்கு இட்டுச் சென்றான் அழகேசன். வழியெல்லாம் பெரும் மௌனம் குடிகொண்டிருந்தது. "இப்போது உண்மையைச் சொன்னால் எப்படி இருக்கும்?" "மறுமணம் பற்றிப் பேசிப் பார்ப்போமா?" "ஏன் மதியை விட்டு ஜனனி செல்ல நேர்ந்தது" என்று கேட்போமா என்று பல வித எண்ணங்கள் அவனைச் சூழ்ந்தது. அவனுக்கு அப்போது பொருத்தமாயும், நேரத்தைப் போக்கவும், தேவைப்படும் தகவலைத் தருவதாகவும் இருந்த கேள்வியைத் தேர்ந்தெடுத்துக் கேட்டான் அழகேசன்.

"ஆமா அன்னைக்கு சம்பளம் கட்டாது அப்படின்னு சொல்லி அவரோட கம்பெனிக்கு வேலைக்குச் சேர்ந்தீங்க. அப்புறம் எப்படி இன்னைக்கு இவுங்களை வீட்டிலேயே வந்து பார்க்கிறீங்க?" என்றான்.

"உனக்கு எதுவுமே தெரியாதுல்ல. இப்போ சொல்லலாம் தப்பில்ல. என்னை அங்கே அனுப்பி வச்சதே மதி தான்." என்று நடந்த உண்மைகள் அனைத்தையும் சொன்னாள் ஜனனி.

ஓ. அதனால் ஏற்பட்டது தான் நேற்றைய விமல், மதி சந்திப்பா? என்று நினைத்துக் கொண்டான் அழகேசன். "எப்படியோ நம்ம ராமு தாத்தா சொல்ற மாதிரி எல்லோரும் நல்லா இருந்தா போதும்." என்றான். அதில் எல்லோரும் என்ற வார்த்தையை ரொம்ப அழுத்தமாகவே சொன்னான். அந்த எல்லோருமில் ஜனனி தான் முன்னால் இருந்தாள் அவனைப் பொருத்த வரை. ஆனால் அவள் அதைப் புரிந்து கொள்ளாததற்குக் காரணம் சரியாகக் கவனிக்காமல் இல்லை, அவளது அலுவலகம் அதற்குள் வந்திருந்தது.

"தாங்க்ஸ்" என்ற படி இறங்கினாள் ஜனனி.

(பரவும்)

பாகம் - 67

அவர்களை வழியனுப்பி வைத்து விட்டு வீட்டுக்கு உள்ளே வந்தாள் மதி. நேராக அம்மாவிடம் சென்றாள். "எனக்கென்னவோ இந்தக் கல்யாணம் நடக்கும்னு தோணலம்மா" என்று பெரிய குண்டாய்த் தூக்கிப் போட்டாள் மதி.

மாலதிக்கு திக்கென்று இருந்தது. "என்னம்மா சொல்ற? எல்லாம் கூடி வருதுன்னு ஆண்டவனை வேண்டிக்கிட்டு இருக்கேன் நான். நீ என்னடான்னா அபசகுனமாப் பேசுற?" என்றார்.

"ஹூம். இன்னும் உலகம் தெரியாத ஆளாவே இருக்கீங்கம்மா நீங்க. நானும் விமலும் மட்டும் சந்திச்சாப் போதுமா? அவர் ஒரு அப்பா கோண்டு. அவர் அப்பாவைப் பத்தித் தான் உங்களுக்கே தெரியுமே." என்றாள்.

"அதான் ஜனனி சொல்றாளே. எல்லாரும் திருந்திட்டாங்களாமே." என்றார் மாலதி.

"ஏம்மா 50 வருஷமாத் திருந்தாத ஒருத்தர் ஒரே நாள்ல எப்படித் திருந்துவாராம்?" என்று பதில் கேள்வி கேட்ட மதி தொடர்ந்தாள். "அன்னைக்கு நான் எத்தனை குழந்தைத் தனமா ஒரு ஜாமீன் கையெழுத்துப் போடுங்கன்னு அவங்க வீட்டுக்குப் போய் நின்னேன். எவ்வளவு உரிமையாப் போய் நின்னேன் தெரியுமா? அவர் மேல எத்தனை பாசம் இருந்தா அவ்வளவு உரிமையாப் போயி நின்னுருப்பேன். ஆனா அன்னைக்கு அவங்களுக்குத் தெரிஞ்சதெல்லாம் என்னம்மா? நம்ம சொத்துத் தான. இப்போ சொத்துக்குப் பாதகமில்லைன்னு தெரிஞ்சோ அல்லது திருந்தியோ வர்றாங்கன்னே இருக்கட்டும். என்னால அதை ஏத்துக்க முடியாது. நான் ஒன்னும் கடவுள் இல்ல. சராசரி மனுஷி தான். வாழ்க்கை பூரா அவங்க முகத்தைப் பார்த்துக்கிட்டு நான் அவமானப் பட்ட வீட்டிலேயே போய் வாழ்க்கை பூரா இருக்க என்னால முடியாது."

"ஏதோ சொத்து திரும்ப வந்திருச்சின்னு நினைச்சி நீ இப்படில்லாம் பேசுறியா மதி? இதே சொத்து திரும்ப வரலைன்னா நம்மோட கதி என்ன ஆகியிருக்கும்னு கொஞ்சம் நினைச்சிப் பாரு. நிச்சயமாகி கல்யாணம் முறிஞ்சி போச்சின்னா ஆம்பிளைக்கு அது பிரச்னை இல்லம்மா. ஆனா பொண்ணுக்கு? அவள யாரு கட்டிக்க முன் வருவாங்க சொல்லு? நீ அதையிதை போட்டுக் குழப்பிக்காத. இப்போ யாரு உன்னை அனுப்புனாங்களோ அவங்களே திரும்ப அழைக்குறாங்க. நீ பிடிவாதம் பிடிச்சி உன் வாழ்க்கையைக் கெடுத்துக்காத. எல்லாம் போக இது உங்கப்பா உனக்காகப் பார்த்து வச்ச மாப்பிள்ள. அதை உதறித் தள்ளாத" என்ற மாலதி அழுவதற்காய் கண்களில் கண்ணீரைத் தேக்கினார்.

கடைசியாய்ச் சொன்ன வாக்கியம் மதியையும் உருக்கி விட்டது. அப்பாவைச் சொன்னதும் அவளுக்கும் கண்ணீர் நிறைத்தது. "கவலைப்படாதீங்கம்மா. நாம யாருக்கும் கெடுதல் நினைக்கல. அதனால நமக்கும் கெடுதல் வராது. எல்லாம் சீக்கிரமே நல்ல படியா நடக்கும். நான் ஆபீஸுக்குக் கிளம்புறேன்." என்றாள் மதி.

ஆபீஸ் சென்று கொண்டிருந்தார்கள் அழகேசனும் மதியும். அழகேசன் தான் பேச்சை ஆரம்பித்தான். "நீங்க தான் ஜனனியை அந்தக் கம்பெனிக்கு அனுப்பி வைச்சீங்கன்னு எங்கிட்ட சொல்லாமலே மறைச்சிட்டீங்களே?" என்றான்.

"நீங்க மட்டும் எங்கிட்ட எதைச் சொல்லீட்டீங்க?" என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டாள் மதி. "ஏன் உங்ககிட்ட கண்டிப்பா சொல்லிருக்கனுமோ?" என்று தூண்டில் போட்டாள்.

"அப்படியெல்லாம் இல்லைங்க. ரொம்ப ரகசியமா காரியத்தை சாதிச்சிக்கிட்டீங்க. அதைத்தான் சொன்னேன்." என்றான். "உங்களை விடவா?" என்றாள் மதி. இருவர் கண்களும் ஒரு முறை கண்ணாடியில் சந்தித்துக் கொண்டன.

(பரவும்)

பாகம் - 68

விமலின் அலுவலக அறை. அவனுடைய இருக்கையில் உட்காராமல் ஜன்னல் வழியே எதையோ பார்த்துக் கொண்டிருந்தான் விமல். ஜனனி உள்ளே நுழைந்தாள். "இன்னைக்கு நம்ம முத கன்சைன்மெண்ட்டை எக்ஸ்போர்ட்டுக்கு அனுப்பிரலாமா?" என்றாள். மெல்ல தலையசைத்தான் விமல்.

"என்ன சுரத்தே இல்லாம இருக்கீங்க?" என்றாள் ஜனனி.

"அதெல்லாம் ஒன்னுமில்ல. கொஞ்சம் தலைவலி. அதான்." என்றான் விமல்.

"ஓ. அப்போ நீங்க போய் ரெஸ்ட் எடுங்களேன். நாளைக்கு வேணும்னா அனுப்புவோம். நாளைக்கும் நல்ல நாள் தான்." என்றாள் ஜனனி.

"அதெல்லாம் பரவாயில்ல. இன்னைக்கே அனுப்பிருவோம். இங்கே தான் இருப்பேன். ரெடியானதும் கூப்பிட்டா ஓடி வந்துர்றேன்." என்றான். சரியென்று கிளம்பி அவளது அறைக்குச் சென்று விட்டாள் ஜனனி.

ஒரு வாரத்திற்கு மேல் ஓடியிருக்கும். சாதாரணமாக நகர்ந்து கொண்டிருந்தது நாட்கள். அன்று தனுஷ்கோடி வந்திருந்தார் அலுவலகத்துக்கு. என்றுமில்லாத அதிசயமாய் ஜனனியின் அறைக்குள்ளேயே வந்து அவளுக்கெதிரே அமர்ந்தார். அவர் உள்ளே நுழைந்ததுமே எழுந்த ஜனனி "சொல்லுங்க சார்." என்றாள்.

"முதல்ல உட்காரும்மா. விமலும் மதியும் அன்னைக்கு சந்திச்சிக்கிட்டாங்க தானே? ஒன்னும் பிரச்னை இல்லையே?" என்றார்.

"இல்லையே. ஏன் சார்?" என்றாள்.

"இல்லைம்மா. நான் நேத்து அவன் கிட்ட என்னைக்கு நாம எல்லாரும் மதியோட வீட்டுக்குப் போறோம்னு கேட்டேன். எதுக்கு? நான் இப்போ உங்க கிட்ட கல்யாணம் பண்ணி வைங்கன்னு கேட்டேனான்னுட்டான். அதான் கேக்குறேன்" என்றார்.

"அப்படியா சொன்னார்? ஆச்சரியமா இருக்கே. எல்லாம் சரியாப் போகும் சார். எனக்குக் கொஞ்சம் டைம் கொடுங்க. இது பெர்சனல் மேட்டர். இரண்டு பேர்கிட்டயும் சடார்னு கேக்க முடியாது. பார்ப்போம். நேரம் கிடைக்கும் போது பேசிப்பார்க்கிறேன்" என்றாள் ஜனனி.

"சரிம்மா" என்ற படி எழுந்து கொண்டார் தனுஷ்கோடி.

இரண்டு நாட்கள் இப்படியே கழிந்தது. மதியிடமும் ஜாடை மாடையாகப் போனில் பேசிப் பார்த்தாள் ஜனனி. ஒன்றும் தேறவில்லை. சரி இன்று விமலிடமே கேட்டு விட வேண்டியது தான் என்று நினைத்துக் கொண்டாள்.

மாலை நேரம். வீட்டுக்குக் கிளம்புவதற்கு முன் அவனது அறைக்குள் சென்றாள். அவனைப் பார்த்ததும் புன்முறுவலித்தாள். "ஆமா உங்க கல்யாண விருந்தை எப்போ போடப் போறீங்க?" என்று ஆரம்பித்தாள்.

ஏதோ தர்ம சங்கடமான கேள்வியைக் கேட்டதைப் போல் அவளைப் பார்த்தான் விமல். "வொர்க்கர்ஸ் எல்லாம் என்கிட்டக் கேக்குறாங்க. முதலாளி எப்போ கல்யாண விருந்து போடப் போறாருன்னு. அத நான் எப்படிச் சொல்ல முடியும்? அதான் உங்க கிட்டக் கேட்டு அவங்களுக்குச் சொல்வோம்னு பார்த்தேன்" என்றாள்.

"ம். அன்னைக்கு நீ எனக்கு பெரிய பிளாஷ்பேக் சொன்னே. நான் இன்னைக்கு உனக்கு ஒரு பிளாஷ்பேக் சொல்றேன். அன்னைக்கு ஹோட்டல்ல என்ன நடந்ததுன்னு உங்கிட்டச் சொல்றதுக்குத் தான் நேரம் பார்த்துக்கிட்டே இருந்தேன். இப்போ தான் அதுக்கு நேரம் வாய்ச்சிருக்கு." என்றான்.

ஜனனி அதற்காகத் தானே காத்துக் கொண்டிருந்தாள். "சொல்லுங்க." என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

"அன்னைக்கு மதி எங்கிட்டச் சொன்னதை என் வாழ்நாள்ல மறக்கவே முடியாது. சாதாரணமா குசலம் விசாரிக்கிற மாதிரி தான் ஆரம்பிச்சது எங்க பேச்சு. அப்போத் தான் இவ்வளவுக்குப் பிறகும் நம்ம காதல் எப்படி நிலைச்சு நிக்குதுன்னு நான் ஆரம்பிச்சேன். அதுக்கு சிரிச்சிக்கிட்டே மதி என்ன சொன்னா தெரியுமா?

"ஆமா. காதல் தான். இந்தக் காதல் தான் இந்த உலகத்தையே ஆட்டிப் படைக்கிற சக்தின்னு நானும் ரொம்ப நாளா நினைச்சிக்கிட்டு இருந்தேன். ஆனா காதலுக்கும் மேல ஒன்னு இருக்கு. அது தான் சர்வ வல்லமை படைச்சதா இந்த உலகத்தையே இயங்கச் செய்யுது. விமல் நானும் நீங்களும் சந்திச்சது, நாம ராப்பகலா வெறி பிடிச்சிக் காதலிச்சி சுத்துனது எல்லாமே இப்போ நினைச்சாக் கூட சந்தோசமா இருக்கு. ஆனா, அந்தக் காதல்ல என் மேல உங்களுக்கும், உங்க மேல எனக்கும் ஏதோ ஒரு எதிர்பார்ப்பு இழையோடிக்கிட்டே இருந்திருக்கு. நம்ம ரெண்டு பேரையும் உங்கப்பா பிரிச்சி வச்சாருல்ல. அப்போ அந்த எதிர்பார்ப்பு இழை தெறிச்சி ஓடிருந்திருக்கனும்.

ஆனா அப்படி இல்லாம அந்த எதிர்பார்ப்பே நம்ம இரண்டு பேரையும் பிரிச்சிருச்சி. நான் சொன்னேனே காதலுக்கும் மீறின சக்தி ஒன்னு இருக்குன்னு. அது என்ன தெரியுமா? எந்த எதிர்பார்ப்பும் இல்லாத தூய்மையான அன்பு. அந்த தியாகத்துல தான் இந்த உலகம் சுத்துதுன்னு நான் என்னைக்குத் தெரிஞ்சிக்கிட்டேனோ அன்னைக்கே நீங்க என் மனசுக்குள்ள இருந்து வெளியேறிட்டீங்க. உண்மையான காதல்ங்கிறது தியாகத்துல தான் ஆரம்பிக்குது.

நம்ம காதல் கண்ணாடி போல. பார்க்குறதுக்கு அழகாத் தான் இருந்துச்சி. ஆனா உடைஞ்சி போச்சே. இனி ஒட்ட முடியுமா? ஆனா நான் சொல்ற அன்பு தண்ணீர் போல. எத்தனை தடவை அடிச்சாலும் திரும்பச் சேர்ந்துக்கும்.

இப்போ நம்ம காதலைத் தூய்மையானதா ஆக்க முடியாதான்னு கேக்க நினைக்கலாம் நீங்க. நான் அப்படி என் மேல தூய்மையான அன்பு மட்டுமே இருக்குற இதயத்தை அறிஞ்சிக்கிட்டேன். அந்த இதயத்துக்கு என்னால முடிஞ்சதைச் செய்யப் போறேன். அதே மாதிரி நீங்களும் சுற்றி முற்றிப் பார்த்தீங்கன்னா ஒரு இதயம் உங்களுக்கும் கிடைக்கலாம். அப்படிக் கிடைக்காட்டாலும், ஒரு பொண்ணு உங்களுக்கு மனைவியா அமையலாம். அவ மேல நீங்க அந்தத் தூய்மையான அன்பைக் காட்டுங்க." அப்படீன்னு சொல்லிட்டா. அப்போ ஜனனியை என் கம்பெனியில சேரச் சொல்லி அனுப்பிச்சது. தகுந்த நேரம் வரும் போது சொல்லுன்னு சொன்னது? இதெல்லாம் ஏன்னு கேட்டேன்."

"அதுக்கு அவ சொன்னது தான் கிளைமேக்ஸ் ஜனனி. ஜனனியை நான் எதுக்கு அனுப்பிச்சேன்னு நினைக்கிறீங்க? உங்க கம்பெனியை வளர்க்குறதுக்கு இல்ல. எங்க கம்பெனியைப் பாதுகாக்குறதுக்கு. நான் ஜனனியை மட்டும் இழக்குறது பெரிய இழப்பில்ல. ஆனா உங்க கம்பெனியில என்னென்ன நடக்குதுன்னு எனக்குத் தெரிஞ்சாகனும். அதுவும் போக எங்க மார்க்கெட்ல நீங்க வந்துடக் கூடாது. எங்க வேலைக்காரங்களை நீங்க இன்னும் கலைச்சிடக் கூடாதுன்னு தான் ஜனனி கிட்ட அப்படி நாடகமாடி அனுப்பி வச்சேன். தகுந்த நேரம் வரும் போது சொல்லச் சொன்னது எதுக்குத் தெரியுமா? இப்போ நான் சொன்னதை உங்க கிட்டச் சொல்றதுக்குத் தான். நீங்க கெட்டுப் போகனும்னு நான் நினைக்கலியே. நீங்களும் உங்கப்பாவும் திருந்திட்டீங்கன்னு ஜனனி சொன்னதும் ச்ந்தோசப்பட்ற முத ஆளு நானாத் தான் இருப்பேன். ஆனா அது நம்ம கல்யாணத்துல போய்

முடியும்னு நீங்க நினைச்சீங்கன்னா சாரி. இதைச் சொல்றதுக்குத் தான் இன்னைக்கு உங்களைச் சந்திக்கவே ஒத்துக்கிட்டேன். அப்புறம் இன்னொன்னு, கூடிய சீக்கிரம் உங்களுக்கான இதயம் கிடைக்கனும்னு ஆண்டவனை வேண்டிக்கிறேன்."

"இது தான் அன்னைக்கு நடந்தது." என்று சொல்லி முடித்தான் விமல்.

ஜனனிக்கு மதியின் மேல் கோபம் தான் வந்தது. சின்னப் பொண்ணு நம்மளையே ஏமாத்திட்டாளே என்று நினைத்தாள்.

"அடடா! அவ இப்படிச் செய்வான்னு நான் நினைக்கவே இல்லங்க. நீங்க என்ன பதில் சொன்னீங்க?" என்றாள் ஜனனி.

"என்னை எங்கே அவ பேச விட்டா? அவ்வளவும் அவ தான் பேசினா. சரி நான் கிளம்புறேன்னு கிளம்பிட்டா" என்றான்.

"சரி. இதுல நஷ்டம் அவளுக்குத் தான்னு புரியல. இப்ப ஒன்னும் கெட்டுப் போகல. உங்கப்பா கிட்டச் சொன்னாப் போதும். கூடிய சீக்கிரமே நல்ல இடத்துல கல்யாணத்துக்கு ஏற்பாடு செஞ்சிருவாரு." என்ற ஜனனி கிளம்பப் போனாள்.

"இரு ஜனனி. எனக்கு இப்போ கல்யாண ஆசைல்லாம் இல்ல." என்றான்.

"அன்னைக்கு அவ சொல்லிட்டுப் போனதும் அவ மேல பயங்கரமான ஆத்திரம் தான் வந்துச்சி. என்னை அவமானப்படுத்திட்டுப் போறான்னு தான் நினைச்சேன். ஆனா ரெண்டு மூனு நாள் யோசனைக்குப் பிறகு அவ சொன்னதுல இருந்த உண்மை என்னை உறைக்க ஆரம்பிச்சிச்சி. நான் அவளுக்குத் தகுதியானவனா நடந்துக்கவே இல்ல. அப்புறம் நான் மட்டும் அவளை எதிர்பார்க்குறது முட்டாள் தனம் தான்னு தோணிச்சி. அவ சொன்ன மாதிரியே ஒரு தூய்மையான அன்பும் தியாகமும் இருக்குற ஒரு இதயத்தை நானும் புரிஞ்சிக்கிட்டேன். அதுக்கப்புறம் நானும் அவளை இப்போல்லாம் நினைக்கிறது இல்ல.

காதலிச்ச பொண்ணையே கல்யாணம் செஞ்சிக்கிறது எல்லாருக்கும் வாய்க்காம இருக்கலாம். ஆனா அதுக்காக வாழ்க்கையே இல்லைன்னு ஆயிடாது. ஒரு கதவை மூட்றதுக்கு முன்னாலேயே ஒரு வாசலைத் திறந்து வைச்சிருக்கான் ஆண்டவன்னு புரிஞ்சிக்கிட்டேன். நீ எங்கிட்ட அன்றைக்கு ஒரு உத்திரவாதம் கேட்ட ஜனனி. நான் அதை என் மனப்பூர்வமா நிறைவேற்றிக் காட்டுவேன். நான் சொன்ன அந்த இதயம் யாருக்குச் சொந்தமானதுன்னு உனக்கே தெரிஞ்சிருக்கும். ஆனா நான் யாரையும் எதையும் எதிர்பார்க்கப் போறதில்ல. இப்படியே ஒரு உத்திரவாதத்தை நிறைவேற்றிக்கிட்டே வாழ்க்கை பூரா கழிக்கவும் ரெடி. நீ மட்டும் இங்கேயே இருந்தாப் போதும்." என்று சொல்லும் போதே குரல் கம்மத் தொடங்கி இருந்தது விமலுக்கு.

அதன் பின் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. அமைதியைக் கலைக்கும் வண்ணம் விமல் தான் மௌனத்தை உடைத்தான். "கல்யாண விருந்து எப்போன்னு நீயே தகுந்தபடி வொர்க்கர்ஸ் கிட்டச் சொல்லிரு." என்றான்.

அமைதியாக அவனிடம் எதுவும் சொல்லிக் கொள்ளாமலேயே ஜனனி கிளம்பிவிட்டாள்.

(பரவும்)

பாகம் - 69

அதன்பிறகு கொஞ்ச நாளாய்க் கிணற்றில் போட்ட கல்லாக எந்தப் பேச்சுமே வெளி வரவில்லை. கூடிய சீக்கிரமே மதியின் இரண்டாண்டுக் கெடு நெருங்கிக் கொண்டிருந்தது. அவள் அதற்காக இன்னும் இன்னும் உழைக்க ஆரம்பித்திருந்தாள். அவளது கண்ணுக்கு எதுவுமே தெரியவில்லை. லட்சியம் தவிர.

"அன்னைக்கு என்ன தாம்மா நடந்துச்சி?" என்று கேட்டார் மாலதி. மதி தயங்கவில்லை. "நான் தான் அன்றைக்கே உங்க கிட்டச் சொன்னேன்ல. இது கல்யாணத்துல போயி முடியாதுன்னு. நாங்க அத்தனை முறை சந்திச்சே கல்யாணத்துல போய் முடிஞ்சிச்சா? இந்த ஒரு தடவை சந்திச்சா மட்டும் முடிஞ்சிடுமா? உங்களுக்கு ஒரு உண்மை சொல்லட்டுமா? நான் தாம்மா முடியாதுன்னு மறுத்துட்டேன்." என்றாள்.

"எனக்கென்னவோ உங்கப்பா நிச்சயம் பண்ண வரன் தட்டிக் கழியவிடலாமான்னு தோணுது. நீ இப்ப ரொம்பப் பெரிய மனுஷியாகிட்ட. நான் சொன்னாக் கேக்கவா போற? நானும் அன்னைக்கே உங்கப்பா கூடப் போயிருக்கனும்" என்றார் மன வருத்தப்பட்டு மாலதி.

மதிக்கு மிகுந்த மனக்கலக்கம் உண்டாயிற்று. அம்மாவின் வார்த்தைகளால் கண்ணீர் அவளது அழகிய கன்னங்களில் ஓட ஆரம்பித்து இருந்தது. "அம்மா, உங்க பேச்சைக் கேட்காம நான் வேற யார் பேச்சைக் கேக்கப் போறேம்மா? ஆனா அப்பாவுக்கு மாரடைப்பு வர்றதுக்கு ஒரு நாள் முன்னாடி ராமு தாத்தா வீட்டுக்கே போயிருக்காரு. எனக்கு இந்த நிச்சயதார்த்தம் ஏண்டா நடத்தினோம்னு இருக்கு. மதியைக் கிளி மாதிரி வளர்த்து ஒரு பூனை கையில கொடுத்திட்டேனோன்னு தோணுது. நான் என் வாழ்நாள்ல செஞ்ச பெரிய தப்பா இது தோனுது. அதுவும் என் செல்ல மகள் வாழ்க்கையையே பாதிச்சிரும்னு நினைக்கிறப்ப என்ன செய்றதுன்னே தெரியலைன்னு சொல்லிருக்காரு. என் மேல சந்தேகம் இருந்தா நீங்களே ராமு தாத்தா கிட்டக் கேட்டுப் பாருங்க.

இப்போ என் மனசுல விமல் இல்லம்மா. கூடிய சீக்கிரமே உங்களுக்கு நல்ல செய்தி சொல்றேன். அது வரைக்கும் பொறுங்களேன்." என்றாள் மதி.

ராமு தாத்தா பொய் சொல்பவரில்லை என்று மாலதியும் அறிந்திருந்ததால் மதியை மறுத்துப் பேச முடியவில்லை.

அன்று மாலை 7 மணி இருக்கும். சீக்கிரமே வீட்டுக்குக் கிளம்பினாள் மதி. அழகேசனுக்கே எப்பவும் 9 மணிக்கு முன்னால் கிளம்பாதவள் அன்று சீக்கிரம் கிளம்பியதை நினைத்து ஆச்சரியமாய் இருந்தது. மெல்லச் சென்று கொண்டிருந்த போது "காரை நிறுத்துங்க" என்றாள் மதி. ஓரமாய் நிறுத்தினான் அழகேசன். அவள் கீழே இறங்கினாள்.

இரண்டாண்டுகளுக்கு முன் மனதுக்குள் பயந்து நடுங்கிக் கொண்டு மதியும், அவளுக்கு புத்திமதி சொல்லிக் கொண்டிருந்த அழகேசனும் நின்ற அதே இடம். அன்றும் மேகம் குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. மாலை நேரம். இரவு சூழ்ந்து கொண்டிருந்தது. காரில் சாய்ந்து நின்று கொண்டாள் மதி. எதுவும் பேச வில்லை.

அழகேசனின் மனம் ஒரு நிலையில் இல்லை. அவனுக்கும் பழைய நினைவுகள் வந்து சென்றன. மெல்ல அவள் பக்கத்தில் வந்து நின்றான். "இப்படியே நாள் ஓடிக்கிட்டு இருந்தா எப்படி?" என்றான் மெதுவாய்.

"எதுக்கு?" என்றாள் ஒன்றும் தெரியாதவள் போல்.

"உங்க கல்யாணத்துக்குத் தான். அன்னைக்குத் தான் அவரைப் பார்த்தீங்கள்ல. அப்படியே சட்டுபுட்டுன்னு தேதியைக் குறிச்சிருக்கலாம்ல" என்றான்.

"யார் சொன்னா நான் அவரைக் கல்யாணம் பண்ணிக்கிறதா?" என்றாள்.

"அப்புறம்?" என்றான்

"நான் அன்னைக்கே இந்தக் கல்யாணம் ஆவாதுன்னு சொல்லிட்டேன். அதுக்குத் தான் அன்னைக்கு ஹோட்டல்ல சந்திக்கிறதுக்கே போனேன்." என்றாள்.

"அப்போ உங்க கல்யாணம்? பொண்ணுங்களுக்குக் கால காலத்துல கல்யாணம் நடக்கனும்ல." என்றான்.

"என் கல்யாணத்துக்கு இப்போ என்ன குறைச்சல். நான் மட்டும் சொடக்குப் போட்டேன்னு வைங்க. என் முன்னால ஆயிரம் பேரு க்யூவுல நிக்க மாட்டாங்க?" என்றாள் குறும்பாய்.

அந்த இருள் கவியும் நேரத்திலும் அவளது கண்கள் பிரகாசமாய் ஜொலித்தது.

அழகேசனுக்கு இது எங்கேயோ கேட்ட மாதிரி இருந்தது! அது கேட்டதில்லை. சொன்னது என்று நிரூபிக்கும் வகையில் அடுத்து அவளே தொடர்ந்தாள்.

"ஆனா எனக்கு அந்த ஆயிரம் பேரும் வேண்டாம். அந்தக் க்யூவை ஒழுங்கு படுத்துற சாக்குல யாராவது ஒருத்தர் ஆயிரத்து ஓராவது ஆளா நிக்குறாரான்னு பார்ப்பேன். எனக்கு அவர் தான் வேணும்." என்று கனிந்த குரலில் சொன்னாள் மதி.

அழகேசனால் நடுக்கத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. நடப்பது நிஜம் தானா என்று அவனுக்கே சந்தேகமாய் இருந்தது.

"சரி என்கிட்ட எல்லாம் கேக்குறீங்களே. உங்க கல்யாணம் எப்போ?" என்றாள் மதி.

"நான் இப்போல்லாம் என்னோட குரங்கு மூஞ்சை அடிக்கடி கண்ணாடில பார்த்துக்கிறேன்ல." என்றான் அழகேசன்.

மதி உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள். விபரமறியா வயதில் அவனை அறைந்த போது சொன்ன அந்த அந்தரங்க வார்த்தையை அவன் மறக்காமல் சொன்னதிலேயே அவனது சம்மதத்தைத் தெரிந்து கொண்டாள். அதன் பின் அவர்களிடையே அந்த இருளிலும் கண்களே பேசிக் கொண்டன. வார்த்தைகளுக்கு வேலை இருக்கவில்லை.

இப்படியே வாழ்நாள் முழுதும் இருந்து விட்டால் எப்படி இருக்கும்? என்று இருவருக்குமே தோன்றியது.

"சரி வீட்டுக்குக் கிளம்பலாம்." என்றான் அழகேசன். இந்த முறை அவள் பின்னால் உட்கார வில்லை. முதன்முறையாக அழகேசனுக்குப் பக்கத்திலேயே முன்னால் உட்கார்ந்து கொண்டாள். அழகேசனுக்கு கையும் ஓட வில்லை. காலும் ஓடவில்லை. தாகத்தில் நா வறண்டு விட்டது! அவன் வாழ்நாளில் இதுவரை அனுபவித்தறியா இன்பச் சூறாவளி அவனைச் சூழ்ந்து கொண்டது. பறக்க வைத்தது. மிதக்க வைத்தது.

உள்ளே ஏறிய மதி சும்மா இருக்கவில்லை. கியர் மேல் தன் கைகளை வைத்திருந்தாள். "சரி கிளம்பட்டுமா?" என்று இருமுறை கேட்டான் அழகேசன். அவள் கையை எடுப்பாள் என்று. "கிளம்புங்க" என்றாள் மதி. கியரின் மேல் இருந்த அவள் கையைப் பார்த்துக் கொண்டே இருந்தான் அழகேசன். "ஏன் என் கை கியர் மேல இருந்தா வண்டி கிளம்பாதா?" என்று அவன் கண்ணைப் பார்த்துக் கொண்டே கேட்டாள் மதி.

"ஏன் கிளம்பாது?" என்ற அழகேசன் அவள் மெல்லிய கரத்தின் மேலே தன் கரத்தினை வைத்து அழுத்தி கியரைப் போட்டான். வண்டியும் கிளம்பியது.

"இதெல்லாம் சரி தானா?" என்றான் அழகேசன்.

"ஏன்? நான் மாறிருவேன்னு நினைக்கிறீங்களா?" என்றாள் மதி.

"இல்லை. எனக்கு என்ன தகுதியிருக்கு. நான் முடவங்க. நான் போயி கொம்புத்தேனுக்கு ...." என்று வாக்கியத்தினை முடிக்க முடியவில்லை அவனால். வாக்கியத்தை முடிக்க வேண்டிய இதழ்கள் தான் அவன் வசம் இல்லையே! கொம்புத் தேன் என்றால் எப்படி இருக்கும் என்று அவனுக்கு நடைமுறைப் பயிற்சி அளித்தாள் மதி. நல்ல வேளை. கார் தடுமாறுவதற்குள் பிரேக்கின் மேல் காலை அழுத்தி விட்டான்.

(பரவும்)

பாகம் - 70

அந்த உரையாடல் நிகழ்ந்து பத்து நாட்கள் ஆகியிருக்கும். அப்படி ஒரு உரையாடல் தங்களுக்குள் நிகழ்ந்ததாகவே விமல் காட்டிக் கொள்ள வில்லை. அந்தப் பத்து நாட்களும் ஜனனியைப் பாடாய்ப் படுத்தி எடுத்திருந்தது. இரு கண்கள் இருந்தாலும் ஒரு பார்வை தானே இருக்க முடியும்? ஒரு கண்ணில் சேகரும், மறு கண்ணில் விமலும் எப்படி இருக்க முடியும்? என்று இரு கண்களிலும் அவ்வப்போது கண்ணீர் எட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தது.

"நான் வேலையை விட்டு நின்னுக்கலாம்னு பார்க்குறேன்." என்று அவன் முன்னே வந்து நின்றாள் ஜனனி.

"சரி" என்று ஒரே வார்த்தையில் பதில் சொன்னான் விமல். "நீ என்ன செஞ்சாலும் எனக்கு இஷ்டம் தான் ஜனனி. நான் உன்னை வற்புறுத்தவே போறதில்ல." என்றான்.

"அப்போ உங்கப்பா காட்டுற பொண்ணு கழுத்துல தாலி கட்டுங்க." என்றாள் ஜனனி.

"அதைச் சொல்ல உனக்கு என்ன உரிமை இருக்கு? என்னைக் கட்டளை போட நீ யாரு? பதில் சொல்லு. என் கல்யாணத்தைப் பத்தி முடிவெடுக்க எனக்குத் தெரியும். யாரும் அட்வைஸ் பண்ண வேண்டாம்." என்றான் விமல்.

"ஏன் விமல் இப்படி? என் மனசறிஞ்சு நான் யாருக்கும் கெடுதல் பண்ணதில்ல. எங்கப்பா பண்ண பாவத்துக்கு நான் எவ்வளவு தான் அனுபவிக்க?" என்றாள் விம்மிய படி ஜனனி.

"அழாதே ஜனனி. என்னால தாங்க முடியாது. காற்றில்லா வெற்றிடத்துல ராக்கெட்ட செலுத்தினாலே போதுமாம் அதுக்கப்புறம் அதுவாவே போய்க்கிட்டே இருக்குமாம். படிச்சிருக்கேன். அது மாதிரி என் மனசே வெற்றிடமாப் போச்சி. உன்னால அதுல ஏற்பட்ட உந்து சக்தியில நான் பாட்டுக்குப் போய்க்கிட்டே இருப்பேன். என்னைப் பத்தி நீ கவலைப்படாத." என்ற விமல் அவள் அருகில் வந்து மெல்ல அவள் கண்களில் வழிந்த நீரைத் துடைத்து விட்டான் தன் கைகளாலேயே.

மெல்ல அவன் முகம் நிமிர்ந்து பார்த்தாள் ஜனனி. அவளது முகம் இப்போது தெளிந்திருந்தது.

கூடிய விரைவிலேயே விமல் ஜனனியைத் திருமணம் செய்து கொள்ளப் போகின்றான் என்ற விஷயம் காதில் விழுந்தது.

மறுநாளே ஒரு பெரிய விருந்துக்கு அவள் இல்லத்திலேயே ஏற்பாடு செய்தாள் மதி. நீங்களும் கண்டிப்பாக வரவேண்டும் என்று தனுஷ்கோடியையும், ஜனனியையும், விமலையும் நேரில் சென்றே அழைத்தாள்.

இதோ அவள் இல்லம், அவளது நிச்சயதார்த்தத்தன்று எப்படி இருந்ததோ அதே போன்று தடபுடலாய் இருந்தது. அன்று அங்கே அனைவரும் ஆஜராயிருந்தனர். தனுஷ்கோடி, சரஸ்வதி, கமல், விமல், ஜனனி, சேகர், கோமதி அம்மாள், அழகேசன், ராமுதாத்தா, மாலதி என்று அனைவரும் கூடியிருந்தனர். ஒரு முக்கியமான விஷயம் சொல்வதாய் அழைத்திருந்தாளே எதற்காக என்ற சந்தேகத்தில் அனைவரும் இருந்தார்கள்.

"இன்னைக்கு உங்களுக்கு நிறைய விஷயம் சொல்லப் போறேன். எல்லாரும் தயாரா இருந்துக்கங்க" என்றாள்.

"ஒரு நாள் ராமு தாத்தா என்னை வந்து பார்த்து ஒரு ரகசியத்தைச் சொன்னாரு. அது தான் என்னோட இத்தனை நாடகத்துக்கும் காரணம்" என்று பூடகமாய் ஆரம்பித்தாள். அனைவரின் கண்களும் ராமுதாத்தா வசம் சென்றன. அவர் குழப்பத்துடன் புருவத்தைச் சுருக்கினார்.

"நான் இன்னைக்கு உங்க முன்னால இப்படி நிக்கிறேன்னா அதுக்குக் காரணம் இவர் தான். அழகேசங்கிற ஒரு ஆத்மா இல்லைன்னா மதியும் கிடையாது. அவ்வளவு தூரம் அவருக்கு நான் கடமைப்பட்டிருக்கேன். அதை எப்படித் திருப்பிச் செலுத்தப் போறேன்னு நினைச்சிக்கிட்டு இருந்தப்ப தான் இவரோட பிறப்பு ரகசியம் பற்றி ராமு தாத்தா சொன்னாரு. என்னைக்கு ஜனனிக்கும் அழகேசனுக்கும் அப்பா ஒருத்தர்னு எனக்குத் தெரிஞ்சதோ அப்பவே முடிவு பண்ணிட்டேன். எப்படி என் லட்சியம் தான் அவரோட லட்சியம்னு அழகேசன் நினைச்சாரோ, அதே மாதிரி அவரோட லட்சியம் தான் என்னோட லட்சியம்னு.

அப்போ தான் ஜனனியை வேலைக்குக் கூப்பிட்டு விமல் அனுப்பிச்சாரு. நான் ஜனனிகிட்டச் சொன்ன காரணமோ, விமல் கிட்டச் சொன்ன காரணமோ உண்மை இல்ல. உண்மையான காரணம், ஜனனிங்கிற நெருப்பையும், விமல்ங்கிற பஞ்சையும் பக்கத்துல பக்கத்துல வச்சா எப்படியும் பத்திக்கும் அப்படிங்கிற ஆசை தான் உண்மையான காரணம். ஆனா இப்படி ஜனனிங்கிற நெருப்பும், விமல்ங்கிற பஞ்சு திரியாவும் மாறி தீபமா சுடர்விட்டுப் பிரகாசிக்கும்னு நான் கூட நினைக்கல.

அவங்க இரண்டு பேரும் இணைஞ்சிருக்கிறதுல இவரோட லட்சியம் இருக்கு. அக்காவுக்குக் கல்யாணம் செய்யாம தம்பிக்குக் கல்யாணம் நடக்குமா? அதனால என்னோட சுயநலமும் இருக்கு. என்ன அப்படிப் பார்க்குறீங்க? அவர் கல்யாணத்துக்கும், என்னோட சுயநலத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்குன்னா?

எங்கப்பா தன்னோட ஜெனரல் மேனேஜருக்குத் தான் தன் மகளைக் கட்டிக் கொடுக்குறதா நிச்சயம் செஞ்சாரு. அவரோட ஆசையையும் நான் ஒதுக்கிறக் கூடாது. அதனால இன்னைல இருந்து மிஸ்டர் அழகேசன் தான் மதி கம்பெனியோட ஜெனரல் மேனேஜர். இப்போ புரிஞ்சிருக்குமே யாரை நான் கல்யாணம் செய்யப் போறேன்னு?" என்றாள் மதி.

"நான் மதி கிட்ட திருக்குறளும், அர்த்த சாஸ்திரமும் ரொம்ப உதவும்னு சொன்னேன். இதுல இருந்து மதி அர்த்தசாஸ்திரத்தை மட்டும் தான் உபயோகிச்சிருக்கான்னு தெரியுது" என்றான் அழகேசன்!

"அது மட்டுமில்ல. விமலோட சொந்தம் விட்டுப் போயிராது! இப்போ தனுஷ்கோடி மாமா கிடையாது எனக்கு! சித்தப்பா." என்றாள் சிரித்துக் கொண்டே.

ஜனனியும் அழகேசனும் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓட ஒரே உதிரம் என்பதால் துடித்திருக்க சகோதரப் பாசத்தில் மெய்மறந்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தனர். அழகேசன் தன்னுடைய தம்பி என்றதும் ஜனனியால் தாங்க முடியவில்லை. அதுவும் அவனுக்கு அது தெரிந்திருந்தும் இத்தனை நாள் அவன் மறைத்து வைத்திருந்ததை எண்ணி பேச்சே வரவில்லை அவளுக்கு.

அங்கிருந்த அனைவரின் கண்களிலும் கண்ணீர். அது ஆனந்தக் கண்ணீர் என்று சொல்லித் தெரியவேண்டியதில்லை அல்லவா?

"ஆனாலும் நாங்க தான் கடைசியில மதியை ஜெயிச்சிட்டோம்." என்றார் தனுஷ்கோடி! "எங்களுக்குத் தான் பேரப்புள்ள உடனே கிடைச்சிட்டான்." என்றார் சேகரைத் தூக்கிக் கொண்டே.

"நாங்களும் குறைஞ்சவங்க இல்ல. சீக்கிரமே மதியழகியோ, அல்லது மதியழகனோ பெத்துக் கொடுப்போம்." என்றாள் மதி சிரித்துக் கொண்டே.

அங்கே மதி, அழகேசன், ஜனனி, விமல் இவர்களின் வாழ்வில் தூய்மையான அன்பு பரிபாலனம் செய்ய ஆரம்பித்திருந்தது.

(சுபம்)